வெளியீடு 21-11-2003

Issued 21-11-2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 8, 2003 – தொகுதி 41 – எண் 1

**Tuesday the 8th April, 2003 – Volume 41 – No. 1**

...மன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ive Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V2l1,31'P03
P03.41.1.
184532.

8-4-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vii |
| Governor and Council of Ministers | ix-xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii-xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-37 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 37-38 |
| (ஆ) திரு. பரிதி இளம்வழுதியைப் பேரவைப் பணிகளினின்று நீக்கிவைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல் | 38-40 |
| **3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்** - தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல் | 40-83, 86-145 |
| (ஆ) கோரிக்கை எண் 22 - உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | |
| திரு. ஜெ. அன்பழகன் | 67,68,70-80 81,82 |
| *மாண்புமிகு திரு. அ. அருணாசலம் | 81,82,86-95 |
| திரு. டி. சுதர்சனம் | 97-106,109 |
| திரு. பி.எம். நரசிம்மன் | 110-117 |

பக்கங்கள்


**3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 117-121, 123-132

திரு. ஜி. பழனிசாமி 126,132-145

**4. அரசினர் தீர்மானம்—**

(அ) திரு. ஜெ. அன்பழகன் கூட்டத் தொடர் முழுமைக்கும் அவை நடவடிக்கைகளினின்று நீக்கிவைக்கப் பெறுதல் 83-86

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தல் 145-146

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 146-147




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

**2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

**3. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் ... **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

தமிழ்நாடு ... நூலகம்
184532
சென்னை-600 008
நூலகம்



10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

| | | |
|---|---|---|
| 16. உள்ளாட்சித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடை பராமரிப்பு. |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம். |
| 19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு. |
| 20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 21. பால் வளத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |



| | | |
|---|---|---|
| 22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| 24. மீன்வளத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மீன்வளம். |
| 25. சுற்றுலாத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

**2. Minister for Public Works, Prohibition & Excise and Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

Public Works, Highways, Irrigation including minor Irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

**3. Minister for Finance** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies.

**4. Minister for Law and Information Technology** .. **The Hon. Thiru D. Jayakumar:**

Law, Courts and Information Technology.

**5. Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

**6. Minister for Health and Education** – **The Hon. Thiru S. Semmalai:**

Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

**7. Minister for Backward Classes** – **The Hon. Thiru A. Papasundaram:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

**8. Minister for Labour** – **The Hon. Thiru A. Anwer Rhazza:**

Labour, Employment and Training Urban and Rural Employment, Census and Wakfs.

**9. Minister for Agriculture** – **The Hon. Thiru R. Jeevanantham:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

**10. Minister for Social Welfare** – **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

**11. Minister for Adi-Dravidar Welfare** – **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



**12. Minister for Transport** – **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

**13. Minister for Electricity and Industries** – **The Hon. Thiru Nainar Nagenthran:**

Electricity, Non-conventional Energy Development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

**14. Minister for Commercial Taxes** – **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes.

**15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** – **The Hon. Thiru P. Mohan:**

Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

**16. Minister for Local Administration** – **The Hon Thiru M.C. Sampath:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

**17. Minister for Animal Husbandry** – **The Hon. Thiru P.V. Damodaran:**

Animal Husbandry.

**18. Minister for Rural Industries** – **The Hon. Thiru R. Vadivel:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. Minister for Forests and Environment | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 20. Minister for Housing and Urban Development | .. | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A. |
| 21. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 22. Minister for Information and Publicity | .. | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| 23. Minister for Handlooms and Textiles | .. | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 24. Minister for Fisheries | .. | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 25. Minister for Tourism | .. | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

### மாற்றுத் தலைவர்கள்*

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

* 28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |



| | | |
|---|---|---|
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - | குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல் | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - | ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - | தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - | தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - | ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - | திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - | அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - | வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - | புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - | தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - | திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | - | பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - | நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - | பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - | தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - | துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | ... | திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - | இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - | வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - | செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா. தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ)
43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி



44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதாசம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)



89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி

111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்



134. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வ.து. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்



177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கூடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப் பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு.ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். - காரைக்குடி

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்

214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I

220. வேதாரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்



221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்

222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஓரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 25, சித்ரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003, ஏப்ரல் 8, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

***"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்"***

*ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பர். அவரை நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.*

## 1. வினாக்கள் - விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் - விடைகள். வினா எண் 201, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**201—**

**நந்தவனம்**

**•10291—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான நந்தவனம் பராமரிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த நிலத்தைச் சீர்செய்து, கோயிலுக்கு வருமானம் வரும் வகையில் சமுதாயக் கூடம், திருமண மண்டபம் ஆகியவை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயில் வளாகத்தில் உள்ள நந்தவனம் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. நந்தவனப் பகுதியைத் திருமண மண்டபப் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்த இயலாது. திருக்கோயில் பழக்க வழக்கப்படி நந்தவனமாக மட்டுமே பராமரிக்கப்பட இயலும். திருக்கோயிலுக்கு வெளியே 'வெளி நந்தவனம்' என்று அழைக்கப்படும் இடம் சர்வே எண் 263/1-ஏ-ல் 2.8 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. அதில் 159 நபர்கள் வாடகைதாரர்களாக வணிகக் கடைகள் நடத்தி வருகிறார்கள். இவர்களிடமிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4,57,760/- திருக்கோயிலுக்கு வருமானம் வருகிறது. இந்த நிலம் தொகுப்பு வணிக வளாகமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால், இவ்விடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் அமைக்க வாய்ப்பில்லை. வேறு இடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் கட்ட சிந்திப்போம் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்கள் சார்பாக திரு. ஐ. கணேசன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலே நன்றி. விருத்தாசலம் நகரிலே அமைந்துள்ள அந்த விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஈசன், காசியிலே உள்ளதைவிடப் பெரியது என்று பெரியபுராணத்திலே மிகச் சிறப்பான முறையிலே எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. 1991-96-லே இருந்த இதே அரசு, அண்ணா தி.மு.க. அரசு, அங்கே மார்க்கெட்டிற்காக 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, கிட்டத்தட்ட கோவில் நந்தவனத்திலிருந்து 300 அடி தூரத்திலே பிரம்மாண்டமான மார்க்கெட்டினைக் கட்டியிருக்கிறது. அந்த மார்க்கெட்டிலே, காய்கறி கடை மற்றும் சில்லரை வியாபாரக் கடைகளை வைத்திருக்கிற காரணத்தால், கோவிலிலிருந்து கிழக்குப் புறமாகச் செல்லும் அந்த மணிமுத்தாற்றிலே குப்பைக் கூளம், அழுகிய காய்கனிகளை எல்லாம் கொட்டுவதால், அந்த ஊரில் சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்படக்கூடிய அளவிற்கு அங்கே அந்த மார்க்கெட் இருக்கிறது. அதேபோல, நகராட்சிக்கு வரக்கூடிய கோடிக்கணக்கான வருவாய் இந்த ஆலயத்தின் சார்பாக நடத்தப்படக்கூடிய அந்தக் கடைகளின் மூலம் கிடைக்கவில்லை. இந்த அரசினுடைய இரு கண்களாக இருக்கக்கூடியதில் ஒன்று உள்ளாட்சித் துறை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் கேள்வியை முடியுங்கள் அண்ணே.

**திரு. ஐ. கணேசன்:** நகராட்சிக்குப் பல கோடி ரூபாய் வரும் என்று அந்த ஆணையாளரே 10 நாளைக்கு முன்னர் டி.வி.-யிலே பேட்டி கொடுத்திருக்கிறார். பல கோடி ரூபாய் நஷ்டத்திலே இந்து சமய அறநிலையத் துறை நடத்திக்கொண்டு இருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கு வருமானம் இல்லை என்று அந்த ஆணையாளரே அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். அதை முன்னிட்டாவது இந்த மார்க்கெட்டை நகராட்சி மூலம் நடத்த அண்ணா தி.மு.க. ஆட்சியால் 27 இலட்சம் ரூபாய் செலவிலே கட்டிய அந்த இடத்திலே, இந்த நகராட்சியினுடைய மார்க்கெட் கடைகளை நடத்த அரசு முன்வருமா? அதேபோல நந்தவனப் பகுதி தூய்மையாக இருக்கிறதா என்று சொன்னால், மிகவும் குப்பைக் கூளமாக இருக்கிறது. அதைச் சீர்செய்யவேண்டுமென்று அந்த சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களும் அங்கே நகர மன்றத் தலைவராக இருக்கின்ற...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, அவர் எந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று குழம்பியே போவார். (சிரிப்பு) சுருக்கமாக ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அதைச் சுத்தப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்கிறேன். நான் வேறு ஒன்றும் சொல்லவில்லை. சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. விருத்தாசலம் நகரிலே சுற்றுப்புறச் சூழல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. மணிமுத்தாற்றிலே அந்தக் குப்பைகளையெல்லாம் கொட்டுகிறார்கள். நகராட்சிக்கு மிகப் பெரிய கேடு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதைச் சுத்தப்படுத்தி, அந்த நந்தவனத்தை அழகுபடுத்தி, பக்தர்கள் தங்கக்கூடிய அளவிற்கு கல்யாண மண்டபம் மற்ற மண்டபங்களைக் கட்ட இந்த அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

[2003 ஏப்ரல் 8

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகர மன்றத்தைச் சுத்தம் செய்வது நகராட்சியினுடைய பொறுப்பு. அறநிலையத் துறையினுடைய பாதுகாப்பில் உள்ள இடத்தைச் சுத்தம் செய்வது அறநிலையத்தினுடைய/ஆலயத்தினுடைய பொறுப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட விருத்தாசலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வெளியில் 'வெளி நந்தவனம்' என்று அழைக்கப்படும் நிலத்தை விருத்தாசலம் நகராட்சி வாடகைக்கு எடுத்து, நாள் அங்காடியாகப் பயன்படுத்தி வந்தது. கடைசியாக மாதம் ஒன்றுக்கு ரூ. 3,300-க்கு வாடகை செலுத்தி வந்தது. நகராட்சி, கோயிலுக்கு வாடகை பாக்கி வைத்து, தொடர்ந்து வாடகை செலுத்த இயலாது எனத் தெரிவித்து விட்டதால், நகராட்சியால் அமர்த்தப்பட்ட அந்த இடத்தில் மொத்தம் 159 நபர்களை அங்கே அமர்த்தி கோயிலின் நேரடி வாடகைதாரர்களாக ஆக்கிக்கொள்ள அரசின் அனுமதியைப் பெற்று 1-1-2001 முதல் மாதம் ஒன்றுக்கு ரூ.39,600 வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.4,57,760-க்கு மூன்று ஆண்டுகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு திருக்கோயிலுக்கு வருமானம் ஈட்டப்பட்டு வருகிறது. இந்த நிலம் தொகுப்பு வணிக வளாகமாகப் பயன்படுத்தப்பட்டு, திருக்கோயிலுக்கு வருமானம் ஈட்டப்பட்டு வருவதால், இவ்விடத்தில் சமுதாயக் கூடம் அல்லது திருமண மண்டபம் கட்ட இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருடைய இல்லத்திற்கு அருகில் பெண்ணையாற்றைத் தாண்டி இரு கிலோ மீட்டர் தூரத்தில் அரசு கொளஞ்சியப்பர் கல்லூரிக்கு அருகில் 81 சென்ட் இடம் இருக்கிறது, ஆலயத்திற்குச் சொந்தமாக. அந்த இடத்தில் தாங்கள் கேட்கின்ற சமுதாயக் கூடம், திருமண மண்டபம் கட்டுவதற்கு அந்த ஆலயத்தினுடைய இடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், குத்தகையாக 12 ஏக்கர் நிலத்தை அங்கே சாமி தூக்கும் கொத்தர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த இடத்தை வேண்டுமென்றால், திருமண மண்டபம் கட்டுவதற்கும், சமுதாயக் கூடம் கட்டுவதற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 202, திரு. எஸ்.ஏ.எம். உசேன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 8]

**202—**

### ஆர்த்தோஸ்கோபி

**•16237—திரு. எஸ்.ஏ.எம். உசேன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவில் ஆர்த்தோஸ்கோபி என்ற கருவியினை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் ஏற்கெனவே செயல்பட்டு வந்த ஆர்த்தோஸ்கோபி கருவி தற்போது பயனற்றதாகி, பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் மீண்டும் அந்த மருத்துவமனைக்கு ஒரு புதிய ஆர்த்தோஸ்கோபி கருவி வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவில் ஆர்த்தோஸ்கோபி கருவி வாங்கி வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது எப்போது என்று ஒரு நாளைக் குறிப்பிடுவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருவியை அந்த மருத்துவமனைக்கு வாங்கித் தருவதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. காரணம் ஏற்கெனவே அந்த மருத்துவமனையிலே செயல்பட்டு வருகிற அந்த Master Health Check up என்ற வகைக்கு அரசினுடைய பங்காக, மருத்துவமனையினுடைய பங்காக 15 இலட்சம் ரூபாய் இருக்கிறது. அதுபோல, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே அங்கே செயல்பட்டு வருகிற ஒரு சி.டி. ஸ்கேன் என்பதில்

[2003 ஏப்ரல் 8

அந்த மருத்துவமனையினுடைய பங்காக 15 இலட்சம் ரூபாய் அங்கே இருக்கிறது. எனவே, அந்தத் தொகையிலிருந்து வாங்குவதற்குத்தான் நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மிக விரைவில் நிச்சயமாக அந்த மருத்துவமனைக்கு ஆர்த்தோஸ்கோபி கருவி வழங்கப்படும்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அமைச்சர் அவர்கள் மிக விரைவிலே வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நன்றி. இராயப்பேட்டை மருத்துவமனை நூற்றாண்டுகளைத் தொடக்கூடிய நிலையில் மிகப் பழமை வாய்ந்த மருத்துவமனை. குறிப்பாக அதற்குள்ள சிறப்பைச் சொல்ல வேண்டுமென்றால், சுதந்திரப் போராட்டக் காலத்தில், விடுதலைப் போராட்டத்திற்காக பாடுபட்ட தியாகச் செம்மல் லோக்தல் ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த நேரத்தில் அந்த இராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருக்கிறார் என்ற வரலாற்றுக் குறிப்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல, மகாகவி தேசிய கவிஞர் பாரதியார் அவர்கள் யானை மிதிபட்டு துன்பப்பட்ட நேரத்தில் முதல் சிகிச்சை பெற்ற மருத்துவமனையும் இராயப்பேட்டை மருத்துவமனைதான். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த இராயப்பேட்டை மருத்துவமனையில் ஏழை எளிய மக்கள் இப்போது சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, அறுவைச் சிகிச்சை பெற்றுக்கொள்ளும் I.C.U. வார்டு பக்கத்தில் உள்ள மின்தூக்கி (Lift) வேலை செய்யவில்லை. அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட அந்த நோயாளிகளை ஸ்டெச்சரில் வைத்துத் தூக்கிக்கொண்டு போக வேண்டிய ஒரு அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த ஆர்த்தோஸ்கோபி கருவி வழங்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்கள், அந்த மின் தூக்கி—Lift— குறித்தும் உடனே ஏற்பாடு செய்து தருவார்களா, மக்கள் குறை தீர்ப்பார்களா என்று உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த மருத்துவமனைக்கு இருக்கிற இன்னொரு வரலாற்றுச் சிறப்பை மறந்துவிட்டார். ஒருவேளை சொல்ல மறந்துவிட்டார் என்று நான் சொல்ல மாட்டேன் -- சொல்லக் கூடாது என்று அதை விட்டுவிட்டார். நம்முடைய மக்கள் திலகம், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், அந்த



2003 ஏப்ரல் 8]

மருத்துவமனையில்தான் குண்டடிபட்டபோது சிகிச்சை பெற்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட சிறப்பு அந்த மருத்துவமனைக்கு உண்டு. அந்த மருத்துவமனைக்கு சமீபகாலத்திலே Ultra Sound Scan ஒன்று வாங்கித் தரப்பட்டிருக்கிறது. அதுபோல, X-Ray Machine வேண்டுமென்று சொன்னதன் அடிப்படையிலே, Portable X-Ray Machine ஐந்து Machines அந்த மருத்துவமனைக்கு சமீபத்திலே வாங்கிக் கொடுத்திருக்கிறோம். நானும் அந்த மருத்துவமனையைப் பார்வையிட்டபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த lift செயல்படாத நிலையில் இருப்பதைப் பார்த்தேன். எனவே, அதை replace செய்வதற்கு நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எலும்பு முறிவு மருத்துவத்தைப் பொறுத்தவரைக்கும், சித்த மருத்துவத்தில் வர்மப் பிரிவு என்று ஒன்று இயக்குநர் அலுவலகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. எங்களுடைய பாரம்பரியம் என்று சொல்கிறபோது, ஒடிவு முறிவு மருத்துவத்திலே சிறந்து விளங்கிய சூழ்நிலை உண்டு. அதேபோல, தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலே எலும்பு முறிவு மருத்துவத்திற்குப் பல்வேறு மருத்துவர்கள், சிறப்பாக மருத்துவத்தைச் செய்து வருகிறார்கள். எனவே, சோதனை முறையிலே மிக முக்கியமான தலைமை மருத்துவமனைகளில் முதலாவதாக ஒரு சித்த மருத்துவம் முறைப்படி எலும்பு முறிவுகளைக் குணப்படுத்துகின்ற பிரிவுகளை அமைப்பீர்களென்று சொன்னால், செலவுகள் மிகக் குறைவாக இருக்கும். அலோபதி என்று சொன்னால், 1 இலட்சம், 1½ இலட்சம் ரூபாய் என்று செலவுகள் ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, சித்த மருத்துவ முறைப்படி எலும்பு முறிவு சிகிச்சை என்று சொல்கிறபோது, சில ஆயிரங்களிலே அது முடிந்துவிடும். எனவே, அதற்கான முயற்சிகளை, சித்த மருத்துவத்தை வளர்க்கின்ற முகத்தானும், அப்படி ஆர்வம் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற முகத்தானும், எலும்பு முறிவு சிகிச்சையிலே சித்த மருத்துவத்தைப் பயன்படுத்த நமது அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூட்டு எலும்பு தேய்ந்துவிட்டால், அதை அறுவைச் சிகிச்சை மூலம்தான் இதுவரை சிகிச்சை செய்து குணப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இந்த ஆர்த்தோஸ்கோபி கருவி மூலமாக, அந்த Knee Joint-ஐ open செய்யாமலேயே அந்த மூட்டு எலும்பு தேய்வுக்கான சிகிச்சை அளிப்பதற்கு, குறைந்த செலவிலே அளிப்பதற்கு, இது வசதியாக இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியதைப்போல, மூட்டு எலும்பு சிகிச்சையை சித்த வைத்தியம் மூலம் செய்து குணப்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்குமேயானால், அதற்கும் இந்த அரசு ஊக்கம் அளிக்கும். அதேபோல, சித்த மருத்துவ சிகிச்சையை விரும்புகிறவர்களுக்கு அதுபோன்ற வாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 203, திரு. கே. பாண்டுரங்கன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி அமைச்சர்.

**203—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**•18667—திரு. கே. பாண்டுரங்கன்:**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, வேலூர் வட்டம், ஆசனாம்பட்டு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் தொடங்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நடப்பாண்டில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லாததால், வேலூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், ஆசனாம்பட்டு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமையும் வாய்ப்பு தற்போதைக்கு இல்லை.



**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதயம் காப்போம் திட்டத்தையும், அன்னதானத் திட்டத்தையும், தொடங்கி வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் இலவசமாக அரிசி வழங்கி இன்றைக்கு ஒன்பதாவது வள்ளலாக வாழ்ந்து வருகின்ற நம்முடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன். நடப்பு நிதியாண்டிலே ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாகத் தொடங்குவதற்கு வாய்ப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் கனிவோடு தெரிவித்துக் கொள்வதெல்லாம், ஆசனாம்பட்டு கிராமத்திலும், அதனைச் சுற்றி இருக்கின்ற சின்னபள்ளிகுப்பம், மேல் பள்ளிப்பட்டு, பாக்கம்பாளையம், அரிமலை, ராமநாயகுப்பம் ஆகிய ஊராட்சிகளில் இருக்கின்ற சுமார் 50-க்கும் மேற்பட்ட குக்கிராமங்களிலே 50,000 மக்கள் வசித்து வருகின்ற காரணத்தாலேயும், அதிலும் குறிப்பாக, போக்குவரத்து அதிகம் இல்லாத பகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், ஆசனாம்பட்டு கிராமத்திற்கும் ஒடுக்கத்தூரிலே இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரமாக ஏறக்குறைய 18 கிலோமீட்டர் இடைவெளி இருக்கின்ற காரணத்தினாலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்ந்து வருகின்ற ஏழையெளிய மக்கள், தாங்கள் மருத்துவ வசதியைப் பெறுவதற்கு நீண்ட நெடிய தூரம் வருவதற்கு வாய்ப்பு இல்லாத காரணத்தினாலேயும் மிகவும் சிரமமாக இருக்கிறது. குறிப்பாக மலைவாழ் சமுதாயத்தைச் சேர்ந்த நாயக்கனேரி ஊராட்சியிலே வசிக்கின்ற, ஏறத்தாழ 10 ஆயிரம் பொதுமக்கள், கொடி வழியாக 4 கி.மீ. தூரம் நடந்து வந்து ஆசனாம்பட்டு கிராமத்திலே சிகிச்சை பெறுவதற்கு, மருத்துவ உதவிகள் பெறுவதற்கு வசதியாக, தனி நிகழ்வாகக் கருதி நடப்பு நிதியாண்டிலேயே ஆசனாம்பட்டு கிராமத்திலேயே புதிதாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 8

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போதைக்கு வாய்ப்பில்லையென்றுதான் சொன்னேன். அந்த ஊருக்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பே இல்லை என்று நான் சொல்லவில்லை. மாதனூர் ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, 90,688 மக்கள் தொகை என்றளவிலே அந்த ஒன்றியத்திலே இருக்கிறார்கள். மத்திய அரசினுடைய இலக்கின்படி 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்த ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே மாதனூர், மராட்டிப்பாளையம் என்று 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் இருக்கின்றன. 1991 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி, 90,688 பேர் இருந்த நிலையில், இப்பொழுது அந்த மக்கள் தொகை நிச்சயமாகக் கூடியிருக்கும். எனவே, இன்னோர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு அந்த ஒன்றியத்திலே வாய்ப்பு இருக்கிறது. வாய்ப்பு மட்டுமல்ல, ஆசனாம்பட்டிலே அந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான தகுதி அனைத்தும் இருக்கிறது. எனவே, அப்படிக் கொள்கை முடிவாக புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கிற சமயத்திலே, நிச்சயமாக ஆசனாம்பட்டிலே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்படும்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய பதிலுரையிலே மராட்டிப்பாளையம் கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். மராட்டிப்பாளையத்திலே dispensary என்று சொல்லப்படுகிற மருந்தகத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திலேயிருக்கின்ற அத்தனை வசதிகளும் அந்த மருந்தகத்திலே இல்லாத காரணத்தினாலே, அதை ஓர் ஆரம்ப சுகாதார நிலையமாகக் கருதுவதற்கு வாய்ப்பில்லையென்பதை நான் இந்த நேரத்திலே கனிவோடு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஆசனாம்பட்டு கிராமத்திலே ஆரம்ப சுகாதார நிலையத்தை ஆரம்பிக்கின்ற ஒரு நிலையிலே தேவையான இட வசதியும், அங்கே இலவசமாக கட்டட வசதியும் செய்து கொடுப்பதற்குண்டான வாய்ப்பினையும் அங்கே வாழ்ந்து வருகின்ற பொதுமக்கள் தருவதற்கு முன்வந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, அந்த அடிப்படையிலே தாய் உள்ளத்தோடு, கருணையோடு, இந்த நிதியாண்டிலேயே அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதனூரில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும், மராட்டிப்பாளையத்திலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையமும் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல மராட்டிப்பாளையத்திலே ஏற்கெனவே மருந்தகம் இருந்து அது பின்னாலே ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. இருந்தாலும் போதுமான வசதியில்லை என்று சொல்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஓர் ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்படவிருக்கிறது. அந்த வகையிலே மாதனூர் ஆரம்ப சுகாதார நிலையமானாலும் சரி, மராட்டிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையமானாலும் சரி, அதிலே எதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 30 படுக்கைகள் கொண்ட தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கவேண்டுமென்று விரும்புகிறாரோ அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபோது ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்துகின்ற நிலை, இந்த ஆண்டு இல்லை என்று குறிப்பிட்டார்கள். அதுபோல, சென்ற ஆண்டும் புதிதாக, எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் ஆரம்பிக்கப்படவில்லை எனக் கருதுகிறேன். பல கிராமங்களில், முன்பு எல்லாம், ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படவேண்டுமென்று சொன்னால், 10 ஆயிரம் ரூபாய் அரசுக்குச் செலுத்துகின்ற விதியின்பிரகாரம் பல கிராமங்களில் 10 ஆயிரம் ரூபாயைச் செலுத்திவிட்டு ஏறத்தாழ 7, 8 வருடங்களாக அந்தக் கிராமங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வந்துவிடும் என்று எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருக்கின்ற நிலையில், இந்த அரசுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்துவதற்கு ஏதாவது தடை இருக்கிறதா? அதற்கு ஏதாவது பிரத்யேகமாக காரணம் இருக்கிறதா? என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, வருகின்ற ஆண்டிலேயாவது அப்படிப் பணம் கட்டிக், காத்திருக்கின்ற கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 8

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது, தமிழகத்திலே 1411 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநிலத்திலே புதிதாக அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மைய அரசினுடைய அனுமதி அதற்குத் தேவைப்படுகிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இப்போது புதிதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்து வருகிறது. அந்தக் கணக்கெடுப்பு முடிந்து, மக்கள் தொகைக் கணக்கு சரியாகக் கிடைக்கிற அந்தக் காலகட்டத்தில், 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே மைய அரசும் நிச்சயமாகக் குறுக்கிடாது. எனவே, இந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பெல்லாம் முடிந்த பிறகு, எந்தெந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் தேவைப்படுகிறதோ, அந்தந்த இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவதற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு, மைய அரசினுடைய அனுமதியைப் பெற்று தேவையான இடங்களிலே நிச்சயமாக அமைக்கப்படும். ஆனால், இப்போது, சில இடங்களிலே, தேவையில்லாத இடங்களிலே, ஆரம்பித்து விட்டார்கள். எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, சில தேவையான இடங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான். எனவே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரையில், புதிதாக அதிகமான ஆரம்ப சுகாதார நிலையங்களை உருவாக்குவதை விட்டு, இருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதலான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையிலேதான் இப்போது அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது. தேவைக்கேற்ப, கூடுதலான ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைப்பதற்கு மைய அரசினுடைய அனுமதியைப் பெற்று அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே என்று சொல்வதைவிட, தமிழகத்திலேயே ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு P.H.C. என்ற முறையில் இடங்களைத் தேர்வு செய்து, முன்னுரிமை அடிப்படையிலே அதனைத் திறக்கலாம். எங்களுடைய வேலூர் ஒன்றியத்தை



2003 ஏப்ரல் 8]

எடுத்துக்கொள்வீர்கள் என்று சொன்னால், ஒரே ஒரு P.H.C. மட்டும்தான் இருக்கிறது ஊசூரிலே. ஒன்றரை இலட்சம் மக்கள் அந்த ஒன்றியத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 30 ஆயிரம் பேருக்கு ஒரு P.H.C. என்று நாம் ஓர் இலக்கணத்தை வைத்துவிட்டு, ஒன்றரை இலட்சம் மக்கள் இருக்கக்கூடிய இடத்தில், அதுவும் அலமேலுமங்காபுரத்திலே ஒரு P.H.C. வரவேண்டும் என்பதற்காக 10 ஆயிரம் ரூபாயைக் கட்டிவிட்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த அவையிலே இரண்டு முறை assurance -- உறுதிமொழியும் -- அளிக்கப்பட்டு, இப்போது நம்முடைய இயக்குநர், செயலாளர்கள் எல்லாம் இதற்காக சிபாரிசும் செய்துவிட்டு, அது வரக்கூடிய நிலையிலே, ஏனோ நின்று கொண்டிருக்கிறது, பல ஆண்டுகளாக. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு P.H.C. இருக்கக்கூடிய இடத்திற்காவது நீங்கள் முன்னுரிமை அளித்துத் திறக்கலாம். ஏனென்றால், சில இடங்களிலே ஒரு பஞ்சாயத்து யூனியனிலே ஐந்துகூட இருக்கின்றன. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு P.H.C. இருக்கக்கூடிய இடங்களை நீங்கள் தேர்வு செய்து -- அது நான்கு, ஐந்து என்று இருக்கிறது. இந்த மாநிலத்திலே— அவற்றிற்காவது முன்னுரிமை அளித்து, நீங்கள் முதன்முதலாக நம்முடைய வேலூர் மாவட்டத்தில் அலமேலுமங்காபுரத்திலே உடனடியாக ஒரு P.H.C. அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, சில தேவையில்லாத இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு, தேவையுள்ள இடங்களிலே அமைக்கப்படாமல் இருப்பது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப்போன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஒன்றியத்தில் ஒரே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டு, அது துறையினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நிச்சயமாக அந்த ஒன்றியத்திற்குக் கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அவசியம் தேவை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எனவே, கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படுகிற அந்த நிலையிலே, நிச்சயமாக முன்னுரிமை கொடுத்து அந்த ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 204, திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**204—**

### உடலுழைப்புத் தொழிலாளர் நலன்

***18526—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடலுழைப்புத் தொழிலாளர்கள் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தின் மூலம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் நிறுத்தப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தை, தொடர்ந்து செயல்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ள தொழிலாளர்களுக்குக் கிடைக்கப் பெறவேண்டிய சலுகைகள் நிறுத்தப்படவில்லை. அவை, தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, ஓராண்டு காலத்திற்கு முன்பாகக் கொடுக்கப்பட்டது. அப்போது, முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய படம் இருக்கின்ற காரணத்தால், பதிவு செய்யாமல், அதற்கான நலத் திட்ட உதவிகள் வழங்கப்படாமல் இருந்தன. இப்போது, தற்போதைய முதலமைச்சர் அவர்களுடைய படம் போட்டு, அந்த அட்டைகள் வழங்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, தொடர்ந்து முன்னால் வழங்கப்பட்ட அந்த கார்டுகளுக்கு அந்த நிதியுதவிகள் வழங்கப்படுமா? அதுமட்டுமல்லாமல், இதுவரை எத்தனைப் பேர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது? எவ்வளவு தொகை இன்றைக்கு





உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது? என்பதை அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட அட்டையில், அவர்களுடைய தலைவர் --முன்னாள் முதலமைச்சர்—அவர்களுடைய படம் இருந்தது; அதனால் வழங்கப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான உத்தரவைப் போட்டதே, முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய அமைச்சரவையில், அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர்தான். அவர்கள்தான் அந்த உத்தரவைப் போட்டார்கள். அந்த உத்தரவில் என்ன எழுதப்பட்டு இருக்கிறது என்றால், The Identity Card should bear the C.M.'s Photograph என்று அதிலே எழுதப்பட்டு இருக்கிறது. ஆட்சி மாற்றம் வந்ததற்குப் பிறகு அந்த வார்த்தைகளினுடைய பொருள் என்ன என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். The Identity Card should bear the C.M.'s Photograph என்று இன்றைக்கு இங்கு இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு டாக்டர் பொன்முடி அவர்கள்தான் அதிலே அப்படி எழுதி இருக்கிறார்கள்; அந்தக் கோப்பும் என்னிடம் இருக்கிறது. Identity Card-ல் C.M.-உடைய Photo இருக்க வேண்டுமென்றால், எங்கள் ஆட்சி வந்ததற்குப் பிறகு, அந்த Identity Card-ல் C.M.-உடைய Photo இருக்க வேண்டும். ஆக, அந்த Photo-வை மாற்றுவதற்கு, நீங்கள் போட்ட உத்தரவை அப்படியே செயல்படுத்துவதற்குத்தான் காலதாமதம் ஏற்பட்டதே தவிர, வேறு எதற்காகவும் அந்தக் காலதாமதம் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதற்குப் பிறகு இன்று வரை அந்த வாரியங்கள், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியங்கள், உங்கள் ஆட்சிக் காலத்திலே உருவாக்கப்பட்டு, 53 பேருக்குத்தான் உங்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. மொத்தம் 2,06,000 ரூபாயை நீங்கள் வழங்கி இருக்கிறீர்கள். இப்போது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, 2431 பேருக்கு 74,20,500 ரூபாய் இதுவரை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடைப்பட்ட காலத்தில், அதாவது 13-5-2001 முதல் 21-3-2003 வரை வழங்கப்பட்டு இருக்கிறது. அதிலே கல்வி உதவித் தொகை பெற்றவர்கள் 700 பேர்;

தொகை ரூ.7 இலட்சம். கல்வி உதவித் தொகையில் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் 517 பேருக்கு ரூ. 7,75,500/-; உயர்கல்வி உதவித் தொகை பெற்றவர்கள் 20 பேர்; தொகை ரூ.37,000; திருமண உதவித் தொகை பெற்றவர்கள் 865 பேர்; தொகை ரூ.17,30,000; மகப்பேறு உதவித் தொகை பெற்றவர்கள் 155 பேர்; தொகை ரூ.3,10,000; இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்குக்கு உதவித் தொகை பெற்றவர்கள் 152 பேர்; தொகை ரூ. 18,24,000; விபத்து மரணம் மற்றும் ஈமச் சடங்கிற்கு உதவித் தொகை பெற்றவர்கள் 20 பேர்; தொகை ரூ. 20,40,000; ஈமச் சடங்கிற்கு மட்டும் உதவித் தொகை பெற்றவர்கள் 2 பேர்; தொகை ரூ.4,000; ஆக மொத்தம் 2431 பேருக்கு 74,20,500 ரூபாயை டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்கி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் உழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலமாகவும், விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் மூலமாகவும், அவர்களால் செலுத்தப்பட்ட 7 கோடி ரூபாய் அந்த நல வாரியங்களுக்கு வந்து இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதன்மூலமாக வழங்கப்படக்கூடிய கார்டுகள், ஆண்டுதோறும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று சொன்னபோதிலும்கூட, இன்றுவரை விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு இரண்டாவதுகட்டமாக ஆண்டுக்கு 100 ரூபாய் என்ற அடிப்படையிலும், மாதம் 10 ரூபாய் என்ற அடிப்படையிலும் கார்டுகள் புதுப்பிக்கப்படாமல் அதேநிலையில் இருக்கின்றன. அவை புதுப்பிக்கப்படுமா? இரண்டாவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் எந்த ஆட்சி மாறினாலும்கூட, முதலமைச்சருடைய படம் போடுவதற்கு மாறாக, தமிழக அரசினுடைய முத்திரை, அந்த நல வாரியத்தில் கொடுக்கக்கூடிய கார்டுகளுக்கு வழங்கப்படுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலாளர்களுக்கு உரிய பிரச்சினை என்னுடைய துறை சம்பந்தப்பட்டதல்ல. அதற்குத் தனியாகக் கேள்வி போட வேண்டும். (குறுக்கீடு) இல்லை, அது விவசாயத் துறை





அமைச்சருக்கு உரிய கேள்வி. முதலமைச்சருடைய படம் நீக்கப்படுமா என்று கேட்டார்கள். (குறுக்கீடுகள்) அது வருவாய்த் துறையில் வரும். நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல, முதலமைச்சருடைய படம் அதிலே இருக்க வேண்டும் என்பது நாங்கள் வந்ததற்குப் பிறகு போடப்பட்ட உத்தரவு அல்ல; (குறுக்கீடுகள்) நாங்கள் போட்ட உத்தரவல்ல; நாங்கள் மாற்றவே இல்லை. நீங்கள்தான் போட்டது; மாண்புமிகு டாக்டர் பொன்முடி அவர்களே, நீங்களே அந்தக் கோப்பில் கையெழுத்து போட்டு இருக்கிறீர்கள்.

The identity card should bear the C.M.'s Photograph என்று நீங்களே அதிலே கையெழுத்து போட்டு இருக்கிறீர்கள். உங்களுடைய முதலமைச்சர் படத்தையும் போட்டு, முத்திரையைப் போட்டு வெளியிட்டு இருக்கிறீர்கள். அதற்காக நீண்ட காலதாமதத்தை உங்களுடைய ஆட்சிக் காலத்தில் செய்து இருக்கிறீர்கள். அந்த CM's Photo இருக்க வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, அவர்களுடைய படம் அதிலே இருக்க வேண்டும். அதைத்தான் நாங்கள் இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இப்போது இருக்கின்ற முதலமைச்சர் Photo போடுவதைப்பற்றி எதுவுமே கேட்கவில்லை. நான் கேட்டது, ஏற்கெனவே கொடுத்த அந்த அட்டைக்கு வழங்க வேண்டிய உதவித் தொகை மிகக் காலதாமதமாக, இந்தப் புதிய அட்டைகள் போடுகிறவரை வழங்கப்படாமல் இருந்தது என்பதுதான் என்னுடைய கேள்வியின் முக்கியப் பகுதி. ஆகவே, இப்படி வழங்கப்படக்கடிய இந்தத் திட்டத்திலே, அந்த உடல் உழைப்புத் தொழிலாளர்களைச் சேர்க்கின்ற வகையிலே, ஒவ்வொரு ஆண்டும், ஒரு வாரம் என்ற வகையிலே ஒவ்வொரு துறையிலேயும் அப்படிப்பட்ட உடல் உழைப்புத் தொழிலாளர்களை உறுப்பினர்களாக சேர்க்க அரசு முன்வருமா? அதற்கான திட்டத்தை செயல்படுத்துமா? என அறிய விரும்புகிறேன்.

[2003 ஏப்ரல் 8

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வாரம் என்பதோடு மட்டுமல்ல, எப்போது வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம். இப்போதுகூட, மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு— நீங்கள் ஏற்கெனவே நிறையப் பேரைச் சேர்த்து விட்டீர்கள், 5,69,649 பேர் உங்களுடைய ஆட்சியிலே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ்வளவு உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்களேதவிர, நலத் திட்ட உதவிகளை வழங்கியிருப்பது 53 பேருக்குத்தான். ஆனால் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு — இப்போதும்கூட 48,933 பேர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். ஆனால் நலத் திட்ட உதவிகளை 2,431 பேருக்கு நாங்கள் வழங்கி இருக்கிறோம். எனவே, தொடர்ந்து சேர்த்துக்கொள்ளலாம். இப்போது விரும்பினால்கூட, தினசரி அலுவலகத்திலே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, அடையாள அட்டை வழங்குகிறபோது அன்றைய முதலமைச்சர் படத்தைப் போடலாம் என்று ஜி.ஓ.-விலே இருக்கிறது என்றார்கள். நீங்கள் புதிய அடையாள அட்டை வழங்குகிறபோது, முதலமைச்சர் படத்தைப் போட்டுக்கொள்வதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் பழையதைத் திருத்த வேண்டும் என்ற அவசியமும் கிடையாது. நீங்கள் மாற்றியிருந்தாலும்கூட, அவர்களுக்கு உதவித் தொகை வழங்குகிற பொறுப்பு உங்களுக்கு உண்டு. ஏனென்றால் இந்தத் திட்டம் கொண்டு வந்ததே கடைசி ஐந்து மாதங்களில்தான். கல்வி மானியம் போன்றவை எல்லாம் தருவதற்கு அப்போது கல்விக்கூடங்கள் திறக்கவில்லை. ஆகவேதான் 53 பேருக்கு அறிவிக்கப்பட்டு, ஐந்தே மாதங்களிலே 53 பேருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து மற்ற வாரியங்களுக்கும் சேர்த்து இந்த உதவித் தொகையை விரிவுபடுத்துகிற திட்டம் இருக்கிறதா என்பதைத்தான் கேட்க விரும்புகிறோம்.



2003 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து எல்லா வாரியங்களுக்கும் இந்த நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 205, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**205—**

**விடுதி**

***6660—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் சமூக நலத் துறை மூலம் விடுதி கட்டுவதற்கு கையகப்படுத்திய நிலம் எவ்வளவு?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் செயல்படும் சமூக நலத் துறை விடுதி, சேலம் சத்தியா அம்மையார் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில், அந்தப் பகுதியிலே ஏழை விவசாய நிலங்கள் பல ஏக்கர் கணக்கிலே இன்றைய அரசாலே கையகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அங்கே சமூக நலத் துறை மூலமாக பெண்கள் காப்பகம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த விடுதியிலே உள்ள மாணவிகள் இன்றைக்கு 3-லிருந்து 4 கிலோ மீட்டர் அளவுக்கு நடந்து பள்ளிக்குச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதுபோல அந்தப் பகுதியிலே இன்றைக்குப் பெண்கள் கலைக் கல்லூரி கட்டுவதற்கு 30 ஏக்கருக்கு

[2003 ஏப்ரல் 8

மேலும், அதேபோல ஐ.டி.ஐ. கட்டுவதற்கு 20 ஏக்கருக்கு மேலும், அதுபோல தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனியான வீடுகள் கட்டுவதற்கு 267 ஏக்கருக்கு மேலான நிலங்களும் கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதிலே ஒரே கிராமத்திலே தொடர்ந்து பல அரசு திட்டங்களுக்காக இடங்களை கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வருங்காலங்களில் அரசு, குறிப்பிட்ட ஒரே இடத்திலே தொடர்ந்து இதுபோல இடங்களைக் கையகப்படுத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்தி அவர்கள் சொல்கிற அந்த இடம் தமிழ்நாடு கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான 48 செண்ட் நிலத்தில் 1978 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்கு மாத வாடகையாக 9,200 ரூபாய் செலுத்தப்பட்டு, வாடகைக் கட்டடத்திலேதான் -- அறக்கட்டளைக்குத் தந்து -- சமூக நலத் துறையின் சார்பிலே நடத்தப்படுகிற காப்பகம் நடைபெறுகிறது. அறக்கட்டளையின் மூலமாக இன்றைக்கு இலவசமாகப் பெறுவதற்கு சமூக நலத் துறையினுடைய ஆணையர் கடுமையான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்தக் கல்வி அறக்கட்டளையினுடைய தலைவர், சேலம் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்; சமூக நலத் துறையினுடைய மாவட்ட அலுவலரும் அந்த அறக்கட்டளையில் இடம் பெற்றிருக்கிறார். எனவே, சமூக நலத் துறை ஆணையர் மூலமாக இலவசமாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி.

*முற்பகல் 10-35*

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதியிலே இன்றைக்குப் பெண்கள் குறிப்பாக இளம் வயது பெண்கள் மிக அதிகமாகத் தங்கி பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டும். அதேபோல அந்தப் பெண்கள், பள்ளிக்கு இன்றைக்கு 4 கி.மீ. தூரம் நடந்து சென்று படிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பேருந்து வசதி வேண்டும் என்றும், வாகன வசதி வேண்டும் என்றும் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும் நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள் எல்லாம் காலை 8 மணி அளவில் இருந்து அந்த ரோட்டில் நடந்துசென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பேருந்து வசதியோ, அல்லது வாகன வசதியோ செய்து தரப்படுமா? அதுபோல நிரந்தரமாகப் படிப்பதற்கு ஒரு கட்டடத்தை இந்த நிதியாண்டில் அரசு கட்டுவதற்கு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 8]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் குழந்தைகள் காப்பகத்தில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை குழந்தைகள் அங்கேயே தங்கி படித்துக் கொண்டிருக்கிறார்கள். 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள், வெளியிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல பேருந்து வசதி அந்தப் பிள்ளைகளுக்கு இல்லாத காரணத்தால் கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குழந்தைகள் சில கி.மீ. தூரம் நடந்து செல்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகு 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை வெளியிலே சென்று படிக்கக்கூடிய பெண் குழந்தைகள் அனைவருக்கும் ஆதரவற்ற காப்பகங்களிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, ஆதிதிராவிட மாணவிகளுக்குத் தந்திருப்பதைப்போல இலவசமாக சைக்கிளை வழங்க உத்தரவிட்டு அதன் மூலம் சைக்கிளிலேயே குழந்தைகள் இப்போது வெளியில் சென்று படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 206, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 8

**206—**

## L.S.S. பேருந்து

**•6457—திருமதி எஸ். கனிதா சம்பத்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் - செங்கல்பட்டு வழித்தடத்தில் L.S.S. பேருந்து இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர்—செங்கல்பட்டு வழித்தடத்தில் L.S.S. பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மாவிற்கு என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய திருப்போரூர் தொகுதியில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் பிரசித்தி வாய்ந்த முருகன் கோவில் உள்ளது. அங்கு வரும் பக்தர்களின் நலனைக் கருதி -- அதுமட்டுமல்லாமல் எனது திருப்போரூர் தொகுதி மக்கள், நீதிமன்றம், தாலுக்கா அலுவலகம், கோட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றுக்கு செங்கல்பட்டு வரவேண்டும். ஆதலால், என்தொகுதி மக்களின் நலனைக் கருதி நமது இதய தெய்வம் தமிழகத்தின் முதல்வர் பொற்கால ஆட்சியில் மறு பரிசீலனை செய்து L.S.S. பேருந்து வழித் தடம் இந்த நிதியாண்டிலாவது ஏற்படுத்தித் தரப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பிரதான சாலைகளில் அதிக அளவிலே பேருந்துகள் இயக்கப்படுகின்ற வழித் தடங்களில் மட்டுமே, L.S.S. பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆனால் திருப்போரூரைப் பொறுத்தவரையில், திருப்போரூர், செங்கல்பட்டிலிருந்து உட்புறமாக அமைத்துள்ளது. ஆகவே இந்தத் தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளின்



2003 ஏப்ரல் 8]

எண்ணிக்கையும் சற்றுக் குறைவாக இருக்கிறது. எனவே இத்தடத்தில் L.S.S. பேருந்துகள் இயக்கினால் பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்புகள் வரலாம் என்று கருதுகிறோம். எனவே பொதுமக்கள் மத்தியிலே எதிர்ப்புகள் வராமல் இருக்குமானால், பொதுமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று இந்த வழித் தடங்களில் L.S.S. பேருந்துகள் விடுவதை அரசு பரிசீலிக்கும் என்று அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அநேகமாக இந்தப் பதில் மூலம் நமது டாக்டர் ஜெயக்குமார் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன். காரணம், நேற்றுக்கூட இங்கே ஆளும் கட்சித் தரப்பு எம்.எல்.ஏ.க்கள் கேட்டால் மட்டும் 'positive answer' சொல்கிறீர்கள் எங்களுக்கு negative answer சொல்கிறீர்கள் என்று சொன்னார்கள். இப்போது எங்களுடைய ஆளும் கட்சித் தரப்புச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 'Negative' ஆகவே இல்லை என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே இதிலிருந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பிரச்சினையின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் அனைவரையும் சமமாகப் பாவிக்கின்ற அரசாகச் செயல்படுகிறது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூரைச் சுற்றி இருக்கிற பகுதியிலே நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் முக்கியமாக வரவேண்டுமென்றால் செங்கல்பட்டு வரவேண்டும். அதுமட்டுமல்லாமல், என்னுடைய தொகுதியில் இருக்கிற மக்கள் அந்த வழித் தடத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். காலையிலும், மாலையிலும் மாணவர்கள், தொழிலாளர்கள் பொதுவாக அலுவலகத்திற்கு வருவது அதிகரித்து வருவதால் பஸ்சின் கூரை மீது ஏறி வரும் அவல நிலை இருக்கிறது. இது பல பத்திரிகைகளிலே செய்தியாக வந்திருக்கிறது. எனவே அங்கே -- 3 பேருந்துகள் T.80 பேருந்து இயக்கப்படுகிறது 15 நிமிடங்களுக்கு ஒரு பேருந்தாவது இயக்க அமைச்சர் முன் வருவாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர்-செங்கற்பட்டு வழித்தடத்தில், காஞ்சிபுரம் தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக ஏற்கெனவே

[2003 ஏப்ரல் 8

3 பேருந்துகள் அல்ல, 4 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தனியார் பேருந்துகள் 5 அந்த வழித்தடத்திலே இயக்கப்பட்டு வருகின்றன. இன்னும் கூடுதலாகப் பேருந்து வசதி தேவை என்று கருதினால், நிதி நிலைமைக்கேற்ப, பயணிகளுடைய அடர்வுகளைக் கணக்கெடுத்து, தேவைக்கேற்ப இதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, திரு. அ. நடராஜன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

**207—**

### சிற்றுந்து இயக்குதல்

**•11016—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பலையூர் ஊராட்சி, மேலப்பலையூர் கிராமத்திற்குச் சிற்றுந்து இயக்க அனுமதி கேட்டு யாரேனும் மனுச் செய்யும் பட்சத்தில் விதிமுறைகளுக்குட்பட்டுப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இரண்டாண்டு கால ஆட்சியில் எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கையாலும், சீர்மிகு நிர்வாகத் திறத்தாலும் நட்டத்தில் மூழ்கிய போக்குவரத்துத் துறை மீட்கப்பட்டுள்ளது என்பதைத் தமிழக மக்கள் பலரும் பாராட்டுகின்ற இந்த வேளையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிற்றுந்து இல்லை என்றாலும், எனது தொகுதி குடவாசல் ஒன்றியத்தில் உள்ள மேலப்பலையூர் கிராமத்திற்கும்,



2003 ஏப்ரல் 8]

கும்பகோணத்திற்கும் இடையே ஓடிய அரசு நகரப் பேருந்தை -- நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது -- பொதுமக்கள், மாணவர்கள் நலன் கருதி, மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**208—**

### தொழிற்பேட்டை

**•1882—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் பணிகள் துவங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூம்புகார் தொகுதி, மேலையூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1991-1996 ஆம் ஆண்டுகளில் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருந்தபோது பூம்புகார் தொகுதி, பூம்புகார்-மேலையூரில் சிப்காட், அதாவது தொழிற்பேட்டை அமைக்க இடம்

சர்வே செய்யப்பட்டது. பின்னர் இதுகுறித்து எவ்வித முன்னேற்றமும் இல்லை. எனவே மீண்டும் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அம்மாவின் அரசு மீண்டும் தொழிற்பேட்டை தொடங்குவதற்கு அடுத்த ஆண்டாவது ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். எனது பூம்புகார் தொகுதியில் எவ்வித தொழிற்பேட்டையும் இல்லை; எவ்வித தொழிற்சாலையும் இல்லை. பூம்புகார்-மேலையூரில் தொழிற்பேட்டை தொடங்கினால் தொழில் முனைவோர் வெளி மாவட்டம் சென்று தொழில் தொடங்குவதைவிட்டு, இம்மாவட்டத்திலேயே தொழில் தொடங்க உதவியாக இருக்கும் என்பதோடு, எங்கள் பகுதியினுடைய பொருளாதாரம் சீரமைவதோடு, எங்கள் பகுதியில் உள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். எனவே அடுத்த ஆண்டிலாவது தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலையூரில் சிப்காட்-தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என்றாலும், குறைந்தபட்சம் 20-க்கும் மேற்பட்ட ஆர்வமுள்ள தொழில் முனைவோர் தகுந்த தொழில் திட்டத்துடனும், முன்வைப்புத் தொகையுடனும் முன்வருவார்களானால் சிட்கோ நிறுவனம் மாவட்ட தொழில் மையத்துடனும், மாவட்ட ஆட்சியருடனும் கலந்தாலோசித்து தகுந்த நிலத்தைத் தேர்வு செய்து, புதிய தொழிற்பேட்டை தொடங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 209, திரு. பி.எச்.பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**209—**

**மின் உற்பத்தி**

***12002—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழகத்தில் சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தனியார் கூட்டு முயற்சியுடன் திட்டங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின் உற்பத்தி செய்யலாம் என்பதால் இதற்குத் தனியார் கூட்டுமுயற்சியுடன் திட்டங்கள் அமைக்கப்படும் என்று அமைச்சர் கூறியிருக்கின்ற இந்த நிலையில், இந்த மின் உற்பத்தி நிலையங்கள் எங்கெங்கு அமைக்கப்படும் என்பதையும், மின் உற்பத்தி எவ்வளவு கிடைக்கும் என்பதையும், இதற்கான செலவு மதிப்பீடு எவ்வளவாக இருக்கும் என்பதையும், இந்த மின் உற்பத்திக்காக ஒரு யூனிட்டிற்கு சுமார் ரூ.2.06 பைசா ஆகின்ற இந்த நிலையில் தனியார் மையங்களை ஊக்குவிக்க நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கான கொள்கையைத் தமிழ்நாடு மின்சார வாரியம் வகுத்துள்ளது. ஏற்கெனவே இயங்கிவரும் மின்உற்பத்தித் திட்டங்களுடன் தற்போது மேலும் 7 திட்டங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி சர்க்கரை ஆலைக் கழிவு, அதாவது, கரும்புச் சக்கையை --பகாஸ்-- உபயோகப்படுத்தி 11 தனியார் சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் இணை மின்உற்பத்தி செய்யப்பட்டு இயக்கத்தில் உள்ளது. அவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் அவற்றின் உபயோகம் போக மீதமுள்ளவற்றை தமிழ்நாடு மின்சார வாரியம்

விலைக்குப் பெற்றுக்கொள்கிறது. மேலும் 4 தனியார் சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் 3 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் மின்உற்பத்தித் திட்டங்கள் அமைக்கப்பட உள்ளன. இவ்வாறு மின்உற்பத்தி செய்வதிலிருந்து ரூ.2.88 காசுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் விலைக்கு வாங்கிக் கொள்கிறது. மேலும் ஆண்டு ஒன்றுக்கு 5% அதிகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின்நிலையம் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்திற்கு ஆகும் செலவைவிட, இந்தச் சர்க்கரை ஆலைக் கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும்போது குறைவாக இருக்குமா என்பதையும், சர்க்கரை ஆலைகளிலிருந்து தனியார் கூட்டு முயற்சி மூலம் மின்உற்பத்தி நிலையங்கள் பின்தங்கிய மக்கள் வாழும் இடங்களில் அமைக்கப்படுமா என்பதையும், இழப்பில் இயங்கும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அனைத்திலும் படிப்படியாக ஆதாயம் பெறும் வகையில் இத்திட்டங்களைச் செயல்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலையிலிருந்து மட்டும்தான் மின்உற்பத்தி செய்யக்கூடிய நிலை உள்ளது. ஆகவே இதைத் தனியார் அமைக்க முன்வந்தால் அரசு நிச்சயமாக இதற்கு ஆர்வமுடன் அவர்களுக்கு ஆதரவு தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைக் கழிவுகளிலிருந்து மின்சாரத்தோடு எத்தனாலும் தயாரிக்க முடியும். இப்பொழுது மைய அரசு பெட்ரோலோடு 10% எத்தனாலையும் கலப்பதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆகவே இதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இதுபோன்று கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்காகத் திட்டங்களெல்லாம் தீட்டப்பட்டு விவசாயிகளுடைய ஒரு டன் கரும்புக்கு ரூ. 5 பிடித்தம்கூட செய்து பணத்தையெல்லாம் பிடித்துவிட்டார்கள். அப்படி இருக்கிறபோது, வேலூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் இப்பொழுது அந்தத் திட்டம் தொடங்கப்படுமா அல்லது சர்க்கரை ஆலைகளையெல்லாம் தனியாருக்கு விற்கக்கூடிய ஒரு சூழ்நிலையில்-முடிவு எடுத்திருப்பதாகக் கூறுகிறார்கள்-அப்பொழுது இந்தத் திட்டத்தினுடைய நிலை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கும் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், அமைச்சர் பதில் சொல்லிவிட்டார், உட்காருங்கள. திரு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற சர்க்கரை ஆலைக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம்; இன்றைக்கு மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் இருப்பதற்காக பல்வேறு. நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்க்ள். முதன்முதலாக இந்தியாவில் தமிழகத்தில்தான் சூரிய ஒளி மூலம் மின்சாரத்தை எடுக்கின்ற திட்டத்தை நிறைவேற்றினோம். ஆனால், இன்றைக்கு 250 மெகாவாட் சூரிய ஒளி, சூரிய சக்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை பஞ்சாப்பிலே தொடங்கியிருக்கிறார்கள். தமிழகத்தில் அதைப்போலத் தொடங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கு நாம் சாதாரணமாக மின்உற்பத்தி செய்யக்கூடிய செலவைவிட அதிகமாகச் செலவாகும் என்பதால், இதை உடனடியாகச் செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2003 ஏப்ரல் 8

**210—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**•10513—திரு. கோ. இரவிராஜ்:**

*மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி டி.புதூர் 9-வது வார்டுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி பேரூராட்சிக்குட்பட்ட டி.புதூர் 9-வது வார்டுக்குத் தற்போது போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10-50.*

**திரு. கோ. இரவிராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றாகத் திகழும் திருத்தணி நகரத்திலே குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. 21 நாட்களுக்கு ஒரு முறைதான் மக்கள் குடிநீரைப் பார்க்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இது சம்பந்தமாகப் பேரூராட்சி செயல் அலுவலரைச் சந்தித்துக் குடிநீர் விநியோகத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டபோது நிதி இல்லையென்று சொன்னார். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து நான் பத்து இலட்சம் ரூபாய் நிதி வழங்கினால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அவர் கூறினார். அதன் அடிப்படையிலே என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து பத்து இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, லாரியின் மூலமாக நகரத்து மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டபோது, அதற்கென்று அந்த நிதியைப் பயன்படுத்த முடியாது என்று அங்கே தெரிவித்தார்கள். அதற்குப் பின்னாலே நீங்கள்*



2003 ஏப்ரல் 8]

*எப்படியாவது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி வலியுறுத்தியும், நடவடிக்கை இல்லை என்கிற நிலை ஏற்பட்டதற்குப் பின்னாலே வேறு வழியில்லாமல், கடந்த 21 ஆம் தேதி நான் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை அங்கே துவக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னாலே மாவட்ட ஆட்சியாளர் நடவடிக்கை எடுத்து* bore *போடுகின்ற அந்தப் பணிகளை இன்றைக்குத் துவக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; இந்தப் பிரச்சினை தொடர்ந்து இருக்கக்கூடாது என்கிற நிலையை அறிந்ததற்குப் பின்னாலே, குறிப்பிட்டுச் சொன்ன 9-வது வார்டிலே மேல்நிலைத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் குறித்து என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலே இருந்து 4½ இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏழு மாத காலம் ஆகி இருக்கிறது. இதுவரையிலே தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலமாக அந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய திட்ட மதிப்பீடு தயார் செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப் படவில்லை. எனவே உடனடியாக நான் ஒதுக்கீடு செய்திருக்கிற 4½ இலட்சம் ரூபாய்க்கான திட்ட மதிப்பீட்டை உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு அனுப்பி, அந்தப் பகுதியிலே மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைத்து திருத்தணி நகர மக்களுக்கு...(மணியடிக்கப்பெற்றது) உதவ மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்று கேட்க விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அமைச்சர் பதில் சொல்கிறார்.*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டு காலமாக பருவ மழை பொய்த்ததன் காரணமாக, இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு -- திருத்தணிக்கு பல்வேறு திட்டங்கள் மூலமாக திருத்தணி ஏரியில் வறட்சி நிவாரணத் திட்ட நிதியின்கீழ் மூன்று ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து, மின் மோட்டார் பொருத்தி மற்றும் ஜி.ஐ. பைப் அமைக்கும் பணிக்கு அரசால் 11-வது நிதிக் குழுவின் மூலமாக ரூ. 2.71 இலட்சம் பேரூராட்சிப் பொது நிதியின் மூலமாக ரூ.5.04 இலட்சம், மொத்தம் ரூ.7.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்தத் திட்டத்தினுடைய பணிகள் வெகு விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையில், தற்போது நிலவி வரும் கடுமையான வறட்சியினால் அனைத்து வார்டுகளிலும் திட்டப் பணிகள் வெகுவிரைவாக முடிக்கப்பட்டு, திருத்தணி*

பேரூராட்சிக்குப் போதுமான குடிநீர் அத்துணை வார்டுகளிலும் முழுமையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு உண்டான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக திட்டம் வரைவு மதிப்பீடு செய்யப்பட்டு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கும்படி வேண்டுகோள் வைத்துள்ளார்கள். அதிலும் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு திட்ட மதிப்பீடு செய்து, அந்தப் பணிகளும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசின் மூலமாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 211, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**211—**

**குடிநீர்**

**•12525—திரு. இரா. தா. இன்பத்தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிபுத்தூர் நகராட்சியில் குடிநீர்த் தட்டுப்பாட்டைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதி ஆண்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் குடிநீர் வாரியத் திட்டத்திற்காக 9 கோடியே 89 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்த தாயுள்ளம்கொண்ட தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும்





கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் குடிநீர்த் திட்டப் பணி, ஒப்பந்தம் போடும் நிலையிலேயே உள்ளது. எவ்வித வேலையும் இதுவரை நடைபெறவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரையும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகளையும் நேரில் சந்தித்தேன். எந்தவிதப் பலனும் இல்லை. ஆகவே மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு ஏழை மக்களின் தாகத்தைத் தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 262 கைபம்புகள் உள்ளன. இதன்மூலம் தினமும் 73 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கிறது. 48 சிறிய மின்விசைப் பம்புகளும் உள்ளன. இதில் தினமும் 31 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கிடைக்கின்றது. நகராட்சிப் பகுதியில் ஆறாயிரம் லிட்டர் கொள்ளளவுகொண்ட லாரி மூலமாகத் தினமும் மூன்று முறை, நான்கு முறை குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஏழு இலட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கைபம்புகள், விசைப்பம்புகள், குடிநீர் வினியோக மெயின் குழாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் கடுமையான வறட்சியைச் சமாளிக்க ரூ.20.50 இலட்சத்தில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கு நிதியுதவி கோரி கருத்துரு அனுப்பப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூபாய் 9 கோடியே 89 இலட்சம் செலவில் 8 திறந்தவெளிக் கிணறுகளும், 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும் அமைத்து 6 உறிஞ்சிக் கிணறுகள் மற்றும் 26.72 கிலோ மீட்டர் தூரத்திற்குக் குழாய் அமைக்கும் பணிகளை மேற்கொண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செயலாக்க வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-55

தற்சமயம் பணி நடைபெறும் இடத்தில் புதிய கிணறுகள் அமைப்பதற்கு பொது மக்களுடைய ஆட்சேபனை உள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் உடனடியாக அந்த ஆட்சேபனை நிவர்த்தி செய்யப்பட்டால், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அரசால் அனைத்து நடவடிக்கைகள் மூலமாக தொடர்ந்து நிலையான, உறுதியான முறையில் பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா.தா. இன்பத் தமிழன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி குடிநீர் வழங்க மாவட்ட ஆட்சியர் தலைமையில் என்னையும் இணைத்து சமரசப் பேச்சுவார்த்தை நடத்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கேள்வி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசு மூலமாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் இருக்கிற அருப்புக்கோட்டை, விருதுநகர், சாத்தூர், சிவகாசி போன்ற நகரங்களில் எல்லாம் இந்த வறட்சியான நேரத்திலே அதிகமாகக் குடிநீர்ப் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம், பழைய திட்டங்களிலிருந்து சரியாகக் குடிநீர் கிடைக்கவில்லை. புதிய திட்டங்கள் ஆய்வு நிலையிலே இருந்து கொண்டு இப்போது நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் வேகமாக, விரைந்து செயல்படுத்துவார்களா என்பதையும். இப்போது இருக்கிற வறட்சியைத் தீர்வு செய்வதற்கு லாரிகள் மூலமாக இந்த நகரங்களுக்கெல்லாம் குடிநீர் வழங்கப்படுமா என்பதையும் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவித வறட்சிப் பணிகளையும் எதிர்கொள்ள தமிழக அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அரசு இயந்திரத்தைத் தயார் நிலையில் வைக்கும் எண்ணத்தில் மாவட்டத்தில் நிலவும் வறட்சி நிலைமைகளை எதிர்கொள்ள, நகராட்சிப் பகுதிகளில் உள்ள வறட்சி நிலைமைகளை எதிர்கொள்ள கருத்துரு அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். தற்சமயம்



2003 ஏப்ரல் 8]

நகராட்சிப் பகுதிகளில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு நிறைவாக குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கிற எண்ணத்தில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் ரூ.15 கோடியே 16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக நடைபெறுகிற எந்தத் திட்டப் பணிகளாக இருந்தாலும் சரி, உடனடியாக அதற்கு முன்னுரிமை கொடுத்து நிறைவேற்ற வேண்டும், பொதுமக்களுக்கு நிறைவாக முழுமையான குடிநீர் வழங்க வேண்டும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழக அரசின் மாண்புமிகு அம்மா அவர்களுடைய உறுதியான உத்தரவு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**212—**

### கயிறு தொழிற்சாலை

***17234—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலைத் தொடங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தேங்காய் நார் கயிறு திரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2003 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வினா எண் 213, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**213—**

**வனத் துறையின் அனுமதி**

**•19093—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு வனத் துறையின் அனுமதி பெற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவா அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வனமற்ற பிற வேலைக்கு வனநிலம் பயன்படுத்தப்பட வேண்டுமெனில், வனப்பாதுகாப்புச் சட்டம் 1980-ன் படி, மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். தேனி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக, தேனி வனக்கோட்டம், வால்கரடு காப்புக்காட்டுப் பகுதியிலிருந்து 9 ஏக்கர் வனநிலத்தை தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு வழங்குவதற்காக, வனப்பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு 2-ன்படி மைய அரசின் ஒப்புதலைப் பெற, முதன்மை தலைமை வனப்பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். விவா அறிக்கையினைப் படித்தேன். தேனி மாவட்டம் தலைநகராமாக விளங்குவதாலும், தமிழகத்திலே கோயம்புத்தூருக்கு அடுத்தபடியாகத் தொழில் நகரமாக விளங்குவதாலும், ஏற்கெனவே



2003 ஏப்ரல் 8]

அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் நெரிசலாகவும் உள்ளது. இதனைத் துரிதமாக மாற்றுவதற்கு வனத் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தினைக் கோரி மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். தேனியில் நெரிசலான நிலையைப் போக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கை எடுத்து, அவருடைய தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (•) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் என்ன?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வழக்கம்போல் அறையில் வந்து கேளுங்கள் என்று சொல்லாமல் தாங்கள் இங்கேயே எங்களுக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். ஒன்று உரிமைப் பிரச்சினை சம்பந்தப்பட்டது. நாங்கள் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்சினை.

[2003 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், வழக்கம்போலத்தான் சொல்கிறேன். அறையில் வந்து கேளுங்கள். (சிரிப்பு)

**திரு. துரைமுருகன்:** இரண்டாவது பிரச்சினை ராணி மேரி கல்லூரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எடுத்துக்கொள்ளவில்லை. ஒத்திவைப்புப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அறையில் வந்து கேளுங்கள். காவல் துறை மானியக் கோரிக்கைகள் இன்றும், நாளையும் இருக்கின்ற காரணத்தினால் எந்த ஒத்திவைப்புப் பிரச்சினையையும் எடுத்துக்கொள்ளவில்லை. 10 ஆம் தேதி எடுத்துக்கொள்வதற்கு யோசிப்போம்.

**திரு. துரைமுருகன்:** இன்றும், நாளையும் இல்லாமல், நாளை மறுதினம் எடுத்துக்கொள்கிறேன்' என்று சொன்னதற்குத் தங்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியெல்லாம் சொல்லவில்லை.

**(ஆ) திரு. பரிதி இளம்வழுதியைப் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்**

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கி 18 நாட்கள் ஆகிவிட்டன. சட்டமன்றக் கூட்டங்களிலே எல்லா உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைக் கூறுவதோடு அவர்களுடைய தொகுதிப் பிரச்சினைகளை, மக்கள் பிரச்சினைகளையெல்லாம் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். சென்ற கூட்டத்தொடரிலே suspend செய்யப்பட்ட உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் இந்தக் கூட்டத்தொடரிலேயும் அதே நிலையிலே, சட்டசபைக்கு வர முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர் மீண்டும் சட்டசபைக்கு வந்து, சட்டசபை நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு கடமை ஆற்றுவதற்குத் தாங்கள் வழிகோல வேண்டுமென்று நான்—அவர் சார்பிலே அல்ல, அவர் கட்சி சார்பிலேகூட அல்ல—அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) குறிப்பாக அனைத்து எதிர்க்கட்சிகள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) கோரிக்கை வைக்கிறேன். நியாயமான கோரிக்கை. இதுவரை யாருமே இரண்டு தொடர்கள் சேர்ந்தாற்போல் சட்ட சபையிலேயிருந்து suspend செய்யப்பட்டது கிடையாது.



2003 ஏப்ரல் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு சட்டமன்ற உறுப்பினர் தவறான முறையில், தகாத முறையில் சபையின் கண்ணியத்திற்கு விரோதமாக நடந்துகொண்ட காரணத்தினால் நீக்கி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தங்களுக்கு அதனுடைய தொடர்ச்சியான விவரங்கள் எல்லாம் தெரியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் தவறாக நடக்கும்பட்சத்தில், அவரைத் திருத்த முற்பட வேண்டுமே தவிர, களங்கத்தை முகத்திலே வைத்துக்கொண்டு கண்ணாடியைத் துடைக்க முற்படக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த கூட்டத்தொடரிலே அவர் வந்து கலந்துகொள்ளலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நான் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை. பொதுவாக யாராக இருந்தாலும் கலந்துகொள்வதற்கு நீங்கள் வழி காண வேண்டும். தவறு செய்திருந்தால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பதிலைச் சொல்லிவிட்டேன். இனி, அதற்கு மேல் அந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதிக்கவில்லை. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர்—தார்மீகக் கடமைகளை—தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் செய்ய வேண்டிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அந்த விவரம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியும். அதனால் உட்காருங்கள். மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21-உள் துறை—காவல்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வரலாற்றிலேயே இதுவரையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பினை இந்தச் சட்டமன்றத்திலே வழங்கியது கிடையாது. ஒரு பதற்றமான சூழ்நிலையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதற்றமான சூழ்நிலையே கிடையாது. பிரச்சினை எல்லோருக்கும் தெரியும். அந்தக் கசப்பை மறுபடியும் நான் இங்கே அரங்கேற்ற விரும்பவில்லை. உட்காருங்கள்.

உள் துறை-காவல். (குறுக்கீடு) உட்காருங்கள். இதுபற்றி எஸ்.ஆர்.பி. அவர்கள் பிரச்சினையை எழுப்பினார்கள். பதிலைச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். அதற்கு மேல் இதை எழுப்புவதற்கு நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. ஹேமச்சந்திரன்.

2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை என் 21-உள் துறை - காவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன கேட்க வேண்டும்? துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து முழுமையாக நீக்கப்படுகிறது.

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை என் 21-உள் துறை-காவல்

### (ஆ) கோரிக்கை என் 22-உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

### (அ) கோரிக்கை என் 21-உள் துறை-காவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை என் 21-உள் துறை-காவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,237,10,20,000 மூலதனக் கணக்கில் ரூ.152,89,53,000 மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 39, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 839, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1557, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2057, திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2224, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2329, திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2429, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2830, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொளகை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3703, திரு. டி.கே. இராஜா.



**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4036, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 193, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3045, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3851, திரு. ஏ.எஸ். கண்ணன்.

***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 554, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1616, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6938, திரு. கே. மகேந்திரன்.

**•திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1133, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2273, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"உள் துறை-காவல் பற்றிய 21ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,237,10,20,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.152,89,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

1998 ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சொத்து சம்பந்தமான குற்ற நிகழ்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 69.3 சதவீதம்தான். ஆனால், 2002-ல் சொத்து சம்பந்தமான குற்ற நிகழ்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டவை 75.8 சதவீதம். 1997 ஆம் ஆண்டு ஆதாயக் கொலைக் குற்றங்களின் கண்டுபிடிப்பு 48.5 சதவீதம்தான். இது 2002-ல் 76 சதவீதம். அதேபோன்று, கூட்டுக் கொள்ளைக் குற்றங்களில் 1997 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது 51.3 சதவீதம்தான். 1998-ல் 65.2 சதவீதம் ஆகவும், 1999-ல், 63.7 சதவீதம் ஆகவும் இருந்தது. 2002-ல் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டுக் கொள்ளைக் குற்றங்களின் சதவீதம் 80.9 சதவீதம் ஆகும். வழிப்பறிக் குற்றங்களில் 1997-ல் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் 59.9 சதவீதம்தான். 2002-ல் இது 73.5 சதவீதம். எனவே, தற்போது எங்கள் ஆட்சிக் காலத்தில் காவல் துறையினர் குற்றங்களை விரைந்து கண்டுபிடித்து வருகின்றனர் என்பது இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் தெளிவாகியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேண்டுமானால் மானியக் கோரிக்கையில் கேள்விகளாகக் கேட்கிறேன். அவர் வேண்டுமானால் பதிலாகச் சொல்லட்டும். இது ஒன்றும் மானியக் கோரிக்கையினுடைய உரையாகத் தெரியவில்லை. நான் கேள்விகளாக வேண்டுமானால் கேட்டுவிடுகிறேன். எத்தனை கேள்விகளுக்கு அவர் பதில் சொல்கிறார் என்பதை..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், பேசுங்கள். விமர்சனம் மற்றும் திறனாய்வு பண்ணுவதற்குப் போனால் நேரம் அத்தோடு முடிந்து போய்விடும்; நேரம் அத்தோடு முடிந்துவிடும்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை நவீனமயமாக்க வேண்டுமென்ற திட்டத்திற்கு மத்திய அரசும், மாநில அரசுமாகச் சேர்ந்து ஆளுக்குப் பாதியாகத் தருகின்றன. அந்தப் பணத்தில் மத்திய அரசு 25 சதவீதம் கடனாகத் தருகிறது. 25 சதவீதம் மானியமாகத் தருகிறது. நவீனமயமாக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் மத்திய அரசு நிதியை வழங்குகிறது. ஆனால், அந்த நிதியில் 44 சதவீதம்— கொள்கை விளக்கப் புத்தகத்தில் உள்ளதைத்தான் நான் சொல்கிறேன். 44 சதவீதம்--வீட்டு வசதிக்காக; வாகனங்களுக்கு 17 சதவீதம்; கட்டடங்களுக்கு 13 சதவீதம், ஆக மொத்தம் 74 சதவீதத்தை ஒதுக்கிவிட்டு மிச்சமிருக்கிற 26 சதவீதத்தைத்தான் நீங்கள் நவீனமயம் ஆக்குகிற அந்தத் திட்டத்திற்கு

ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆக, இப்படி நவீனமயமாக்கப்பட வேண்டிய காவல் துறைக்கு இன்றைக்குத் தீவிரவாதம் வளர்ந்து வருகிற ஒரு சூழ்நிலையில், மத்திய சர்க்கார் அதனுடைய பங்கைத் தருகிறது என்றால், அதை -- ஆயுதங்களை, நவீன ஆயுதங்களை வாங்கி சமாளிப்பதற்காக, தீவிரவாதிகளை அடக்குவதற்காக வழங்கப்பட்டு இருக்கிற அந்தப் பணத்தை -- நீங்கள் காவல் துறையினரின் வீட்டு வசதிக்காகப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். நான் குறையாகச் சொல்லவில்லை. 10,000 வீடுகள் அல்ல, 20,000 வீடுகள் கட்டிக் கொடுத்தாலும் நான் இந்த அரசாங்கத்தை வரவேற்கிறேன். ஆனால் அந்தப் பணத்திலிருந்து இதை வாங்குகிறீர்களே என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

காவல் துறை மானியக் கோரிக்கை குறித்து நான் பேச வருகிறபோது, இன்றைக்கு அனைத்துத் தரப்பு மக்களும் போராட்டக் களத்தில் இறங்கியிருக்கிறார்கள். தமிழகத்திலே பெரும்பாலான விவசாயிகள் இன்றைக்குப் போராட்டக் களத்திலே நின்று கொண்டிருக்கிறார்கள். 29 மாவட்டங்களில் 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்திருக்கிறீர்கள். அவர்கள் செய்த அறுவடைகள் எல்லாம் இன்று களத்து மேட்டிலேயே இருந்து கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது.

அதைப்போல, இலவச மின்சாரம் இரத்து செய்யப்பட்டால் போராட்டம் வரும் என்று விவசாயிகள் இன்றைக்குக் கூக்குரல் இட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வணிகர்களைப் பொறுத்தவரை மத்திய அரசு அறிவித்திருக்கிற V.A.T. சட்டத்தை எதிர்த்து போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டம் அகில இந்திய அளவிலே நடைபெற்றது என்றாலும்கூட, இங்கே தமிழகத்திலே போராட்டம் முடிவுற்றதற்குப் பிறகு, நேற்றைக்கு விடுதலை செய்யப்பட்டிருக்கிற, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிற வெள்ளையன், வணிகர் சங்கத் தலைவரைக் கைது செய்தீர்கள். நான் கேட்பதெல்லாம், இந்தியா முழுவதும் இந்த வணிகர் சங்கப் போராட்டம் நடைபெற்றபோது, வேறு எங்கேயும் வியாபாரிகள் சங்கத் தலைவரைக் கைது செய்யாதபோது, தமிழகத்திலே மாத்திரம் வியாபாரிகள் சங்கத் தலைவரைக் கைது செய்து பழி வாங்குவதற்கு இந்த அரசுக்கு என்ன வந்தது?



*முற்பகல் 11-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வெள்ளையன் அவர்கள் கைது செய்யப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டு, இந்தியாவில் வேறு எங்கேயும் இத்தகைய கைது நடைபெறாதபோது, இந்த மாநிலத்தில் மட்டும் ஏன் நடைபெற்றது என்று கேட்கிறார். இந்தியாவில் பிற மாநிலங்களில் இத்தகைய போராட்டங்களின்போது யாரும் கைது செய்யப்பட்டார்களா இல்லையா என்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் திரு. வெள்ளையன் கைது செய்யப்பட்டதற்குக் காரணம் அன்றைக்குக் கடையடைப்பு என்று அறிவித்தார்கள். ஆனால், பெரும்பாலான கடைகள் திறந்தே இருந்தன. வியாபாரிகள் கடைகளை மூட விரும்பவில்லை. அதனால் திரு. வெள்ளையன் தன்னுடைய கூட்டாளிகள் சிலரை அழைத்துக் கொண்டு 3 குவாலிஸ் வண்டிகளில் சென்று கடைக்காரர்களை மிரட்டி, கடைகளை மூடுமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தினார். சில கடைகளை அவரே மூடினார். கடைக்காரர்களை அச்சுறுத்தினார்கள். அவர்களைத் துன்புறுத்தினார்கள். இது சம்பந்தமாக, பாதிக்கப்பட்ட கடைக்காரர்கள் புகார் செய்தார்கள். அந்தப் புகாரின் அடிப்படையில்தான் திரு. வெள்ளையன் கைது செய்யப்பட்டார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கைது செய்ததைத் தவறு என்று அந்த வாதத்திற்கு வரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வெள்ளையனைக் கைது செய்ததைப் பழி வாங்கும் நடவடிக்கை என்று இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதற்குத்தான் விளக்கம் அளித்தேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** போராட்டக் களத்தில் இருக்கும்போது கைது செய்யாமல் இரவு, நள்ளிரவிலே அவரைக் கைது செய்ததைத் தான் பழி வாங்கும் நடவடிக்கை என்று நான் குறிப்பிட்டேன். மேலும் சொல்கிறேன்; காவல் துறையில் ஒரு அதிகாரி சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார் என்ன காரணம் என்று கேட்டால் அவர் ஏதோ வெள்ளையனைக் கைது செய்யாது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து தவறான தகவலையே இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கிறார். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டபோது திரு. வெள்ளையன் ஏன் கைது செய்யப்படவில்லை என்று கேட்கிறார். திரு. வெள்ளையன் வெளிப்படையாகப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கடைக்காரர்களை அச்சுறுத்தி, துன்புறுத்தி, கட்டாயப்படுத்திக் கடைகளை மூடிக்கொண்டிருந்தபோது ஒரு காவல் துறை அதிகாரி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதனால்தான் பின்னர் அவர் மாற்றம் செய்யப்பட்டார். அந்த இடத்திலேயே திரு. வெள்ளையனைக் கைது செய்திருக்க வேண்டும். ஆனால், அந்த அதிகாரி தன்னுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டார். அதனால்தான் பின்னர் அவர் மாற்றம் செய்யப்பட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போலத் தொழிலாளர்கள் கழக ஆட்சியிலே பல சலுகைகளைப் பெற்றார்கள். ஆனால், நீங்கள் போனஸ் கூடத் தராத சூழ்நிலையில் இன்றைக்கு போராட்டக் களத்திலே இருக்கிறார்கள். அதைப்போல அரசுத் துறையைச் சேர்ந்தவர்கள். அதைப்போல ஆசிரியப் பெருமக்கள் அவர்களுடைய சலுகைகள் எல்லாம் பறிக்கப்பட்டுவிட்டன என்று போராட்ட அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களையெல்லாம நீங்கள் அழைத்துப் பேசி, வருகிற காலத்திலே போராட்டம் இல்லாமல் சட்டம் ஒழுங்கை காப்பாற்ற...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கைக்குச் சம்பந்தம் இல்லாத விஷயங்களை மாண்புமிகு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அரசு உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். யாரும் போராடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தை நடத்தி வருகிற நேரங்களில் போராட்டம் இல்லாமல் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காகத்தான் சொல்கிறேன். அதைப் போலவே *(குறுக்கீடுகள்)* இன்றைக்கு நெசவாளர்கள், மீனவர்கள் எல்லாம்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைக்குத் தொடர்பு இல்லாமல் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். உங்கள் நேரம் முடிந்தது என்றால் அப்புறம் நீங்கள் வருத்தப்படக்கூடாது. இன்னும் 3 மணித் துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** அது மாத்திரமல்ல, இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் ஒரு பெண்மணியாக இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள்**

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** மேலும் இந்தப் பிரச்சினை நீதிமன்றத்தின்முன் உள்ளது. ஆகவே, அதைப் பற்றி இங்கே விவாதிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; கல்லூரி மாணவிகள் சம்பந்தமாகப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள். *(குறுக்கீடு)* வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** ஒன்றுமே பேசவில்லையே. ஆகவே, நான் இன்றைக்கு இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம் இங்கே உங்களுடைய அலுவலகத்திற்கு முன்னால்கூட அதிகாரிக்கு ஒரு கத்திக் குத்துச் சம்பவம் நடந்தது. *(குறுக்கீடுகள்)* இது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. அதைக்கூட பேச வேண்டாமா?...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இல்லை, சம்பந்தமே இல்லாதது. *(குறுக்கீடுகள்)* வேறு ஏதாவது பிரச்சினை பற்றிப் பேசுங்கள். உங்களால் பேச முடியவில்லை என்றால் உட்கார்ந்துவிடுங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அருணாசலம் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜெ. அன்பழகன்:** இல்லை, பேச வேண்டாமா? *(குறுக்கீடு)* பேச வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் பேசவில்லை. இப்போது பேசினால் பேசுங்கள். 2 மணித் துளிகளுக்குள் முடியுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், போலீஸ்காரர்களை எல்லாம் சென்னையிலே தலைமைச் செயலகத்திலே உள்ள அறையிலே அவர்களை எல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். பேசி அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதாகச் சொன்னார்கள். அப்போது கூடக் காவல் துறையிலே 20 ஆண்டுகாலமாகத் தலைமைக் காவலராக இருந்த சார் ஆய்வாளர் தேர்விலே பாதிக்கப்பட்டவர்களின் முறையீட்டினைக் கேட்டு 11-8-2002 அன்று காவலரின் குறைபாடுகளைக் கேட்டு முதல்வர், பணிமூப்பின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும் என்று உறுதி அளித்திருந்தார்கள். ஆனால், இந்த உறுதிமொழிக்கு மாறாக, 3 ஆண்டு காலம் மட்டுமே தலைமைக் காவலராகப் பணிபுரிந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்கான அரசாங்க ஆணையை என்னிடத்திலே தந்திருக்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து முதல்வர் அவர்கள், அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-40

காவல் துறைக்கு இன்றைக்கு நீங்கள் 1391 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய துறை, முதலமைச்சருடைய துறை என்கிற காரணத்தால், நிதியமைச்சர் அவர்கள் கொஞ்சம் அதிகமாக இந்தத் துறைக்கு நிதியினை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் துறைக்கு ஒதுக்கியதில், அந்தப் பணத்தில் 10 ரூபாய்கூட இந்தத் துறைக்கு ஒதுக்கியதில், அந்தப் பணத்தில் 10 ரூபாய்கூட போலீஸ்காரர்களுடைய சம்பளம் உயரவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை நகரிலே தினமலர் பத்திரிகையிலே நேற்றைக்கு முந்தைய நாள் ஒரு செய்தி வந்தது. விபச்சாரத் தொழிலில் சிக்கியவர்களைப் பற்றியெல்லாம் அதிலே எழுதியிருந்தார்கள். பாரிமுனையிலே விபச்சாரம் கொடி கட்டிப் பறப்பதாக எழுதியிருந்தார்கள். சில துணை நடிகைகளைக் கைது செய்து, பெரிய அளவில் செய்திகளைப் போடுகிறார்களே தவிர, சின்னச் சின்ன சம்பவங்களில் எல்லாம் கைது செய்யவில்லை என்று சொல்லி அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவையெல்லாம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. நீங்கள் பேசிய கடைசி வாக்கியங்கள் எல்லாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. அ. அருணாசலம் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



***மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய காவல் தெய்வம், எங்களின் ஒரே இதயதெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், கொஞ்சம் இருங்கள். திரு. அன்பழகன், கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள். கண்ணியக்குறைவாக, தரக்குறைவாக, அநாகரிகமாகப் பேசுவதற்கு சட்டமன்றத்திலே இடம் கிடையாது. அதையெல்லாம் சந்து முனையிலே போய்ப் பேசுங்கள். இரவு நேரப் பொதுக் கூட்டங்களிலே போய்ப் பேசுங்கள். சட்டமன்றத்தில், முறையாக மானியக் கோரிக்கையிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** 5 நிமிடங்கள் கொடுங்கள். முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடங்கள் எல்லாம் கொடுக்கமுடியாது. 2 மணித்துளிகளில் முடியுங்கள். (குறுக்கீடு) 2 மணித்துளிகளில் முடியுங்கள்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சென்ற மானியக் கோரிக்கையிலே பேசும்போது சொன்னார்கள். நான் பிடித்தே தீருவேன் என்று சொன்னார்கள். ஒரு காலத்திலே நாங்கள் ஆட்சியிலே இருக்கிறபோது, இதே முதலமைச்சர் அவர்கள், கலைஞரைப் பார்த்து, 'வவுனியா காட்டிற்குள் வீரப்பனை அனுப்பிவிட்டார்கள்; இங்கே இல்லை' என்று சொன்னார். ஆனால், பின்னர் இருப்பதாக ஒத்துக்கொண்டு, ஓய்வுபெற்ற அதிகாரி திரு. தேவாரம் அவர்களை அனுப்பிவைத்து, அங்கே வீரப்பனைப் பிடிப்பேன் என்று சொன்னார். ஆனால், 2 ஆண்டு காலத்திற்குப் பிறகு, நேற்றைக்கு அறிவிக்கிறார்: 'தேவாரத்திற்கு உடல்நிலை சரியில்லை; ஆகவே, அவரை வேறொரு பணிக்கு அனுப்பி வைத்திருக்கிறேன்' என்று. உடல்நிலை சரியில்லாதவரை ஏன் வேறொரு பணிக்கு அனுப்பி, நம்முடைய அரசாங்கப் பணத்தை வீணடிக்கவேண்டும், அவருக்கு 50,000 ரூபாய் மாதந்தோறும் சம்பளம் வழங்கி, அரசாங்கப் பணத்தை இன்றைக்கு வீணடித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஓய்வுபெற்ற டி.ஜி.பி.-ஐ இன்றைக்கு வீட்டிற்குச் செல்லவேண்டிய டி.ஜி.பி.-ஐ மீண்டும் பணியிலே அமர்த்தி அவருக்கு மாதச் சம்பளம் தருகிறீர்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலே இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது; அவர்களாகவே பதில் சொல்லமுடியாது. நீங்கள் சம்பந்தமில்லாமல் இப்படிப் பேசக் கூடாது. நீங்கள் கடைசியில் பேசியது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குப் பதில் சொல்லமுடியாது. ஒரு காவல் துறை அதிகாரியினுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர் எப்படிப் பதில் சொல்லமுடியும்? உடல்நலக் குறைவின் காரணமாக, அவர் இங்கே வேறு பணிக்கு மாற்றப்பட்டிருக்கிறார் என்றால், அதெல்லாம் உள்நோக்கம் கற்பித்துப் பேசுவதுதானே.

**திரு. துரைமுருகன்:** அவையில் இல்லாதவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், ஆளுங்கட்சியிலே, அதுவும் ஓர் அரசாங்கம், இப்படிப்பட்ட அதிகாரிகளை, ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பதவியில் அமர்த்துகிற காரணத்தால், புதிதாக வருபவர்களுக்கு வாய்ப்பு கெட்டுப் போய்விடுகிறது; இவர்களுக்கு உடல் நலம் சரியில்லை; ஏன் அவர்களை வைக்கிறீர்கள் என்றுதான் அவர் கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்களே பேசிவிட்டீர்கள். முடிந்துவிட்டது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜெ. அன்பழகன்:** ஒரு மணித்துளி கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் காவல் தெய்வம், எங்களுடைய இதயதெய்வம், ஒரே இதயதெய்வம், இதயதெய்வம் புரட்சித்தலைவி அன்னை அவர்களை வணங்கி, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கைகளிலே, பேசுவதற்கு வாய்ப்பளித்த அன்னை அவர்களுக்கு நன்றி சொல்லி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். வள்ளுவர் சொன்னதற்கேற்ப ....

(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், மாண்புமிகு பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே வரக்கூடாது, முதலிலே..



(உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் காவல் துறை கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை, கிழித்து எறிந்தார்.)

முற்பகல் 11-45

## 4. அரசினர் தீர்மானம்

### (அ) திரு. ஜெ. அன்பழகன் கூட்டத் தொடர் முழுமைக்கும் அவை நடவடிக்கைகளினின்று நீக்கி வைக்கப் பெறுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவரை அவையிலிருந்து வெளியேற்றுங்கள். திரு. ஜெ. அன்பழகன் அவர்கள் எனக்கு நேரே வந்து மானியக் கோரிக்கையைக் கிழித்துப் போட்டு, சட்டமன்றத்தினுடைய மரபுக்கும், கண்ணியத்திற்கும், விதிமுறைகளுக்கும் மாறாக நடந்த காரணத்தால், அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று நானே கருதுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அலுவல்களை நடைபெறாது இடைமறித்தும் பேரவையின் விதிகளை, தொடர்ந்து முறையற்று மீறுவதாலும் சட்டமன்றப் பேரவையின் விதி 121 உள் விதி 2-ன்கீழ் இன்று அவைக்கு வருகை தந்திருக்கும் திரு. ஜெ. அன்பழகன் அவையிலே கண்ணியக் குறைவாகப் பேசி, அமங்கலமாகப் பேசி, அவையினுடைய மரபை மீறிப் பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கே வந்து வன்முறையைத் தூண்டுவது போல அங்கே புத்தகத்தைக் கிழித்து வீசி இருக்கிறார். இப்படிப்பட்ட நடவடிக்கையில் ஈடுபட்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் அவையிலிருந்து நீக்கி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 8

திரு. ஜெ. அன்பழகன் இந்தக் கூட்டத் தொடரில் இந்தக் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்படுகிறார். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன் அவையிலிருந்து உடனே வெளியேற வேண்டும். அவர் வெளியேறாவிட்டால் காவலர்கள் உடனே அவரை வெளியேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(அவைக் காவலர்கள் தி.மு.க. உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகனை வெளியேற்றினர்.)*

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மன்றத்தில் தன் கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு நேரம் இல்லை என்ற காரணத்தால் அவருடைய அதிருப்தியைத் தெரிவிப்பது பாராளுமன்ற முறையிலே ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பெரும்பாலான உறுப்பினர்களுக்கு அவர்கள் விரும்புகிற நேரம் கிடைக்கவில்லை. முன்வரிசைத் தலைவர்களைக்கூட நான் உட்கார வைத்திருக்கிறேன். அவர்களுடைய பேச்சை, அரையும்குறையுமாக, அவர்கள் பேசி முடிப்பதற்கு முன்னால், நான் உட்கார வைத்திருக்கிறேன். திரு. ஜி.கே. மணி அவர்களைப் பலமுறை உட்கார வைத்திருக்கிறேன். திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது நான் தலையிட்டு உட்கார வைத்திருக்கிறேன். ஏன் உங்களையே; உங்களுடைய பேச்சு முழுமையாக வருவதற்கு முன்னால் நான் உட்கார வைத்திருக்கிறேன், நேரத்தைக் கருதி. நேரத்தைக் கடைப்பிடித்து, அவையை நடத்த வேண்டிய பொறுப்பு என்னைச் சேர்ந்தது. அந்த வகையிலே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தைக் கொடுத்தேன். உரிய நேரத்தைக் கொடுத்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன நேரத்தையும்கூடக் கழித்துக்கொண்டு அவர்களுக்கு எவ்வளவு நேரம் நியாயமாகக் கொடுக்க வேண்டுமோ கொடுத்தேன். ஆனால் அந்தநேரத்திலே விதிகளுக்கு மாறாக, கண்ணியத்திற்கு மாறாக, ஆபாசமாக சட்டமன்றத்தைப் பயன்படுத்திப் பேசுவது என்பது முறையற்றது. இப்படிப்பட்ட பேச்சைப் பேசுவதற்குச் சட்டமன்றம் இடமளிக்காது. அது ஒரு பக்கம். ஆனால் அதற்கு நேரம் இல்லை என்கிற காரணத்திற்காக நேரே எனக்கு முன்னாலே வந்து மானியக் கோரிக்கைப் புத்தகங்களைக் கிழித்துப்போடுவது என்பது, இது அவையினுடைய மரபுகளைக் கடைப்பிடிப்பது அல்ல. இதே நிலையை ஒவ்வொரு உறுப்பினரும் பின்பற்ற ஆரம்பித்தால் அவையை நடத்த முடியாது. ஆகவே தாங்கள் என்னுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 8]

**திரு. துரைமுருகன்:** தங்களுடைய தீர்ப்பைப் பற்றி நான் சொல்லவில்லை. இந்த அவைக்கு இருக்கிற நேரத்தை எல்லோருக்கும் பகிர்ந்தளித்து அவையை நடத்துவது சபாநாயகருடைய உரிமை. அதிலே நான் குறுக்கிடவில்லை. அதேபோன்று தனக்கு நேரம் அதிகம் வேண்டுமென்று சபாநாயகரிடத்தில் கெஞ்சுவது, போராடுவது, கொஞ்சம் வேகமாகக்கூடப் பேசுவது மரபு. பாராளுமன்றத்திலேகூட அப்படிப்பட்ட நிலைகள் இருக்கின்றன. பாராளுமன்றத்தில்கூடத் தங்களுடைய உரிமைகளை மறுக்கின்றபோது well என்று சொல்கிற இடத்திற்கு இப்படிப்பட்ட உறுப்பினர்கள் உணர்ச்சிவயப்பட்டு வருவது உண்டு. இங்கே அன்பழகன் அவர்கள் தனக்கு நேரம் கிடைக்கவில்லை என்பதைத் தங்கள் அருகிலே வந்து தெரிவித்து, புத்தகத்தைக் கிழித்துப் போட்டார் என்பது உண்மை. ஆனால் ஆபாசமாக நடந்துகொண்டார், வார்த்தைகளைப் பிரயோகித்தார் என்பதை ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிய பேச்சுகள் சட்டமன்றத்தில் பேச வேண்டிய பேச்சுகளா என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும், இது முறையற்றது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத் தாங்கள் இந்த அவையில் சரியான ஒரு மதிப்பைத் தராத காரணத்தால் எங்கள் அதிருப்தியை வெளிப்படுத்துகிற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் அவர்கள் இப்படிப்பேசுவது எனக்கு மிகுந்த வியப்பாக இருக்கிறது. எந்த நேரத்தில் நீங்கள் பேச எழுந்தாலும், உங்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். கருத்தைச் சொல்ல அனுமதித்திருக்கிறேன். இவ்வளவுக்குப் பிறகும் நீங்கள், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு மதிப்பைத் தரவில்லை என்று பேசுவது நியாயத்திற்கு விரோதமானது.

**திரு. துரைமுருகன்:** ஒன்றைக் கேட்கிறேன், தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினரைத் தண்டிக்கலாம், இன்றைக்கு வராமல் இருக்கலாம். ஏற்கெனவே ஓர் உறுப்பினரைத் தொடர் கூட்டம் வரை வர வேண்டாம் என்கிறீர்கள். இன்னோர் உறுப்பினரை நீங்களாகவே இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் வர வேண்டாம் என்று சொல்வது என்ன ஜனநாயக முறை என்றுதான் நான் கேட்கிறேன். நீங்கள்தான் எங்களுடைய தலைவர்; நீங்கள்தான் எங்களுடைய உரிமையைக் காக்க வேண்டியவர்கள்; இந்த அவையிலே உங்களை நம்பித்தான் நாங்கள்

[திரு. துரைமுருகன்] [2003 ஏப்ரல் 8

உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கு அரணாகவும், எங்களுக்குப் பாதுகாப்பாகவும் எதிர்க் கட்சிகளுடைய வாயாகவும், கண்ணாகவும் இருக்க வேண்டியவர்கள்; நீங்கள் இப்படிச் செய்யலாமா என்பதுதான் என்னுடைய வினா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் நடந்து கொண்ட விதம் அவையினுடைய கண்ணியத்திற்கு மதிப்பளிக்கக்கூடிய விதம் அல்ல. தாங்கள் இப்போது பேசுவதுகூட உணர்ச்சிவசப்பட்டுப் பேசுவதுபோலக் காட்டுகிறீர்களே தவிர, உங்களுக்கு வரக்கூடிய கோபமோ உண்மையான கோபம் அல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களோடு நீண்ட காலமாகப் பழகியவன்.

**திரு. துரைமுருகன்:** என்னுடைய கோபத்தை இந்த அவை அறியும். ஆனால் இருக்கிற இடத்திற்கு, தகுதிக்கு, தலைமைப் பொறுப்புக்குத் தக்கபடி நான் நடந்து காட்டுகிறேன். அது தங்களுக்கு நடிப்பாக இருந்தால் நான் என்ன செய்ய முடியும். நடிக்க வேண்டுமானால், அதற்கும் நான் தயார்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

முற்பகல் 11-50

## 3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

**(அ) கோரிக்கை எண் 21 - உள் துறை - காவல்**—தொடர்ச்சி.

**(ஆ) கோரிக்கை எண் 22 - உள்துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்**—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் வெளியேற வேண்டுமென்ற ஒரு குறிக்கோளோடு வந்திருக்கிறார்கள் என்பது இதிலேயிருந்து தெரிகிறது. ஏனென்றால், இதய தெய்வம் புரட்சித்



2003 ஏப்ரல் 8] [திரு. அ. அருணாசலம்]

தலைவி அம்மா அவர்கள் சொல்கிற பதிலைக் கேட்பதற்குக்கூட அவர்களுக்குப் பொறுமை கிடையாது. ஏனென்றால், அங்கிருந்து சொல்வதற்குப் பதில் அவர்களிடம் கிடையாது. ஆகையால் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்"

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லியிருக்கிறார்கள். குடிமக்களைக் காப்பாற்ற வேண்டிய அரசனானவன், கொலைக் குற்றம் புரியும் கொடியவர்களைக் கொலைத் தண்டனை மூலம் தண்டிப்பது என்பது, உழவன் தன் பயிர்களைக் காப்பாற்ற களைகளைக் களைவதற்கு ஒப்பான செயலாகும். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் காவல் துறை என்பது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் காவல் துறை கண்ணியத் துறையாக நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் வரலாறு காட்டிக்கொண்டிருக்கிறது.

காவல் துறையைப் பொறுத்தவரையில், இந்த நிதிநிலை அறிக்கையில், குறிப்பாக எந்த ஆட்சியிலும் நிதி ஒதுக்காத சூழ்நிலையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1,391.4 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல தீயணைக்கின்ற அந்த தீயணைப்புத் துறைக்கும் 64 கோடியே, 70 இலட்சத்து, 5 ஆயிரம் ரூபாயை ஒதுக்கிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு.

காக்கிச் சட்டையைக் கண்டு காத தூரம் காலமெல்லாம் ஓடிய காலம் போய், காக்கிச் சட்டைக்காரர்களை நம் நண்பராக, தோளில் கை போட்டுக்கொண்டு பேசுகிற காலத்தை உருவாக்கியவர்தான் புரட்சித் தலைவி அன்னை அவர்கள். ஏனென்றால், காக்கிச் சட்டைக் காரர்களும் நண்பராக இருக்க வேண்டும்; சட்டத்தையும் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரு நெறியை உருவாக்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஒரு பழமொழி சொல்வார்கள்; உரலுக்கு ஒரு பக்கம் இடி; மத்தளத்திற்கோ இரு பக்கம் அடி. அப்படித்தான் காவல் துறையின் பொறுப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. காவல் துறை என்பது இப்படிச் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகிற நேரத்தில், அந்த மக்களைப் பாதுகாக்கிறபோது, அந்த மக்களை ஏதாவது அடித்தோ, சிறிது பாதுகாக்கிற வகையிலோ செய்தால், அதை எதிர்க் கட்சிக்காரர்கள்

குற்றம் சொல்வார்கள். ஆனால், பொது மக்களுடைய அமைதி காக்கப்பட வேண்டும். அந்த நேரத்திலே காவல் துறையை ஏசுவார்கள்; பேசுவார்கள். ஆனால் அதே காவல் துறை ஆளுங்கட்சியிலே ஒரு விழா நடந்தால்கூட, அங்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதிலேகூட பிரச்சினை வருகிறபோது அவர்களும் பேசுவார்கள். இரண்டு பக்கத்திலும் மாட்டிக் கொண்டிருக்கிற ஒரு துறை என்றால், அது காவல் துறை தான்.

காவல் துறை என்பது, சட்டத்தைக் காக்கிற துறை. அதுதான் சட்டம் ஒழுங்கைக் காக்கிற துறை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தன்னுடைய படத்திலே ஒரு பாடல் பாடினார். அதைப் பாடாமல் நான் இங்கே சொல்கிறேன்.

"அச்சம் என்பது மடமையடா;

அஞ்சாமை திராவிடர் உடமையடா;

அன்னையின் பொறுப்பில்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் அறிந்த வரையில், அது டி.ஆர். மகாலிங்கம் பாடிய பாட்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, எஸ்.ஆர்.பி. அவர்கள் படங்களை ஒழுங்காகப் பார்ப்பதில்லைபோல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்: (பேரவைத் துணைத் தலைவர்):**

அச்சம் என்பது மடமையடா;

அஞ்சாமை திராவிடர் உடமையடா;

அன்னையின் பொறுப்பில் காவல் துறையைத் தமிழகம் காப்பது பெருமையடா;

தமிழகம் காப்பது பெருமையடா; (மேசையைத் தட்டும் ஒலி)

அச்சம் என்பது மடமையடா;

அஞ்சாமை திராவிடர் உடமையடா;

அன்னையின் பொறுப்பில், தமிழகத்தை காவல் துறை காப்பது பெருமையடா;

காவல் துறை காப்பது பெருமையடா."

அப்படியென்று பாடல்கூட வருகிறது.



முற்பகல் 11-55

தமிழகத்தைப் பொறுத்தவரையில், அன்னை அவர்கள் காவல் துறையைக் காத்து வருகிறார்கள். அந்தக் காவல் தமிழகத்தை மட்டுமல்ல; இன்னும் சிறிது காலத்திலே இந்தியக் காவல் துறையையே காக்கின்ற பொறுப்பைக்கூட பெறுமென்பதை வரலாறு படைக்கவிருக்கிறது என்பதை இங்கே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், டி.ஜி.பி. கட்டடத்தை இடித்தீர்கள்; நாங்கள் அந்தக் கட்டடத்தை சீர் செய்தோம் என்றார்கள். ஒரு கட்டடம் இடிந்து விழுகிற சூழ்நிலையில் இருக்கிறது என்றால்--நான் இப்போது இராணி மேரி கல்லூரிக்குப் போகவில்லை. அது கோர்ட்டிலே இருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொல்லி விட்டார்கள். ஒரு கட்டடம் இடிந்து விழுகிறது, அந்தக் கட்டடம் இடிந்து விழுகிற நேரத்திலே--அங்கேயிருக்கிற அந்த மக்களுக்கும் அதிலே பணியாற்றுகின்ற அந்த அதிகாரிகளுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கடமை. ஆனால், அந்தக் கட்டடம் இடிந்து விழுகிற நேரத்திலேகூட, இடிந்துவிழுந்து, ஏதாவது அதிலே நடந்துவிட்டால், ஏன் இந்த இடிந்து விழக்கூடிய நிலையிலுள்ள கட்டடத்தை இத்தனை நாட்களாக வைத்திருந்தீர்கள், இதை நீங்கள் பாதுகாக்கக் கூடாதா என்று இதையும் சொல்வார்கள். ஆகவே, கட்டடத்தை இடிக்க வேண்டுமென்று யாருக்கும் விருப்பம் கிடையாது. ஆனால் 100 ஆண்டு காலம் ஆன கட்டடத்தை இடிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால் இடித்துத்தானே ஆகவேண்டும், பாதுகாப்புக் கொடுப்பது முதலமைச்சரின் கடமையென்கின்ற சூழ்நிலையில் இதனை, அன்பழகன் அவர்கள் சொன்னதற்கு இந்தக் கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் இங்கே முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், திருச்சியிலே போன மாதத்திலே தொல்காப்பியத்தை விற்பனை செய்வதற்காகப் போகிறார்கள். அப்படிப் போகின்ற நேரத்திலே, அங்கே பார்த்தீர்களேயானால், அவர் சொல்கிறார், ரொம்ப வருத்தப்படுகிறார், நான் முதலமைச்சராக மூன்று தடவை இருந்துவிட்டேன். எனக்கு இவ்வளவு போலீஸ்தானா. என்ன இது. என்ன அநியாயம் என்று சொல்கிறார். அவர் சொல்கிற நேரத்தில் நான் பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் 5 ஆண்டு காலம் ஆட்சியில் அமர்ந்திருந்தபோது, இதய தெய்வம் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் போகின்ற இடங்களில், எந்த இடத்திலாவது காவல் துறையிலிருந்து இவ்வளவு பேர்கள்தான் கொடுத்திருக்கிறார்களா என்று கேட்ட வரலாறு உண்டா கருணாநிதி நினைக்கிறார்கள், தானே முதலமைச்சராக இருப்பதுபோல. பல பேர்கள் வந்து, டி.ஜி.பி. அவர்கள் எல்லாம் வந்து கார் கதவைத் திறக்க வேண்டும் என்று நினைக்கிறார். முதலமைச்சருக்குத்தான் செய்வார்கள். நாம் நினைத்துக்கொண்டால் அது நடக்குமா? இதையும் கோரிக்கையாக, குறையாகச் சொல்லியிருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல் மகளிரைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவி அன்னையின் ஆட்சியிலே உலக வரலாறு படைக்கிற ஒரு திட்டம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் டி.ஜி.பி.-ஆக இருப்பவர், முதலமைச்சருக்கு வந்து கார் கதவைத் திறப்பதில்லை. அப்படி ஒரு வழக்கம் இல்லை. முதலமைச்சருக்கு அவருடைய P.S.O.-Personal Security Officer-தான் வந்து கதவைத் திறப்பது வழக்கம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்: (பேரவைத் துணைத் தலைவர்):** தவறுதலாகச் சொல்லியிருந்தால் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆக, அவர் நினைக்கிறார் அப்படி என்றுதான் சொன்னேன். ஆகவே, சட்டம்-ஒழுங்கைக் காக்கிற நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்தியத் துணைக் கண்டத்திலேயே, யாரும் நினைக்காத ஒன்றை, மகளிருக்காக, பெண் காவல் நிலையத்தை உருவாக்கினார்கள். அப்படி உருவாக்கிய பெருமை, புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. உலக வரலாற்றிலே 148 காவல் நிலையங்கள். அந்த 148 காவல் நிலையங்களைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார்கள் என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாசீர் பூட்டோ அவர்கள் அந்தக் காவல் நிலையங்களை அவர்களுடைய நாட்டிலே உருவாக்கினார்கள் என்பதை நாடு மறந்து விடாது.

ஜாதிக் கலவரத்தைப் பொறுத்தவரையில், சிவகங்கை மாவட்டத்திலே மூன்று ஆண்டுகளாக தேர் ஓடாது இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 24-6-2002 அன்று ஆணையிட்டு, கண்டதேவி என்ற இடத்திலே அந்தத் தேரை ஓட்டிக் காட்டினார்கள். அப்படி ஓட்டிக் காட்டிய பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)



அதுமட்டுமல்ல, இங்கே ஒரு கணக்கைச் சொல்லிக் கொண்டு போனார். ஜாதிக் கலவரம்; அதிலே கலவரங்கள் நடக்கிற அந்தக் குற்றத்தைக்கூட இங்கே நம்முடைய மானியக் கோரிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். 1997-லே 93 குற்றங்கள் நடந்து இருக்கின்றன. ஆனால், அதை 2002-2003-லே மூன்றே மூன்றாகக் குறைத்திருக்கிற பெருமை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு.

நண்பகல் 12-00

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏதோ ஆதிதிராவிடர்களுக்கெல்லாம் இவர்கள்தான் பாதுகாப்புக் கொடுத்ததுபோலப் பேசுகிறார்கள். நீங்கள் மறந்துவிடக்கூடாது. நெல்லையிலே, தாமிரபரணி ஆற்றில், தோட்டத் தொழிலாளர்களுக்காக, ஆதிதிராவிட மக்கள் 17 பேர்--தாமிரபரணி ஆற்றிலே மூழ்கடித்து--இறந்த கொடுமை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்தது என்பதை மறந்துவிடாதீர்கள்.

அதுமட்டுமல்ல; தி.மு.க ஆட்சியிலேதான், சிறைச் சாலையிலே, ஒரு சிறை அதிகாரியையே கொன்ற பெருமை, தீயிட்டுக் கொளுத்திய கொடுமை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அதை வரலாறு மறந்திருக்காது. அவற்றையெல்லாம் நீக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டத்தைப் பாதுகாத்து, தமிழகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, வடாற்காடு மாவட்டம் தூசி என்ற கிராமத்திலே--புரட்சித் தலைவி, காவல் நிலையங்களைத் திறந்துகொண்டே வருகிறார்கள்; நான்கூட, கடந்த மானியக் கோரிக்கையிலே கேட்டேன்; எங்களுடைய பகுதிக்கு ஒரு காவல் நிலையம் கொடுத்தார்; ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தூசி என்ற கிராமத்திலே--காவல் நிலையத்தை மூடிய பெருமை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு. அந்த தூசி என்ற கிராமத்திலே, கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது என்று அந்த மக்கள், அங்கே இருக்கிற ஊர்மக்கள், ஒரு சப்-இன்ஸ்பெக்டரிடம் போய்ப் புகார் கொடுக்கிறார்கள்; புகார் கொடுக்கிற நேரத்தில், அவர்களைக் கூப்பிட்டு, அதன்மீது நடவடிக்கை எடுத்து, மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கிறார். ஆனால், அந்த சப்-இன்ஸ்பெக்டரைத் தூக்கி, அந்தக் கிராமத்திலே இருந்து மாற்றி, அந்த தூசி கிராமத்திலே அந்தக் காவல் நிலையமே இல்லாது ஆக்கிய பெருமை, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு உண்டு.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில், சிறைக்கு அஞ்சாத சிங்கம்தான் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிறைக்கு அஞ்சியவர் இல்லை. 28 நாட்கள் சிறையிலே இருந்தார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; 28 நாட்கள்; 672 மணி நேரம் ஆனால், கருணாநிதி 24 மணி நேரம் உள்ளே இருந்துகொண்டு, அவர் பண்ணின அட்டூழியத்தையும் வரலாறு பார்த்துக் கொண்டுதான் இருந்தது. 28 நாட்கள், 672 மணி நேரம் சிறையிலே இருந்தார்கள்; அவருடைய முகம் வாடியிருந்ததே தவிர, உள்ளம், வைராக்கியம் மாறவில்லை. ஒன்றை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நானும், மறைந்த அருமை அண்ணன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், சிறைச்சாலையிலே இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நானும் சென்று பார்த்தேன். முகம்கூட வாடவில்லை.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மூன்றாவது நாள்தான் பார்க்க எனக்கு அனுமதி கொடுத்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பார்ப்பதற்கு நானும் ஒரு சீட்டு எழுதிக் கொடுத்தேன். எனக்கும் ஒரு அனுமதி கிடைத்தது. அப்போது அருமை அண்ணன், மறைந்த டாக்டர் நாவலர் அவர்கள், முதன்முதலிலே அன்னையைப் பார்க்கிறார்கள். அதற்குப் பின்னாலே நானும் போகிறேன். போகிற நேரத்திலே, அவருடைய தங்கமான மேனி, அந்த உடம்பெல்லாம், கையெல்லாம் பார்த்தால், கொசு கடித்து, அவர்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையிலும்கூட, அம்மா அவர்களே, நீங்கள் கவலைப்படாதீர்கள் என்று நாங்கள் சொல்கிற நேரத்தில், எங்களுக்குச் சொன்னார்கள்; நீங்கள் போய்த் தைரியமாக இருங்கள்; நீங்கள் ஊருக்கெல்லாம் சென்று, பொதுக்கூட்டத்தைப் போட்டு மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள் என்று சொன்ன பெருமை; சிறைக்கு அஞ்சாத சிங்கம்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை வரலாறு மறந்துவிடாது.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தைப் பொறுத்தவரையில் "கறுப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்" என்று சொல்வார்கள். ஆனால். அந்த நிலைமையை எல்லாம் மாற்றி "காக்கிச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன்" என்கிற வரலாறு படைத்ததுதான் தமிழகக் காவல் துறை என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதுமட்டுமல்லாமல், இங்கே எல்லாம் நாங்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்று சொல்கிறோம். அதேபோல, இதய தெய்வம் என்று சொல்கிறோம். அதற்கு நான் ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதய தெய்வம் என்றால், ஒரே ஒரு தெய்வம் எங்களுக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பல தெய்வத்தைச் சொல்ல முடியாது. ஏனென்றால், அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை; நேற்றுக்கூட சட்டசபையிலே சொன்னார்கள்; எங்களுடைய இதய தெய்வம் ஐயா அவர்களே, சின்ன ஐயா அவர்களே, மற்றும் ஜி.கே. மணி அவர்களே மற்றும் ஐயா என்று வரிசையாக சொல்லிக் கொண்டே வந்தார்கள். நாங்கள் சொல்வது, கட்சிக்கும், ஆட்சிக்கும், ஒரே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களைத்தான் இதய தெய்வம் என்று சொல்கிறோம். புரட்சி என்பதை உருவாக்குகிற நேரத்தில் (குறுக்கீடு)

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறாகச் சொல்லவில்லை; யாரைப்பற்றியும் தவறாகச் சொல்லவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** அவர்களுக்கு அவர்களுடைய தலைவர் இதய தெய்வம்; எங்களுக்கு எங்களுடைய தலைவர் இதய தெய்வம். இதில் என்ன தப்புங்க? (குறுக்கீடு) இதில் என்ன தப்புங்க?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே இதய தெய்வத்தைதான் சொன்னேன். நீங்கள் சொன்னால், ஒரு இதய தெய்வத்தை சொல்லுங்கள். (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** நான் தவறாகச் சொல்லவில்லை. எங்களுக்கு ஒரே தலைவர், ஒரே இதய தெய்வம் என்றுதான் சொன்னேன். ஆகவே, இப்படிப்பட்ட

சூழ்நிலையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் காவல் துறையிடம் போய் எங்களுடைய குறையைக் கேளுங்கள் என்று பொதுமக்கள் மனுவை கொடுப்பார்கள் ஆனால், காவல் துறை வரலாற்றிலே, காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய குறைகளையும் கேட்ட பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அன்னைக்குத்தான் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்லாமல், காவல் துறையில் இருப்பவர்கள் வெயிலிலும் மழையிலும் எப்படிக் கஷ்டப்படுவார்கள்? 24 மணி நேரமும் கஷ்டப்படுவார்கள்; போலீஸ் என்றால் போலீஸ்தான், அந்த போலீஸ் துறை 24 மணி நேரம் பணியாற்றுகிற துறை. அந்தத் துறையில் உள்ளவர்கள் வேலைக்குப் போகிற நேரத்தில் அவர்களுடைய பச்சிளங் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று, அவர்களுக்காகக் குழந்தைகள் காப்பகத்தை உருவாக்கிய பெருமை புரட்சித் தலைவி அம்மாவுக்கு உண்டு.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு காவல் துறையிலே எல்லாமே கணினி மயம். காவல் துறையில் பைக் நல்லா இருந்தால்தான் திருடனைப் போய்ப் பிடிக்க முடியும். ஒரு பைக்கை போலீஸ் ஸ்டார்ட் பண்ணுவார்; அவர் ஸ்டார்ட் பண்ணுவதற்குள் திருடன் ஓடிப் போய்விடுவான். பிடி, பிடி என்று அவர் கத்திக்கொண்டு இருப்பார். அந்த நிலைமையை எல்லாம் மாற்றி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவல் துறையைக் கணினி மயமாக ஆக்கினார்கள் தமிழகத்திலே காவல் துறையிலே தற்போது 891 கணினிகள் உள்ளன; மேலும் 436 கணினிகள் வாங்கப்பட உள்ளன என்பதை இந்த நேரத்திலே பணிவோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், காவல் துறையில் உள்ளவர்கள் இறந்து விட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி ரூ.2 இலட்சமாக இருந்ததை ரூ. 5 இலட்சமாக மாற்றிய பெருமை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. நிரந்தரமாக ஊனம் ஏற்பட்டால் ரூ.50 ஆயிரமாக இருந்ததை ரூ.1 இலட்சமாக ஆக்கி; அதேமாதிரி கடுமையான காயம் ஏற்பட்டால் ரூ.10 ஆயிரமாக இருந்ததை ரூ.20 ஆயிரமாக ஆக்கி; அதுபோல் சிறு காயம் ஏற்பட்டால் ரூ.5 ஆயிரமாக இருந்ததை ரூ.10 ஆயிரமாக ஆக்கிய பெருமை புரட்சித் தலைவி அன்னைக்கு உண்டு.



இந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பணிவான ஒரு வேண்டுகோளை விடுப்பதற்கு முன்னாலே; தமிழகத்தைப் பொறுத்தவரையில், போலீஸ் என்றால், The Department of Government which is concerned with the maintenance of public order and safety and enforcement of Law. This is the definition of Police. ஒரு காவல் துறை மக்களிடையே சட்டம் ஒழுங்கைக் காக்கிற நிலையில் பொதுமக்களையும் பாதுகாக்கிற துறையாகும். இப்படிப்பட்ட காவல் துறையைப் புரட்சித் தலைவி கையிலே எடுத்ததால், அந்தக் காவல் துறை கண்ணியமாகப் பாதுகாக்கப்படுகிறது. இப்படிப்பட்ட ஆட்சியிலேதான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவல் துறைக்குப் பல நல்ல திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பழகன் சொன்னார்கள்; அரை கால் சட்டையைக்கூட முழுக்கால் சட்டையாக ஆக்கியது அவர்களுடைய தலைவர்தான் என்று சொன்னார்கள். எனக்கு ஏதோ ஞாபகம் இருக்கிறது; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் அரை கால் சட்டையை முழுக்கால் சட்டையாக ஆக்கினார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை வரலாறு மறந்துவிடாது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்குப் பணிவான ஒரு கோரிக்கை, இந்த காக்கிச் சட்டை என்றால் காவல் துறைக்கு மட்டுமேயான சட்டை என்று உருவாக்க வேண்டும். ஏனென்றால், கூர்க்கா காக்கிச் சட்டை போட்டு இருக்கிறார். Forest-ல் இருப்பவர் காக்கிச் சட்டை போட்டு இருக்கிறார். ஸ்வீப்பர் காக்கி சட்டை போட்டு இருக்கிறார்; டிரைவர், ஆட்டோ டிரைவர் இப்படி இத்தனை பேரும் காக்கிச் சட்டை போட்டுக்கொள்கிறார்கள். ஒரு கூர்க்கா திடீரென்று வீதியிலே வருகிறபோது, அவர் சப்-இன்ஸ்பெக்டர் மாதிரி இருக்கிறார். அவர் அணிந்திருப்பதைப் பார்த்தால் காக்கிச் சட்டை, இந்த காக்கிச் சட்டை என்பது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், காவல் துறைக்குத்தான் என்று நிர்ணயித்தால் சிறப்பாக இருக்கும். காக்கிச் சட்டை தமிழகத்தைக் காத்து வருகிற சட்டை; அந்த காக்கி சட்டை சிறப்போடு காவல் துறையை தன்னுடைய கையிலே எடுத்து பணியாற்றிக்கொண்டிருக்கிற அன்னை அவர்களுக்கு, நான் இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அன்னை அவர்களுக்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் எழுப்பிய இரு பிரச்சினைகளுக்கு அவர் இந்த அவையிலே இருக்கிறபோதே நான் பதில் சொல்ல வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அதற்குள் நிலைமை வேறுவிதமாக ஆகிவிட்டது. இப்போது அவர் இந்த அவையில் இல்லை. இருந்தாலும்கூட அவர் தெரிவித்த கருத்துகள் மட்டுமே பத்திரிகைச் செய்திகளில் இடம் பெற்றுவிடும் என்பதால் அவற்றிற்கு நான் இப்போதே விளக்கம் கூற விரும்புகிறேன்.

திரு. வால்டர் தேவாரம் அவர்களுக்கு ஒரு பதவி கொடுக்கப்பட்டதைப் பற்றி இங்கே குறை கூறினார் திரு. அன்பழகன். ஓய்வு பெற்ற டி.ஜி.பி. திரு. வால்டர் தேவாரம் அவர்கள், வீரப்பனைப் பிடிப்பதற்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிற சிறப்பு அதிரடிப் படைக்குத் தலைவராக 2001-ல் நியமிக்கப்பட்டார். இரண்டு ஆண்டு காலம் அந்தப் பதவியில் அவர் Contract basis-ல் ஒப்பந்தம் செய்யப்பட்டு பணியாற்றினார். அதன் பின்னர் அண்மைக் காலத்தில் அவருக்கு மிகவும் உடல்நிலை பாதிக்கப்பட்டதால், அந்தப் பொறுப்பிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அவருடைய ஒப்பந்தம் --Contract-- terminate செய்யப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் ஒரு கேள்வியை எழுப்பினார். இப்படி உடல்நிலை சரி இல்லாத ஓர் ஓய்வு பெற்ற டி.ஜி.பி.-க்கு மீண்டும் அரசாங்கப் பதவி ஒன்றைக் கொடுத்து, அவருக்குச் சம்பளம் கொடுத்து, ஏன் அரசுப் பணத்தை, பொதுப் பணத்தை விரயமாக்குகிறீர்கள் என்று கேட்டார். தற்போது திரு. வால்டர் தேவாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பதவி Tamil Nadu Sports Development Authority-யின் Vice-President என்ற கௌரவப் பதவிதான். இந்தப் பதவி வெறும் கௌரவப் பதவி. It is an honorary post. இதற்கு எந்தவிதமான சம்பளமும் கிடையாது. எந்தவிதமான படிகளும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், Police Modernisation Scheme என்னும் காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் நீங்கள் கட்டடங்களுக்கும், காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவதற்கும் நிதியைச் செலவிடுகிறீர்களே என்ற கேள்வியை இங்கே எழுப்பினார். மத்திய அரசாங்கம், நவீனமயமாக்குகின்ற திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற



நிதி, எவ்வாறு செலவு செய்யப்பட வேண்டும் என்பதற்குச் சில தெளிவான வழிமுறைகளை விதித்திருக்கிறது. Modernisation of Police Scheme என்ற திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம் பாதி நிதியைத் தருகிறது, பாதி நிதியை மாநில அரசு தருகிறது. அந்த நிதியை எவ்வாறு செலவு செய்ய வேண்டுமென்று தெளிவான guidelines-ஐ மத்திய அரசு வழங்கி இருக்கிறது. ஒவ்வொரு தலைப்பிற்கும் இவ்வளவு சதவிகிதம் செலவிடப்பட வேண்டும் என்ற வழிமுறைகள் இருக்கின்றன. உதாரணத்திற்கு, equipments-- தளவாடங்கள் என்றால், அதற்கு 7 சதவிகிதம் செலவு செய்யப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கம் வழிமுறை விதித்திருக்கிறது. அப்படியானால் இதற்குச் செலவிடப்பட வேண்டிய தொகை 20.4 கோடி ரூபாயாகும். இதை முழுமையாகப் பயன்படுத்தி இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்கள் இங்கே ஒரு பாடலைப் பாடிக் காண்பித்தார்.

'அச்சம் என்பது மடமையடா,
அஞ்சாமை திராவிடர் உடமையடா.'

இது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடிய பாடல் என்று குறிப்பிட்டபோது, மாண்புமிகு எஸ்.ஆர்.பி. அவர்கள் இது டி.ஆர். மகாலிங்கம் பாடிய பாடல் அல்லவா என்று கேட்டார். நான் எஸ்.ஆர்.பி. அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 'மன்னாதி மன்னன்' என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்காக டி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பாடிய பாடல் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியினை முதற்கண் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மக்களுடைய ஜனத்தொகைக்கேற்ப காவலர்களுடைய எண்ணிக்கை இல்லை. மேல் மட்டத்திலேயிருந்து கீழ் மட்டம் வரை இருக்கக்கூடிய காவலர்களுடைய எண்ணிக்கை அதிகமாக்கப்பட வேண்டும் என்பதிலே இருவேறு கருத்துகளுக்கு இடம் இல்லை. எண்ணிக்கை அதிகமானாலும், காவலர்களுடைய எண்ணத்தில் ஒரு

மாற்றம் வேண்டும் என்பதிலே ஐயம் இல்லை. இப்போதைய சூழ்நிலையில் அதிகமான விமர்சனங்களுக்கு ஆளாகக்கூடிய ஒரு துறையாகவும் காவல் துறை இருந்துகொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் எவ்வளவுதான் நாம் திருத்தங்கள் கொண்டுவந்தாலும், சீர்திருத்தங்கள் கொண்டுவந்தாலும், போலீஸ் துறையிலே பணி செய்கிறவர்களிடையே ஒரு பொறுப்புணர்வு வந்தாக வேண்டும். அது வரவில்லையென்றால் அரசியல் ரீதியாகவோ, வேறு ரீதியாகவோ நாம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டாலும் அது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

போலீஸ்காரர்கள் எல்லா வகையிலும் சங்கடத்திற்கு ஆளாகிறார்கள். அதையும் நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். முழுக்க முழுக்க நாம் போலீஸ் துறையைக் குற்றம் சாட்ட முடியாது. அதேநேரத்தில் இருக்கும் போலீசார் தங்களது கடமையை ஒழுங்காகச் செய்தாலே பெரும்பாலான குற்றங்கள் தவிர்க்கப்படும். பல நேரங்களில் போலீஸ்காரர்கள் சில குற்றம் செய்பவர்களுக்கு உடந்தையாக உள்ளார்கள். குற்றவாளிகளுடன் நெருங்கிய தொடர்பும் உள்ளது. அவர்கள்தான் கறுப்பு ஆடுகள். உதாரணமாக ஏ.எஸ்.பி. கோடீஸ்வரன், ஆய்வாளர் கர்ணன், இன்னும் பல பேர் அந்தத் துறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் கண்டுபிடித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விருப்பப்படுகிறேன். இதற்கு ஒரு தீர்வையும் கடுமையாக....

பிற்பகல் 12-15

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்த போலீஸ் இன்ஸ்பெக்டர் கர்ணன் மீதும், அவருடைய கூட்டாளிகள் மீதும் தக்க நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள் கைதுகூடச் செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதில் எனக்கும் சந்தேகம் இல்லை. இருந்தாலும் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளைத்தான் நான் வைக்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இதற்காக ஒரு தீர்வை, கடுமையான சட்டத்தைத் தமிழக போலீஸ்



கொண்டுவருகின்ற சூழ்நிலை தற்போது உள்ளது. போலீஸ் துறை எடுத்துக் கொள்கின்ற எல்லா நடவடிக்கைகளையும், நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. சமுதாயத்தில் இருக்கக்கூடிய பல்வேறு துறைகளும் பொறுப்போடு இருந்தால் நிச்சயமாக போலீஸ் துறைக்கும் கொஞ்சம் பொறுப்பு வரும் என்று நான் கருதுகிறேன். காவல் துறையினர் இந்த நாட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதற்குப் பணி செய்யக்கூடியவர்கள்; மக்கள் தொண்டர்கள், மக்களுடைய சேவைக்காக இருக்கக்கூடியவர்கள். அவர்களை எந்தக் காலத்திலும் எந்தச் சூழலிலும், தவறான காரியத்திற்குப் பயன்படுத்தக்கூடாது என்ற எண்ணம் சமுதாயத்திலே உள்ள பல்வேறு தரப்பினருக்கும் வந்தாக வேண்டும்.

அதே நேரத்தில் போலீஸ் துறையைவிட்டு நாம் அகலவும் முடியாது. மிகவும் அருகில் வைத்துக்கொண்டு உதவவும் முடியாது. போலீஸ் துறையை நாம் நெருப்பைப்போலப் பயன்படுத்த வேண்டும். குளிர் காய்வதற்கு நெருப்பை நாம் எப்படி பயன்படுத்துகிறோமோ அப்படித்தான் நாம் போலீஸ் துறையைப் பயன்படுத்த வேண்டும். நாம் அதைவிட்டு தூரச் சென்றுவிட்டால் குளிர் நம்மைத் தாக்கும். அருகில் சென்றுவிட்டால் நெருப்பு நம்மைச் சுடும். எனவே குளிர் காய்வதைப் போலத்தான் போலீஸ்காரர்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்தில் இந்த அரசு மாறுபடுகிறது. காவல் துறையினர் மக்களுக்கு மிக நெருங்கி வரவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில்தான் Friends of Police என்ற திட்டத்தை ஏற்கெனவே நான் முதன் முறை முதலமைச்சராக இருந்தபோது 1994-ல் தொடங்கி அது மிகவும் வெற்றிகரமாகச் செயல்பட்டு இப்போது அந்தத் திட்டம் விரிவடைந்து நிறைய வரவேற்பு ஏற்பட்டு Community Policing என்ற அடிப்படையில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்திற்கு நம்முடைய காவல் துறை அதிகாரிகள் சிலர் வெளிநாடுகளில் வழங்கப்படும் உயர்ந்த விருதுகளைக்கூடப் பெற்று இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தின் அடிப்படையே Friends of Police என்பதாகும். ஆகவே, பொதுமக்களையும், காவல் துறையினரையும் பார்ட்னர்களாகச் செயல்பட வைக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசின் கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் குற்றங்களை விஞ்ஞானபூர்வமாகச் செய்கிறார்கள். கொலைகளை விஞ்ஞானபூர்வமாகச் செய்கிறார்கள். கொள்ளைகளை விஞ்ஞானபூர்வமாகச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அத்தகைய குற்றவாளிகளுக்கெல்லாம் இந்தத் தகவல் தொழில் நுட்பம் மிகச் சாதகமாக இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே தமிழக அரசு அந்தக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு காவல் துறையில் இருக்கின்ற பல்வேறு காரணங்களால் முடியவில்லை. ஏனென்று சொன்னால் என்ன நடக்கிறது என்றுகூடச் சில காவலர்களுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியாக இப்படிச் செய்யப்படுகின்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் ஒரு Cyber Crime Cell உருவாக்கப்படும் என்று கடந்த ஆண்டு போலீஸ் மானியக் கோரிக்கையின்போது நான் அறிவித்தேன். அது இப்போது ஏற்படுத்தப்பட்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** காவல் துறையை நவீனமயமாக்குவது அவசியம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்திலே இன்றைக்கு ஒரு பக்கத்திலே விடுதலைப் புலிகளினுடைய தொந்தரவு அதிகமாகி இருக்கிறது. ஒரு பக்கத்திலே தமிழர்களினுடைய....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம், விடுதலைப் புலிகளே இல்லையே; அது தடைப்படுத்தப்பட்ட அமைப்பு; இங்கு இல்லையே. நீங்கள் எங்காவது புலிகளைப் பார்த்தீர்களா?

**திரு. டி. சுதர்சனம்:** விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் தமிழகத்திலே இருந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று அந்த விடுதலைப் புலிகள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தமிழ்நாட்டில் முழுவதுமாக ஒடுக்கப்பட்டுவிட்டது. அவர்கள் முழுவதுமாக வெளியேற்றப்பட்டுவிட்டார்கள். விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் மீது பொடா சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு



அவர்கள் சிறையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-20*

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று தமிழகத்திலே தீவிரவாத இயக்கங்கள். அந்தத் தீவிரவாத இயக்கங்களுக்குத் துணை போகின்ற இயக்கங்கள் இன்றைக்கு நாட்டிலே நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் சீர்செய்ய வேண்டுமென்று சொன்னால் காவல் துறையை நாம் நவீனமயமாக்க வேண்டும். அதற்கான சிறப்பு நிதியை மத்திய அரசிடமிருந்து நாம் பெறவேண்டும். ஆந்திர மாநிலத்திலே நக்சலைட்டுகளை ஒடுக்குவதற்கு சென்ற ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும் பல கோடிக்கணக்கான ரூபாய்களை மத்திய அரசு ஆந்திர மாநில அரசுக்குக் கொடுத்தது. ஆனால் தமிழக அரசுக்குச் சிறப்பு நிதியாக எதையும் கொடுக்கவில்லை. உடனடியாகத் தமிழக முதல்வர் அவர்கள் மத்திய அரசைக் கேட்டு, அதிக நிதியை மானியமாகப் பெற்று, இந்தக் காவல் துறையை நவீனமயமாக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே வைக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-லிருந்து 2003 வரை காவல் துறையை நவீனமயமாக்குவதற்கு மத்திய அரசு 272.40 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது கொள்கை விளக்கக் குறிப்பில் 58-வது பக்கத்தில் ஆங்கிலத்தில் இருக்கிறது; தமிழிலும் இருக்கிறது.

**திரு. டி. சுதர்சனம்:** இன்னும் அதிகமாகப் பெறவேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குத் தமிழகத்திலே கந்து வட்டியை ஒழிப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். மீட்டர் வட்டியை ஒழிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளிலே இன்றைக்கும், இந்த நடவடிக்கை எடுத்தபின்னாலும்கூட, Integral Coach Factory பகுதியிலே, இன்னும் தொழிலாளர்கள் அதிகமாக வாழ்ந்து கொண்டிருக்கிற பகுதியிலே சம்பளம் வாங்குகின்றபோது இந்த மீட்டா வட்டிக்காரர்களுடைய தொல்லை [illegible]



184532

கொண்டிருக்கிறது. அவர்கள்மீது தனிக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று சென்னையிலே புறநகர்ப் பகுதியிலே இன்றைக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு ஒரே ஒரு S.P. தான் இருக்கிறார். சென்னையிலே எவ்வளவு மக்கள் தொகை இருக்கிறதோ அதேபோன்ற மக்கள் தொகை புறநகர்ப் பகுதியிலேயும் இருக்கிறது. சென்னையிலே 14 சட்டமன்றத் தொகுதிகள்; அதிலே சுமார் 30 இலட்சம் வாக்காளர்கள். ஆனால் புறநகர்ப் பகுதியிலே இருக்கின்ற 6 சட்டமன்றத் தொகுதிகளிலே 30 இலட்சம் வாக்காளர்கள். அந்த 30 இலட்சம் வாக்காளர்களின், குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரே ஒரு S.P. தான் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால் சென்னையிலே ஒரு கமிஷனர்; 3 ஜாயின்ட் கமிஷனர்கள்; அவர்களுக்கு உதவியாக 6 D.C.-க்கள்; அதற்குப் பின்னாலே A.C.-க்கள், Inspector-கள்; சுமார் 90 காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் புறநகர்ப் பகுதியிலே ஒரே ஒரு S.P.; 30, 35 காவல் நிலையங்கள் என்ற நிலைதான் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் சமீபத்திய ஆய்வினை எடுத்துப் பார்த்தீர்களானால், புறநகர்ப் பகுதியிலே பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன. குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. தாம்பரம் பகுதியிலே இரும்புலியூர் பாலத்தின் கீழே 8-க்கும் மேற்பட்ட படுகொலைகள் செய்யப்பட்டு, பிணங்கள் போடப்பட்டன. அந்தப் பிணங்களை இதுவரை யாரும் அடையாளமே கண்டுபிடிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதுமட்டுமல்ல, இப்படி இந்தப் புறநகர்ப் பகுதிகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. கொத்தவால்சாவடி, புறநகர்ப் பகுதிக்குப் போய்விட்டது. அதேபோல ஆவடி, அம்பத்தூர், மாதவரம் பகுதிகள், இங்கேயெல்லாம் தாதாக்கள் இன்றைக்கு அதிகமானபேர் வளர்ந்து வருகிறார்கள். அவர்கள் அந்த கந்து வட்டியை வசூலிப்பதோடு மட்டுமல்லாமல், அங்கேயிருக்கிற முதலாளிகளையெல்லாம் மிரட்டுகிறார்கள். ஆட்கடத்தல் செய்கிறார்கள். ஆட்கடத்தல் செய்வதோடு மட்டுமல்லாமல், மிரட்டி, கொலையும் செய்கிறார்கள். 50 ஆயிரம் ரூபாய் கொடுத்தால் இன்றைக்கு புறநகர்ப் பகுதியிலே கொலை செய்யக்கூடிய அளவுக்கு அங்கே சுற்றுப்புறச் சூழல் கெட்டிருக்கிறது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்கு நான்



கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் புறநகர்ப் பகுதியில் ஒரே ஒரு S.P. தான் இருக்கிறார் - அதற்குப் பதிலாக தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு இணை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் அக்கறை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தப் புறநகர்ப் பகுதிகளை Greater Chennai-யோடு இணைப்பதற்கு ஒரு கருத்துரு ஏற்கெனவே உருவாக்கப்பட்டு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-25*

**திரு. டி. சுதர்சனம்:** முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கமிஷனர் அந்தஸ்திலே ஒரு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** 5 மணித் துளிகள் வேண்டும். ஏனென்றால், முதன்முதலாகப் பேசுகிறேன். கமிஷனர் அந்தஸ்திலே ஒருவரை நீங்கள் நியமிக்கவேண்டும். அவருக்கு உறுதுணையாகப் பல்வேறு அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

சேலம் மாவட்ட காங்கிரஸ் தலைவர் தாளமுத்து நடராஜன் அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுவரை அந்த விஷயம் கண்டுபிடிக்கப்படவில்லை. அதைத் தயவுசெய்து நீங்கள் உடனடியாகக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

காவல் துறைக்கு அரசு செய்ய வேண்டிய சில முக்கியமான 4 விஷயங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இலஞ்ச ஒழிப்புப் பிரிவுக்கு மட்டும் 15 சதவிகிதம் சம்பளம் உயர்த்தி ஊக்கத்தொகையாகக் கொடுத்திருக்கிறீர்கள். மற்ற அனைத்துச் சிறப்புப் பிரிவுகளுக்கும் ஊக்கத் தொகை வழங்க வேண்டுமென்ற வேண்டுகோளையும், உதவியாளர்களாக 10 முதல் 15 வருடங்கள் பணிபுரிந்தவர்களுக்கு பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு வழங்க

வேண்டுமென்பதையும், தற்போது சலவைப்படியாக காவலர்களுக்கு ரூ.40 வழங்கப்பட்டு வருவதை ரூ.75 ஆக உயர்த்த வேண்டுமென்றும், சென்னை மாநகரில் 1981-ல் பெண் காவலர்களாக நியமிக்கப்பட்டு, தலைமைக் காவலர்களாக பதவி உயர்த்தப்பட்டு, பணிபுரிந்த 28 பேர்கள் தேர்விலே வெற்றி பெற்றும், அவர்களில் 3 பேர்கள் மட்டும் உதவி ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; மீதி 25 பேரை உதவி ஆய்வாளர்களாக நியமிக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கள்ளச்சாராயம் இன்றைக்கு எங்களுடைய பகுதியிலே, திருவள்ளூர் மாவட்டத்திலே அதிகமான அளவிலே இருந்துகொண்டு இருக்கிறது. அது ஆந்திர மாநில எல்லையை ஒட்டியிருக்கிற மாவட்டம். அங்கே பல்வேறு கிராமங்களிலே கள்ளச்சாராயம் அதிக அளவில் காய்ச்சப்படுகிறது. ஆந்திராவிலிருந்து கடத்தப்படுகிறது. இதை அரசு நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று இரண்டாண்டுகளுக்கு முன்னாலே, இராமதண்டலம், பீமன்தோப்பு என்ற கிராமத்திலே இரண்டு பெண்மணிகள் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களாலே படுகொலை செய்யப்பட்டார்கள். இந்திராணி என்ற பெண்மணியும், இரத்தினம்மாள் என்ற பெண்மணியும் பாவிகளாலே படுகொலை செய்யப்பட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர்கூடக் கண்டன அறிக்கையை அன்றையதினம் வெளியிட்டார்கள். ஆனால் அந்தக் குற்றவாளிகள்மீது இரண்டாண்டுக் காலம் வழக்கு நடைபெற்று இன்றைக்கு இவர்கள்தான் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்படாததால், இன்றைக்கு அந்த வழக்கு செங்கற்பட்டு கோர்ட்டிலே தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதற்கு அருள்கூர்ந்து மேல்முறையீடு செய்ய வேண்டும். உண்மையான குற்றவாளிகள் இன்றைக்கு அங்கே திருவள்ளூரிலே சகஜமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும், அந்த வழக்கை உயர் நீதிமன்றத்திலே நடத்துவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே திருவூர் கிராமம்; திருவூரிலே இரண்டு பேர் படுகொலை செய்யப்பட்டார்கள். என்ன காரணத்திற்காகப் படுகொலை செய்யப்பட்டார்கள்? அங்கே சாதிக் கலவரம் என்று சொன்னார்கள். இரண்டு இளைஞர்கள்; ஒருவர்



பெயர் மகேஷ், வயது 25; மற்றொருவர் பெயர் சிவகுமார், பிளஸ் டூ மாணவன். இரண்டு பேர் அங்கே படுகொலை செய்யப்பட்டார்கள். அந்தப் படுகொலைக்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்த்தோமானால், சாதிக் கலவரமே இல்லை. மணல் கொள்ளை. அந்த மணல் கொள்ளையால்தான் அங்கே இரு பிரிவினருக்கும் தகராறு ஏற்பட்டது. நம்முடைய பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் வந்திருந்தார்கள். நானும் அவர்களும் அந்தப் படுகொலையைப் பார்த்தபோது அந்தத் தாய்மார்கள் அழுதார்கள். அவர்கள் மிகவும் பரிதாபமாக அழுதார்கள். மிகவும் துடிதுடித்து அழுதார்கள். அந்தத் தாய்மார்களின் உள்ளங்களைப் பார்க்கின்றபோது—

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்த வழக்கில் accused, National Security Act-ன்கீழ் ஏற்கெனவே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு விட்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டுகிறேன். ஏனென்று சொன்னால், கைது செய்யப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகளே அல்ல. போலி குற்றவாளிகளையெல்லாம் கண்டுபிடித்துக் கைது செய்து..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுபற்றிய விவரங்கள் இருந்தால் சொல்லுங்கள். முதலமைச்சரிடம் கொடுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** போலிக் குற்றவாளிகளையெல்லாம் கைது செய்து, பலபேரை அழைத்து வந்தார்கள். அதற்கு விசாரணை என்ற பெயரிலே அங்கே காவல் துறை அதிகாரிகள் நடத்திய கூத்து, அதைப்பற்றி விவரமாக வேண்டுமானால் நான் எழுதி முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்கிறேன். அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் அந்தப் பகுதியிலே நடந்து கொண்டிருக்கின்றன. அதை நான் விவரமாகவும், விளக்கமாகவும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று நாமக்கல், ஈரோடு, திருச்சி மாவட்டங்களிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித் துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** போலியான ஆவணங்களைத் தயாரித்து இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியிலே கோடிக்கணக்கிலே மோசடி நடைபெறுகிறது. நாமக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களிலும் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் மட்டும் நூற்றுக்கணக்கான F.I.R. முதல் தகவல் அறிக்கைகள்-- பதிவு செய்யப்பட்டு முறையான, சரியான புலன் விசாரணைகள் செய்யப்படாமல், குற்றப் பத்திரிகைகள் தயாரிக்கப்பட்டு, திட்டமிட்டு சாலை விபத்துகள் ஜோடிக்கப்படுகின்றன. பல தனியார் மருத்துவமனைகள் மூலம், போலியான மருத்துவ பில்கள் தயாரிக்கப்பட்டு உடல் ஊனமுற்றதாக அதிக சதவிகிதத்தில், வேண்டுமென்றே போடப்பட்டும் இப்படி கோடிக்கணக்கான ரூபாயை அரசாங்கம், போலீஸ் அதிகாரிகள், மருத்துவமனை அதிகாரிகள் இன்னும் பலபேர் சேர்ந்து கூட்டுக்கொள்ளையாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆறு மாதங்கள் கழித்து F.I.R. போடுகிறார்கள். முந்தைய தேதியிட்டுப் போடுகிறார்கள். தயவுசெய்து தமிழக அரசு அதன்மீது..

*பிற்பகல் 12-30*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. கடந்த சில ஆண்டுகளாக நான்கைந்து மாவட்டங்களில்--அதிகமான மாவட்டங்களிலேகூட இருக்கலாம் - காப்பீட்டுக் கழகங்களிடமிருந்து இழப்பீட்டுத் தொகை பெற வேண்டுமென்று ஏராளமான கேட்புகள் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தாலே, சில மாவட்டங்களிலுள்ள காப்பீட்டுக் கழகங்கள் இனிமேல் Insurance Premium வாங்குவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கின்றன. அந்த அளவிற்கு அந்தக் குற்றங்கள் பெருகியிருக்கின்றன. குறிப்பாக அவர் சொன்னதைப் போல, நாமக்கல், ஈரோடு, திருச்சி, சேலம் என்று பல்வேறு மாவட்டங்களில் எல்லாம் இருக்கிறது. இந்தக் குறிப்பிட்ட பிரச்சினை என்னவென்று கேட்டால், அங்கே ஒரு இலட்ச ரூபாய் Premium வருகிறது என்று சொன்னால், அங்கே claim என்பது - இழப்பீட்டுத் தொகை என்பது - ஐந்து இலட்ச ரூபாயாக இருக்கிறது. எனவே திடீரென்று ஒரு Insurance Company இனிமேல் நாங்கள் Insurance செய்யப் போவதில்லை என்று சொன்னார்கள். பிறகு பலபேர் கேட்டுக்கொண்டதற்கிணங்க, மூன்று



மடங்கு, நான்கு மடங்கு அதிகமாக Premium கொடுத்தால் செய்கிறோம் என்று சொன்னார்கள். பிறகு அதுகூட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு அவர்களாகவே நிறைய Claims வந்தபோது ஒரு விசாரணை நடத்தினார்கள். ஓய்வுபெற்ற காவல்துறை அதிகாரி ஒருவரையும், ஒரு பொறியியல் வல்லுநர் ஒருவரையும், சர்வேயர் இரண்டு பேரையும் வைத்து விசாரணை நடத்தினார்கள். அந்த விசாரணை நடந்து அவர்களுடைய விசாரணை முடிந்து கண்காணிப்பாளரிடத்திலே போய்ப் புகார்களாகத் தாக்கல் செய்கிறார்கள். அந்தக் கண்காணிப்பாளரும் தன்னுடைய துணைக் கண்காணிப்பாளரை வைத்து அந்த விசாரணையை நடத்தியிருக்கிறார்கள். அதிலே நிச்சயமாகப் பல வழக்குகள், தவறான வழக்குகள் வேண்டுமென்றே தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்படுகிறது.

குறிப்பாக இரண்டொன்றைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஒருவர் கிணற்றிலே விழுந்து விடுகிறார். கிணற்றிலே விழுந்தவுடனே தீயணைப்புப் படைக்கு தகவல் கொடுக்கப்படுகிறது. தீயணைப்புப் படை வருவதற்கு முன்பாகவே அந்தக் கிராமத்திலே இருக்கிற மக்கள் அவரை மீட்டுவிடுகிறார்கள். அதனால் சிராய்ப்புக் காயம் ஏற்படுகிறது. அவரை மருத்துவமனையிலே அனுமதிக்கிறார்கள். மருத்துவமனையிலே அவரை அங்கே சிலபேர் சந்தித்து வாகன விபத்தாகப் பதிவு செய்து, இன்றைய தினம் அதற்காக இழப்பீட்டுத் தொகை கேட்கிறார்கள்.

அதேபோல ஒரு உயர் அதிகாரியுடைய மகன் ஒருவர் மோட்டார் சைக்கிளிலே போகிறார். போகிறவர் மாட்டு வண்டியிலே இடித்து தலையிலே காயம் ஏற்படுகிறது. அவர் மருத்துவமனையிலே அனுமதிக்கப்படுகிறார். முதலில் அவர்கள் Accident Register-லே பார்த்தால் காரணம் Not known என்று போட்டிருக்கிறார்கள். பிறகு அதே Accident Register-ஐ 1½ மணிநேரம், 2 மணிநேரம் கழித்து மாற்றுகிறார்கள். 7-45 மணிக்கு முதலில் Accident Register-லே பதிவாகியிருக்கிறது. பிறகு 11-15 மணிக்கு Accident Register-ல் 'Hit by bullock cart என்று எழுதியிருக்கிறார்கள். பிறகு அதையும் மாற்றி 'Hit by Lorry' என்று எழுதியிருக்கிறார்கள். இப்போது அந்தக் காவல்துறை அதிகாரியின் மகன் மரணமடைந்ததற்காக 25 இலட்சம் ரூபாய் Claim, இழப்பீட்டுத் தொகையாகக் கேட்கிறார்கள். இதுபோல பல பெரிய

தவறுகள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பலவிதமான தவறான Claims இருக்கின்றன. ஏற்கெனவே கண்காணிப்பாளர் ஒருவர் விசாரணை நடத்தியிருக்கிறார். அது திருப்தியாக இல்லையென்ற காரணத்தினால் காவல் துறை இயக்குநரிடத்திலே அவர்கள் ஒரு புகார் தாக்கல் செய்திருக்கிறார்கள். காவல் துறை இயக்குநர் அவர்களும் உடனடியாக இதை விசாரிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஒரு மாதம் ஆயிற்று. ஆனால் அதில் இன்றுவரைக்கும் விசாரணை நடைபெறவில்லை. ஏனென்றால் அதிலே சில டாக்டர்களுக்கெல்லாம்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி., இது சம்பந்தமாக ஆவணங்கள் ஏதாவது இருந்தால் கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆவணங்கள் இருக்கின்றன. நான் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் அதைக் கொடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விசாரணை நடக்கின்ற அச்சம் ஏற்பட்ட உடனே, சிலபேர் முன் ஜாமீன் கோரி இருக்கிறார்கள். அந்த முன் ஜாமீன் மனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. போதிய முகாந்திரம் இருக்கிறது. வழக்குக்குப் போதிய முகாந்திரம் இருக்கிறது. எனவே அந்த மனுவை ஏற்றுக் கொள்வதற்கு, அந்த முன் ஜாமீன் மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அதை முழுமையாக விசாரித்து, உடனடியாக விசாரித்து, காலதாமதம் இல்லாமல் விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே எல்லோரும் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். காவல் துறை மட்டும் சம்பந்தப்படவில்லை. சில தனியார் டாக்டர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சில வழக்கறிஞர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்களும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அத்தனைபேரும் சம்பந்தப்பட்ட கூட்டுக்கொள்ளை; ஒரு பெரிய சதி. இதை முழுமையாக நீங்கள் உடைத்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை இயக்குநர் கொஞ்சம்கூடக் காலதாமதம் இல்லாமல் உடனடியாக அதிலே ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். உடனடியாக விசாரிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆனாலும் விசாரணை நடைபெறவில்லை. அதுதான் எங்களுடைய ஆதங்கம். உடனடியாக C.B.,C.I.D. மூலமாக விசாரணை நடத்தி தவறு செய்தவர்கள் யாராக



இருந்தாலும் அந்தக் குற்றவாளிகளையெல்லாம் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில் நடைபெற்ற இந்த Bogus Insurance case பற்றிய புகார் பெறப்பட்டு, அது இப்போது விசாரணைக்காக C.B.,C.I.D.-க்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவிர விசாரணை-Investigation நடைபெற்று வருகிறது. மேலும் விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்களும் கொடுத்தால் தேவையான விசாரணையைக் காவல் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேச்சை நிறைவு பண்ணுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூரிலே மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்திற்குள்ளே மாவட்டக் கண்காணிப்பாளர் அலுவலகம் உடனடியாகக் கட்டித்தர வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளையும், மாவட்டக் கண்காணிப்பாளர் குடியிருப்பு வசதிகள் செய்துதரவேண்டுமென்ற வேண்டுகோளையும் அங்கே காவல்துறைக் குடியிருப்புகள் உடனடியாகக் கட்டவேண்டும் என்ற வேண்டுகோளையும், பூண்டியிலே ஒரு புதிய காவல் நிலையம், வெள்ளியூரிலே ஒரு புதிய காவல் நிலையம் அமைக்க அரசு உத்தரவிட வேண்டும் என்ற வேண்டுகோளையும், மாவட்டத் தலைநகரான திருவள்ளூரிலே போக்குவரத்து சிக்னலை அமைத்துத்தர வேண்டும் என்ற வேண்டுகோளையும், இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி தொகுதியிலே கீழச் செவலையூரில் புறக் காவல் நிலையமாக இயங்கி வருகின்ற போலீஸ் நிலையத்தை முழுமையான காவல் நிலையமாக மாற்ற வேண்டுமென்ற என்னுடைய தலைவர் சோ. பாலகிருஷ்ணன் அவர்களுடைய வேண்டுகோளையும் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, வால்பாறையிலே ஒரு மகளிர் காவல் நிலையம் அமைக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்து நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம் நித்தம் வணங்குகிற மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிற தமிழ்நாடு காவல் துறை மற்றும் தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என் நன்றியினைச் சமர்ப்பிக்கின்றேன்.

*பிற்பகல் 12-35*

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை)*

உயிர், உடமை மற்றும் உரிமை ஆகியவற்றைப் பாதுகாப்பது காவல் துறையின் கடமையாகும். நாட்டின் அமைதியை நிலைநாட்டி, நாட்டின் உற்பத்தியைப் பெருக்கவும், தொழில்கள் வளர்வதற்கும் காவல்துறை உறுதுணையாக அமைகிறது. புதியதொரு தொலைநோக்குப் பார்வையோடு, காவல்படையை நவீனமயமாக்க, ஆயுதங்கள் மற்றும் படைக்கலன்கள், சாதனங்கள், வண்டிகள், தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குவதற்கும், காவல் குடியிருப்பு மற்றும் ஏனைய கட்டடங்கள் கட்டவும் 2001-2003 என்ற இரண்டு ஆண்டுகால அளவிற்கு ரூபாய் 271.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மைய அரசுக்கு எப்படி இராணுவம் முக்கிய துறையாக விளங்குகிறதோ அதேபோன்று மாநில அரசுக்குக் காவல் துறை முக்கிய துறையாக விளங்குகிறது. எனவேதான், பெண்கள் முன்னேற்றத்திலே அக்கறை கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 118 புதிய மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட சிறப்புக்குரிய திட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அரிய திட்டத்தை இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற அத்தனைபேரும் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட்டு அமைதியான நாடாக இருந்தால்தான் தொழில் தொடங்க பலபேர் வருவார்கள். தொழில்கள் தொடங்கினால்தான் வேலைவாய்ப்பு பெருகும். அதனால், உற்பத்தியும் பெருகும். நாட்டின் வளர்ச்சியும் தழைத்தோங்கும். பொருளாதார வளர்ச்சியும் மேம்பாடு அடையும். எனவே, சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கக் காவல் துறையின் பங்கு பெரும் பங்காக அமைகிறது.



சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது, ஜாதி-மதக் கலவரங்கள் ஏற்படாதவண்ணம் தடுப்பது, கொலை, கொள்ளை போன்ற பெரிய குற்றங்களைத் தடுத்தல், பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க சிறப்புச் சட்டங்களை அமல்படுத்துவது, பொருளாதாரக் குற்றத்தைத் தடுப்பது, கடலோரப் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் சமூக நீதியை நிலைநாட்ட தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் ஆகியவற்றை அமல்படுத்துவது, சிலைத் திருட்டைத் தடுப்பது, வணிகக் குற்றங்களைத் தடுப்பது போன்ற பணிகளை காவல்துறை நிறைவேற்றி வருகிறது.

காவல் துறையை நவீனமயமாக்க நூறு காவல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுதல்; பணியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும், 4,751 குடியிருப்பு வசதிகளுக்காக ரூபாய் 119.52 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதும், 1434 வாகனங்கள் ரூபாய் 44.99 கோடி மதிப்பீட்டில் வாங்குவதும், தொலைத் தொடர்புக் கருவிகள் ரூபாய் 15.49 கோடி அளவிற்கு வாங்குவதும், ஆயிரம் காவல் நிலையங்களுக்குக் கணினி மற்றும் உபகரணங்கள் வழங்குவதும் சிறப்புக்குரிய திட்டங்களாகும். இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள், அவருடைய ஆட்சிக் காலத்திலே, பொற்கால ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஐந்து நாட்கள் காவல் துறையின் அதிகாரிகள் மற்றும் ஆண், பெண் காவலர்களின் குறைகளைக் கேட்டறிந்து, குறைகளைத் தீர்த்து வைத்தார்கள். 10,519 மனுக்கள் பெறப்பட்டு 8,506 மனுக்கள்மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் எடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்திருக்கிறார்கள்.

காவல் துறை பணியாளர்களின் குழந்தைகள் உயர் கல்வியைத் தொடர காவலர் நல நிதியிலிருந்து ரூபாய் 1.38 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. சிறந்த மருத்துவ வசதி அளிப்பதற்குக் காவலர் சுகாதாரத் திட்டத்தின்கீழ் ரூபாய் 1.75 கோடி செலவிடப்பட்டது.

*பிற்பகல் 12-40*

மகளிர் காவல் பணியாளர்களின் குழந்தைகளுக்கு 6 காவல் துறை ஆணையர் அலுவலகங்களிலே மழலையர் காப்பகங்களை அம்மா அவர்களின் அரசு தொடங்கியுள்ளது.

காவலர் வீட்டு வசதித் திட்டம் நாட்டிலேயே மிகச் சிறப்பாக அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காவல் துறைக்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலே ரூபாய் 1391.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தீயணைப்புத் துறையை மேம்பாடு செய்வது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைக்க ஓய்வு பெற்ற நீதிபதியின் தலைமையிலே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி ஆணையம் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மகளிர் நலன் காப்பதிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான, பெண்களுக்குப் பெருமை சேர்க்கிற வகையிலே திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதிலும் குறிப்பாக பெண் காவலர்களை அதிக அளவில் பணியமர்த்தி ஆண்களுக்கு நிகராகப் பெண் காவலர்களை கமாண்டோ பயிற்சி பெற்றவர்களாகவும், வீர சாகசங்கள் செய்து எதிரிகளைப் பிடித்திடும் ஆற்றல் மிக்க மனத் துணிவு கொண்டவர்களாகவும் மாற்றிய பெருமை மக்கள் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். இப்படிப்பட்ட சிறப்பான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் காவல் துறைக்காக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சமுதாயத்தில் பல்வேறு பிரிவினர்களிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த அம்மாவின் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பல்வேறு அரசியல் கட்சிகள், சாதிமத அமைப்புகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர் இயக்கங்களைச் சார்ந்தவர்கள், அரசு ஊழியர்கள், அதனுடைய சங்கங்கள் ஆகியவை பல பிரச்சினைகள் குறித்து நடத்திய போராட்டங்கள் மாநில நிர்வாகமும், காவல் துறையும் மேற்கொண்ட திடமும், சாதுர்யமும் கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மாண்புமிகு அம்மாவினுடைய வழிகாட்டுதலின் பேரிலே அமைதியான முறையிலே நடந்தேறின.

மதக் கலவரங்களிலே உயிர் இழந்தோர் எண்ணிக்கை 1997 ஆம் ஆண்டிலே தி.மு.க. ஆட்சியில் 45 நபர்கள். 2001 ஆம் ஆண்டிலே ஒரு நபர். 2002 ஆம் ஆண்டிலே 2 நபர்கள். 2003 ஆம் ஆண்டிலே இதுவரையில் இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை.



சாதிக் கலவரங்கள் எண்ணிக்கை அம்மா ஆட்சிக்காலத்திலே குறைந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, 1997 ஆம் ஆண்டிலே 93 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். 1998-ஆம் ஆண்டிலே 30 பேர்; 1999 ஆம் ஆண்டிலே 22 பேர்; 2000 ஆம் ஆண்டிலே 18 பேர்; 2001 ஆம் ஆண்டிலே 21 நபர்கள். 2002 ஆம் ஆண்டிலே 6 நபர்கள். இந்த ஆண்டிலே 3 நபர்கள்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்த சம்பவங்கள் தி.மு.க. ஆட்சியிலே, 1996 ஆம் ஆண்டிலே, 24. அதிலே கொல்லப்பட்டவர்கள் 15 நபர்கள். 1997 ஆம் ஆண்டிலே, தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 63 துப்பாக்கிப் பிரயோக சம்பவங்கள்; அதிலே இறந்தவர்களின் எண்ணிக்கை 28. 1998 ஆம் ஆண்டிலே துப்பாக்கிப் பிரயோகம் 48 சம்பவங்கள்; அதிலே உயிர் இழந்தவர்கள் 10 பேர்கள். 1999 ஆம் ஆண்டிலே துப்பாக்கிப் பிரயோகம் 35 சம்பவங்கள்; அதில் உயிரிழந்தோர் 19 பேர். 2000 ஆம் ஆண்டிலே 24 சம்பவங்கள்; உயிரிழந்தோர் 9 பேர். 2001 ஆம் ஆண்டிலே 32 சம்பங்கள். உயிரிழந்தோர் 13. 2002 ஆம் ஆண்டிலே 20 சம்பவங்கள், உயிரிழந்தோர் 9. இந்த ஆண்டிலே ஒரே ஒரு துப்பாக்கிப் பிரயோகம்தான். அதிலே ஒரு இறப்பும் ஏற்படவில்லை. இந்த அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நம்முடைய காவல்துறை சிறப்பான முறையிலே பணியாற்றியிருக்கிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டான நிகழ்ச்சியாக அமைந்து இருக்கிறது இந்தப் பட்டியல்.

பிற்பகல் 12-45

காப்புரிமைச் சட்டம், வரதட்சணைக் கொடுமைத் தடைச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் கீழே காவல் துறை வழக்குகள் பதிவு செய்து உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதால், இச்சட்டங்கள் மூலம் மக்களது குறைகளைத் தீர்த்துக்கொள்ள முன்வருவதையே இது எடுத்துக்காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2002 ஆம் ஆண்டு கொடுங்குற்றங்கள் குறைந்து காணப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டிலே சொத்து வழக்குக் கண்டுபிடிப்பு, மாண்புமிகு அம்மா அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, 76 விழுக்காடு; 2001 ஆம் ஆண்டிலே 71 விழுக்காடு. 2002 ஆம் ஆண்டிலே மீட்கப்பட்ட சொத்துகள்

68.14 சதவிகிதம். 2001 ஆம் ஆண்டிலே 62 சதவிகிதம், சொத்து மீட்பு 6 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 2002 ஆம் ஆண்டிலே திருட்டு வழக்குகளிலே கண்டுபிடிப்பு 83 சதவிகிதம். 2001 ஆம் ஆண்டிலே, இது 77 சதவிகிதம். இவ்வாறு மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே காவல் துறை சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதற்கு இவை சான்றுகளாகும். மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் எங்கள் இயக்கத்தைக் கட்டுப்பாட்டோடு ஒரு இராணுவத்தைப் போன்று வழி நடத்தி வருகிறார்கள். அதேபோன்றுதான் இந்த நாட்டையும் வழி நடத்திச் செல்கிறார்கள்.

மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் காவல் துறையிலே சிறப்பாகப் பணியாற்றுபவர்களுக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள். ஆனால், முந்தைய ஆட்சியிலே 1999 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளிலே இந்த விருதுகளை ஏன் வழங்கவில்லை. அண்ணாவை மறந்தவர்களுக்கு, அண்ணாவை மறைத்தவர்களுக்கு இன்றைக்கு இது ஒரு உதாரணமாக விளங்குகிறது. அண்ணாவைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பேசுகிறார்களே தவிர, அண்ணாவின் பெயராலே விருதுகளை அவருடைய ஆட்சிக் காலத்திலே கொடுத்தார்களா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. ஆனால் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான முறையிலே, இந்தத் துறை சிறப்பாக விளங்குவதற்கு, இப்படிப்பட்ட விருதுகளையெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறையின் மீது எந்த அளவிற்கு அம்மா அவர்கள் அக்கறை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒன்றே உதாரணமாக விளங்குகிறது என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தினுடைய காவல் துறை, சட்டம், ஒழுங்கைப் பராமரித்து, நல்ல முறையிலே இன்றைக்கு செயல்பட்டு வருகிறது. ஆனால் அந்தக் காவல் துறையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை ஒடுக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறான வழக்குகளைப் போட்டு, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களுக்குச் சிறைக் கொடுமை தந்தீர்களே! ஆனால், அதையும் உங்களைப் போல் ஐயோ, அம்மா என்று அலறாமல் சிங்கநிகர் தலைவியாக எதிர்கொண்டார்களா, இல்லையா, என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



ஒரு வழக்குப் பதிவு செய்கின்றபோது, அவர்களைக் காவல் துறை கைதியாக நடத்த வேண்டும். ஆனால் தி.மு.க. ஆட்சியில், தந்தையே தன் மகன் சடலத்தைப் பார்த்து இது என் மகன் உடல் இல்லையென்று சொன்னது, வேறு எந்த ஆட்சியிலும் நடைபெற்றிருக்க முடியாது. அந்த அளவிற்குக் காவல் துறையிலே ஆளும் கட்சித் தலையீடு திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்றபோது இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக்காலத்திலே ஆளும் கட்சியின் அரசியல் தலையீடு இல்லாமல் சிறப்பான ஆட்சியை அம்மா அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று 1976-ல் தி.மு.க. ஆட்சி ஏன் கலைக்கப்பட்டது என்பதை முன்னாள் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்களே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். பல காரணங்கள் சொல்லப்பட்டன. ஆனால், அவற்றிலே முக்கியமானது மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு அளித்த நிதியை, அதற்கான வழிமுறைகளில் நியாயமாகச் செலவிடவில்லை; இரண்டாவது, லஞ்ச ஊழல்; 3. பிரிவினைப் பிரசாரம்; 4. வன்முறை; சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்படாதது. இப்படிப்பட்ட காரணங்களினால்தான் அன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது. எனவே, சட்டம் ஒழுங்கைச் சரியாகப் பராமரிக்காத காரணத்தினாலேதான், அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டது என்று அன்றைக்கு அன்னை இந்திரா அவர்களே ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்கள்.

பிற்பகல் 12-30

அதேபோன்று, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஒரு ஆட்சிக்கு ஏற்படலாம். ஆனால் ஒரு ஆட்சியே சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தினால் என்னாவது? அதனால்தான் தி.மு.க. ஆட்சி 1991 ஆம் ஆண்டிலே கலைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் ஊடுருவி, கொலை, கொள்ளை செய்து சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தியதன் விளைவாக அன்றைய ஆட்சி கலைக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சட்டம் ஒழுங்கு சரியாகப் பராமரிக்கப்படவில்லை என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, பிரதான எதிர்க்கட்சி ஆட்சி அதிகாரத்திலே இருக்கிறபோது, காவல் துறையை வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சியை நசுக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தோடு, கட்சியை விட்டு வெளியேற்றியவர்களில் ஒன்றிரண்டு பேரை வைத்துக்கொண்டு,

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகத்தைப் பூட்டி சீல் வைத்தது. காவல் துறையைத் தன் இஷ்டத்திற்கு ஆட்டிப்படைத்தது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே நடந்ததா; இல்லையா; என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாதி, சமய வேறுபாடுகளுக்கு அப்பால் வாழ வேண்டுமென்பது நியதி. இன, மத வேறுபாடுகளைக் களைந்து நல்லிணக்க உணர்வுகளோடு சமுதாயம் தழைத்தோங்க வேண்டுமென மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் சென்ற பொதுத் தேர்தலில் ஜாதிக் கட்சிகளையெல்லாம் ஓடியோடித் தேடிப் பிடித்துக் கூட்டணி அமைத்துக்கொண்டு, தேர்தல் களத்திலே நின்றீர்களே, உங்களால் ஜாதி உணர்வுகள் தூண்டப்பட்டதே தவிர, உங்களால் வெற்றிபெற முடியவில்லை, தோல்வியைத்தான் சந்தித்தீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி). ஆட்சி அதிகாரம் வேண்டுமென்பதற்காக கொள்கையைக் குப்பைத் தொட்டியிலே வீசியவர்கள்தானே நீங்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கன்னட நடிகர் ராஜ்குமாரை சந்தனக் கடத்தல் வீரப்பன் கடத்தியபோது, அவனது உத்தரவுகள்தான் நடைமுறைப் படுத்தப்பட்டன. நடந்ததா, இல்லையா? அதிரடி முகாம்களை காலி செய்யச் சொன்னது; சோதனைச் சாவடிகளை மூடிவிட்டுத் திரும்பிவிடும்படி உத்தரவிட்டது; இதனைப் பயன்படுத்தி தமிழகக் கடலோரப் பகுதியிலே தயாராகப் பதுக்கி வைத்திருந்த ஆயுதங்கள் காட்டுக்குள் போவது நடைபெற்றது. ஏன் இந்த அவலம்? அன்று தி.மு.க. ஆட்சியை நடத்தும் ரிமோட் கண்ட்ரோலாக வீரப்பன் செயல்பட்டானா, இல்லையா? என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டும்.

தீவிரவாதிகளை ஒடுக்க தி.மு.க. ஆட்சிக் காலத்திலே எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்கின்ற குற்றச்சாட்டினை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விழிகளில் கசிவும், மக்கள் வேதனை கண்டு துடிக்கும் மனப் பாங்கும், மொழிகளில் கருணையும் கொண்டு எதையும் தாங்கும் இதயத்தால் பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்னேட்டுக் காவியமாகத் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் காவலர் கண்களிலே ஆனந்தக் கண்ணீரை வரவழைத்து, மாநில நிர்வாகமும் காவல் துறையும் இணைந்து தோள்



கொடுத்து அரசை நடத்திச் செல்வதால்தான், சட்டம் ஒழுங்கு சரிந்துவிடாமல்; சளைக்காமல், சந்தர்ப்பவாதக் கூச்சலுக்கு இடம் அளிக்காமல், கலவர நிகழ்வுகள் களைந்து தமிழகம் அமைதிப் பூங்காவாக மாறத் தொடங்கி, பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது என்றால் அதற்குக் காவல் துறையின் பங்கும் பெரும் பங்காகும். சிறந்ததொரு முன்னேற்றத்தைத் தமிழகம் கண்டு வருகிறது என்றால் அதற்கு முதன்மைக் காரணம் நமது இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைக் (மேசையைத் தட்டும் ஒலி) கூறி, இந்தச் சிறப்பான மானியக் கோரிக்கைகளை வரவேற்று வாய்ப்புக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பிலே அழகாக ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, இதுதவிர, சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் மத ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களால், காவல் துறையின் பணி எல்லை விரிவடைந்துள்ளது என்றும் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் நிர்வாகத்தின் திறமையை, பணித் திறமையை அதிகரிக்கத் தேவையான உபகரணங்களை மேம்படுத்துதல் ஆகிய காவல் துறையின் செயல்பாடுகளைப் புதிய கண்ணோட்டத்துடன் அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படி ஒரு கருத்தைத் தெரிவித்திருப்பதற்கு நன்றி. ஆனால் அவை இன்று காவல் துறையாலும் தமிழக அரசாலும் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்ற பிரச்சினையை நான் எழுப்ப விரும்புகிறேன். இன்று ஈராக்கிலே யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அமெரிக்க ஜனாதிபதி அதற்குக் காரணகர்த்தா. ஜனாதிபதியையும், அமெரிக்க அரசையும் எதிர்த்து ஈராக்கிலே அமெரிக்க மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். ஆனால், தமிழகத்திலே இன்றைக்கு ஆர்ப்பாட்டம் நடக்கிறது என்று சொல்ல முடிகிறதா? (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாம் தீர்மானமே போட்டு இருக்கிறோமே? (குறுக்கீடு) ஹேமச்சந்திரன், நாம் தீர்மானமே போட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று எந்த மாநிலத்திலும் செய்யாத அந்த அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள், தானே ஈராக்கைக் கண்டித்து, (குறுக்கீடுகள்) சட்டப் பேரவையிலே தீர்மானம் கொண்டுவரச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதி அமைச்சர், அமெரிக்காவைக் கண்டித்து.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவைக் கண்டித்துச் சட்டப் பேரவையிலே தீர்மானத்தை கொண்டுவரச் சொன்னார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அன்றே சொன்னேன். முதலமைச்சருக்கு நன்றி, தமிழக அரசுக்கு நன்றி. இன்று இந்தியாவிலே இரண்டே இரண்டு மாநிலங்களில்தான் அப்படிப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. அதிலே தமிழக அரசு ஒன்று. இன்று தமிழக மக்களுக்கு இந்த அரசு பெருமை தேடிக் கொடுத்திருக்கிறது. என்னுடைய கேள்வி என்னவென்றால் இன்று சென்னை நகரத்திலே, தமிழகத்திலே மக்கள் மாறிக் கொண்டிருக்கின்ற, மாறி வந்திருக்கின்ற பின்னணியில் ஏற்படுகிற கிளர்ச்சிகள் அல்லது இயக்கங்கள் அல்லது போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது, ஊர்வலங்கள் நடத்துவது அனுமதிக்கப்படுவதில்லை நம்முடைய காவல் துறையால்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மட்டுமல்ல. தமிழகம் எங்கும் தினந்தோறும் பலவிதமான போராட்டங்கள் காவல் துறையினரால் அனுமதிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே, Main. Arterial Roads. அதாவது மெயின் ரோடுகளில் பிரதான சாலைகளில் ஊர்வலங்களை அனுமதிக்கக்கூடாது என்ற சுப்ரீம் கோர்ட்டின் தடையாணை இருப்பதால், அதனையொட்டி காவல் துறையினர் தகுந்த அனுமதிகளை வழங்குகிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, American Embassy முன்னாலே ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு அனுமதி கோரப்படுகிறது. எங்கே அனுமதி கொடுத்தார்கள்? D.M.S.



ஆபீசுக்கு முன்னாலே? ஏன் D.M.S. ஆபீசா ஈராக் யுத்தத்திற்கு காரணகர்த்தா? (சிரிப்பு) ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் அனுமதி வழங்கப்படுகிறது. சில நேரங்களிலே ரொம்ப சிரமப்பட்டு, காவல் துறை அதிகாரிகளோடு கெஞ்சி, சில நேரங்களிலே சண்டை போட்டு அனுமதி வாங்குகிறோம். ஆனால் அவர்கள் அனுமதி கொடுக்கிற இடங்களுக்கும், இந்தப் பிரச்சினைகளுக்கும் சம்பந்தம் இருக்காது. நான் ஒன்றை இந்த நேரத்திலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடத்துவதற்குக் காவல் துறையினர் அனுமதி வழங்குகிறார்கள். ஆனால் போராட்டம் நடத்துபவர்கள் கூறுகின்ற இடங்களில் எல்லாம் அனுமதி வழங்க முடியாது. American Embassy என்பது ஒரு High Security Zone. ஏற்கெனவே அந்த இடத்தில் குண்டு வெடிப்பு எல்லாம் நடந்தது. ஆகவேதான் காவல் துறையினர் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறை சொல்வதற்காகவோ, குற்றம் சொல்வதற்காகவோ சொல்லவில்லை. நிலைமைகளைச் சொல்கிறேன். என்ன நிலைமை? Parliament-க்கு முன்னாலே குண்டு வெடிப்பு நடந்தது. Parliament-க்கு முன்னாலே ஆர்ப்பாட்டம் நடக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறதே. இப்போதுகூட Parliament-க்கு முன்னாலே இந்த Session நடக்கிற நேரத்திலே பல ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அங்கே குண்டு வெடிக்கவில்லையா? ஆகவே, நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்தக் காவல் துறையினர் இந்த மாநிலத்தினுடைய சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள். ஆனால், மக்களுடைய ஜனநாயக உரிமைகளிலே எந்த குறைபாடுகளும் இருக்கக்கூடாது. அந்த முறையிலே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இப்போது கொள்கை அறிவிப்பிலே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிற அந்த உணர்வோடு இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும். அதாவது இன்றைக்கு கோளா மாநில சட்டமன்றத்திற்கு முன்னாலே ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. Parliament-க்கு முன்னால் நடக்கின்றன. ஆனால் தமிழகத்திலே கேட்டால் அங்கே வள்ளுவர் கோட்டத்திலே அல்லது சைதாப்பேட்டையிலே அனுமதி கொடுக்கப்படுகிறது. இவை மக்களுடைய வேதனைகளைப் பிரதிபலிப்பதற்காக நடத்தப்படுகிற இயக்கங்கள் என்கிற முறையிலே பார்க்கப்பட வேண்டும். அதேபோன்று, சட்டம் ஒழுங்கு...

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளத்தோடு, டெல்லியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்திலேதான் சட்டம் ஒழுங்கு நிலைமை மிகவும் அமைதியாக இருக்கிறது. இந்தியாவிலேயே மிகவும் அமைதியான மாநிலம் தமிழ்நாடுதான். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய காவல் துறையினர் கண்டிப்புடன் இருப்பதால்தான் இந்த அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற (குறுக்கீடு) இல்லை, இல்லை; கட்சியினர் இப்படி அடிக்கடி போராட்டங்களை நடத்தி, மனித சக்தியை வீணடிக்கக்கூடாது என்பதையும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதனால் ஒருவேளை சில நேரங்களில் காவல் துறையினர் இட மாற்றத்திற்கோ அல்லது போராட்டத்திற்கோகூட அனுமதி மறுத்திருக்கலாம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் என்கிற காரணத்தினாலே மக்கள் சக்தியைப் பற்றி அக்கறைப்படுகிறார். மக்கள், சக்தியோடு இருக்க வேண்டும் என்பதற்காகவே போராட்டங்கள் நடத்தப்படுகின்றன.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் மார்க்ஸினுடைய சித்தாந்தத்தினை ஏற்றுக் கொண்டிருப்பவன். மார்க்ஸ் என்ன சொல்கிறார்? ஓர் இயக்கம் மக்களுடைய ஆதரவு இல்லாமல் நடத்திச் செல்ல இயலாது. மக்களுடைய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்ஸின் சித்தாந்தத்தினைப் பற்றிக் குறிப்பிட்டார். இதனால்தான் இந்த கம்யூனிஸ்ட் இயக்கங்களே மக்களுக்குப் பயன்படாமல் போய்விட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கம்யூனிஸ்ட் இயக்கங்கள் இரண்டே காரியங்களைத்தான் செய்கின்றன. ஒன்று எப்போது பார்த்தாலும், எங்கே பார்த்தாலும் போராட்டம்; போராட்டம், போராட்டம், போராட்டம்;



இல்லையென்றால் அவர்களுடைய Politburo Executive Committee ஏதோ ஒரு கூட்டத்தைப் போட்டு, 3 நாட்கள், 5 நாட்கள், 7 நாட்கள் என்று பேசிக் கொண்டே இருப்பார்கள். இதைத் தவிர வேறு எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபடுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதிலுக்கு ஒன்றைப் பற்றிச் சொன்னால் எல்லா விஷயத்திற்கும் மேற்கு வங்காளத்தை மேற்கோள் காட்டுகிறார்கள் என்று சொல்வார்கள். 25 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கு வங்காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறது என்பது அங்கே நாங்கள் மக்களுக்கு எதிராக விஷயங்களை நடத்திக் கொண்டு இருப்பதனாலேயா? அல்லது நாங்கள் மக்களுக்கு எதிராக..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தில் தொடர்ந்து அவர்களுடைய இயக்கம் இத்தனை ஆண்டுகாலமாக ஆட்சியில் இருப்பதன் இரகசியம்; ஒவ்வொரு தேர்தலின்போதும் மிக அதிகப்படியாக rigging செய்கிறார்கள் என்று நாங்கள் கேள்விப்படுகிறோம்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முற்றிலுமாக ஆட்சேபிக்கிறோம். அப்போதுதான் எந்த...

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி (குறுக்கீடு) Psephologist Pranay Roy ஏற்கெனவே மிகத் தெளிவான ஓர் அறிக்கை கொடுத்திருக்கிறார். 10 சதவீதம் மேற்கு வங்காளத்திலே கம்யூனிஸ்ட் கட்சிகள் rigging. . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தங்களுடைய கம்யூனிஸ்ட் ஆட்சி நடைபெறுகின்ற மேற்கு வங்காளத்தைப் பற்றிப் பெருமையாகக் குறிப்பிட்டார். இங்கே ஒரு ஆதாரத்தை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு நான் கொடுக்க விரும்புகிறேன். இதில், மேற்கு வங்காளத்தில் பஸ் கட்டண உயர்வைக் கண்டித்து, சட்டசபை முன்பு போராட்டம் நடந்தது. அப்போது மறியல் செய்த ஒருவரை போலீஸ்காரர் துப்பாக்கியால் அடித்து விரட்டும் காட்சி என்று ஒரு புகைப்படம் வெளியிடப்பட்டிருக்கிறது. இது 'கோவை மாலைமலர்'

பத்திரிகையில் வெளிவந்தது. அதற்குத் தலைப்பே 'தர்ம அடி' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. லா. சந்தானம்:** ஒரு நிமிடம் பேச அனுமதி வேண்டும்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது முன் வைத்திருப்பது சட்டசபை முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்த ஏன் அனுமதியில்லை என்பதுதான்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. என். நன்மாறன்:** மேற்கு வங்காளத்திலே சட்டசபை முன்னாலே ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி கிடைத்திருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அப்படிப் பார்த்தால் இங்கே நிறையச் சாவுகளே நடந்திருக்கின்றன. துப்பாக்கிப் பிரயோகம் நடந்து இருக்கிறது. ஆகவே, அதை compare செய்தால் பிரயோசனம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், என்ன, சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலே 25 ஆண்டுகள் ஒரு ஆட்சி நிலையாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் வைத்திருக்கின்ற கூட்டணி. அந்தக் கூட்டணியிலே எந்தவிதமான பிளவும் இல்லாமல் அவர்கள் பாதுகாப்பாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அறுதிப் பெரும்பான்மை ஒரு கட்சிக்கு இருந்தும்கூட, எங்களைப்போல ஃபார்வர்ட் பிளாக் இயக்கம், கம்யூனிஸ்ட்கள், ஆர்.எஸ்.பி. போன்றவைகளுக்கெல்லாம் அமைச்சர் பதவியைக்கூடக் கொடுத்து வைத்து, அவர்களோடேயே வைத்துக்கொண்டிருப்பதால்தான் அந்த ஆட்சி 25 ஆண்டுகளாக அசைக்க முடியாத அளவிலே இருந்துகொண்டிருக்கிறது.



*பிற்பகல் 1-05*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கு வங்காளத்திலே 25 ஆண்டு காலமாக கம்யூனிஸ்ட் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறது rigging காரணமாக என்று சொன்னார்கள். நான் ஒன்றைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எங்களது முதலமைச்சரைப் பற்றியோ, எங்களுடைய அரசைப் பற்றியோ தேர்தல் கமிஷன் நீங்கள் இந்த மாதிரிப் பணிகளில் ஈடுபட்டதாகக் குறை சொல்லவில்லையே! உங்களைப் பற்றித்தானே சொல்லி இருக்கிறது. அதாவது...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலில் rigging செய்தோம் என்று எங்கள் கட்சி மீது தேர்தல் ஆணையம் இதுவரை எந்தப் புகாரும், குற்றச்சாட்டும் கூறவில்லையே!

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலிலே எந்தவிதமான முறைகேடுகளும், முதலமைச்சர் அவர்களோ, அரசோ செய்ததாக எந்தவிதமான remarks-ம் எங்களைப் பற்றி சொல்லவில்லையே. ஆனால் உங்களைப் பற்றிச் சொல்லவில்லையா? ஆனால் rigging-ஐப் பற்றிச் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் எதைச் செய்யக்கூடாதோ அதை, சில விஷயங்களை நீங்கள் செய்ததாகத் தேர்தல் கமிஷன் உங்களை warn பண்ணியதாகப் பத்திரிகையிலே படித்தோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைத் தேர்தல் ஆணையர் சில கருத்துகளைத் தெரிவித்தார். ஆனால் அதே தலைமைத் தேர்தல் ஆணையர் இங்கே தேர்தலுக்கு அனுப்பி வைத்த 5 தேர்தல் Observers, கண்காணிப்பாளர்கள், எந்தவிதமான புகாரையும் கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் மேற்கு வங்காளத்திலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஆட்சியிலே இருக்கிறார்கள். அது இருக்கட்டும், தமிழ்நாட்டிலுள்ள விஷயத்திற்கு நான் வருகிறேன். அதாவது கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் paragraph-லே சொல்லியிருப்பதைப்போல இன்றைக்கு மாறிய

சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உலக வங்கியினுடைய நிர்ப்பந்தம் காரணமாக இன்றைக்கு உலக மயம், தாராளமயம் என்று கொள்கை எல்லாம் வந்ததன் காரணமாக பல்வேறு முறைகளிலே போராட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தப் போராட்டங்களைப் பொறுத்தஅளவிலே, வாலிபர்கள் போராடுகிறார்கள் என்றால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது. அதேபோன்று பெண்களுக்கு வேண்டி பல நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பெண்கள் மேல் உள்ள குற்றங்கள் இன்றைக்கு அதிகரித்துக்கொண்டிருக்கின்றன. பெண்களுக்குப் பாதுகாப்பு என்பது இன்றைக்கு ஒரு கேள்விக்குறியான விஷயமாக மாறிக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காலையிலே நடைபெற்ற விவாதத்தின்போது இதற்கு நான் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அப்போது இந்த அவையில் இல்லைபோல் தெரிகிறது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு பெண்களுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதைக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே கொடுத்திருக்கிறோம். ஆனால் அதற்கான காரணத்தையும் கொடுத்திருக்கிறோம். பெண்களுக்குத் தைரியமூட்டும் ஒரு சாதகமான சூழ்நிலை இப்பொழுது தமிழகத்தில் உருவாக்கப்பட்டதால் பெண்கள் முன்பெல்லாம் சொல்லக் கூசுகின்ற, தங்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற, குற்றங்களைத் தைரியமாக வந்து இப்பொழுது காவல் நிலையங்களில் சொல்லிப் புகார் தருகிறார்கள். அதனால்தான் அதிகப்படியான குற்றங்கள் பதிவாகியிருக்கின்றன. இது ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆரோக்கியமான சூழ்நிலையாகப் பார்க்கப்படுகிறது என்று கூறுகிறார். அதற்கு நன்றி சொல்கிறேன். ஆனால் காவல் துறை அப்படிப் பார்க்கவில்லையே. இன்று நான் உதாரணமாகச் சொல்கிறேன். நிர்மலா ராணி என்ற, இந்த அவையிலே உறுப்பினராக இருந்த தோழர் உமாநாத் அவர்களுடைய பாப்பா உமாநாத் அவர்களுடைய மகள். அவர்கள் ஒரு வழக்கறிஞராக இருந்தாலும்கூட, ஒரு சமூகத் தொண்டாற்றிய ஒரு worker. அவர்கள் மேலே தீண்டாமைக்



கொடுமைக்கு case போடுகிறார்கள்; திருச்சி காவல் துறை அதிகாரிகள் போடுகிறார்கள். நானும் எங்களுடைய கட்சியினுடைய செயலாளர் திரு. வரதராஜன் அவர்களும் மாண்புமிகு நிதி அமைச்சரைச் சந்தித்து representation கொடுத்தோம். நானே ஒரு கடிதம் இதுசம்பந்தமாக--எங்களுடைய மாநிலச் செயலாளர் தந்ததை--முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் கொடுத்தேன். ஆனால் என்ன என்று பார்த்தால், இவ்வளவு ஆனதற்குப் பிறகும் அவர்கள் மேலே charge sheet போட்டார்கள். அது உயர் நீதிமன்றத்திற்குப் போய் உயர் நீதிமன்றம் காவல் துறை அதிகாரிகள் மேலே stricture pass பண்ணி *25,000* ரூபாய் அவர்களுக்கு fine என்ற முறையிலே கொடுப்பதற்கு உத்தரவிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், காலா காலத்திலே காவல் துறையிலே உள்ள அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறான விஷயங்களிலே, கண்காணிப்போடு என்னென்ன விஷயங்களைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்யாததன் காரணமாக இப்படி நடந்தது. ஒருவேளை நிர்மலா ராணி ஐகோர்ட்டிற்குப்போய், விடுதலை வாங்கியிருக்கலாம்; வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், What is the risk she has taken? எவ்வளவு தூரம் அவர்களுடைய மனம் வேதனைப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அந்தக் குற்றச்சாட்டில்கூட ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகன், திரு. உமாநாத் அவர்களுடைய மகள் மேல் ஒரு குற்றச்சாட்டைக் கொடுத்த காரணத்தால்தான், காவல் துறையினர் அந்த வழக்கைப் பதிவு செய்தார்கள். காவல் துறையே தானாக அதைப் பதிவு செய்யவில்லை. அந்தக் குற்றச்சாட்டைக் கொடுத்ததே, தீண்டாமைச் சட்டத்தின்கீழ் உமாநாத் அவர்களுடைய மகள் தவறு இழைத்துவிட்டார் என்று தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு குடிமகன் ஒரு குற்றச்சாட்டைக் கொடுத்ததன் அடிப்படையில்தான், காவல் துறையினர் இந்த வழக்கைப் பதிவு செய்தனர்.

**செல்வி. க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்மலா ராணி காவல் துறையினரிடம், விபச்சாரம் அங்கே நடக்கிறது; அதைத் தடுக்கவேண்டுமென்று கலெக்டரிடமும், காவல் துறை கண்காணிப்பாளரிடமும் ஒரு புகார் மனு கொடுத்தார். மோகனா

என்ற பெண் மீது கொடுத்தார். ஆனால், அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, நிர்மலா ராணி மீது தீண்டாமை வழக்கு என்பது பதியப்படுகிறது. ஆகவே, பிரச்சினை என்பது அங்கேதான் ஆரம்பம் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வழக்கின் விவாதங்களுக்குள்ளே போகவேண்டாம். *(குறுக்கீடு)*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி குறிப்பிட்டதைப்போன்று, மனு கொடுத்தவர்மீது திட்டமிட்டே காவல் துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்கு அது. அதோடு மட்டுமல்ல, ஒரு பொதுச் சேவையிலே, இந்தச் சமுதாயத்திற்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நிற்கிற ஒரு இயக்கத்திலே மட்டுமல்ல; ஒரு கட்சிக்காக நிற்கக்கூடியவர்கள் மட்டுமேல்ல, தன்னுடைய வாழ்க்கையை, தன் குடும்பத்தின் மூலமாக ஒரு அரசியல் நேர்மையோடு இருக்கிறவரைக் களங்கப்படுத்தி இருக்கிறீர்களே? இந்த . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதைப்பற்றி விவரங்கள் இருந்தால் முதலமைச்சரிடம் கொடுங்கள். திரு. ஹேமச்சந்திரன், இன்னும் 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்னும் ஆரம்பிக்கவே இல்லை. *(சிரிப்பு)* ஏகப்பட்ட குறுக்கீடுகள். முதலமைச்சர் அவர்களும் மற்றும் நான்கு அமைச்சர்களும் குறுக்கிட்டார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், இப்படிப்பட்ட பிரச்சினைகளிலே காவல் துறை உண்மைகளை, உண்மைகள் என்ற முறையிலே ஆராய்ச்சி நடத்தி, என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அதை எடுக்கவில்லை. நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். குமரி மாவட்டத்திலே, ராஜாக்கமங்கலம் காவல் நிலைய எல்லைக்குள்ளே, கல்லக்குறிச்சி கீழூர் கிராமத்தில், சுப்பிரமணியம் என்பவரின் மனைவி பால்கனி, 2-2-2003-ல் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதே ஊரிலே உள்ள ஒரு கிணற்றிலே போடப்பட்டிருக்கிறது அந்த dead body. இதிலே குற்றவாளியைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே, காவல் துறை நடந்து கொண்டிருக்கிறது. காவல் துறையிலே Superintendent of Police-ஐச் சந்தித்து, புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், அந்தக் கிணற்றைப் போய்ப் பார்வையிடுவதற்குக்கூட உயர் போலீஸ் அதிகாரிகள் தயாராக இல்லை. Investigation என்ற பெயரிலே இன்றைக்கு நிறைய அந்தமாதிரி



case-களைக் கையிலே வைத்துக்கொண்டு, கடைசியிலே என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருக்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 5 நிமிடங்களாவது வேண்டும். அதேபோன்று, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 தலைவர்கள் பேசவேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்றைக்கா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், ஆமாம். இன்றைக்குத்தான். *(சிரிப்பு)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சரி, இன்னொன்றை, நான் ஒரு குற்றச்சாட்டு என்ற முறையிலே, பிரச்சினை என்ற முறையிலே சொல்லவில்லை. இன்றைக்கு மாணவிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் நேற்றைக்குச் சொன்னார்கள் ஜெயிலை இங்கேயிருந்து மாற்றப்போகிறோம் என்று. நாம் தலைமைச் செயலகத்தைக் கட்டவேண்டும் என்றால், அந்த ஜெயில் இடத்திலே கட்டலாமே? ஏன் நீங்கள் ராணி மேரி கல்லூரியை இடித்துதான் கட்டவேண்டும் என்றிருக்கிறதா? நமக்கு ஒரு தலைமைச் செயலகம் வேண்டும். எப்படியும் ஜெயிலை மாற்றுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது. நம்முடைய அட்வகேட் ஜெனரல் சொல்வதுபோல், அரசினுடைய முடிவை நாம் எதிர்க்க முடியாது. ஆகவே, இன்றைக்கு ஜெயிலை மாற்றுகிற இடத்திலே, இந்தத் தலைமைச் செயலகத்தை மாற்றலாமே? ஏன் இப்படி மாணவிகளுக்குப் பிரச்சினை? மக்களுக்குப் பிரச்சினை? இப்படியெல்லாம் பிரச்சினை ஏற்படுத்த வேண்டுமா? அதைப்பற்றிப் பரிசீலிக்கவேண்டும். இன்றைக்கு *(குறுக்கீடு)* ஜெயிலை மாற்றவேண்டும் என்று முடிவு செய்தாகிவிட்டது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர்கள் பெரும்பாலும் ஜெயிலைத்தான் விரும்புவார்கள். *(சிரிப்பு)*

*பிற்பகல் 1-15*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள்தான் அதிகமாக ஜெயிலுக்கு போகிறவர்கள். அடுத்து நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இந்த custodial death அதேபோன்று firing இதைப்பற்றியெல்லாம் நேரம் இல்லாத காரணத்தினால் உள்ளே நிறைய போகவில்லை. இந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு காவல் துறை என்ன வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறது? custodial death என்ற பெயரிலே நடைபெறுவதைப் பற்றி மக்கள் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள். ஆரோக்கியமான ஒருவரை ஸ்டேஷனுக்கு விசாரணை என்று கூட்டிச் செல்கிறார்கள், ஒரு நாள், இரண்டு நாட்கள் அங்கே வைத்து, திருப்பி வெளியே வருகிற நேரத்திலே இறந்துவிட்டதாக, பிரேதமாக வெளியே வருகிறது. இப்படிக் காவல் துறையிலே விசாரணைக்குப் போகிறவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாத நிலை இன்றைக்கு இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Custodial deaths பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. 2002-ல் இப்படி Police custody-யில் இருக்கும்போது 15 பேர் மரணம் அடைந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 28-2-2003 வரை ஒரு மரணம்தான் Police custody-யில் நடைபெற்று இருக்கிறது. இதிலிருந்து காவல் துறையினர் இத்தகைய custodial deaths-ஐத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தக்கலையிலே . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்மலா ராணி வழக்கைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இதில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்த 25,000 ரூபாய் fine கட்ட வேண்டுமென்று தண்டனை விதித்து முருகையன் என்ற Police Assistant Commissioner இந்த அபராதத் தொகையை ஏற்கெனவே செலுத்திவிட்டார். அவர்மீது Departmental action தனியாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**செல்வி. க. பாலபாரதி:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற பிரச்சினைகளை அதனால்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும் அப்போதே கவனத்திற்குக் கொண்டு வந்தோம். அப்போதே உரிய நடவடிக்கை இருந்திருந்தால் இவ்வளவு பிரச்சினையாகி இருக்காது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போதே உரிய நடவடிக்கை இருந்திருந்தால் இப்படிப்பட்ட பிரச்சினை எழுந்திருக்காது என்று சொல்வதற்கு இடமில்லை. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு புகார் கொடுத்தார். அப்படி இருக்கிறபோது நிர்மலா ராணி என்பவர் திரு. உமாநாத் அவர்களின் மகள், பாப்பா உமாநாத் அவர்களின் மகள் என்பதற்காக காவல் துறையினர் புகாரையே பதிவு செய்யாமல் எப்படி இருக்க முடியும்?

**செல்வி. க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோகனா என்ற பெண் விபச்சாரத்தில் ஈடுபடக்கூடிய பெண்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார்கள். இனி அதற்குள்ளே, பிரச்சினைகளுக்குள்ளே புகுந்து குழப்பாதீர்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்னும் 5 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடங்கள் கிடையாது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இன்றைக்கு POTA சட்டத்தின்மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இன்றைக்கு POTA சட்டத்தைப் பொறுத்தவரையிலே மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் வரக்கூடிய அளவிற்கு விஷயங்கள் போய்க் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு POTA சட்டத்தில், கைது செய்யப்பட்டிருக்கிற கைதிகள்; ஒரு ஆண்டு காலம், இரண்டு ஆண்டு காலத்திற்கு முன்பே நடைபெற்ற பிரசங்கங்களை வைத்துத்தான் வைகோ. மேலே, பெரியவர் நெடுமாறன் மேலே இங்கே வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நான் என்ன சொல்கிறேன் என்றால் controversial-ஆக இருக்கிற அந்தச் சட்டத்தைத் தமிழகத்தில்

பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்கு நாம் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு அரசியல் ரீதியாக இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுகிற ஒரு துரதிருஷ்டவசமான நிலை உத்தரபிரதேசத்திலே, ஆந்திர மாநிலத்திலே எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தை நாம் பயன்படுத்துவதுபற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) அதோடு நிறைவு செய்யுங்கள். 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. (குறுக்கீடு) இனிப் புதுப்பிரச்சினை பேச வேண்டாம். (குறுக்கீடு) புதுப் பிரச்சினை வேண்டாம். 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசுங்கள். இப்போது எழுதிக்கொடுங்கள். ஒரு வாக்கியத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று இன்றைக்கு குறவர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் காவல் துறையால் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற கவலை அவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. சி.டி. ஆக்ட் சட்டத்தை குறவர் மக்கள் மீது தொடுத்து வருவதால், தமிழகத்திலுள்ள பெரும்பாலான காவல் நிலையங்களில் அப்பாவி குறவர் மக்களை இவர்கள், குறவர்கள் என்கிற ஒரே காரணத்திற்காகத் திருட்டுக் குற்றங்களில் சிக்க வைத்து, குற்றவாளிகளாக ஆக்கப்பட்டு, நீதிமன்றங்களில் எதிர்த்து வாதாடுவதற்கு வசதி இல்லாதவர்கள்; அவர்கள்....

*பிற்பகல் 1-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். முடித்து விடுங்கள். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதேபோன்று ஒரு குறவரை பிடித்து case போடுகின்ற நேரத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை எழுதிக்கொடுங்கள். ஹேமச்சந்திரன், எழுதி முதலமைச்சரிடம் கொடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். அதாவது, குறவர்கள் என்பவர்கள், இந்த மாதிரி காவல் துறையாலே பிடிக்கப்பட்டால்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அதுபற்றிய முழு விவரங்களையும் எழுதிக் கொடுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொத்தாம் பொதுவாகக் காவல் துறையினர் மீது இப்படிப் புகார் சொன்னால் அதை ஏற்க முடியாது. குறவர்கள் என்றாலே காவல் துறையினர், அவர்கள் மீது உண்மையில்லாத புகார்களைச் சுமத்தி, குற்றச்சாட்டுகளைச் சுமத்தி, பொய் வழக்குகளைப் போடுகிறார்கள் என்று சொன்னால், அதை ஏற்க முடியாது. குறிப்பிட்ட தவறு நடந்திருப்பதாகத் தெரிந்தால், ஆதாரம் இருந்தால் அதைப் பற்றிய விவரங்களைக் கொடுத்தால் விசாரணை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதை எழுதிக் கொடுத்துவிடுகிறேன். அதாவது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொண்டு வாருங்கள். அதை எழுதிக் கொடுங்கள். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, காவல் துறை சார்பாகச் சங்கம் வைப்பதற்கு உரிமை வழங்க வேண்டுமென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். பழனிசாமி, பேசுங்கள்.

**THIRU J. HEMACHANDRAN:** One Minute, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றை பழனிசாமியிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) பழனிசாமியிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள். அவரும் சிகப்புத் துண்டுதான் போட்டிருக்கிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, என்னுடைய தொகுதிப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தொகுதிப் பிரச்சினையை எழுதிக் கொடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை ஹேமச்சந்திரன். திரு. பழனிசாமி பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாமியார் மடத்திலே ஒரு காவல் நிலையம் தொடங்கப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்திலே அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், தொகுதிக் கோரிக்கைகளை நீங்கள் எழுதிக் கொடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதேபோல, காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஏற்கெனவே 1996-லே 'recruit' செய்யப்பட்டவர்கள், இன்னும் அவர்கள் district police station-களுக்கு மாற்றப்படாமல் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அவர்களுக்கு Promotion கொடுக்கப்படாத நிலை இருந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளைச் சொல்ல நான் முன் வருகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை நமது நாட்டில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைத் தீர்க்கின்ற துறையாக அதாவது சாதி மோதல்களைக் கட்டுப்படுத்துவதும், கொலை, கொள்ளைகளைத் தடுத்து நிறுத்துவதும், பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பதும், பண்டைய காலப் புராதனச் சின்னங்களைப் பாதுகாப்பதும், தனி மனித உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதும்



நமது நாட்டின் காவல் துறையினுடைய பிரதான கடமைகள் எனச் சொல்லப்படுவதிலே எங்களுக்கு மாற்றம் கிடையாது. அதேபோன்று, நம்முடைய காவல் துறை பொறுப்புணர்வோடு செயல்படக்கூடிய விதத்தில் சாதி மத உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு, நாட்டு நலனிலும், மக்களுடைய பாதுகாப்பிலும் ஒரு சிறந்த காவல் துறையாக விளங்க வேண்டும் என்பதே அனைவருடைய விருப்பம் ஆகும். நமது காவல் துறை என்பது, பல்வேறு அமைப்புகளில் சிறந்த முறையிலே திறமையாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் அனைவருடைய விருப்பமும் ஆகும்.

*பிற்பகல் 1-25*

அதேநேரத்தில், நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற சமூக நலத் துறைகளைவிட நமது காவல் துறையினருக்கு இன்றையதினத்திலே அதிகமாக நிதியை ஒதுக்கிக் கொடுத்து இருக்கிறார்கள். அது 2002-2003 ஆக இருந்தாலும் சரி; 2003-2004 ஆம் ஆண்டிலும்கூட, அதிக நிதியை, பல சமூக முன்னேற்றத்திற்கு இருக்கக்கூடிய துறைகளைவிட இந்தக் காவல் துறைக்கு நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், அதேநேரத்தில் நம்முடைய அரசாங்கம் சிக்கனமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அடிக்கடி, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் பின்னாலே, பல்வேறு விவரங்களுக்கு வருவதற்கு முன்பாக, நம்முடைய காவல் துறையிலே இருக்கக்கூடிய ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, தொடர்ந்து அவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற விருப்பத்தை எப்போதும் தெரிவிப்பார்கள். அந்த வகையில் இன்றையதினம் காவல் துறை உதவி ஆய்வாளர்கள் 198 பேர், அவர்களுடைய கோரிக்கைகளை, முதலமைச்சர் அவர்கள் குறை தீர்க்கும் நாளிலே விண்ணப்பங்களாக சமர்ப்பித்திருக்கிறார்கள். நேரிடையாகத் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் தாலுகா அல்லது போக்குவரத்து பிரிவுகள் அல்லது ஆயுதப்படை, சிறப்புக் காவல் போன்ற அனைத்துப் பிரிவுகளிலே பணிபுரிய வேண்டுமென்று தமிழ்நாடு செய்தி விளம்பரம் வெளியிடப்பட்டு இன்றுவரையிலும்

அவர்கள் அந்தப் பணியில் அமர்த்தப்படவில்லை என்ற குறையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிவோடு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று ஏற்கெனவே காவல் நிலையங்களிலே இருக்கக்கூடிய காவலர்கள், தலைமைக் காவலர்கள், ஊதிய உயர்வு மற்றும் இதர சலுகைகளை அளித்திடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 10 ஆண்டு காலம் பணிபுரிந்தால் அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கவேண்டுமென்கின்ற உத்தரவுகள் ஏற்கெனவே இருந்தது. ஆனால், இன்றையதினம் அதுபோன்ற உத்தரவுகள் எல்லாம் அமல்படுத்தப்படவில்லையென்கின்ற குறையையும் தெரிவித்திருக்கிறார்கள். அதனையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். எனவே, அதனையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதிப் பிரச்சினை; குறிப்பாக திருத்துறைப்பூண்டியில் ஒரு தாலுகா காவல் நிலையம் உள்ளது. அது ஒரு பழைய கட்டடத்திலே இயங்கிக் கொண்டு வருகிறது. அதற்குப் புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டும். அதுவொரு வளர்ந்து வருகின்ற நகரமாக இருப்பதால், அந்த நகரத்திற்கு ஒரு நகரக் காவல் நிலையத்திற்கு அனுமதி தர வேண்டும். அநேகமாக, என்னுடைய தொகுதியிலே இருக்கிற அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் காவலர்கள் குடியிருப்பும் காவல் நிலையங்களும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்திற்கு மட்டும்தான் இன்னும் புதிய கட்டடம் கட்டப்படாமல் பழைய கட்டடத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது.

அதேபோலத் தீயணைப்பு நிலையங்களை எடுத்துக்கொண்டாலும், தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகவே இங்கே நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். திருத்துறைப்பூண்டி தீயணைப்பு நிலையத்திற்குப் புதிய இடம் வாங்கப்பட்டுள்ளது. கட்டடங்களைக் கட்டித்தர வேண்டும். அதேபோல, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, கோட்டூர் போன்ற இடங்களிலேயும், வாடகைக் கட்டடங்களில் தீயணைப்பு நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. போதுமான இடவசதியில்லை. அதற்கும் புதிய கட்டடங்களையும், குடியிருப்புகளையும் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



குறிப்பாக, நம்முடைய காவல் துறையிலே, காவல் துறையினுடைய தலைவர் என்ற அந்தப் பதவியிலே ஒருவர் மட்டும் இருந்த காலம் எல்லாம் உண்டு. இன்றைக்குப் பார்த்தால் 4 காவல் துறையினுடைய தலைவர்கள், அவர்கள் பல்வேறு பிரிவுகளின்கீழே இன்றைக்குச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, A.D.G.P. பொறுத்தவரையில் 14 பேர்களுக்கு மேலே நம்முடைய காவல் துறையிலே பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்கள். சென்னையை எடுத்துக்கொண்டால்கூட, 8 I.G.P. இருந்த இடத்தில் 40 I.G.P. இன்றையதினத்திலே பணிபுரிந்துகொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் சென்னையின் மக்கள் தொகை 3 இலட்சமாக இருந்தது. இன்றைக்கு அது 42 இலட்சமாகப் பெருகியுள்ளது. அதுபோலத்தான் மக்கள் தொகைக்கு ஏற்ப, தேவைகளுக்கு ஏற்ப, காவல் துறை அதிகாரிகளின் எண்ணிக்கையும் பெருகுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையினுடைய அதிகாரிகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கிறதே தவிர, காவலர்களுடைய எண்ணிக்கை கூடாத நிலையில் இருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காவல் துறையில் கீழே பணியாற்றக்கூடியவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதேபோன்று காவல் துறையினுடைய அமைப்புகளிலே, இன்றைக்கு அவர்கள் எல்லாம் சங்கம் வைக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். மேற்கு வங்காளம், திரிபுரா, கேரளா போன்ற இடங்களிலே காவல் துறையினருக்குச் சங்கம் வைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் விருப்பம் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் பொதுவாகப் பார்த்தீர்கள் என்றால், அவர்களுடைய உரிமைகளை யார் மூலம் சொல்வது என்று அவர்களுக்குத் தயக்கம் ஏற்பட்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல 5 தினங்கள் அவர்களிடத்திலே கோரிக்கைகளைக் கேட்டு, அவர்களிடத்திலேயிருந்து மனுக்கள் பெறப்பட்டன; 8395 பேர்களிடமிருந்து, அந்த மனுக்கள்

பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன. அவற்றைத் தலைமைச் செயலாளர் அவர்களிடத்திலே மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்து, நேரிடையாக விசாரணை செய்தது வரவேற்கத்தக்கது. இது எந்த மாநிலத்திலும் இல்லாதது. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் செய்து இருக்கிறார்கள். ஆனால், அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த மனுக்கள் யாருக்குத் திருப்பி அனுப்பப்பட்டன என்றால், யார் மீது புகார் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களிடத்திலே கொடுத்து அதை விசாரிக்க வேண்டுமென்று சொல்கிறபோது, தாங்கள் கொடுத்த மனுவில் எந்த ஒரு நியாயமும், நீதியும், பதவி உயர்வும் இன்றி தங்களுடைய கஷ்டங்களும், சிரமங்களும் அவர்களால் தீர்க்கப்பட முடியாது என்பதுதான் அவர்களுடைய குறை. நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களிடத்திலே அந்த மனுக்களைக் கொடுத்தோம். ஆனால், அவர்களிடத்திலேயே அந்த மனுக்கள் திருப்பி அனுப்பப்படுகிறபோது, அது எப்படிச் செயல்படும் என்பதிலே இன்றையதினத்திலே அவர்கள்... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இதற்கான புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 8500-க்கு மேற்பட்ட மனுக்கள் என்னிடம் கொடுக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை தீர்க்கப்பட்டுவிட்டன; நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டன. மற்ற மனுக்களின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிச்சயமாக ஓர் அதிகாரிமீது புகார் கூறப்பட்டிருந்தால், அவரிடமே அந்த மனு திருப்பி அனுப்பப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பத்திலே கொடுக்கப்பட்ட மனு பரிசீலிக்கப்படுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கொடுப்பதற்கு முன்னதாகவே சில பேர் தங்களுடைய கோரிக்கைகளை, மனுக்களை அதிகாரிகளிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அவர்களிடத்திலே, அந்த மனுக்கள் சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படுமா என்று கேட்கிறபோது, மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்கள் மீதுதான் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்; அதற்கு முன்னதாகக் கொடுக்கப்பட்ட மனுக்களை எல்லாம் பரிசீலிக்க முடியாது என்று இன்றையதினத்திலே, இந்தத் துறையிலே சொல்வதாகப் பல பேர் என்னிடத்திலே சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஏற்கெனவே கொடுக்கப்பட்ட மனுக்கள்மீதும் ஒரு விசாரணையை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம்கூட இங்கே கவனம் செலுத்தினார்கள். முதலமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள். கம்யூனிஸ்ட் இயக்கம் என்பது, ஒரு போராட்டத்திலே வந்ததுதான். புரட்சி என்று சொல்வதற்கான அந்த வார்த்தைகள், அதற்கான இலக்கணம், போரட்டம்தான். மாறுதல் என்று சொன்னால் அது ஒரு புரட்சி. அதைச் செய்தவர்களும் இந்த உலகத்திலே மட்டுமல்ல; இங்குமட்டுமல்ல; பல்வேறு இடங்களிலே கம்யூனிஸ்ட் கட்சி இயக்கம்தான் அதைச் செய்தது. இன்னும் சொன்னால், கார்ல் மார்க்ஸ்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, இங்கு தலைவிக்குப் பெயரே புரட்சித் தலைவிதான்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதைத்தான் சொல்கிறேன். முதலமைச்சருக்கே அப்படிப்பட்ட வார்த்தையைப் பயன்படுத்துவது, ஒரு மாறுதலைக் கொண்டு வந்ததற்குத்தான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மக்கள் இயக்கம் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டும், வெற்றிகரமாகத் திகழ வேண்டும் என்றால் போராட வேண்டிய நேரத்தில் போராட வேண்டும்; ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்ய வேண்டும். ஆக்கபூர்வமான பணிகளையே செய்யாமல், எந்நேரமும் பேசிக் கொண்டே இருந்தால், போராடிக் கொண்டே இருந்தால், அதனால் மக்களுக்கு என்ன நன்மை விளையப் போகிறது?

**திரு. ஜி. பழனிசாமி:** சிந்திப்பதும், பேசுவதும், செயல்படுவதும், போராடுவதும், மக்களுக்காகவே தவிர, வேறொரு தனிநபருக்காகக் கிடையாது. அந்த அளவுக்குத்தான் பயிற்சி பெற்ற நாங்கள் அதைத்தான்

நாட்டிலேயும் செய்து கொண்டிருக்கிறோம்; உலகத்திற்கும் செய்து கொண்டிருக்கிறோம். ஆகையினாலேதான் நாட்டிலே பல மாறுதல்கள் வந்தன. அமெரிக்க ஏகாதிபத்தியம் போன்ற நாடுகள் இந்தியாவை இந்நேரம் தங்களுடைய கையிலே வைத்திருப்பார்கள், கம்யூனிஸ்ட் இல்லை என்று சொன்னால். ஆகவே, அது ஒரு வரலாறு; அது ஒரு வரலாறு. ஆகையினால்தான் அப்படிப்பட்ட இயக்கங்கள் ஜனநாயகபூர்வமாகத் தங்களுடைய போராட்டங்களை வெளிப்படுத்த வேண்டும்; அரசுகளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்கிற நோக்கத்திலே, ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னால், தோழர்கள் சொன்னதுபோன்று, மறியல் போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு அனுமதி கொடுப்பதிலே காவல் துறையால் இப்போது மிகவும் நிர்ப்பந்திக்கப்படக்கூடிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகையினாலே, தொழிற்சங்கத் தலைவர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்களானாலும் அதுதான் நடக்கிறது. வழக்கறிஞர்களானாலும் அதுதான் நடக்கிறது. மாணவர்களாக இருந்தாலும் அதுதான் நடக்கிறது. பத்திரிகையாளர்களாக இருந்தாலும் அப்படித்தான் நடக்கிறது. மீடியாக்கள் இன்றையதினத்திலே, அவர்களே போய் அந்த நேரத்திலே சம்பவங்களை நேரடியாகப் பார்க்க வேண்டுமென்று சொன்னால், காவல் துறையிலே அதை அனுமதிக்க முடியாத நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிற நிலைமைகள் இப்போது நாட்டிலே நடக்கின்றன. நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்கிறேன், உலகத்திலே, வளர்ந்திருக்கிற நாடுகளிலே, வளர்ந்து வந்திருக்கிற நாடுகளிலே, பல்வேறு வகையான மக்கள் விழிப்புணர்வு பெற்றிருக்கிற நாடுகளிலேகூட, அவர்களுடைய ஜனநாயகபூர்வமான எதிர்ப்புகளை அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொன்னால், இன்றையதினத்திலே தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காலகட்டத்திலே, வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையிலே, தொழிலாளர்களுக்கு வேலையில்லை; படித்தவர்களுக்கு வேலையில்லை. ஆனால், அவர்களுடைய வாழ்க்கைக்கு வழி இல்லை என்கிறபோது, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட ஒரு ஜனநாயகபூர்வமான இயக்கம் நடத்துகிறபோது, காவல் துறையே பல இடங்களில் அரசாங்கத்திற்கு ஒரு நிர்ப்பந்தம் கொடுக்கக்கூடிய நிலைமையை உருவாக்கி வருகிறார்கள் என்பதற்காகத்தான் சொல்கிறோம். முதலிலே ஜனநாயகபூர்வமாக அவர்களுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு, நாம் அனுமதிக்க



வேண்டும் என்று முதலிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆறாண்டு காலத்தில்--நம்முடைய கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருப்பதை நான் பார்த்தேன்--மதக் கலவரத்திலே 53 பேர் இறந்துள்ளார்கள். சாதிக் கலவரத்திலே 193 பேர் இறந்திருக்கிறார்கள். இப்படிப் பல பேர் இறந்து இருப்பதற்கு நாம் என்ன செய்கிறோம் என்று சொன்னால், இப்படிப்பட்ட சூழ்நிலை நடக்கிறபோது, பல விசாரணை கமிஷன்களைப் போடுகிறோம். அந்த விசாரணை கமிஷன்களின் முடிவு எப்படி வருகிறது என்று சொன்னால், யாருக்கும் தண்டனை வாங்கித் தருவதற்கான முடிவாக அது இல்லை. அநேகமாக ஒரு Report அளிக்கிற விசாரணை கமிஷனாகத்தான் அது இருக்கிறது. அதன்மூலமாகத் தவறுகளையோ, குற்றங்களையோ கண்டுபிடித்துத் தண்டிக்கக்கூடிய அளவுக்கு அந்த விசாரணை கமிஷன் முடிவுகள் இல்லை. ஒரு போலித்தனமான விசாரணை கமிஷனாக அது இருந்து கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, எல்லா விசாரணை கமிஷன்களும் தண்டிக்க முடியாது. விசாரணை கமிஷன் என்பது அறிக்கை கொடுப்பதாகும்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது, அதற்குப் பிறகு எடுக்கப்படவேண்டிய விஷயம்.

**திரு. ஜி. பழனிசாமி:** விசாரணை கமிஷன் அறிக்கைமீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்பதுதான் இன்றைக்கு இருக்கிற பிரச்சினை. விசாரணை கமிஷன் அறிக்கைமீது நடவடிக்கை எடுக்க முடியாத ஒரு சூழ்நிலையை இன்றையதினம் நாம் காண முடிகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் இன்னும் முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி வேறு பேசவேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** பேசட்டும், காவல் துறை மானியக் கோரிக்கைக்கு 2 நாள் வைத்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. ஹேமச்சந்திரனையும் அப்படித்தான் முடிக்க வைத்தேன். 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடியாது; அரை மணி நேரத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இன்னும் 15 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, 15 நிமிடங்கள் முடியாது; 2 மணித்துளிகள்தான். அதிகம் போனால், நீங்கள் ரொம்ப வற்புறுத்தினால் 5 நிமிடங்கள் தருகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல விசாரணை கமிஷன்களினுடைய ரிப்போர்ட்டுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றியது. ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்கள் மீது சமூகத் தாக்கங்கள் செயல்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்கள், சமுதாயத்தில் கடைக்கோடியில் வாழ்ந்துகொண்டு இருக்கக்கூடியவர்கள்; அவர்கள் கொடுக்கும் மனுக்கள் மீது முறையான விசாரணைகள் செய்யப்படவில்லை; வழக்குகளும் பதிவு செய்யப்படவில்லை என்ற ஒரு புகார் இருந்து கொண்டிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டால், கொடுக்கப்பட்டுள்ள மனுக்களிலே 5 சதவீதம்கூட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது தொடர்ந்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இதையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, சென்னை நகரப் பகுதிகளில் பார்த்தோம் என்று சொன்னால், காவல் துறையில் அநேகமாக 40 ஐ.பி.எஸ். காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அங்கே தனியாக வீடுகளில் குடியிருப்பவர்களிடத்தில் கொள்ளையடிக்கப்படுகிற நிகழ்ச்சி என்பது



தினந்தோறும் நடந்து கொண்டிருக்கிறது. அதனால் யாரும் தனியாக இருக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாத விஷயம் கிடையாது. தொடர்ந்து பல்வேறு கொலைகள், கொள்ளைகள் நடந்து, வீடுகளை இன்றைக்குக் காலி செய்துவிட்டிருக்கிறார்கள். தனியாக இன்றைக்கு வீட்டிலே இருக்க முடியாது என்கின்ற அளவுக்கு நிலைமை மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து இருக்கின்றன. அந்தக் கொள்ளைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதுவும் சென்னை நகரம் போன்ற இடங்களில் இருக்கக்கூடிய மக்கள் அச்சமின்றி வாழ்க்கை நடத்தக்கூடிய அளவுக்கு நம்முடைய காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவல் துறையை நவீனமயமாக்க வேண்டும் என்ற அடிப்படையில் காவல் துறையின் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகமாக்குவதோடு, காவல் துறையினருக்கு நல்ல பயிற்சிகள் அளிப்பதும், காவல் துறையில் அனைத்துக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதும், அவர்கள் அச்சாணி போன்று குற்றங்களைக் கண்டறிந்து, அறிவியல் சார்ந்த முறையிலே பின்பற்ற வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதற்கு மேலாக, இன்றைக்குக் காவல் துறையினர் தங்களுடைய காவல் பணியில் சீரிய நோக்கங்களோடு பணியாற்றுவதற்கு வெளிப்புறத் தோற்றத்தை வெளிப்படுத்த, திறன் நுட்பத்தோடு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். தங்களுடைய செயல்பாடுகளுக்கு வழிவகை காணப்படவேண்டும். காவல் துறையிலே ஒரு காலனி ஆதிக்கம் தொடர்ந்து அடக்குமுறையாக அது தடையாகச் சித்தரிக்கப்படுகிறது. காவல் துறையை நவீனப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் சொல்லியிருப்பதை உண்மையிலேயே நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையிலே இருக்கக்கூடியவர்கள் அங்கே ஓர் அடிமையாக இருக்கிறார்கள். யார் யார் எல்லாம் காவல் துறையில் இருக்கிற உயர் அதிகாரிகளுக்குச் சாதகமாக இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் பதவி உயர்வு, அவர்களுடைய பணிக்கான பாதுகாப்பு, இதுபோன்ற நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, காவல் துறை உயர் அதிகாரிகளுக்குத் தனியாக ஊழியர்களையும் பராமரிப்பாளர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமிக்கலாம். ஆனால், காவல் துறையில்

இருக்கிற ஊழியர்களே அவர்களைப் பராமரிப்பது என்பது சரியல்ல. அதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். நேரம் கடந்து இருக்கிற காரணத்தால் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இன்னொரு சம்பவத்தை நான் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பழனிசாமி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் விளக்கம் கூற விரும்புகிறேன். காவல் துறையில் ஏவலர் பதவி முறை ஏற்கெனவே ஒழிக்கப்பட்டுவிட்டது. காவல் துறையில் ஏவலர் பதவி முறையை ஒழித்து, உள் துறை அரசாணை நிலை எண் 2231, நாள் 5-9-1979-ன்படி ஆணை வெளியிடப்பட்டது. அதுமுதற்கொண்டு காவல் துறையில் ஏவலர் முறை வழக்கத்தில் இல்லை. உள் துறை அரசாணை (நிலை) எண் 664, நாள் 19-3-1982-ன்படி ஏவலர்களுக்குப் பதிலாக 940 அடிப்படைப் பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டன. மேலும் காவலர் குறைகள் தீர்க்கும் நாள் நிகழ்ச்சியின்போது, கருணை அடிப்படையில் தங்களுக்குப் பணி அளிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தவர்களின் கோரிக்கையை ஏற்கும் வகையில், உள் துறை அரசாணை (நிலை) எண் 989, நாள் 21-10-2002-ன்படி காவல் துறை அலுவலர்களின் முகாம் அலுவலகங்களில் பணியாற்றும் வகையில் ஏவலர்களுக்குப் பதிலாக 225 வீட்டு வேலைக்கான உதவியாளர் பணியிடங்களை அனுமதித்து நான் ஆணையிட்டேன். எனவே, தற்போது ஏவலர் முறை என்பது, காவல் துறையில் நடைமுறையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதைத்தான் காவலர்கள் பலபேர் பல கோரிக்கைகளாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும்கூட, 23 கடிதங்கள் மூலமாக எனக்கு வந்திருப்பதைச் சுட்டிக்காட்டி, மாண்புமிகு முதல்வர் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



சிலபேரிடத்திலே அவர்கள் பயணம் செய்கிறபோது, இந்த Traffic Police ரூ.500, ரூ.1000, ரூ.2000 என்று வாங்குகிறார்கள். அவர்களிடத்திலே கையெழுத்து வாங்குவது இல்லை. ரசீது கொடுப்பதும் இல்லை. அவர்களே ரசீது அடித்து வைத்துக்கொண்டு, மாற்றுக் கையெழுத்துப் போடுகிற நிகழ்ச்சி இருக்கிறது. ஒரு மோசமான நிலைமையை இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இது உருவாக்குகிறது என்று எனக்குத் தபால் மூலமாக வந்திருக்கிறது. யார் அனுப்பினார்கள் என்று எனக்குத் தெரியாது. இதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) ஒரு மணித்துளியில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்து விடுகிறேன். இன்னொரு முக்கியமான விஷயம். சமீபத்திலே நம்முடைய பேரவையினுடைய கொறடா தலைமையில் Petitions Committee பெரம்பலூர் மாவட்டத்திற்கு பொது மக்களிடத்திலே மனுக்களை வாங்குவதற்காகச் சென்றது. அங்கே எங்களுடைய மாவட்டச் செயலாளர் ஒருவர், 78 வயது அவருக்கு; ரொம்ப வயதானவர், அவர் பெயர் வேணுகோபால். ஆறுகளில், குளங்களில் தூர் வார வேண்டும் என்பதற்காக அவர்களிடத்திலே மனு கொடுப்பதற்காகச் சென்றார். அங்கே இருக்கிற அந்த D.G.P.—மாவட்ட காவல் துறையினுடைய கண்காணிப்பாளர்—(குறுக்கீடு) sorry, S.P.; அந்த S.P. வாசலிலே நின்றுகொண்டிருக்கிறார். என்ன கோபத்திலே நின்றாரோ தெரியவில்லை, மனு கொடுக்கப் போனவரை 'வெளியே போய்யா' என்று சொல்லியிருக்கிறார். 'இல்லைங்க, குளங்களை எல்லாம் தூர் வார வேண்டும், ஏரிகளைத் தூர் வார வேண்டும், வறண்டு போய்க் கிடக்கிறது' என்று சொல்லியும், ஓங்கி அறைவிட்டு, அந்த கல்யாண மண்டபத்திலே கீழே உருட்டி விட்டுவிட்டார். அவருக்கு 78 வயது. கீழே விழுந்து கையே முறிந்துபோய் விட்டது மனு கொடுக்கப்போனவருக்கு. அதுபற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் 'Fax' மூலமாகச் செய்தி அனுப்பினேன். காவல் துறை அதிகாரிகளுக்கு, நான் நம்முடைய D.G.P.,-க்கு--காவல் துறைத் தலைவருக்கு--நேரடியாகக் கொண்டுபோய் மனு கொடுத்து, இந்தச் சம்பவம் தொடர்பாக நீங்கள் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னேன். எந்தவொரு நடவடிக்கையும் இல்லை. அதை விசாரித்து நீங்கள் நடவடிக்கை எடுங்கள். இதைக் கண்டித்து நாங்கள் ஓர் ஊர்வலம் நடத்தினோம். ஜோதிமணி என்று

நாகப்பட்டினத்தில் ஒரு இன்ஸ்பெக்டர்--ஊர்வலத்திலே முன்னாடி போய்க்கொண்டிருக்கிறோம் பின்னாடி வேனைக் கொண்டு வந்து மோதுகிறார். பெண்கள் எல்லாம்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பழனிசாமி, பெயர்களைக் குறிப்பிட்டுச் சொல்வது, அதிகாரி மேல் குற்றச்சாட்டுச் சொல்வது......

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, இல்லை. குற்றச்சாட்டு இல்லை. விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வது சரி. அவர்கள் இங்கே பதில் சொல்ல முடியாது அல்லவா?

**திரு. ஜி. பழனிசாமி:** பதில் சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரிகள் மேல், நேரடியாகப் பெயர்களைக் குறிப்பிட்டுச் சொன்னீர்கள் என்றால், அவர்கள் பதில் சொல்லக்கூடிய நிலைமையில் இல்லை. அதனால், சம்பவம் நடந்திருந்தால் அதுதொடர்பாக முதலமைச்சரிடம் கொடுங்கள். ஒரு நிகழ்ச்சி நடந்தது என்று சொல்லிக் கொடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நானும் கொடுத்ததைத்தான் சொல்கிறேன். இதையும் நான் முதலமைச்சர் அவர்களுக்கு, அவர்களுடைய அலுவலகத்திற்கு அனுப்பி இருக்கிறேன். நான் முதலமைச்சருக்கு அனுப்பினேன். (குறுக்கீடு) ஒரேயொரு விஷயம். முடித்து விடுகிறேன். ஆக, அனுப்பி இருக்கிறேன். அதுபோல நம்முடைய சிவபுண்ணியம், அவர் வீட்டிலே பாருங்கள், என்ன பெரிய.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உரையை முடித்து விடுங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி. பழனிசாமி:** உரையை முடித்து விடுகிறேன். அவர் வீட்டிலே போய்க் காவல் துறையினர்.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஏற்கெனவே பேசப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டுவிட்டது. திரு. பழனிசாமி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிசாமி, உரையை முடியுங்கள்.



**திரு. ஜி. பழனிசாமி:** குறைந்தபட்சமாகவாவது, அவர்களை எல்லாம் விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆட்சி காவல் துறையை விட்டு, இப்படியெல்லாம் எதிர்க்கட்சிகள் மீது நடவடிக்கை எடுத்தால், அச்சுறுத்தினால் எப்படிப் பண்ணுவது? இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டாமா? இன்னொன்று, கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** உரையை முடித்து விடுகிறேன். ஒரு நிமிடத்திலே உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள். ஏற்கெனவே நீங்கள் கேட்டதற்கு மேல் அதிகமாக நேரம் கொடுத்தாகி விட்டது.

## 4. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி

### (ஆ) விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 9-4-2003 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

[பேரவைத் தலைவர்] [2003 ஏப்ரல் 8

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

9-4-2003 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

127. உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ், ஆங்கிலம்)

128. பொதுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ், ஆங்கிலம்)

129. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ்)

130. தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையத் துறை - தமிழ் வளர்ச்சி - பண்பாடு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ், ஆங்கிலம்)

131. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2003-2004) (தமிழ், ஆங்கிலம்)



2003 ஏப்ரல் 8]

132. மானியக் கோரிக்கை எண் 20 - நெடுஞ்சாலைகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004, (தமிழ், ஆங்கிலம்)

133. நெடுஞ்சாலைத் துறையின் நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

134. நெடுஞ்சாலைத் துறையின் 'மக்கள் சாசனம்', 2003. (தமிழ், ஆங்கிலம்)

135. மானியக் கோரிக்கை எண் 23 - உள் துறை - சிறைச்சாலைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

136. சிறைச்சாலைத் துறையின் 'மக்கள் சாசனம்' 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

137. மானியக் கோரிக்கை எண் 36 - மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண் 38 - பொதுப் பணித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

139. பொதுப் பணித் துறையின் திட்டச் சாதனை, 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

140. மானியக் கோரிக்கை எண் 21 - தமிழ்நாடு காவல் துறையின் 2003-2004 ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

141. மானியக் கோரிக்கை எண் 22 - தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்.)

# இணைப்பு - I

(67 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் - 21 — உள் துறை — காவல்
## கொள்கை விளக்கக் குறிப்பு—2003-2004

எந்த ஒரு மாநில அரசின் செயல்பாட்டிலும் முக்கிய அங்கம் வகிப்பது காவல் துறையாகும். சட்ட ஒழுங்கு பராமரிப்பு, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடித்தல், பல்வேறு சட்டங்களை அமல்படுத்துதல் போன்றவை காவல் துறையின் முக்கியப் பணிகளாகும். தொழில்நுட்ப மேம்பாடு காரணமாகவும், மாறி வரும் காலத்திற்கேற்பவும் மக்களின் வாழ்க்கை முறைகளும் வேகமாக மாறி வருகின்றன. இது தவிர, சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் மத ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களால் காவல் துறையின் பணி எல்லை விரிவடைந்துள்ளது. சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில், நிர்வாகத்தின் திறமையையும், பணித் திறமையையும் அதிகரித்தல், தேவையான உபகரணங்களையும் மேம்படுத்துதல் ஆகிய காவல் துறையின் செயல்பாடுகளைப் புதிய கண்ணோட்டத்துடன் அணுக வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அறிவியல் சார்ந்த வளர்ச்சி, பொருளாதார ரீதியாக உலகமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் பணிசார் துறைகளில் ஏற்பட்டுள்ள துரித வளர்ச்சி ஆகியவற்றின் காரணமாக காவல் துறையினர் தலையிட்டு கடமையாற்ற வேண்டிய புதிய பொறுப்புகள் உருவாகியுள்ளன. பன்னாட்டு அளவில் உருவெடுத்துள்ள பயங்கரவாதமும், தீவிரவாதமும், உள்ளூரில் பிரிவினைவாதிகள், தேசத் துரோகிகள், சமூக விரோதிகள் ஆகிய தீய சக்திகளுடன் கூடாநட்பு கொள்ளும்போது, குற்ற நிகழ்வு நடவடிக்கைகள் அதிக பதோடு, நூதன மற்றும் பயங்கரமான வடிவங்களில் திட்டமிட்ட வன்முறைகள் பெருகக்கூடிய சூழலில், காவல் துறையினர் மிகக்கடுமையான சவால்களை எதிர்கொண்டு பணியாற்ற வேண்டியுள்ளது.

திறமைக்கும், செயலாக்கத்திற்கும் புகழ்பெற்ற தமிழ்நாடு காவல் துறையானது, மிகப் பெரிய பொறுப்புகளை முழு மனதுடன் ஏற்று, உறுதியாகவும், கடமையுணர்வுடனும் சிறந்த வகையில் பணியாற்றி வருகிறது. காவல் துறையினரின் பணித்திறன், சாதனை ஆகியவற்றை அரசுடன் சேர்ந்து, பொதுமக்களும் பாராட்டி வருகின்றனர்.

[2003 ஏப்ரல் 8

துரித நடவடிக்கை மூலம் குற்றவாளிகளைக் கைது செய்து, நீதிமன்றம் முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத் தருவதில் முழுமூச்சுடன் பணியாற்றி, அனைவரின் பாராட்டுக்குரிய துறையாக இருந்து வருவதோடு, நாட்டின் மிகச் சிறந்த காவல் துறையாகவும் தமிழகக் காவல் துறை திகழ்கிறது.

தமிழக அரசு காட்டிய நல்லாதரவு காரணமாகவும், சிறப்பு ஊக்கம் காரணமாகவும், காவல் துறையின் துடிப்பான அதிகாரிகள் செயல்படுத்திய சமுதாயக் காவல் திட்டம் பன்னாட்டளவில் நற்பெயரையும், அங்கீகாரததையும். விருதுகளையும் பெற்றுள்ளது.

தமிழ்நாடு காவல் துறையானது கடமையாற்றுவதிலும், அர்பணிப்புத் தன்மையிலும், பணித் திறமையிலும் சிறந்து விளங்கி வருகிறது. பொதுமக்களின் பங்கேற்புடன் நேர்மையாகவும், செம்மையான திறனுடனும் சேவையாற்றுவதையே தமிழகக் காவல் துறை முக்கிய குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

**அத்தியாயம்-1**

**காவல் துறையின் நிருவாக அமைப்பு**

மாநில காவல் துறை தலைமையகத்தில், காவல் துறை தலைமை இயக்குநருக்கு உதவியாக, கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம் ஒழுங்கு), கூடுதல் காவல் துறை இயக்குநர் (நிர்வாகம்), கூடுதல் காவல் துறை இயக்குநர் (தலைமையிடம்), கூடுதல் காவல் துறை இயக்குநர் (நுண்ணறிவு) ஆகிய நான்கு முதன்மையான அதிகாரிகளும் மற்றும் இதர அலுவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி ஆகிய நான்கு மண்டலங்களில் காவல் துறைத் தலைவர்கள் செயல்பட்டு வருகின்றனர். மாநில காவல் துறையின் நிருவாக அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது:

| | | |
|---|---|---|
| ஆணையரகங்கள் | - | 6 |
| சரகங்கள் | - | 12 (ஒரு ரயில்வே சரகம் உள்பட) |
| மாவட்டங்கள் | - | 31 (2 ரயில்வே மாவட்டங்கள் உள்பட) |
| உட்கோட்டங்கள் | - | 193 (5 ரயில்வே உட்கோட்டங்கள் உள்பட) |
| வட்டங்கள் | - | 287 |



2003 ஏப்ரல் 8]

| | | |
|---|---|---|
| காவல் நிலையங்கள் | - | 1365 (148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் 31 இரயில்வே காவல் நிலையங்கள் உள்பட) |
| புறக் காவல் நிலையங்கள் | - | 117 (26 இரயில்வே புறக்காவல் நிலையங்கள் உள்பட) |

கீழ்க்கண்ட சிறப்பு /தனிப் பிரிவுகள் ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநர் அல்லது காவல் துறைத் தலைவர் தலைமையில் இயங்கி வருகின்றன.

1. நுண்ணறிவுப் பிரிவு
2. சிறப்புச் செயலாக்கப் பிரிவு
3. தொழில் நுட்பப் பிரிவு
4. கடலோர பாதுகாப்புப் படை
5. குடிமைப்பொருள் குற்றப் புலனாய்வுப் பிரிவு
6. மனித உரிமை மற்றும் சமூக நீதிப் பிரிவு
7. பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு
8. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு
9. ஊர்க்காவல் படைப் பிரிவு
10. மாநில குற்றப் புலனாய்வுத் துறை
11. குற்றப் புலனாய்வுப் பிரிவு
12. ரயில்வே பாதுகாப்புப் பிரிவு
13. சிறப்பு அதிரடிப் படை
14. பயிற்சி
15. மகளிர் காவல் பிரிவு

காவல் துறைத் தலைவர் தலைமையில் 12 தமிழ்நாடு சிறப்பு காவல்படை குழுமங்கள் (ஆவடியில் உள்ள ரெஜிமென்டல் சென்டர் உள்பட) இயங்கி வருகின்றன. இக்குழுமங்களில் ஒன்று (த.சி.கா.ப.

அணி-8) புது தில்லியில் உள்ள திகார் சிறைச்சாலையில் அயற்பணியில் உள்ளது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியமானது காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள ஓர் அலுவலர் தலைமையில் இயங்கி வருகிறது. இத்தேர்வு வாரியத்தில் ஒரு காவல் துறை கூடுதல் இயக்குநரும், ஒரு காவல் துறைத் தலைவரும் அவருக்கு உதவியாகப் பணியாற்றி வருகின்றனர். இவ்வாரியம் காவலர்கள் முதல் உதவி ஆய்வாளர்கள் வரை பணிக்குத் தேர்வு செய்யும் பொறுப்பை ஏற்று செவ்வனே செய்து வருகிறது.

இந்திய காவல் பணி தகுதிகாண் பருவத்தில் உள்ள அதிகாரிகள் உட்பட காவலர்கள் முதல் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் வரையிலானவர்களுக்கு பயிற்சி அளிக்கும் பொறுப்பை கூடுதல் காவல் துறை இயக்குநர், பயிற்சி அவர்கள் கவனித்து வருகிறார். மேற்கண்ட பயிற்சி நிறுவனங்களில், புதிதாக பணியில் சேர்பவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியும், ஏற்கனவே பணியில் உள்ளவர்களுக்கு பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் இந்திய காவல் பணி அதிகாரிகளின் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 214-இல் 28-2-2003 அன்றுள்ள நிலவரப்படி, 2002 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட 3 இந்திய காவல் பணி அதிகாரிகள் உட்பட, தற்போது 170 அதிகாரிகள் உள்ளனர். 2002 ஆம் ஆண்டு இந்திய காவல் பணி அதிகாரிகள் 8 பேர் பணி ஓய்வு பெற்றனர்.

களப்பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 95,007 ஆகும். அமைச்சுப் பணியாளர்களின் எண்ணிக்கை 5,319 ஆகும்.

## அத்தியாயம் - 2

### சட்டம் -ஒழுங்கு

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கு நிலை தொடர்ந்து நல்ல முறையில் இருந்து வருகிறது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரிடையே அமைதியையும் நல்லிணக்கத்தையும் பேணிக்காக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பல்வேறு அரசியல் கட்சிகள், சாதி /மத அமைப்புகள், தொழிலாளர்கள், ஆசிரியர்கள், மாணவர் இயக்கங்கள், அரசு ஊழியர் சங்கங்கள் ஆகியவை பல பிரச்சினைகள் குறித்து நடத்திய போராட்டங்கள், மாநில நிருவாகமும் காவல் துறையும்



மேற்கொண்ட திடமும் சாதுரியமும் கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் பயனாக அமைதியான முறையில் நடந்தேறின.

### மத வேறுபாடுகள் குறித்த நிலவரம்

மதக் கலவரம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் மிகவும் குறைந்த அளவில் இருந்ததுடன், உள்ளூர் பிரச்சினைகளைச் சார்ந்தவையாகவே இருந்தன. 2002 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இத்தகைய 4 நிகழ்வுகளில் இருவர் கொல்லப்பட்டனர். விநாயக சதுர்த்தி, தீபாவளி, ரம்ஜான் போன்ற பண்டிகைகளும், கோயம்புத்தூர் குண்டுவெடிப்பு சம்பவ நினைவு நாள் மற்றும் பாபர் மசூதி இடிப்பு நினைவு நாள் ஆகியவையும் அமைதியான முறையில் நடந்தேறின.

கடந்த 6 ஆண்டுகளில் மதக் கலவரங்களில் உயிரிழந்தோரின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:—

| ஆண்டு | உயிரிழந்தோரின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 45 |
| 1998 | 2 |
| 1999 | 2 |
| 2000 | 1 |
| 2001 | 1 |
| 2002 | 2 |
| 2003 (28-2-2003 வரை) | .. |

### சாதி வேறுபாடுகள் குறித்த நிலவரம்

என் தலைமையில் அமைந்த இந்த அரசால் எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளின் விளைவாக மாநிலத்தில் சாதிக் கலவரங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு, மாநிலத்தில் ஏற்பட்ட 14 சாதிக் கலவரங்களில் 6

[2003 ஏப்ரல் 8

பேர் கொல்லப்பட்டதுடன், 13 காவல் துறையினர் உட்பட 81 பேர் காயமடைந்தனர். சிறிய அளவிலான இந்நிகழ்வுகள் பெரும்பாலும் முன்விரோதம் மற்றும் சிறு காரணங்களை முன்னிட்டே ஏற்பட்டுள்ளன. சாதி விரோதம் காரணமாக் 3 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிவகங்கை மாவட்டத்திலுள்ள கண்டதேவி கோவில் தேர்த் திருவிழா பலத்த பாதுகாப்புக்கிடையே 24-6-2002 அன்று அமைதியான முறையில் வெற்றிகரமாக நடைபெற்றது. இதே போன்று சாக்கோட்டை நிகழ்ச்சியும், தாமிரபரணி சோகச் சம்பவ நினைவு நாள் மற்றும் தேவர் ஜெயந்தி விழா ஆகியவையும் அமைதியாக நடந்தேறின.

கடந்த 6 ஆண்டுகளில் சாதிக்கலவரங்களில் உயிரிழந்தோரின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | உயிரிழந்தோரின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 93 |
| 1998 | 30 |
| 1999 | 22 |
| 2000 | 18 |
| 2001 | 21 |
| 2002 | 6 |
| 2003 | 3 |
| (28-2-2003 வரை) | |

சாதி மற்றும் மதக் கலவரங்கள் ஏற்படாவண்ணம் தடுத்திட வேண்டி, பல்வேறு பிரிவினரிடையே நிலவும் பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகள் மூலம் உள்ளூர் அளவிலேயே சுமூகமாகத் தீர்த்துக் கொள்ள ஏதுவாக மாவட்டத்திலுள்ள அமைதிக் குழுக்களை முடுக்கிவிடுமாறு மாவட்ட ஆட்சியர்கள் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கத்தை வளர்த்திட வழிகோலும் வகையில், அனைத்து



2003 ஏப்ரல் 8]

பிரிவுகளைச் சேர்ந்த மூத்த மதத் தலைவர்களையும் இளைஞர்களையும் கொண்ட மத நல்லிணக்கக் குழுக்களை அமைக்குமாறும் மாவட்ட ஆட்சியர்கள் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**தொழிலாளர் மற்றும் பணிகள்**

அத்தியாவசியப் பணிகளில் வேலைநிறுத்தத்தைத் தடைசெய்யும் 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தைக் கண்டித்து பல்வேறு தொழிற்சங்கத்தினர் 23-10-2002 அன்று நடத்திய மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம், பல்வேறு பணிச் சங்கங்கள் நடத்திய போராட்டங்கள் மற்றும் மாநிலம் முழுவதும் (23-10-2002) முதல் 01-11-2002 வரை) அரசு ஊழியர்களின் ஒரு பிரிவினர் நடத்திய வேலை நிறுத்தம் ஆகியவை அமைதியான முறையில் கழிந்தன. அதேபோன்று, மத்திய மற்றும் மாநில அரசுகளின் புதிய பொருளாதாரக் கொள்கை, தொழிலாளர் கொள்கை ஆகியவற்றைக் கண்டித்து 08-01-2003 அன்று மாநில மற்றும் மத்திய அரசு அலுவலகங்களின் முன்பு பல்வேறு தொழிற் சங்கங்கள் நடத்திய மாநிலம் தழுவிய முற்றுகைப் போராட்டமும் அமைதியான முறையில் கழிந்தது.

**தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் பிற தீவிரவாத இயக்கங்களின் நடவடிக்கைகள்**

திரு. ராஜீவ் காந்தியின் படுகொலைக்கு முக்கிய பொறுப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்ககம் என்னுடைய தொடர் முயற்சிகளால் 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம், 1967 இன் கீழ் மத்திய அரசால் தடை செய்யப்பட்டது. இந்த இயக்கம், 2002 ஆம் ஆண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழும் (POTA 2002) தடை செய்யப்பட்டது. ஆயினும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் தொடர்புடைய வன்முறை சக்திகள் தமிழ்நாட்டில் தங்களது நடவடிக்கைகளைத் தொடர்வதற்காக தமிழ்நாடு விடுதலைப் படை (Tamil Nadu Liberation Army) மற்றும் தமிழ் தேசிய மீட்புப் படை (Tamil National Retrieval Troop) என்று மாற்று உருவில் செயல்படத் தொடங்கியதால், குற்றவியல் திருத்தச் சட்டம், 1908-இன்கீழ் அவற்றுக்கு தமிழ்நாடு அரசு தடை விதித்தது. பின்னர் தொடர்ந்து நான் எடுத்த நடவடிக்கையின் விளைவாக இந்த இயக்கங்களை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002-இன் கீழும் மத்திய அரசு அவற்றை தீவிரவாத இயக்கங்களாக அறிவித்தது.

[2003 ஏப்ரல் 8

அண்மையில், ஆந்திர மாநிலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நக்சலைட் இயக்கமான மக்கள் யுத்தக் குழுவினைச் சார்ந்த (People's War Group) சிலர் தர்மபுரி மாவட்டத்தில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிய வந்தது. மக்கள் யுத்தக் குழு என்ற இயக்கமும் ஏற்கெனவே பயங்கரவாத தடுப்புச் சட்டம், 2002-இன்கீழ் அறிவிக்கப்பட்ட தீவிரவாத இயக்கமாகும். இது குறித்த தகவல் அறிந்தவுடன், தமிழக காவல் துறை மிக வேகமாக இயங்கி, 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23,24 மற்றும் 25 ஆகிய நாட்களில் மேற்கொண்ட தீவிர தேடுதல் நடவடிக்கைகளின் பயனாக, இந்த பயங்கரவாத இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். அப்பொழுது மக்கள் யுத்தக் குழு தீவிரவாதிகளோடு நடந்த மோதலில், புரட்சிகர இளைஞர் முன்னணி (Radical Youth League) அமைப்பின் மாநிலச் செயலாளர் திரு. சிவா என்கிற பார்த்திபன் கொல்லப்பட்டார். 28 தீவிரவாதிகள் இந்த நடவடிக்கையில் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். இதில் ஆறு பெண்களும் அடங்குவர். பெருமளவிலான ஆயுதங்களும், மின் டெட்டனேட்டர்களும் (Detonators) கைப்பற்றப்பட்டன.

**மத அடிப்படைவாத இயக்கங்களின் நடவடிக்கைகள்:**

07-3-2002 அன்று திருமங்கலத்தில், கைதிகள் பாதுகாப்புப் பணியிலிருந்த காவலர்களைத் தாக்கிவிட்டு தப்பிச் சென்ற தீவிரவாதி இமாம் அலியும் அவனது 4 கூட்டாளிகளும் பெங்களூரில் பதுங்கியிருப்பது, காவல் துறையின் அயராத தேடுதல் வேட்டையின் காரணமாகக் கண்டுபிடிக்கப்பட்டது அங்கு நடந்த மோதலில் அவர்கள் ஐவரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழக காவல் துறையின் உயர்நிலைத் திறமைக்கு இது மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

07-3-2002 அன்று மதுரை திருமங்கலத்தில் கைதிகளுக்குப் பாதுகாப்பாகச் சென்ற காவலர்களைத் தாக்கிய துணிகர சம்பவத்திற்குக் காரணமான முஸ்லீம் தீவிரவாதிகளைக் கைது செய்தது, மாநிலத்தில் மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகளைப் பெருமளவில் கட்டுப்படுத்த வழிகோலியது.

21-11-2002 அன்று ஹைதராபாத்தில் சாயிபாபா ஆலயத்தில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தினைத் தொடர்ந்து கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில், சவூதியைத் தளமாகக் கொண்டு இயங்கும் இஸ்லாமிய பாதுகாப்புப் படையினைச் சார்ந்த, ஹைதராபாத்தை



2003 ஏப்ரல் 8]

சொந்த ஊராகக் கொண்ட இஸ்லாமியத் தீவிரவாதி அபுஹம்ஸாவுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, தமிழகத்தில் அவ்வியக்கத்தின் கிளைகளை அமைப்பதன் மூலம், முக்கிய இந்து கோவில்களை வெடிவைத்து தகர்த்து, மக்களிடையே பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி, மத நல்லிணக்கத்தைக் குலைக்கத் திட்டமிட்டிருந்த 20 இஸ்லாமிய தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

**விசாரணை ஆணையங்கள்**

2002-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மூன்று விசாரணை ஆணையங்கள் அரசால் அமைக்கப்பட்டன.

29-8-2002-ஆம் நாளன்று சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் நடைபெற்றதாகக் கூறப்படும் மோதல் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952-ன்படி (மத்தியச் சட்டம் 60/1952) ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திரு. எஸ். நடராசன் அவர்களின் தலைமையில் 31-8-2002 அன்று நீதி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்திடமிருந்து விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் அரசு கலை-அறிவியல் கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின் போது, மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரியின் அருகில் 3-9-2002 அன்று ஏற்பட்ட மோதல்களின்போது மாணவர்கள், பொது மக்கள் மற்றும் காவல் துறையினர் காயமடைந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. கே. சுப்பிரமணியன் அவர்களின் தலைமையில், விசாரணை ஆணையங்கள் சட்டம் 1952-ன்படி (மத்தியச் சட்டம் 60/1952) நீதி விசாரணை ஆணையத்தினை 06-9-2002 அன்று அரசு அமைத்தது. இந்த ஆணையத்தின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

7-12-2001 அன்று சென்னை கெல்லிஸ், மில்லர் சாலையில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர் விடுதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் ஏற்பட்ட வன்முறைச்

சம்பவத்திற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்து விசாரணை செய்வதற்காக நீதி விசாரணை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட (காலஞ்சென்ற) நீதிபதி திரு. எஸ்.எம்.அலி முகமது அவர்களுக்குப் பதிலாக, சென்னை மற்றும் கர்நாடக உயர்நீதி மன்றங்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற நீதிபதி திரு. கே.எஸ். பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் 1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையங்கள் சட்டத்தின்படி (மத்தியச் சட்டம் 60/1952) நீதி விசாரணை ஆணையம் 5-12-2002 அன்று அரசால் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்தின் விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

**காவல் துறையின் பாதுகாவலின்போது ஏற்பட்ட மரணங்கள்**

2002 ஆம் ஆண்டு, காவல் துறையினரின் காவலில் இருக்கும்போது 15 பேர் மரணமடைந்துள்ளனர். இந்நிகழ்வுகள் குறித்து காவல் (நிலை) ஆணை எண் 145 (புதிய ஆணை எண் 151)-ன்கீழ் விசாரணைகள் நடத்தப்பட்டன. இவ்வாண்டு (2003) பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் வரையில், காவல் துறையினரின் காவலில் இருக்கும்போது ஒருவர் மரணமடைந்துள்ளார். காவல் துறையினரின் காவலில் இருக்கும்போது ஏற்படும் மரணங்கள் குறித்து அரசால் மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்யப்பட்டு, இதுபோன்ற நிகழ்வுகளைக் குறைக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு காவல்துறை தலைமை இயக்குநருக்கும் மற்றும் உயர் காவல் துறை அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**காவல் துறை துப்பாக்கிச் சூடு**

2002 ஆம் ஆண்டில் காவலர்கள் 20 நிகழ்வுகளில் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த நேர்ந்தது. இவற்றுள் 7 முறை கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கும், 13 முறை குற்றவாளிகளுக்கு எதிராகவும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் (28-2-2003 வரை) ஒரே ஒருமுறை மட்டும் குற்றவாளி ஒருவனுக்கு எதிராக காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. துப்பாக்கிப் பிரயோகம் நடத்துவதைத் தவிர்க்குமாறும், அதற்குப் பதிலாக கண்ணீர் புகைக் குண்டுகளைப் பயன்படுத்துதல் மற்றும் தடியடி நடத்துதல் போன்ற பிற வழிமுறைகளைக் கையாண்டு, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறும், காவல் துறையினருக்கு அரசால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.



1996 ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவங்கள் குறித்த விபரங்கள் 28-2-2003 அன்று நிலவரப்படி கீழே தரப்பட்டுள்ளன:

| வ. எண் | விபரங்கள் | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற சம்பவங்களின் எண்ணிக்கை: | 24 | 63 | 48 | 35 | 24 | 32 | 20 | 1 |
| | 1. கலவரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் | 17 | 50 | 22 | 24 | 10 | 18 | 7 | - |
| | 2. கொள்ளையைத் தடுக்கும் நடவடிக்கையில் | - | - | 2 | - | - | - | - | - |
| | 3. இதர குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கையில் | 7 | 13 | 24 | 11 | 14 | 14 | 13 | 1 |
| 2. | கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை: | 15 | 28 | 10 | 19 | 9 | 13 | 9 | - |
| | 1. காவல் துறையினர் (சம்பவங்களில்) | - | - | - | 2 | - | - | - | - |
| | 2. பொது மக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 15 | 28 | 10 | 17 | 9 | 13 | 9 | - |
| 3. | காயமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை: | 116 | 307 | 116 | 165 | 66 | 207 | 42 | - |
| | 1. காவல் துறையினர் (சம்பவங்களில்) | 97 | 245 | 68 | 154 | 58 | 178 | 37 | - |
| | 2. பொதுமக்கள் (காவலர் துப்பாக்கிச் சூட்டில்) | 19 | 62 | 18 | 11 | 8 | 29 | 5 | - |

[2003 ஏப்ரல் 8

## அத்தியாயம்-3

### குற்ற நிகழ்வுகளின் போக்கு

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதுடன் குற்றங்களைக் கண்டுபிடித்தலும், குற்ற நிகழ்வுகளைத் தடுத்தலும் காவல் துறையின் தலையாய கடமையாகும். இவ்விரு செயல்பாடுகளும் குடிமக்கள் தாங்கள் நலமாக வாழ்கிறோம் எனும் எண்ணத்தை நிலைநிறுத்த உதவுகின்றன. இந்திய தண்டனைச் சட்டம் குறித்த குற்ற வழக்குப் பதிவுகளின் போக்கு ஏறக்குறைய நிலையாகவே உள்ளது. காப்புரிமைச் சட்டம், வாதட்சணை கொடுமைத் தடைச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் போன்ற உள்ளூர் மற்றும் தனிச் சட்டங்கள் குறித்த வழக்குகளின் பதிவு அதிகரித்துள்ளது. இது சிறப்புச் சட்டங்களின் மீது குடிமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும், இச்சட்டங்களின் மூலம் தங்களது குறைகளைத் தீர்த்துக்கொள்ள முன்வருவதையுமே தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

### 2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடைபெற்ற சொத்து சம்பந்தமான குற்றங்கள்

2002 ஆம் ஆண்டில் 25,049 சொத்து வழக்குகளும், 2001 ஆம் ஆண்டில் 23,478 வழக்குகளும் பதிவாகின. 1571 வழக்குகள் (6.7 சதவீதம்) அதிகமாக பதிவாகியுள்ளன. ஆதாயக் கொலை, கூட்டுக்கொள்ளை, கன்னக் களவு போன்ற கொடுங்குற்றங்கள் இவ்வாண்டு குறைந்தே காணப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டில், சொத்து வழக்கு கண்டுபிடிப்பு 76 சதவீதம் ஆகும். 2001 ஆம் ஆண்டில் 71 சதவீதம். கண்டுபிடிப்பு 5 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேபோன்று 2002 ஆம் ஆண்டில் மீட்கப்பட்ட சொத்துக்கள் 68.14 சதவீதம் ஆகும். 2001 ஆம் ஆண்டில் இது 62 சதவீதமாக இருந்தது. எனவே, சொத்து மீட்பு 6 சதவீதம் அதிகரித்துள்ளது. 2002 ஆம் ஆண்டில் 1969 திருட்டு வழக்குகள் பதிவாகியுள்ளன. இது 12 சதவீதம் அதிகமாக இருந்தாலும், இவ்வாண்டில் திருட்டு வழக்குகளின் கண்டுபிடிப்பு சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. 2002 ஆம் ஆண்டில் திருட்டு வழக்குகளின் கண்டுபிடிப்பு 83 சதவீதமாகும். 2001 ஆம் ஆண்டில் இது 77 சதவீதமாக மட்டுமே இருந்தது.



2003 ஏப்ரல் 8]

**2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் சொத்து சம்பந்தமான குற்ற நிகழ்வு விவரங்களைப் பின்வரும் பட்டியல் சுட்டிக்காட்டும்:**

| வ.எண் | குற்றத்தின் தன்மை | 2001 பதிவு | 2001 கண்டு பிடிப்பு | 2002 பதிவு | 2002 கண்டு பிடிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | ஆதாயக் கொலை | 80 | 56 | 75 | 57 |
| 2 | கூட்டுக் கொள்ளை | 158 | 100 | 178 | 144 |
| 3 | வழிப்பறி | 669 | 451 | 650 | 478 |
| 4 | கன்னக்களவு | 5926 | 3181 | 5532 | 2932 |
| 5 | திருட்டு | 16645 | 12862 | 18614 | 15386 |
| | மொத்தம் | 23478 | 16650 | 25049 | 18997 |
| | கண்டுபிடிக்கப்பட்டவை | 71 விழுக்காடு | | 76 விழுக்காடு | |
| | களவுபோன சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 42.68 | | 44.14 | |
| | மீட்கப்பட்ட சொத்துக்கள் (ரூபாய் கோடிகளில்) | 26.43 | | 30.07 | |
| | மீட்கப்பட்டவை | 62 விழுக்காடு | | 68.14 விழுக்காடு | |

### பெண்களுக்கு எதிரான குற்றங்கள்

2001 மற்றும் 2002 ஆண்டுகளில், தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டதாலும், பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் குறித்த சிறப்புச் சட்டங்களை அமல்படுத்தியதாலும், பெண்களுக்கு எதிரான வழக்குகளைக் கண்டுபிடிப்பதில் சிறந்த முன்னேற்றம் காணப்படுகிறது. குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான உதவி வழங்கும் சிறப்புத் தொலைபேசி இணைப்புக்கள், நடமாடும் ஆலோசனை மையங்கள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் பற்றிய

[2003 ஏப்ரல் 8

விழிப்புணர்வு ஆகியவற்றால் இதுவரை வெளியே சொல்லவும் தயங்கிய, பெண்ணுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளின் பதிவு எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது ஒரு நல்ல அறிகுறி என்றே கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட பெண்கள் சுதந்திரமாக வந்து புகார்களை அளித்ததால் 2002 ஆம் ஆண்டில் 6,077 வழக்குகள் பதிவாகி, 23 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆயினும் பெருமளவில் நீதிமன்ற நிலுவையில் உள்ள வழக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அதில் 6,797 வழக்குகளில் 3,715 வழக்குகள் தண்டனையில் முடிவுற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது முடிவான வழக்குகளில் 55 சதவீதம் தண்டனை பெற்றுத் தரப்பட்டுள்ளது.

***2001 மற்றும் 2002 ஆண்டுகளில் நடைபெற்ற பெண்களுக்கு எதிரான குற்றங்கள்***

| வ. எண் | தலைப்பு | 2001 | 2002 |
|---|---|---|---|
| 1. | கற்பழிப்பு (முயற்சிகளையும் சேர்த்து) | 462 | 512 |
| 2. | ஆட்கடத்தல் | 664 | 720 |
| 3. | வரதட்சணை மரணங்கள் | 179 | 247 |
| 4. | கணவன் மற்றும் உறவினர்களால் கொடுமை | 851 | 966 |
| 5. | மானபங்கம் | 1771 | 1866 |
| 6. | பாலியல் பலாத்காரம் | 1012 | 1766 |
| | மொத்தம் | 4939 | 6077 |

**நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க சில தண்டனைகள்**

1. 18-5-1988 அன்று அதிகாலை 4-30 மணிக்கு ஊட்டி அரசினர் பூங்காவில் குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்தது. அந்த நேரத்தில் ஊட்டியில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தங்கியிருந்தார். இது



2003 ஏப்ரல் 8]

சம்பந்தமாக பி.1 ஊட்டி கிழக்கு காவல்நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் (சி.பி.சி.ஐ.டி) மேல் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டது. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வு அலுவலர்கள் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகள் விளைவாக இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகளான (1) பொழிலன், த/பெ. பெருஞ்சித்தரனார், (2) முகிலன் மற்றும் 9 நபர்கள் கைது செய்யப்பட்டனர். 8-2-2002 அன்று அனைத்து குற்றவாளிகளுக்கும் 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், ஒவ்வொருவருக்கும் தலா ரூ.5,000/- அபராதமும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. இவ்வழக்கில் தண்டனை பெற்றோர் தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனு, கோவை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2. 1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் தி.மு.க. வினர் இந்திய அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டதால், ஆர்.1 மாம்பலம் காவல் நிலைய குற்ற எண் 2461/86 பிரிவு 120-பி, 148, 109 இ.த.ச. மற்றும் வெடிபொருள் சட்டப் பிரிவு 4(ஏ)(பி), 5,6, மற்றும் இந்திய ரயில்வே சட்டம், 1890 பிரிவு 126,126 (A)-இன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. தி.மு.க.வினரைக் கைது செய்ததற்கு கண்டனம் தெரிவித்து, இக்கட்சியைச் சேர்ந்த தொண்டர்கள் சிலர் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர். இது சம்பந்தமாகக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் 5-2-2002 அன்று வழக்குகள் பதிவு செய்தனர். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மூன்று பேருக்கு தலா 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், அபராதம் ரூ.20,000/-ம் விதிக்கப்பட்டது.

**குறிப்பிடத்தக்க குற்ற விசாரணைகள்**

(அ) 7-3-2002 அன்று சுமை ஊர்தியில் (Lorry) வந்த சுமார் 21 நபர்கள் கொண்ட கும்பல் ஒன்று அம்பலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வாணியம்பாடி அருகில் தெக்குபட்டு கிராமத்தில் உள்ள வனத் துறையினரின் சந்தன மரக் கிடங்கினுள் அத்துமீறி நுழைந்தனர். வனக்காவலரையும், காவல் துறையினரையும் உள்ளே வைத்து பூட்டி சந்தன மரக் கிடங்கில் 20 டின்களில் வைக்கப்பட்டிருந்த 500 கிலோகிராம் எடை கொண்ட சந்தன எண்ணையைக் கொள்ளையடித்துச் சென்றனர். இதுசம்பந்தமாக காவல் துறைத் தலைவர் (சட்டம்-ஒழுங்கு), சென்னை, அவர்கள் தலைமையில்

தனிப் படை அமைக்கப்பட்டு, 8-3-2002 அன்று மாலையே இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, 19 டின்களில் இருந்து 475 கிலோகிராம் எடை கொண்ட சந்தன எண்ணையைக் கைப்பற்றினர். இக்கொள்ளையில் சம்பந்தப்பட்ட 19 எதிரிகளில் 14 பேர் கைது செய்யப்பட்டனர். மற்றொரு எதிரி நீதிமன்றத்தில் சரணடைந்தார்.

களவாடப்பட்ட சந்தன எண்ணையின் மொத்த மதிப்பு சுமார் ரூ.84 லட்சமாகும். மீட்கப்பட்ட சந்தன எண்ணையின் மதிப்பு சுமார் ரூ.80 லட்சமாகும். 15-6-2002 அன்று இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

(ஆ) 29-11-2002 அன்று இரவு கொடுங்கையூரில் வாகன பரிசோதனையின்போது ஜகாரியா மற்றும் தௌஃபிக் ஆகியோரிடமிருந்து வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டு அவர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையில் அவர்கள் முஸ்லீம் தீவிரவாத அமைப்பான முஸ்லீம் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்கள் எனவும், தமிழ்நாட்டில் சதிச் செயல்களில் ஈடுபட அவர்கள் திட்டமிட்டிருந்தனர் எனவும் தெரிய வந்தது. சுமார் 20 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டதால், எவ்வித நாசவேலையும் நடைபெறாமல் தவிர்க்கப்பட்டது.

(இ) பெசன்ட் நகரில் உள்ள பாரத ஸ்டேட் வங்கி காசாளர் விசுவநாதன் கொலை செய்யப்பட்டு, பணம் களவாடப்பட்ட வழக்கில், தமிழக மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதி ராஜாராமின் கூட்டாளிகளான வஜ்ரவேலு (எ) தாடி வேலு, ரவிச்சந்திரன், எஸ்.கே.வேலு (எ) வேலு பிரபாகரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

(ஈ) ஜப்பான் லைப் இந்தியா என்ற பெயரில் காந்த படுக்கைகள் விற்பனையில் ஈடுபட்டு, பல நிலை விற்பனை என்ற போர்வையில் பண மோசடியில் ஈடுபட்ட 82 நபர்கள், 20-1-2003 அன்று கைது செய்யப்பட்டனர்.





# அத்தியாயம் - 4

## காவல் துறையில் உள்ள சிறப்புப் பிரிவுகள்

### 1. தமிழ்நாடு அதிரடிப்படை

தமிழ்நாடு அதிரடிப் படை மற்றும் அதிரடிப் படை பள்ளி 1997 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்கும் இப்படையில் 300 அலுவலர்கள் பணிபுரிகின்றனர். தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்துவதே இப்படையின் முக்கிய நோக்கமாகும். அவசர நேரத்தில் உபயோகப்படுத்தப்படுவதற்காக இவர்கள் தயார் நிலையில் வைக்கப்படுகின்றனர். மேலும், அதிமுக்கிய நபர்கள் வருகை, அவர்களுக்குப் பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், கொடுங்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை நீதிமன்றம் மற்றும் சிறைக்கு காவலுடன் கொண்டு செல்லுதல் மற்றும் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணி ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு அதிரடிப் படையினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

### 2. அதிரடிப் படைப் பள்ளி

அதிரடிப் படைப் பள்ளி காவல் கண்காணிப்பாளர் தலைமையின் கீழ் 124 பணியாளர்களைக் கொண்டுள்ளது. இப்பள்ளி கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது:

(1) அதிரடிப் படை பயிற்சிப் பள்ளி

(2) வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் செயலிழப்புக் குழு

(3) மோப்ப நாய் படை

தமிழ்நாடு அதிரடிப் படை பள்ளி, என்னுடைய அறிவுறுத்தலின்படி, பயங்கரவாதத்தை முறியடிக்கும் அதிரடிப் படைப் பயிற்சியினை ஏழு வார கால அளவில் நடத்தியது. மொத்தம் 2340 காவல் பணியாளர்கள் ஒன்பது குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர். மேற்கண்ட பயிற்சி 6-7-2001 அன்று ஆரம்பிக்கப்பட்டு 4-1-2003 அன்று முடிவுற்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 அதிரடிப் படைப் பயிற்சி பெற்ற காவல் பணியாளர்கள் இருப்பில் உள்ளனர்.

[2003 ஏப்ரல் 8

என்னுடைய வழிகாட்டுதலின்பேரில், அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்த 1,500 காவலர்கள், ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, 12 வார கால அதிரடிப் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டனர். முதல் குழுவில் 304 ஆண் காவலர்கள் 6-1-2003 முதல் பயிற்சியில் உள்ளனர். பயிற்சியின் ஓர் அங்கமாக, அவர்கள் சிறப்பு அதிரடிப் படையில் பணியமர்த்தப்பட்டு, மார்ச் மாதத்தில் பத்து நாட்கள் சத்தியமங்கலம் வனப் பகுதியில் நடைபெற்ற தேடுதல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

### 3. பெண் காவல் பணியாளர்களுக்கான அதிரடிப் படை

இந்தியாவிலேயே முதன் முறையாக பெண்கள் அதிரடிப் படைப் பயிற்சி, என்னுடைய வழிகாட்டுதலின்படி, 4-10-2002 அன்று துவக்கப்பட்டு, 21 பெண் காவலர்கள் 4-1-2003 அன்று பயிற்சியை முடித்துள்ளனர்.

மேலும், எனது அறிவுரையின்பேரில், இந்தியாவிலேயே முதன்முதலாக பெண்கள் அதிரடிப் படை நிறுமத்தை (Company) உருவாக்குவதற்காக 130 பெண் காவலர்கள், 27-1-2003 முதல் 12 வார கால அதிரடிப் படை பயிற்சி பெற்று வருகின்றனர். அவர்கள் தற்போது பயிற்சியின் ஏழாவது வாரத்தில் உள்ளனர். அவர்களுக்கு, குதிரை சவாரி, படகு ஓட்டுதல், மணலில் ஓடுதல், பாரா மிதத்தல் (Para Sailing), கயிற்றில் சரிந்து இறங்கும் பயிற்சி, ஓட்டப் பயிற்சி, நீச்சல் பயிற்சி, வாகனம் ஓட்டும் பயிற்சி, ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி, தானியங்கி ஆயுதங்களைக் கொண்டு சுடும் பயிற்சி, 20 கிலோ மீட்டர் தூரம் வரை ஓடும் பயிற்சி, யோகாசனம், ஆழ்நிலை தியானம், ஆயுதமில்லா போர் புரியும் பயிற்சி ஆகியன அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலேயே முதன்முறையாக, தீவிர பயிற்சி அளிக்கப்பட்டு 21 பெண் காவலர்கள் அடங்கிய பெண்கள் அதிரடிப் படைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும், 130 பெண் காவலர்கள் அதிரடிப் படை நடவடிக்கைகளுக்கான பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 4. வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தல் மற்றும் செயலிழக்கச் செய்தல் பிரிவு

வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து, அவற்றைச் செயலிழக்கச் செய்யும் இப்பிரிவானது 1991 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப்பிரிவு, முன்னாள் ராணுவத்தினர், முன்னாள் துணை ராணுவத்தினர் ஆகியோரைக் கொண்ட அனைத்து வசதிகளையும் உடைய ஒரு சிறந்த பிரிவாகும். விழா நடைபெறும் இடங்கள், அதிமுக்கிய நபர்கள் தங்குமிடங்கள், விமான நிலையங்கள், தலைமைச் செயலகம், அரசின் முக்கிய நிலைகள், பூந்தமல்லி கிளைச் சிறை ஆகியவற்றில், சதிச் செயல் தடுப்புப் பணியை செய்கின்றனர். அவர்கள் மாநிலம் முழுவதும் எந்த இடத்திலிருந்தும் வெடிகுண்டு மிரட்டல்கள் வந்தாலும், உடனடியாக அங்கு சென்று அவற்றைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பணிகளை மேற்கொள்கின்றனர். நம் மாநிலத்தினைச் சேர்ந்த இக்குழுவினரே, நாடு முழுமைக்கும் முன்னோடியாகத் திகழ்கின்றனர். 2002-2003 ஆம் ஆண்டில் 355 பணியாளர்கள் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் பயிற்சி பெற்றுள்ளனர். இதுவரையில், 3,025 காவல் பணியாளர்கள் 6 வார காலப் பயிற்சி பெற்றுள்ளனர். மேற்கண்ட குழு, சிறைத் துறை, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், சுங்க மற்றும் கலால் துறை, போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, ரயில்வே பாதுகாப்புப் படை, ரிசர்வ் வங்கி மற்றும் குஜராத், மகாராஷ்டிரா, கேரளா, கோவா மற்றும் யூனியன் பிரதேசங்களான அந்தமான் நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. இக்குழுவானது, அந்தமான் நிக்கோபார் மற்றும் பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு அதிமுக்கிய நபர்கள் வருகையின்போது சதிச் செயல் தடுப்பு பணிகளுக்காக அழைக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்களின் போது ஏராளமான வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்து இக்குழுவினர் நற்பணியாற்றியுள்ளனர். இவ்வாண்டு ஒரு சிறப்புக் குழு சத்தியமங்கலத்தில், வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக சந்தேகிக்கக்கூடிய இடங்களில் குண்டுகளைக் கண்டுபிடிக்க அனுப்பப்பட்டது. தமிழ்நாடு அதிரடிப் படை பயிற்சிப் பள்ளியின் வெடிகுண்டு நிபுணர் குழு ஒன்று, சிறப்பு அதிரடிப் படையில் நிரந்தரமாகப் பணியமர்த்தப்பட்டுள்ளது. இத்துறையினர் 2002-2003 ஆம் ஆண்டில், 1,020 சதிச் செயல்களைத் தடுக்கும் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றினர்.



2003 ஏப்ரல் 8]

### 5. மோப்ப நாய் படை

குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும், புலனாய்வு செய்வதிலும் மோப்ப நாய் படைக்கு முக்கிய பங்கு உண்டு. தமிழ்நாட்டில் 29 மாவட்டங்களிலும், 6 ஆணையரகங்களிலும், தமிழ்நாடு

அதிரடிப் படைப் பயிற்சிப் பள்ளி, போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு, ரயில்வே காவல் படை மற்றும் சிறப்பு அதிரடிப் படை உள்ளிட்ட 4 சிறப்புப் பிரிவுகளிலும், ஆக மொத்தம் 39 மோப்ப நாய் படைகள் உள்ளன. அப்படைகளில் 130 மோப்ப நாய்கள் உள்ளன. இவற்றில் 107 மோப்ப நாய்கள் நல்லமுறையில் பயிற்சியை முடித்து, பணியில் உள்ளன. மேலும், எல்லை பாதுகாப்புப் படையிலுள்ள ஒரு மோப்ப நாய் உட்பட 23 மோப்ப நாய்கள் பயிற்சியிலுள்ளன.

இப்படையில் ஒப்பளிக்கப்பட்ட மோப்ப நாய்களின் எண்ணிக்கை 173 ஆகும். இவற்றில் 107 மோப்ப நாய்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. 23 மோப்ப நாய்கள் பயிற்சியில் உள்ளன. 12 மோப்ப நாய் குட்டிகள் சமீபத்தில் வாங்கப்பட்டுள்ளன. 32 மோப்ப நாய் குட்டிகள் வாங்கப்பட உள்ளன. அவற்றில், 4 மோப்ப நாய் குட்டிகள் தமிழ்நாடு அதிரடிப் படையின் மீட்புப் பணிகளுக்காக பயிற்சி அளிக்கப்பட உள்ளன.

இன்றைய நிலவரப்படி, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க 77 நாய்களும், வெடிமருந்துகளைக் கண்டுபிடிக்க 44 மோப்ப நாய்களும் மற்றும் போதைப் பொருட்களைக் கண்டுபிடிக்க 8 மோப்ப நாய்களும் உள்ளன. பயிற்சியளிக்கப்பட்ட மோப்ப நாய்கள், மாவட்டங்களுக்கும், சில சிறப்புப் பிரிவுகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 6. குதிரைப் படை

சென்னை மாநகரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் குதிரைப் படைகள் உள்ளன. சென்னை மாநகரில் 21 குதிரைகளும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர் ஒவ்வொன்றிலும் 7 குதிரைகளும் உள்ளன.

திருவிழாக்களின்போது கூட்டத்ினரைக் கட்டுப்படுத்தவும், சட்டம் ஒழுங்கு பராமரிப்புப் பணியின்போதும், இதர துறைசார் விழாக்களின்போதும் இப்படையினர் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

## 7. மதுவிலக்கு அமல் பிரிவு

கள்ளச்சாராயம் காய்ச்சப்படுவதை அறவே ஒழிப்பதையும், பிற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு மதுபானம் கடத்தப்படுவதைத் தடுப்பதையும் முக்கிய நோக்கங்களாகக்கொண்டு இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. 13-6-2001 முதல் கூடுதல் காவல் துறை



இயக்குநர் ஒருவரின் தலைமையின் கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. அவருக்கு உதவியாக சென்னை தலைமையகத்தில் ஒரு காவல் கண்காணிப்பாளரும், சென்னை மாநகர், சேலம் மற்றும் மதுரை ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு காவல் கண்காணிப்பாளர் என 4 காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர். மாநிலம் முழுவதும் உள்ள 94 மதுவிலக்கு அமல் பிரிவு அலகுகள் ஒவ்வொன்றும், ஒரு ஆய்வாளரின் கீழ், காவல் நிலையமாக செயல்படுகின்றன. எல்லையோர மாவட்டங்களில் மதுவிலக்குக் குற்றங்களைத் தடுக்க இப்பிரிவினருக்கு உதவியாக நடமாடும் குழுவினரும், உள்ளூர் காவல் துறையினரும் பணியாற்றுகின்றனர்.

2002 ஆம் ஆண்டில் 10,118 கள்ளச்சாராயம் காய்ச்சிய வழக்குகள், 26,610 சாராய ஊறல்களை வைத்திருந்ததற்கான வழக்குகள் உட்பட மொத்தம் 2,96,429 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2002 ஆம் ஆண்டில், 66,627 பெண்கள் உள்பட 2,70,767 நபர்கள் கைது செய்யப்பட்டனர். இவ்வாண்டில் 1,237 நபர்கள் கள்ளச் சாராய குற்றத் தடுப்புச் சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டனர். 2002 ஆம் ஆண்டில், ரூ. 2.47 கோடி அபராதத் தொகையாகவும், ரூ. 6.66 கோடி நீதிமன்ற அபராதத் தொகையாகவும் வசூலிக்கப்பட்டது.

## 8. விபச்சாரத் தடுப்புப் பிரிவு

சென்னை மாநகரில், ஒரு உதவி ஆணையரின் கீழ் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு ஒரு காவல் நிலையமாக அறிவிக்கப்பட்டது. பெண் காவலர்களும் இப்பிரிவில் பணியாற்றி வருகின்றனர். 1956 ஆம் ஆண்டு விபச்சாரத் தொழில் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளை தீவிரமாக நடைமுறைப்படுத்துவதும், விபச்சாரத் தொழிலை தடுக்கும் வகையில், பெண்களை இத்தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் வாங்குதல் ஆகியவற்றிற்கு காரணமானவர்களையும், விபச்சார விடுதிகளை நடத்தும் அமைப்பாளர்களை அடையாளம் காண்பதும், இத்தகைய சமூக அநீதிகளை களைவதும் விபச்சாரத் தடுப்புப் பிரிவின் முக்கிய குறிக்கோளாகும்.

## 9. ஊர்க்காவல் படை

தமிழ்நாடு ஊர்க்காவல் படையானது, 1963 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊர்க்காவல் படைச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட ஒரு தன்னார்வத் தொண்டு அமைப்பு ஆகும். காவல் துறை தலைமை

[2003 ஏப்ரல் 8

இயக்குநர் அவர்கள் தமிழ்நாடு ஊர்க்காவல் படைக்கு அலுவல் சாரா தலைமைத் தளவாயாக பொறுப்பு வகிக்கிறார். மாவட்டங்களிலுள்ள காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி மாநகர ஆணையர்கள் தத்தமது பகுதிகளில் ஊர்க்காவல் படைக்கு தளவாய்களாக உள்ளனர்.

28-2-2003 அன்றுள்ள நிலவரப்படி இப்பிரிவில் 2750 பெண் பணியாளர்கள் உட்பட மொத்தம் 11,622 நபர்கள் உள்ளனர்.

ஊர்க்காவல் படையினர் ஒன்றரை மாதப் பயிற்சிக்குப் பின்னர் பணிக்கு அனுப்பப்படுகின்றனர். உடற்பயிற்சி, ஆயுதமில்லா கவாத்து, தீயணைப்பு பயிற்சி, துப்பாக்கி (Musket) பயிற்சி, முதலுதவி அளிப்பது, மீட்புப் பணி ஆகியவற்றில் ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

காவல் துறையினருக்கு உதவியாகப் போக்குவரத்து பராமரிப்புப் பணி, இரவு சுற்றுக் காவல் பணி, கோயில் திருவிழா பாதுகாப்புப் பணி, இயற்கைச் சீற்றங்களின்போது மீட்புப் பணி மற்றும் தீயணைப்பு, செவிலியம், முதலுதவி ஆகிய சேவைப் பணிகளையும் தமிழ்நாடு ஊர்க்காவல் படையினர் செய்து வருகின்றனர்.

சென்னை மாநகரில், காவல் துறையினர் இரவு சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடும்போது, ஊர்க்காவல் படையினர் அவர்களுக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகின்றனர். இது குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், குற்ற நிகழ்வுகளைப் பெருமளவில் கட்டுப்படுத்தவும் வழிகோலுகிறது.

500 ஊர்க்காவல் படையினரை காவல் துறையினரோடு இரவு சுற்றுக் காவல் பணிகளில் ஈடுபடுத்துமாறு அரசு உத்தரவிட்டது. இந்த புதிய வழிமுறையில் சென்னை நகரில் குற்ற நிகழ்வுகள் குறைந்துள்ளன.

**10. காவல் சுருக்கெழுத்துப் பிரிவு**

காவல் சுருக்கெழுத்துப் பிரிவின் தலைமையகம் சென்னையிலும், அதன் அலகுகள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளன. இப்பிரிவு பொதுக்கூட்டங்களில் பேசப்படும் பேச்சுக்களை குறிப்பெடுப்பதற்காகவும், அரசியல் கட்சிகள் மற்றும் சாதி அமைப்புகள்



2003 ஏப்ரல் 8]

நடத்தும் பொதுக்கூட்டங்களில் பேசப்படும் ஆட்சேபத்திற்குரிய மற்றும் வன்முறைக்கு இடம் அளிக்கும் பேச்சுக்களை கண்காணிப்பதற்காகவும் அமைக்கப்பட்டது. இப்பிரிவில் ஒரு தலைமை அறிக்கையாளரும், 36 முதுநிலை அறிக்கையாளர்களும், 55 இளநிலை அறிக்கையாளர்களும் பணியாற்றுகின்றனர். 2002 ஆம் ஆண்டில் இப்பிரிவினர் 10,645 நிகழ்ச்சிகளில் குறிப்பெடுக்கும் பணியில் ஈடுபட்டனர்.

சுருக்கெழுத்தாளர்கள் குழுவைச் சார்ந்த நிருபர்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், பொதுக்கூட்டங்கள் போன்ற நிகழ்வுகள் பற்றி, திறம்பட தகவல் சேகரிப்பதற்கு வசதியாக, வீடியோ கேமராக்கள் மற்றும் அதைச் சார்ந்த பிற கருவிகளை, அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் வழங்குவதற்கு ரூ. 7.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கருவிகளை வழங்கும் பணி தொடங்கிவிட்டது. விரைவில் இந்தப் பணி நிறைவடையும்.

**11. வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு**

17-02-1995 ஆம் நாளிட்ட உள் (சினிமா-2) துறையின் அரசாணை (3டி) எண். 16-ன்படி உருவாக்கப்பட்ட வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு, தற்போது காவல் கூடுதல் இயக்குநர் (குற்றப் பிரிவு) கட்டுப்பாட்டில், காவல் கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகிறது. இது காப்புரிமைச் சட்டம்/தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-இன் கீழான சட்ட மீறல்களை கண்காணிப்பதோடு, வீடியோ திருட்டு சம்பந்தப்பட்ட குற்றங்களின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

2002 ஆம் ஆண்டில், வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு 650 வழக்குகளை பதிவு செய்துள்ளது. ரூ. 2.56 கோடி மதிப்புள்ள பொருட்களை இவர்கள் பறிமுதல் செய்துள்ளனர். 89 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

**12. பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவு (நிதி நிறுவனங்கள்)**

பொருளாதாரக் குற்ற தடுப்புப் பிரிவு (நிதி நிறுவனங்கள்), வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் பதிவுச் செய்யப்படாத நிதி நிறுவனங்கள் புரிந்த குற்றங்கள் மற்றும் சட்ட மீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன் விசாரணை செய்து வருகிறது. அரசாணை (நிலை) எண் 1697 உள் துறை (நீதிமன்றம்-2அ), நாள் 24-12-1999-இன்படி துவக்கப்பட்ட இப்பிரிவு, தலைமையிடத்தில்

[2003 ஏப்ரல் 8

ஒரு அலகும் மாவட்டங்களில் ஒவ்வொரு அலகும் கொண்டு 1-1-2000 முதல் செயல்படத் தொடங்கியுள்ளது.

இப்பிரிவிற்கு அனுபவம் வாய்ந்த பட்டயக் கணக்கர்கள், சட்ட வல்லுநர்கள் மற்றும் கணினி வல்லுனர்கள் உதவியாக உள்ளனர். இப்பிரிவில் உள்ள அதிகாரிகளுக்கு இந்திய ரிசர்வ் வங்கி, மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறை (காஸியாபாத்) மற்றும் ஹைதராபாத்திலுள்ள தேசிய காவல் கழகம் ஆகிய இடங்களில், வங்கிசாரா நிதி நிறுவனங்களின் சட்டமீறில் மற்றும் முறைகேடுகள் குறித்த வழக்குகளை விசாரணை செய்வதற்கென பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

2002 ஆம் ஆண்டில், 219 வழக்குகள் புலன் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. ரூ.155.16 கோடி மதிப்புடைய இவ்வழக்குகளில் 74,412 பண முதலீட்டாளர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். அவற்றில் ரூ.72.87 கோடி தொகையானது முதலீட்டாளர்களுக்கு திருப்பி அளிக்கப்பட்டது. வழக்குகள் தவிர, சீரிய முறையில் மனுக்களை விசாரணை செய்ததன் மூலம் 2,030 மனுதாரர்களுக்கு ரூ.5.32 கோடி திரும்ப கிடைக்க வழி வகை செய்யப்பட்டது.

இவ்வாண்டின் முதல் இரண்டு மாதங்களில், முதலீட்டாளர்களுக்கு திருப்பி அளிப்பதற்காக, மோசடி செய்த நபர்களிடமிருந்து ரூபாய் 4,33,54,875 கைப்பற்றப்பட்டுள்ளது. இதுவரையில், 138 வழக்குகளில், மோசடி செய்த தொகைக்கு ஈடாக மோசடியாளர்களின் சொத்துக்களை கையகப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. முதலீட்டாளர்கள் சங்கத்துடன் அவ்வப்போது கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. நீதித் துறை நடுவர் மன்றங்களில் ஐந்து வழக்குகளும் சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் 14 வழக்குகளும் தண்டனையில் முடிவடைந்துள்ளன.

## 13. கூட்டுக்கொள்ளைத் தடுப்புப் பிரிவு

30-05-1995 ஆம் நாளிட்ட உள்(காவல்-12) துறையின் அரசாணை (நிலை)எண்.805-ன்படி, கூட்டுக்கொள்ளைத் தடுப்புப் பிரிவு அமைக்கப்பட்டது. கூடுதல் காவல் துறை இயக்குநர் (குற்றப் பிரிவு) மேற்பார்வையில், காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் இப்பிரிவு இயங்கி வருகிறது. கூட்டுக்கொள்ளை வழக்குகளில் தகவல்களை



2003 ஏப்ரல் 8]

சேகரிப்பதுடன் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரிலும், அரசு மற்றும் காவல் துறை தலைமை இயக்குநர் ஆணையிடும் குறிப்பிட்ட சில வழக்குகளையும் புலன் விசாரணை செய்து வருகிறது.

கூடுவாஞ்சேரி காவல் நிலைய குற்ற எண்.22/2000 சம்பந்தப்பட்ட ஒரு தோல் தொழிற்சாலையில் நடைபெற்ற கூட்டுக் கொள்ளை வழக்கு உயர்நீதி மன்ற ஆணையின்படி மறு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 2002-ஆம் ஆண்டில் 5 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு இவ்வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. 2002 ஆம் ஆண்டில், 8 சரக்குப் பெட்டகத் திருட்டு வழக்குகளை புலன் விசாரணைக்கு இப்பிரிவு எடுத்துக்கொண்டது. அதில் 6 வழக்குகளில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2 வழக்குகளில் புலன் விசாரணை நடைபெற்று வருகின்றது.

## 14. கடலோரப் பாதுகாப்புக் குழு

தமிழ்நாடு கடலோரப் பகுதிகளிலிருந்து கடல் வழியாக இலங்கைக்கு எரிபொருட்கள், மருந்துப் பொருட்கள், போதைப் பொருட்கள், துப்பாக்கிகள், வெடிமருந்துகள் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்காகவும், போராளிகள் தமிழகத்திற்குள் ஊடுருவுவதை தடுப்பதற்காகவும், மீனவர்கள், போராளிகள், கடத்தல்காரர்கள் ஆகியோர் கூடி ரகசிய திட்டமிடுவதைத் தடுப்பதற்காகவும் 27-06-1994 ஆம் நாளிட்ட உள் (காவல்-15) துறையின் அரசாணை (நிலை) எண்.718-இன்படி, கடலோரப் பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. கடலோரக் காவல் படை 60 கடலோர சோதனைச் சாவடிகளில் பணியாற்றுவதுடன், தமிழ்நாட்டிலுள்ள 1000 கி.மீ. கடலோரப் பகுதிகளில் சுழற்சி முறையில் சுற்றுக்காவல் பணியினை மேற்கொண்டு வருகிறது. 441 கடலோர கிராமங்களைக் கொண்ட தமிழகத்தின் நீண்ட கடற்கரைப் பகுதி சென்னையை தலைமையிடமாகக் கொண்டு, சென்னை, நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஆறு மண்டலங்களாக செயல்படுகின்றன.

கடலோர மாவட்டங்களில், மாநில அளவில் பதிவு செய்யப்பட்ட படகுகள், அடையாள அட்டை வழங்கப்பட்ட மீனவர்கள் மற்றும் கடத்தல்காரர்கள் ஆகியோர் பட்டியல்களை கடலோரப் பாதுகாப்புப்

படை கணினிமயமாக்கி வருகிறது. இத்தகவல்கள் எதிர்காலத்தில் கடலோர மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கிராம விழிப்பு குழுக் கூட்டங்கள் கடலோர கிராமங்களில் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

2002 ஆம் ஆண்டில் கடலோரக் காவல் படை 2561 லிட்டர் டீசல் மற்றும் மண்ணெண்ணெய், 580 ஜெலட்டின் குச்சிகள், ஒரு புதிய யமகா மோட்டார் சைக்கிள், ஒரு மினி லாரி மற்றும் 5 கிலோ கஞ்சா ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளது. சரியான பயண சான்றிதழ்களை வைத்திராத இலங்கை நாட்டைச் சார்ந்த நால்வர் கைது செய்யப்பட்டனர்.

### 15. மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி

குடியுரிமை பாதுகாப்புப் பிரிவு, குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், 1955 மற்றும் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம், 1989 ஆகியவற்றை அமல்படுத்துகிறது.

மேற்கண்ட பணிகளுடன் வன்கொடுமை நடைபெறும் பகுதிகளில் பொருளாதார, சமூக ரீதியிலான கணக்கெடுப்புகளை நடத்துகிறது. இப்பணியை இந்திய அரசு பாராட்டி உள்ளது.

காவல் துறையினர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கெதிரான வன்கொடுமைகளுக்கு எதிராக வழக்குகளை பதிவு செய்கின்றனர். பின்வரும் தலைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தலைமையகம் ஆய்வு செய்து வருகிறது.

(1) கொலை

(2) கற்பழிப்பு

(3) தீ வைப்பு

(4) தாழ்த்தப்பட்ட, பழங்குடியின பெண்களை மானபங்கப்படுத்துவது





**கடந்த மூன்று ஆண்டுகளில் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், 1955-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் வருமாறு:-**

| ஆண்டு | வழக்குகள் | தாக்கலானவை | நீதிமன்ற நிலுவை | விசாரணையில் உள்ளவை | தண்டனை வழங்கப் பட்டவை | விடுதலையானவை |
|---|---|---|---|---|---|---|
| 2000 | 38 | 9 (23.7 சதவீதம்) | 9 | .. | 5 (13 சதவீதம்) | 15 (39.4 சதவீதம்) |
| 2001 | 11 | 8 (72.7 சதவீதம்) | 3 | .. | .. | .. |
| 2002 | 2 | 1 (50 சதவீதம்) | 1 | .. | .. | .. |

**1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் கீழ், கடந்த மூன்றாண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் பின்வருமாறு:—**

| ஆண்டு | வழக்குகள் | தாக்கலானவை | நீதிமன்ற நிலுவை | விசாரணையில் உள்ளவை | தண்டனை வழங்கப்பட்டவை | விடுதலையானவை |
|---|---|---|---|---|---|---|
| 2000 | 996 | 297 (29.8 சதவீதம்) | 369 | .. | 20 (2 சதவீதம்) | 310 (31.1 சதவீதம்) |
| 2001 | 828 | 313 (37.8 சதவீதம்) | 383 | 1 | 9 (1 சதவீதம்) | 122 (14.7 சதவீதம்) |
| 2002 | 917 | 361 (39.4 சதவீதம்) | 477 | 61 | 2 (0.2 சதவீதம்) | 16 (1.6 சதவீதம்) |

மாவட்டங்களிலுள்ள குடியுரிமை பாதுகாப்புப் பிரிவுகள், இரண்டு ஆவளை பயன்படுத்தும் முறையினை தொடர்ந்து கண்காணித்து சோதனைகளும் நடத்துகின்றனர். கடந்த மூன்றாண்டுகளில் இக்குற்றத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | வழக்குகள் | தாக்கலானவை | நீதிமன்ற நிலுவை | விசாரணையில் உள்ளவை | தண்டனை வழங்கப்பட்டவை | விடுதலையானவை |
|---|---|---|---|---|---|---|
| 2000 | 24 | .. | 2 | .. | 5 | 17 |
| 2001 | .. | .. | .. | .. | .. | .. |
| 2002 | 1 | .. | 1 | .. | .. | .. |

குடியுரிமை பாதுகாப்புப் பிரிவுகள், கொடுஞ்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1989 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் பிரிவு 12(1)-ன்படி, நிவாரணம் வழங்கப்படுவதையும் கண்காணிக்கின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் நிதி நிவாரணம் கிடைக்கப்பெற்றவர்களின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | ஆண்டு | வழக்குகள் | பாதிக்கப்பட்டோர் | தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|
| 1. | 2000 | 652 | 1297 | 1.85 |
| 2. | 2001 | 563 | 930 | 1.40 |
| 3. | 2002 | 775 | 1331 | 1.64 |

இப்பிரிவு, கணக்கெடுப்பு மற்றும் தகவல் சேகரிப்பு அடிப்படையில் கீழ்க்கண்ட கொடுமைகளுக்கு முடிவுகட்ட முனைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது:—

1. கோவிலுக்குள் சென்று வழிபடுதலை தடுத்தல்
2. கல்வி நிறுவனங்களில் அனுமதி மறுத்தல்
3. இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடத்தவிடாமல் தடுத்தல்





இப்பிரிவு எடுத்த முயற்சியினால் விழுப்புரம் மாவட்டம், வீரபயங்கரம் கிராமத்தில் பல்லாண்டுகளாக இருந்து வந்த கோவிலுக்குள் சென்று வழிபடுவதில் ஏற்பட்ட பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக, ஆதிதிராவிடர்களுக்கு கோவிலுக்குள் சென்று வழிபட அனுமதி மறுக்கப்பட்ட நிலைமை மாறி தற்போது சுதந்திரமாக அவர்கள் கோவிலுக்குள் சென்று வழிபட அனுமதிக்கப்படுகின்றனர். இதேபோன்று, விழுப்புரம் மாவட்டம் பிரம்மகுண்டம் கிராமத்தில் சாதி இந்துக்களான பெற்றோர்கள் பள்ளியின் புதிய கட்டடத்தில் ஆதிதிராவிட மாணவர்களோடு தங்களுடைய பிள்ளைகளை உடன் அமர்ந்து படிக்க அனுமதிக்க மறுத்த பிரச்சினையையும் இப்பிரிவு தீர்த்து வைத்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் புலவன்பாடி, திருவாரூர் மாவட்டம் கிளிரியம் மற்றும் நாமக்கல் மாவட்டம் முஞ்சனூர் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் சுடுகாடு குறித்த பிரச்சினைகள் இப்பிரிவால் தீர்த்து வைக்கப்பட்டன.

## 16. சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு

சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு 07-10-1983 ஆம் நாளிட்ட உள் (காவல்-4) துறையின் அரசாணை எண்.2098-இன்படி 2-12-1983 முதல் தனித்து இயங்கத் துவங்கியது. ஐந்து இலட்ச ரூபாய்க்கும் மேல் மதிப்புள்ள வரலாற்று சிறப்பு வாய்ந்த கலைநுட்பத்துடன் கூடிய சிலை திருட்டு வழக்குகளில் புலன் விசாரணை செய்வதும், காவல் துறைத் தலைமை இயக்குநர் அவர்களால் அனுப்பி வைக்கப்படும் குறிப்பிட்ட சிலைத் திருட்டு வழக்கை புலன் விசாரணை செய்வதும், மாவட்ட காவல் துறையால் கையாளப்படும் முக்கியமான சிலைத் திருட்டு வழக்குகளின் புலன் விசாரணையில் ஒருங்கிணைந்து பணியாற்றுவதும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கலைப் பொருட்களை வைத்திருக்கும் மொத்த வியாபாரிகளின் சந்தேகத்திற்குறிய நடவடிக்கைகள் பற்றிய புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதும் இப்பிரிவின் முக்கியப் பணிகளாகும்.

2002-ஆம் ஆண்டில், 31 உலோக சிலைகள், 2 கற்சிலைகள், 4 கலை நுட்பம் வாய்ந்த ஓவியங்கள், 11 தேர்சிற்பங்கள், 3 நவபாஷாண சிலைகள் ஆகியவற்றை இப்பிரிவு மீட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டில் இரண்டு உலோகச் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

## 17. வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு (C.C.I.W.)

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் வரும் கூட்டுறவு சங்கங்களில் நடக்கும் நிதி மோசடிகளை விசாரிப்பதற்கென்று 1971 ஆம் ஆண்டு வணிகக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட்டது. பின்வரும் 12 துறை தலைவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவு நிறுவனங்கள் சம்பந்தமான நிதி மோசடி குற்றங்களையும் இப்பிரிவு விசாரிக்கின்றது.

(1) கைத்தறி மற்றும் ஜவுளித் துறை இயக்குநர்.

(2) சர்க்கரை ஆலை இயக்குநர்.

(3) காதி மற்றும் கிராமத் தொழில் துறை முதன்மை அதிகாரி.

(4) வீட்டு வசதித் துறை பதிவாளர்.

(5) மீன் வளத் துறை இயக்குநர்.

(6) தொழில் மற்றும் வர்த்தகத் துறை இயக்குநர்.

(7) கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்.

(8) பால் உற்பத்தி மற்றும் பால் பொருட்கள் மேம்பாட்டுத் துறை ஆணையர்.

(9) எண்ணெய் வித்துத் துறை இயக்குநர்.

(10) விவசாய பொறியியல் துறை இயக்குநர்.

(11) விவசாயம் மற்றும் பட்டு வளர்ப்புத் துறை இயக்குநர்.

(12) சமூக நலத் துறை இயக்குநர்.

8-12-1998 நாளிட்ட, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் நலன் பாதுகாப்புத் துறையின் அரசாணை எண் 260-இன்படி, ரூ.1 லட்சத்திற்கு அதிகமான நிதி மோசடி வழக்குகள் இப்பிரிவில் விசாரிக்கப்படும். இத்தகு வழக்குகளை விசாரிப்பதற்கென வேலூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோவை மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன.



தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளில் நிதி மோசடி செய்யப்பட்டது சம்பந்தமாக பின்வருமாறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன:—

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மொத்த வழக்குகள் | கூட்டுறவு சங்க பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ளவை | மற்ற கூட்டுறவு சங்கங்கள் | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|---|---|
| 2002 | 109 | 77 | 32 | 2.99 |

2002 ஆம் ஆண்டில் 112 வழக்குகளும், 2003-ல் (28-2-2003 வரை) 34 வழக்குகளும் தண்டனையில் முடிவடைந்துள்ளன.

## 18. போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு

போதைப் பொருள் தடுப்புச் சட்டங்களை அமல்படுத்துவதற்கென போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு தற்பொழுது ஒரு காவல் கண்காணிப்பாளரைத் தலைவராகக் கொண்டு இயங்கி வருகிறது. சென்னை, கோவை, திண்டுக்கல், மதுரை, நாகப்பட்டினம், ராமநாதபுரம், சேலம், தேனி, திருச்சி, தூத்துக்குடி, வேலூர் மற்றும் விழுப்புரம் என மாநிலத்தின் 12 இடங்களில் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவின் அலகுகள் உள்ளன. இரண்டு முதல் நான்கு மாவட்டங்களுக்கு ஒரு பிரிவு என ஒவ்வொரு பிரிவும் ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

2002 ஆம் ஆண்டில் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு 1307 வழக்குகளை கண்டுபிடித்து, 1271 குற்றவாளிகளை கைது செய்து, ரூ.25.6 கோடி பெறுமானமுள்ள பலதரப்பட்ட போதைப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளது. மொத்தம் 701 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன. இதையே தொழிலாகக் கொண்ட 7 குற்றவாளிகள் குண்டர் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் அடைக்கப்பட்டனர். 3828.2 கிலோ காய்ந்த கஞ்சா, 0.996 கிலோ ஹெராயின், 9415 போதை ஊசி மருந்து குப்பிகள், 4.6 கிலோ டயாசிபாம் மற்றும் 2449 குப்பிகளில் ஊசி மருந்துகள், 104 கிலோ பாப்பி வகை கஞ்சா செடிகள், 935 கிராம் ஒபியம், 350 அவில் ஊசி மருந்துகள், 510 கிராம் ஹசிஸ் மற்றும் 1,14,628 கிலோ பச்சை கஞ்சா ஆகியவை கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டன.

[2003 ஏப்ரல் 8

பொதுமக்களிடையே போதை மருந்து மற்றும் மனமயக்கப் பொருட்களை பயன்படுத்தக்கூடாது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அத்தகு பொருட்களின் சட்ட விரோத பரிவர்த்தனை குறித்தும் குற்றவாளிகள் மீது காவல் துறை எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்தும் பொதுமக்கள் அறியும் வண்ணம் 26-6-2002 அன்று சர்வதேச போதை மருந்து கடத்தல் தடுப்பு தினம் மாநில அளவில் அனுசரிக்கப்பட்டது.

## 19. குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை

1902 ஆம் ஆண்டின் காவல் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் 18-8-1906 அன்று சென்னையில் ராஜதானியில் குற்றப் புலனாய்வுத் துறை துவக்கப்பட்டது. தற்பொழுது குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் 8 தனிப் பிரிவுகளும், 33 உட்பிரிவுகளும் உள்ளன.

தற்பொழுது குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களின் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இப்பிரிவின் செயல்பாட்டுக்கு கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையிலுள்ள அதிகாரி பொறுப்பு வகித்து வருகிறார். 31-12-2002 முடிய குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையால் 612 வழக்குகள் புலன் விசாரணை செய்யப்பட்டு 463 வழக்குகள் நீதிமன்ற நிலுவையிலும், 149 வழக்குகள் புலன் விசாரணை கட்டத்திலும் உள்ளன. பிற அமைப்புகளிலிருந்து 131 வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 2002 ஆம் ஆண்டில் 39 வழக்குகள் தண்டனையில் முடிந்துள்ளன.

திட்டமிட்டு நிகழ்த்தப்படும் குற்றங்களைத் தடுக்கும் பிரிவுகள் 3-10-2002 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை எண்.940-ன்படி மதுரை, கோவை, திருச்சி, சென்னை, சேலம், திருநெல்வேலி ஆகிய ஆணையரகங்கள் செங்கை கிழக்கு மாவட்டத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளரின்கீழ் இயங்கி வருகின்றன.

தற்பொழுது நிலவும் குற்றங்களின் தன்மையைக் கருத்தில் கொண்டு இணையதள குற்றங்களைத் தடுக்க, குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் தலைமையகத்தில் ஒரு தனிப்பிரிவு-Cyber Crime Cell-3-10-2002 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை எண்.940-ன்படி அமைக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 8]

## 20. சிறப்பு அதிரடிப் படை

காட்டில் மறைந்து வாழும் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனை பிடிக்கும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதற்காக, 1993 ஆம் ஆண்டில் சிறப்பு அதிரடிப்படை அமைக்கப்பட்டது. விமானக் கடத்தல், முக்கியப் பிரமுகர்களை பிணைக் கைதிகளாக பிடித்து வைத்தல் ஆகியவற்றைத் தடுப்பது, ஆயுதம் தாங்கிய தீவிரவாதம், கலகம், தீவிரவாத நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்வது போன்ற கூடுதல் பொறுப்புகள் சேர்க்கப்பட்டு, சிறப்பு அதிரடிப் படையின் கடமைகளும் விரிவாக்கப்பட்டன. தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களின் அதிரடிப்படைகளும், ஒன்றுக்கொண்டு அடிக்கடி தொடர்பு கொண்டு வருவதோடு, காட்டில் மறைந்து வாழும் சந்தனக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்க கூட்டுச் செயல் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளன. வலிமையோடு விளங்கிய வீரப்பனின் கூட்டத்தை தமிழ்நாடு அதிரடிப்படை சிதறடித்து, அதை மிகச் சிறிய எண்ணிக்கைக்குக் கொண்டு வந்துவிட்டது. அதிரடிப்படையின் முனைப்பான நடவடிக்கைகளால் இப்போது அவர்களும் ஓரிடத்தில் நிலைத்து நிற்காதபடி ஓடிக்கொண்டு இருக்கிறார்கள்.

12-7-2002 அன்று நீலகிரி மாவட்டத்தில் மசினகுடி அருகே, வனவிலங்குகளை வேட்டையாடும் உப்புக்காரா ஜடையனின் மகன் பந்தன் என்பவனையும், அவனது கூட்டாளிகள் 12 பேரையும் சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்தனர். 22-12-2002 அன்று வீரப்பன் கும்பலின் முன்னாள் உறுப்பினரான பாலப்படுகை தொட்டியைச் சேர்ந்த மதனின் மகன் மாதையனை இப்படை கைது செய்தது. 2-1-2003 அன்று, மத்திய அரசு உள் துறையின் சிறப்பு செயலாளருடன், தமிழ்நாடு மற்றும் கர்நாடக சிறப்பு அதிரடிப் படையின் பிரதிநிதிகளின் கூட்டம் நடைபெற்றது. கூடுதல் காவல் துறை இயக்குநர் (சிறப்பு அதிரடிப் படை), கூடுதல் காவல் துறை இயக்குநர் (தலைமையகம்), கர்நாடக சிறப்பு அதிரடிப் படையின் காவல் துறைத் தலைவர் ஆகியோர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டு வீரப்பன் கும்பலுக்கு எதிரான நடவடிக்கையில் மத்திய அரசின் உதவி குறித்து விவாதித்தனர். படையினரை விரைவாக அழைத்துச் செல்லவும், வழுக்கும் பாதையில் செல்லத் தனிப் பயிற்சி அளிக்கவும், சூளூரிலுள்ள இந்திய விமானப் படையினரால் ஹெலிகாப்டர்களும், வானிலிருந்து கண்காணிக்கும் வசதியும் செய்து தருவது எனவும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

[2003 ஏப்ரல் 8

**21. குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு**

குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவு என்பது உணவுப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவு எனவும் அழைக்கப்படும். அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தை அமல்படுத்தவும், மத்திய மாநில அரசுகளின் பல்வேறு கட்டுப்பாடு உத்தரவுகளை அமல்படுத்தவும், 1964-ஆம் ஆண்டில் இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது.

ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் குடிமைப் பொருள் வழங்கல் புலனாய்வுப் பிரிவானது, ஒரு காவல் துறைத் தலைவர், இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட 262 காவல் அலுவலர்களுடன் செயல்படுகிறது. தமிழ்நாடு முழுவதும் 16 பிரிவுகளும், 5 பறக்கும் படைகளும் உள்ளன.

2002-ஆம் ஆண்டில் ரூபாய் 92,21,412/- மதிப்புள்ள பொது விநியோகத்திற்கென ஒதுக்கப்பட்ட அரிசியும், ரூபாய் 19,65,750/- மதிப்புள்ள மண்ணெண்ணெய் மற்றும் ரூபாய் 2,84,64,959/- மதிப்புள்ள பெட்ரோல், டீசல் உள்பட பிற பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டன. 252 பேர் கைது செய்யப்பட்டனர். ரூபாய் 6,09,62,600/- மதிப்புள்ள 222 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. 17 நபர்கள் காவலில் அடைக்கப்பட்டனர்.

**22. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்**

சீருடைப் பணியாளரைத் தெரிவு செய்யும் முறைகளை ஆய்வு செய்யவும், எத்தகைய புகாருக்கும், பாரபட்சத்திற்கும் இடமளிக்காவண்ணம் தேர்வு நடைபெறுவதை உறுதி செய்யவும், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் 29-11-1991 ஆம் நாளிட்ட உள் (பணியாளர்-எப்) துறையின் அரசாணை 1806-ன்படி, 1991 நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது. காவல் துறை இயக்குநர் நிலையில் ஒருவர் தலைவராகவும், கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் ஒருவர் உறுப்பினராகவும், காவல் துறைத் தலைவர் நிலையில் ஒருவர் உறுப்பினர்-செயலராகவும் இவ்வாரியத்தில் உள்ளனர்.

ஆண், பெண் காவல் உதவி ஆய்வாளர்கள், இரண்டாம் நிலை ஆண், பெண் காவலர்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் வீரர்கள், சிறைத் துறையில் இரண்டாம் நிலை ஆண்



2003 ஏப்ரல் 8]

மற்றும் பெண் சிறைக் காவலர்கள் (வார்டர்கள்) ஆகியோரைத் தெரிவு செய்யும் பொறுப்பு இவ்வாரியத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

3872 ஆண் காவலர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்குப் பின்னர், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்பு காவல்படை அணிகளுக்கு பணி நியமனம் செய்யப்பட்டனர். 2002-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மற்றும் 2003-இல் 1627 பெண் காவலர்கள் தெரிவு செய்யப்பட்டு, பணி நியமன உத்தரவு வழங்கப்பட்ட பின்னர், 3-3-2003 முதல் 1552 பெண் காவலர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மேலும் சமீபத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் உள்பட, 477 ஆண் காவலர்களும், 1572 பெண் காவலர்களும் பயிற்சியில் உள்ளனர். 961 பெண் உதவி ஆய்வாளர்கள், 2306 பெண் காவலர்கள் மற்றும் 8431 ஆண் காவலர்கள் ஆகியோரைத் தெரிவு செய்யும் பணியை மேற்கொள்ள இவ்வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**23. தமிழ்நாடு காவல் கணினிப் பிரிவு**

1971-ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் கணினிப் பிரிவு அமைக்கப்பட்டது. குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறை, மென்பொருளை உருவாக்குதல், கணினிப் பயிற்சி ஆகிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளதோடு உருவம் வரையும் முறை மற்றும் தலாஷ் (Talash) மென்பொருள் போன்றவற்றைப் பயன்படுத்தி புலனாய்வு அதிகாரிகளுக்கு இப்பிரிவு உதவி புரிகிறது.

1. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல்களைச் சேகரித்து, 1-1-1996 முதல் ஒரே மாதிரியாக வடிவமைக்கப்பட்டப் படிவத்தில், கணினியில் பதிவு செய்வதற்காக, அனைத்து மாவட்டக் குற்றப் பதிவேட்டுக் கூடங்களுக்கும் குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறையினை தேசிய குற்றப் பதிவேட்டுக் கூடம் வழங்கியுள்ளது.

2. உருவம் வரையும் முறையானது, சாட்சிகள் சொல்லும் உடல் அடையாளத்தின் அடிப்படையில் சந்தேகப்படும் நபரின் படத்தை வரைய உதவிகரமாக உள்ளது. இம்முறையின் கீழ் 297 விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

3. காணாமல் போன நபர்கள், வாகனங்கள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவைகள் குறித்த தகவல்களை சேகரிக்க தலாஷ் என்ற மென்பொருளை காவல் கணினிப் பிரிவு பயன்படுத்துகிறது. 2002 ஆம் ஆண்டு 789 வழக்குகள் பெறப்பட்டதில், 8 நபர்கள் இம்முறை

மூலம் அடையாளம் காணப்பட்டனர். 2003-ஆம் ஆண்டு, 122 வழக்குகள் பெறப்பட்டதில், 2 நபர்கள் இம்முறை மூலம் அடையாளம் காணப்பட்டனர்.

4. சென்னையில் உள்ள காவல் கணினிப் பிரிவில் குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறை குறித்து மாவட்ட குற்றப் பதிவேட்டுக் கூடத்தைச் சேர்ந்த 157 நபர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

5. இக்காவல் கணினிப் பிரிவு, குற்றம் மற்றும் குற்றவாளிகள் பற்றிய தகவல் முறையின் சமீபத்திய வெளியீடு எம்எல்01 குறித்தும் மாவட்டக் கணினி இயக்குபவர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

6. **கணினிமயமாக்கல்:**

(அ) ஏற்கனவே காவல் துறையில் 891 கணினிகள் உள்ளன. மேலும் 436 கணினிகள் வாங்கப்படுகின்றன. காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மேலும் 1250 கணினிகள் வாங்க அனுமதியளிக்கப்பட்டதையடுத்து, அவற்றை வாங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ஆ) கீழ்க்கண்டவாறு படிப்படியாக கணினிமயமாக்கல் நடைபெற்று வருகிறது.

| | |
|---|---|
| முதற் கட்டம்: | தலைமையிடப் பிரிவுகளுக்கு கணினிகள் வழங்குதல். |
| இரண்டாம் கட்டம்: | மாவட்டக் காவல் அலுவலகங்கள் மற்றும் ஆணையரகங்கள் ஒவ்வொன்றுக்கும் 9 கணினிகளும் மற்றும் காவல் சரக அலுவலகங்கள் ஒவ்வொன்றுக்கும் 4 கணினிகளும் வழங்குதல். |
| மூன்றாம் கட்டம்: | காவல்நிலையங்கள் மற்றும் இதர களப் பிரிவுகளுக்குக் கணினிகள் வழங்குதல். |

முதல் மற்றும் இரண்டாம் கட்டம் இந்த வருடத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும். மூன்றாம் கட்டத்திலும் ஒரு பகுதி இந்த வருடத்திற்குள் முடிக்கப்பட்டுவிடும்.





(இ) காவல்நிலையப் பதிவேடுகளைக் கணினிமயமாக்குவதற்காக ஒரு முன்னோடித் திட்டம் தயாரிக்கப்பட்டு, தஞ்சாவூர், கோவை மாநகரம் மற்றும் சேலம் மாநகரம் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

(ஈ) மாவட்டக் காவல் அலுவலக அளவில் கணினிமயப்படுத்த திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும்.

(உ) கண்காணிப்பாளர்கள்/காவல் ஆணையர்கள்/சரகக் காவல் துறைத் துணைத் தலைவர்கள் ஆகியோருக்கு மின்-அஞ்சல் (E-mail) வசதி வழங்கப்பட்டுள்ளது.

(ஊ) தக்க பயிற்சி பெற்ற காவல் தொலைத் தொடர்புப் பிரிவுத் தொழில்நுட்ப பணியாளர்களைக் கொண்டு கணினி வன்பொருள் பிரிவு மற்றும் கணினி திட்டமியற்றல் பிரிவு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

**24. காவல் பயிற்சிக் கல்லூரி**

அடிப்படைப் பயிற்சித் திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள மாறுதல்கள் மூலமும், பல புதிய பயிற்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியதன் மூலமும் 2001-ஆம் ஆண்டு ஜூலை முதல் தமிழ்நாடு காவல் பணியாளர்களது பணித்திறனை வளர்க்க பயிற்சி முறைகளில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 2002-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற நிதிநிலைக் கூட்டத் தொடரின்போது என்னால் சட்டசபையில் முன்வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பில், பல்வேறு ஆக்கபூர்வத் திட்டங்களும், ஊக்கத் தொகைகளும் அறிவிக்கப்பட்டன. குறுகிய காலப் பயிற்சிகள், தொழிற்பட்டறைகள், கருத்தரங்கங்கள் மற்றும் சிறுவர்களுக்கான போட்டிகள் ஆகியவற்றை நடத்த காவல் பயிற்சிக் கல்லூரிக்கு சுழல் நிதி ரூ.20 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2002-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், காவல் பயிற்சிக் கல்லூரி மற்றும் அதனைச் சார்ந்த அமைப்புகள், காவலர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு பல்வேறு அடிப்படைப் பயிற்சிகளைக் கொடுத்துள்ளதுடன் மேலும் தொடர்ந்து கொடுத்து வருகின்றன. உதவி ஆய்வாளர்கள் முதல் காவல் கண்காணிப்பாளர்கள் வரையிலான பதவியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வுக்கு முந்தைய

பயிற்சிகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 6 உதவி ஆய்வாளர்கள், 3,575 ஆண் காவலர்கள் மற்றும் 13 குழல் ஊதும் காவலர்கள் ஆகியோருக்கு அடிப்படைப் பயிற்சி கொடுக்கப்பட்டு, அவர்களது பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆறு தகுதிகாண் பருவ இந்திய காவல் பணி அதிகாரிகள், 15 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், 480 ஆண் காவலர்கள் மற்றும் 18 பெண் காவலர்கள் ஆகியோர் மாவட்டங்களில் நடைமுறைப் பயிற்சியில் உள்ளனர். தற்பொழுது 32 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் இரண்டு அணிகளாகவும், 1,572 பெண் காவலர்களும் பயிற்சியில் உள்ளனர். 20 கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள், 20 காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் 13 உதவி ஆய்வாளர்கள் ஆகியோருக்கு பதவி உயர்வுக்கு முந்தைய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 316 ஆண் மற்றும் 192 பெண் தலைமைக் காவலர்கள் உதவி ஆய்வாளராக பதவி உயர்வு பெறுவதற்கு முன்பு 24-3-2003 முதல் பயிற்சியில் உள்ளனர்.

கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளான காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் ஆகியோரது திறமைகளை மேம்படுத்த பின்வரும் விஷயங்களில் சுழல் நிதியைப் பயன்படுத்தி பல்வேறு புதிய பயிற்சிகள் துவக்கப்பட்டுள்ளன:

* பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு முக்கியத்துவம் அளித்து புலனாய்வுத் திறமையை மேம்படுத்துதல்
* இணையதளக் குற்றங்கள்
* போக்குவரத்து திட்டமிடல், மேலாண்மை மற்றும் அமலாக்கம்
* நிர்வாகம்
* குடிபெயர்தல்
* உளவுச் செய்திகள் சேகரித்தல்
* பாதுகாப்பு
* போதைப் பொருள்
* சட்டம் ஒழுங்கு மற்றும் இதர குற்றங்கள் குறித்து தனித்தனிப் பயிற்சிகள்
* பயங்கரவாதம்



* அடிப்படை வாதம்
* இனக் கலவரங்கள்
* தகவல் தொழில்நுட்பம்
* பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்
* திட்டமிடப்பட்டக் குற்றங்கள்
* நலிந்த பிரிவினருக்கு எதிரான கொடுமைகள்
* இளங்குற்றவாளிகளுக்கான நீதி

அதேபோன்றே, இணையதளக் குற்றங்கள், சாதி மற்றும் மத மோதல்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தல் ஆகியவை குறித்து காவல் துறை உயரதிகாரிகளுக்கு குறுகிய காலப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. திட்டமிடப்பட்டக் குற்றம், முறைகேடான பணம் கொடுக்கல் வாங்கல் மற்றும் சிறிய அளவிலான சச்சரவுகள் போன்ற தலைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற அதிகாரிகளைக் கொண்டு காவல் துறை உயரதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

அதேநேரத்தில், கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளின் அணுகுமுறையில் மாற்றத்தைக் கொண்டுவர, 'மனித நேய உணர்வுடன் கூடிய காவல் பணி' என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் சிறப்புப் பயிற்சி ஒவ்வொரு மாதமும் "நிஸ் ஸ்பார்டா" (Nis-Sparta) அமைப்புடன் சேர்ந்து நடத்தப்படுகிறது. 2001 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆரம்பிக்கப்பட்ட பெண் காவலர்களுக்கான பாலின நிகர்நிலைப் பயிற்சி சென்ற ஆண்டில் முடிவடைந்தது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சுழல் நிதியைப் பயன்படுத்தி காவல் பயிற்சி கல்லூரி இரண்டு கருத்தரங்கங்களை நடத்தியது. மத்திய உள்துறை அமைச்சகம் மற்றும் மாநில அரசால் "மனித உரிமைகள்-எதிர்கொள்ள உள்ள சவால்கள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் 6-1-2003 அன்று நடத்தப்பட்டது. "குற்றத் தடுப்பு மேலாண்மை-பன்முக அணுகுமுறை" என்ற தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் தேசிய கருத்தரங்கை 9-1-2003 அன்று நான் துவக்கி வைத்தேன். அந்த நிகழ்ச்சியின்போதே, காவல் பயிற்சிக் கல்லூரிக்கென இணையதளமும்

துவங்கப்பட்டது. காவல் சரக அளவில் கருத்தரங்குகள் காவல் கண்காணிப்பாளர்களால் சுழல் நிதியைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்றன.

எட்டு பணியிடைப் பயிற்சி மையங்களில், காவலர் முதல் உதவி ஆய்வாளர் பதவி வரை உள்ள பணியாளர்கள் 3,464 நபர்களுக்கு, ஜூலை 2001 மற்றும் நவம்பர் 2002 இடையே 272 வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. ராமநாதபுரம், சேலம், தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் ஆகிய நான்கு இடங்களில் உள்ள புதிய மையங்கள் செப்டம்பர், 2002 முதல் செயல்படத் துவங்கியுள்ளன. தற்பொழுது பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால், ஒவ்வொரு ஆண்டும் இப்பணியிடைப் பயிற்சி மையங்களில் 10,800 காவல் பணியாளர்களுக்குக் குறையாமல் பயிற்சியளிப்பது சாத்தியமாகியுள்ளது.

காவல் பயிற்சிக் கல்லூரி, பயிற்றுவிப்பவர்களுக்குப் பயிற்சி அளிக்க தேசிய காவல் கழகத்துடனும் காவல் துறை செயல்பாடுகள் குறித்த தேசிய அளவிலான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடனும் (BPRD) தொடர்பு கொண்டுள்ளது. மேலும் இங்கிலாந்து நாட்டுப் பயிற்சி முறை குறித்து நேரிடையாக தெரிந்து கொள்வதற்காக இங்கிலாந்து, பிராம்ஷில், தேசிய காவல் பயிற்சி கல்லூரியுடன் பரிவர்த்தனை திட்டத்தை மேற்கொண்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட மாவட்டக் காவல் பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சிக்காக அண்ணா பல்கலைக்கழகத்துடனும், இளங்குற்றவாளிகளுக்கான நீதியமைப்பு குறித்த பயிற்சிக்காக சமூகப் பாதுகாப்பு இயக்குநரகத்துடனும் பயனுள்ள வகையில் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மகளிர் காவல் நிலைய அதிகாரிகளுக்கு, குடும்ப சச்சரவுகளைத் தீர்ப்பதிலும், பிரச்சினைகளை கலந்துரையாடி ஆலோசனை நல்குவதிலும், பதிவேடுகளைப் பராமரிப்பதிலும் பயிற்சி அளிக்க இணையதளத்தை அடிப்படையாகக்கொண்ட மின்னணு-பயிற்சி திட்டத்தைக் கொண்ட ஒரு முன்னோடித் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தில் மாநிலத்தில் உள்ள மூன்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உள்ள 30 பெண் காவல் பணியாளர்கள் பங்கு பெற்றனர். இத்திட்டம் மூலமாக காவல் பயிற்சி மற்றும் மேம்பாட்டில் புதுமையைப்



புகுத்தியதற்காக திரு.கே. ராதாகிருஷ்ணன், இ.கா.ப. அவர்களுக்கு இங்கிலாந்தின் "ராணி விருது" வழங்கப்பட்டுள்ளது.

காவல் பயிற்சிக் கல்லூரி மற்றும் காவல் பயிற்சிப் பள்ளிகளில் பணியாற்ற திறமை மற்றும் விருப்பமுள்ளவர்கள் வர வேண்டுமென்பதற்காக, பயிற்சிப் படியை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக 2002-2003-லிருந்து அரசு உயர்த்தியுள்ளது. குடியிருப்பு ஒதுக்குவதில் முன்னுரிமை, விருதுகள் வழங்கப்படுவதில் ஒதுக்கீடு மற்றும் மூன்று வருடம் காவல் பயிற்சிக் கல்லூரிகள்/காவல் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றியவர்கள் தாங்கள் விருப்பப்படும் பிரிவுக்குச் செல்லலாம் போன்றவை அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மற்ற ஊக்கங்களாகும்.

காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.1,11,59,000-ஐ அரசு வழங்கியுள்ளது. பயிற்சி முறைகளை மேம்படுத்துவதற்காக, மல்டி மீடியா புரஜெக்டர்கள், பெண்டியம் IV கணினிகள், வெப் காமிராக்கள், டிஜிட்டல் காமிராக்கள், லேசர் பிரிண்டர்கள், கேபிள் இணைய வலை தொடர்புகள் மற்றும் சிறு ஆயுத பயிற்சி சிமுலேட்டர் ஆகியவை வாங்க அத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

**25. விரல் ரேகைப் பதிவுக் கூடம்**

தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் 1895ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இக்கூடம் நாட்டிலேயே மிகவும் பழமை வாய்ந்ததாகும்.

அனைத்து தண்டனை பெற்ற நபர்களின் விரல் ரேகைப் பதிவுகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள பண்டக வீடுதான் விரல் ரேகைப் பதிவுக் கூடமாகும். இக்கூட பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு சென்று, மறைந்துள்ள விரல் ரேகைகளை எடுத்து, ஏற்கெனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள விரல் ரேகைகளுடன் ஒப்பிட்டு குற்றவாளிகளை அடையாளம் காண்பர். கைது செய்யப்பட்ட நபர்களின் விரல் ரேகைகளும், அவர்களின் முந்தைய வரலாற்றைத் தெரிந்துகொள்வதற்காக ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டு, அவர்கள் மற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களா என ஆராயப்படுகிறது. நீதிமன்றம் மற்றும் இதர துறைகளால் அனுப்பப்படும் சர்ச்சைக்குரிய ஆவணங்களில் உள்ள விரல் ரேகைகளை சோதனை செய்து கருத்துக்களைத் தெரிவிக்கும் பணியையும் இக்கூடம் செய்கிறது.

[2003 ஏப்ரல் 8

அனைத்து மாவட்ட தலைமையிடங்கள் மற்றும் ஆணையரகங்களில் ஒருவிரல் ரேகைப் பதிவு முறையை தமிழ்நாடுதான் முதன்முதலாக அறிமுகப்படுத்தியது. மாநிலத்தின் 33 ஒருவிரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் செயல்படுகின்றன. இதுதவிர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையிலும், வணிகக் குற்றங்கள் புலனாய்வுத் துறையிலும் ஒருவிரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் இயங்குகின்றன. 1997 ஆம் ஆண்டு முதல் விரல் ரேகைப் பதிவுக்கூட அலுவலர்கள் அனைவரும் காவல் துறையின் களப் பணியாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

இக்கூடத்தில் குற்றவாளிகளின் 1,75,198 விரல் ரேகைச் சீட்டுக்கள் பதிவில் உள்ளன. 2002ஆம் ஆண்டு, மாநிலத்தில் பல்வேறு இடங்களில் கைது செய்யப்பட்ட நபர்களின் 26,371 விரல் ரேகைச் சீட்டுக்கள் சோதனைக்காக இக்கூடத்திற்கு வந்தன. இவற்றை ஒப்பிட்டுப் பார்த்ததில், 3903 சம்பவங்களில் ஏற்கெனவே தண்டனை பெற்ற குற்றவாளிகளின் விரல் ரேகையுடன் ஒத்துப்போவது கண்டுபிடிக்கப்பட்டது. மூன்று இனங்களில் இறந்தவரின் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. 2002ஆம் ஆண்டு விரல் ரேகை நிபுணர்கள் 7519 குற்றம் நடைபெற்ற இடங்களுக்குச் சென்று, 4544 வழக்குகளில் வாய்ப்புள்ள விரல் ரேகைகளைக் கண்டுபிடித்துள்ளனர். இவற்றில் 907 வழக்குகளில், விரல் ரேகை அடிப்படையில் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விரல் ரேகைப் பகுப்பாய்வு மற்றும் குற்றவாளிகளைக் கண்டறியும் முறை எனப்படும் கணினி மூலம் விரல் ரேகை அடையாளம் காணும் முறை சென்னையில் உள்ள தமிழ்நாடு கைவிரல் ரேகைப் பதிவுக்கூடத்தில் ரூ.1.81 கோடி செலவில் செயல்பட்டு வருகிறது. ஐந்து இலட்சம் கை விரல் ரேகை அடையாளச் சீட்டுகள் கொள்ளளவு கொண்டது இம்முறை. இதுகாறும், 19 காவல் மாவட்டங்கள் தொலைதூரப் பணி மையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 16 காவல் மாவட்டங்கள்/மாநகரங்கள் விரைவில் இணைக்கப்படவுள்ளன. 28-2-2003 நிலவரப்படி இம்முறையின்கீழ் 1,68,129 குற்றவாளிகளின் கை ரேகைகளைப் பற்றிய புள்ளி விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இம்முறையின்கீழ் அனுப்பப்பட்ட 12,096 வாய்ப்புள்ள விரல் ரேகைப் பதிவுகளில், 265 வழக்குகள் அடையாளம் காணப்பட்டன. இது தவிர 198 பதிவுகள் நடைமுறையில் உள்ள



2003 ஏப்ரல் 8]

ஒப்பீட்டு முறையின் மூலமே அடையாளம் காணப்பட்டன. விரல் ரேகைப் பதிவு மூலம் ரூ.1.18 கோடி மதிப்புள்ள களவு போன பொருட்கள் மீட்கப்பட்டன.

**26. தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகள்**

தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளின் அதிகாரிகளும் காவலர்களும், மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலும், சாதி, மத மோதல்களை சமாளிப்பதிலும் மற்றும் பயங்கரவாதத்தை ஒடுக்குவதிலும் உள்ளூர் காவல் துறையினருக்கு உதவுவதற்காக அனுப்பப்படுகின்றனர். இது தவிர, கடலோரக் காவல் பணிகளுக்கும், மிக முக்கிய பிரமுகர்களின் வருகையின்போது பாதுகாப்புப் பணிக்கும், இலங்கை அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ள சிறப்பு முகாம்களிலும் இவர்களது பணி பயன்படுத்தப்படுவதோடு, வீரப்பனுக்கு எதிரான தேடுதல் வேட்டைகளில் சிறப்பு அதிரடிப் படைக்கு உதவுவதற்கும் அனுப்பப்படுகின்றனர். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில், பதினொன்று அணிகளும், ஆவடியில் உள்ள ஒரு படைக்கலன் மையமும், ஆவடியில் உள்ள காவல் வாகன பணிமனை மற்றும் பயிற்சிப் பள்ளியும், திருச்சியில் உள்ள வட்டார காவல் வாகன பணிமனையும் அடங்கும். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஓர் அணி தில்லியில் மத்திய அரசின் பணியில் உள்ளது. தற்பொழுது தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டாவது அணி, தில்லியில் உள்ள, இந்தியாவில் மிகப் பெரியதும், மிகப் பரந்ததுமான திகார் சிறைச்சாலையின் காவல் பணியில் உள்ளது.

அதிகாரிகளுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும், காவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக அனைத்து அணிகளிலும் கணினி வசதி அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து அணிகளிலும், காவல் துறையினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன. அனைத்து 11 அணிகள் மற்றும் படைக்கலன் மையத்தின் மொத்த ஒப்பளிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை 12,491 ஆகும்.

**27. நுண்ணறிவுப் பிரிவு**

தனிப் பிரிவு புலனாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு புலனாய்வுத் துறை, 'க்யூ' பிரிவு புலனாய்வுத் துறை மற்றும் சிறப்புக் கோட்டம் ஆகியவை அடங்கிய நுண்ணறிவுப் பிரிவு, கூடுதல் காவல் துறை இயக்குநர் (நுண்ணறிவு) அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகிறது.

[2003 ஏப்ரல் 8

வகுப்புவாத மற்றும் சாதிய பதற்றங்கள், பிற பொதுவான சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள், முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்பு, தீவிரவாதிகள், இலங்கை தமிழ் போராளிகள் மற்றும் மத அடிப்படைவாதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றை இப்பிரிவு கவனித்து வருகிறது.

**1. தனிப் பிரிவு புலனாய்வுத் துறை**

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலவரத்தை தனிப் பிரிவு புலனாய்வுத் துறை தொடர்ந்து கூர்மையாக கண்காணித்து, சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தகவல் அனுப்பி எச்சரிக்கை செய்கின்றது. வகுப்புவாத மற்றும் சாதிய பதற்றங்கள் மற்றும் பொதுவான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் மீதான தகவல்களை சேகரிப்பதும், அவற்றை ஒருங்கிணைத்து அறிக்கையாக சம்பந்தப்பட்டவர்களுக்கு அளிப்பதையும் இப்பிரிவு கவனிக்கிறது.

**2. பாதுகாப்புப் பிரிவு புலனாய்வுத் துறை**

தமிழ்நாட்டிற்கு வருகை புரியும் முக்கிய, மிக முக்கிய பிரமுகர்களின், அயல்நாட்டுத் தலைவர்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரமுகர்கள் ஆகியோரது பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விஷயங்களை இப்பிரிவு கையாள்கிறது. முதலமைச்சரின் பாதுகாப்புக்கென ஒரு சிறப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு, வெடிகுண்டு கண்டுபிடிப்பு வசதிகளையும், முதலமைச்சர் மற்றும் முக்கிய தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும்போதும், கூட்டங்களில் கலந்துகொள்ள வரும்போதும் உயர்நிலைப் பாதுகாப்பு வளையத்தையும் அளிக்கிறது. அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள நபர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதில் சிறப்புப் பயிற்சியை பெற்ற தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த அதிரடிப்படைப் பிரிவும் இதில் உள்ளது.

**III. 'க்யூ' பிரிவு புலனாய்வுத் துறை**

இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் இலங்கைத் தீவிரவாதிகள் உள்ளிட்ட பிற தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை 'க்யூ' பிரிவு புலனாய்வுத் துறை கூர்ந்து கவனித்து வருகிறது. இடதுசாரி தீவிரவாதிகள் மற்றும் இலங்கைத் தமிழ் போராளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளை புலன்விசாரணை செய்வதையும் இப்பிரிவு மேற்கொள்கிறது. மேற்சொன்ன தீவிரவாத அமைப்புகளைப் பற்றிய



2003 ஏப்ரல் 8]

தகவல்களை சேகரித்து, உள்ளூர் காவல் துறையினருடன் அவற்றைப் பகிர்ந்துகொள்கிறது.

**IV. சிறப்புக் கோட்டம்**

1998ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தனிப் பிரிவு புலனாய்வுத் துறையில் ஒரு சிறப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இப்பிரிவின் கிளைகள் சென்னை, வேலூர், திருநெல்வேலி, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில், காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. மத அடிப்படைவாதிகளின் நடவடிக்கைகள் குறித்த தகவல்களையும், விநாயக சதுர்த்தி, பாபர் மசூதி இடிப்பு தினம் போன்ற நிகழ்வுகள், அதிமுக்கிய நபர்களின் வருகை ஆகியவற்றின்போது பிரச்சினைகள் எழக்கூடிய சந்தர்ப்பங்களில் அது குறித்த தகவல்களையும் முன்கூட்டியே சேகரிக்கும் பணியில் இப்பிரிவு ஈடுபட்டு வருகிறது.

**28. இரயில்வே காவல் படை**

1932ஆம் ஆண்டில் இரயில்வே காவல் படை திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. திருச்சி தலைமையிடத்தை இரண்டாகப் பிரித்து, 1981-ல் சென்னையில் இரயில்வே காவல் படை உருவாக்கப்பட்டது. காவல் துறைத் தலைவர் ஒருவரின் கீழ், 1563 காவல் பணியாளர்கள் அடங்கிய 31 இரயில்வே காவல் நிலையங்களும், 26 புறக்காவல் நிலையங்களும் மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

2002ஆம் ஆண்டு மற்றும் 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, சிறு குற்றங்களில் ஈடுபட்ட 18,262 நபர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் 11,482 நபர்கள்மீது தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதாயக் கொலை, கூட்டுக் கொள்ளை, மயக்க மருந்து தடவப்பட்ட உணவுப்பொருட்களைக் கொடுத்து கொள்ளையடிப்பது போன்ற சம்பவங்கள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை. ஆந்திர பிரதேச இரயில்வே காவல் துறையினரின் ஒத்துழைப்புடன் மயக்க மருந்து கலந்த பிஸ்கட்டுகளைக் கொடுத்து கொள்ளையடிக்கும் கொல்கத்தாவைச் சேர்ந்த மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டனர். பிரபல குற்றவாளிகள் 12 பேர் குண்டர்கள் தடுப்புச்

[2003 ஏப்ரல் 8

சட்டத்தின்கீழ் காவலில் வைக்கப்பட்டனர். குழந்தைகளை கடத்திச் செல்வோர்மீது கடும் நடவடிக்கை எடுத்து, 51 சிறுமியர் மற்றும் 10 சிறுவர்களை, சென்னை மற்றும் கோவை இரயில்வே நிலையத்தில் மீட்டனர். பின்னர் அவர்களின் பெற்றோர்களிடம் கொண்டுபோய் சேர்த்தனர். மேலும், வீட்டை விட்டு ஓடிப்போன 102 பெண்களை மீட்டு, அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்.

308 மதுவிலக்கு குற்றங்கள் பதிவு செய்யப்பட்டு, இரயில்களில் கடத்திச் சென்றபோது இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு மதுபானங்கள் 6,942 பாட்டில்கள், 46,773 கள்ளச் சாராய பாக்கெட்டுகள், 46 கிலோ கஞ்சா, 8,350 கிலோ அரிசி ஆகியவற்றைக் கைப்பற்றினர்.

இரயில்வே காவல் படை 2002ஆம் ஆண்டு குற்றக் கண்டுபிடிப்பில் 86 சதவீதமும், சொத்து மீட்பில் 65 சதவீதமும், 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வரை குற்றக் கண்டுபிடிப்பில் 82 சதவீதமும் எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு இரயில் நிலையங்களைச் சேர்ந்த இரயில் நிலைய அதிகாரிகளுக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல் கடிதங்களையடுத்து, காவல் துறையினர் திறமையாகச் செயல்பட்டு விழுப்புரம் இரயில் நிலையத்தில் 4-10-2002 அன்று திருப்பூரைச் சேர்ந்த அஸ்லாம் ஜான் (வயது 38) என்பவரைக் கைது செய்தனர்.

பொதுமக்களுக்கு உதவ வேண்டுமென்ற நோக்கத்தில், மாநிலத்தில் உள்ள 12 முக்கிய இரயில் நிலையங்களில் உதவி மையங்களை இரயில்வே காவல் படையினர் அமைத்துள்ளனர். இந்த மையங்களில் கடமையுணர்வுடன் விவரம் அறிந்த காவல் பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியில் இருப்பார்கள். அவர்கள் பொதுமக்களுக்கு, காணாமல் போன பொருட்கள் குறித்து புகார் கொடுக்கவும், தேவையானவர்களுக்கு சக்கர நாற்காலி கொடுக்கவும், துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவும் உதவுவார்கள். பெண்களையும், குழந்தைகளையும் கடத்துபவர்களுக்கு எதிராக தீவிரக் கண்காணிப்பில் ஈடுபடுவார்கள். இரயில்வே காவல் படையினரின் செயல்பாடுகளை மேம்படுத்த ஏற்கெனவே அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாகனங்களுடன், புதிதாக இருசக்கர வாகனங்களும் மகேந்திரா ஈப்பும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றையும் சேர்ந்து இரயில்வே காவல் படையில் 98 வாகனங்கள் உள்ளன.



2003 ஏப்ரல் 8]

## அத்தியாயம்-5

### பெண் காவலர்

1973ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பெண் காவலர் பிரிவானது, தொடக்கக் காலக் கட்டத்தில், காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கவும், பெண்களை மீட்கவும், விபச்சாரத் தொழில் தடுப்பு பணியின்போது ஆண் காவலர்களுக்கு உதவவும், பெண்கள் அதிகமாக கூடும் இடங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவும் உதவியாக இருந்தது.

**அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைத்தல்**

துன்புறுத்தலுக்குள்ளான பெண்களை காப்பாற்றும் நோக்கத்தோடு, 1992ஆம் ஆண்டில் தமிழக அரசு, எனது சிந்தனையில் உதித்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தைச் சென்னை நகரில் நிறுவியது. அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் செயல்பாடு மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றதையடுத்து, 1995ஆம் ஆண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கை 58 ஆக உயர்ந்தது. இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாட்டு மகளிரால் மகத்தான அளவில் வரவேற்கப்பட்டன. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், சமுதாயத்திற்கு குறிப்பாக பெண்கள் நல மேம்பாட்டுக்கு சிறப்பான பணிகளை, செவ்வனே செய்து வருகின்றன. 2001ஆம் ஆண்டு, ஒவ்வொரு உட்கோட்டத்திலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற அடிப்படையில் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை கூடுதலாக நிறுவ அரசு அறிவித்தது. 2001-2002 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக 50 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, மேலும் 40 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு அரசு அனுமதி அளித்ததன்பேரில், அவை அனைத்தும் திறக்கப்பட்டன. இக்காவல் நிலையங்களில், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான அவசர உதவி தொலைபேசி வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் தற்பொழுது 148 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

[2003 ஏப்ரல் 8

அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அதிக எண்ணிக்கையில் நிறுவப்பட்டதாலும், மகளிருக்கு எதிரான குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதாலும், மகளிருக்கு எதிரான குற்றங்களின் பதிவு எண்ணிக்கை கடந்த சில மாதங்களில் அதிகமாகி உள்ளது. இது நிச்சயமாக வரவேற்கத்தக்க நேர்மறை வளர்ச்சியாகும். இந்த காவல் நிலையங்கள் அனைத்திலும் நடமாடும் ஆலோசனை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெண்கள் தங்களது புகார்களை தங்கள் வீட்டுக்கருகிலேயே அளிக்கவும், பெண்களின் உரிமைகள் குறித்து அவர்களிடையே விழிப்புணர்வு உருவாக்கவும், இந்த மையங்கள் உதவும். இதற்காக தனியே வடிவமைக்கப்பட்ட வாகனங்கள் காவல் சரக தலைமையிடங்கள் மற்றும் ஆணையரகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-6

### காவல் துறையை நவீனமயமாக்குதல்

தமிழ்நாடு காவல் துறையானது, பாதுகாப்பு மிக்க, நியாயமான, மனிதாபிமான, முன்னேற்றமடைந்து வரும் சமுதாயத்தை உருவாக்குவதை உறுதிப்படுத்தும் வகையில் பணியாற்றுகின்றது. காவல் பணியாளர்கள், அவர்கள் கையாளும் பொருட்கள், பயன்படுத்தும் முறைமைகள் மற்றும் பணியாளர்களது சீரிய நோக்கங்கள் ஆகியவற்றில் நவீனமயமாக்கும் முயற்சி நிச்சயமாக மாற்றங்களைக் கொண்டுவரும்.

***காவல் பணியாளர்கள்:*** பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் மட்டுமே நவீனமயமாக்கல் அல்ல. பணியில் சேர்க்கப்படுவோருக்கும், பணியில் உள்ளவர்களுக்கும் பயிற்சி அளிப்பதும் நவீனமயமாக்கலின் ஒரு முக்கியப் பகுதியாகும். காவல் துறையினருக்கு பயிற்சி அளிப்பதற்கென முதன்மையான காவலர் பயிற்சிக் கழகம் ஒன்றை கட்டுவது என்பது காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

***காவல்துறையினர் கையாளும் பொருட்கள்:*** அனைத்து காவல் நிலையங்களுக்கும் அடிப்படை வசதிகள் கட்டமைப்பு வசதிகள் ஆகியவை செய்து கொடுக்கப்படுகின்றன. மாவட்ட அளவில் காவல் துறை நிர்வாகத்திற்கு அச்சாணியாக விளங்கும். மாவட்ட காவல் அலுவலகத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள், அதுபோல்



2003 ஏப்ரல் 8]

செய்து கொடுக்கப்படும். காவல் துறையினருக்கு குடியிருப்பு வசதி வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். பல்வேறு நிலைகளில் தேவைப்படும் கீழ்க்கண்ட கருவிகள் வாங்கப்பட்டுள்ளன — வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் கருவி, வீடியோ காமிராக்கள், நகல் இயந்திரங்கள், வா[illegible]செய்தி தொலைத்தொடர்பு கருவிகள், குற்ற கண்டுபிடிப்பின்போது கையாளப்படும் கருவிகள், கலவரங்களைக் கட்டுப்படுத்த பயன்படும் கருவிகள், போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கருவிகள், கணினிகள், வாகனங்கள் மற்றும் நவீன ரக துப்பாக்கிகள்.

**கையாளும் முறைகள்:** குற்றங்களைக் கண்டுபிடிக்க அறிவியல்சார் முறைகள் பின்பற்றப்பட வலியுறுத்தப்படுகிறது. தடய அறிவியல் ஆய்வக செயல்பாடு பலப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென களப் பணியாளர்களுக்கு உரிய பயிற்சியும், கையாளும் முறைகளும் கற்பிக்கப்படும். காவல் துறையின் செயல்பாட்டுக்கு தகவல் தொழில்நுட்பம் ஒரு வரப்பிரசாதமாகும். மாநில அளவிலான இணையதள வலையுடன் இணைக்கப்பட்ட கணினி உபயோக முறை பரவலாக அமல்படுத்தப்படும். தற்போதுள்ள நுண்ணலை தகவல் தொடர்பு டிஜிடல் தகவல் தொடர்பாக தரம் உயர்த்தப்படும்.

**காவல் பணியாளர்களது சீரிய நோக்கங்கள்:** பணியாளர்களது வெளிப்புறத் தோற்றத்தை மேம்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்படும். பாலின நிகர்நிலை குறித்து அனைத்துப் பணியாளர்களுக்கும் திறநுட்பப்படுத்தல் பயிற்சி அளிக்கப்படும். மகளிர் காவல் பிரிவுகள் பலப்படுத்தப்பட்டு, அவை சுறுசுறுப்பாக செயல்பட வழிவகை காணப்படும். காலனி ஆதிக்க காலத்து அடக்குமுறை படையாகச் சித்தரிக்கப்படும் காவல் துறையை, மனிதாபிமானத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் பணியாற்றும் துறையாக மாற்றுவதே நவீனமயமாக்கும் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

மேற்கண்ட குறிக்கோள்களை அடையும் வகையில், காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்திற்காக அனைத்து மட்டத்திலும் காவல் துறையை மேம்படுத்துவதற்கு மத்திய அரசும், மாநில அரசும் ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்கின்றன.

*2001-2002* மற்றும் *2002 – 2003* ஆண்டுகளுக்கு மத்திய அரசும் மாநில அரசும் நிதி ஒதுக்கீடு செய்துள்ள விவரங்கள் பின்வருமாறு:—

[2003 ஏப்ரல் 8

| காவல் துறையை நவீனமயமாக்கல் | மத்திய அரசின் ஒதுக்கீடு | மாநில அரசு மானியம் | மொத்தம் (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|---|
| 2001-02 | 68.10 | 68.10 | 136.20 |
| 2002-03 | 68.10 | 68.10 | 136.20 |
| மொத்தம் | 136.20 | 136.20 | 272.40 |

காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தில் 25 சதவீதம் கடனாகவும் 25 சதவீதம் மானியமாகவும் ஆக மொத்தம் 50 சதவீதத்தினை மட்டுமே மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தில் மீதமுள்ள 50 சதவீதத்தினை மாநில அரசே ஏற்கிறது.

**காவல் துறை நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் அமல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் பின்வருமாறு (2001-2003)**

| வ. எண் | திட்டங்கள் | தொகை (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| 1. | **கட்டடங்கள்:** 100 காவல் நிலையங்கள் கட்டுதல், 43 காவல் நிலைய கட்டடங்களை UNDP பாணியில் மேம்படுத்துதல் திருவண்ணாமலை விழுப்புரம் மாவட்டங்களுக்கு மாவட்ட காவல் அலுவலகம், திருச்சி, ஆவடி, உளுந்தூர்பேட்டை தமிழ்நாடு சிறப்புக் காவல்படை அணி இடங்களுக்கு பாதுகாப்புச் சுவர் எழுப்புதல், திருவண்ணாமலை, பெரம்பலூர், நாமக்கல் மாவட்டங்களில் ஆயுதப்படை வளாகம், தடய அறிவியல் ஆய்வக தலைமையிடத்திற்கும், விழுப்புரம், ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள மண்டல தடய அறிவியல் ஆய்வகங்களுக்குக் கட்டடங்கள், 12 மாவட்டங்களில் துப்பறியும் நாய்களைப் பராமரிப்பதற்கான குடில்கள், 6 மாவட்டங்களில் காவல் பணியாளர்கள் தங்கும் இட வசதிக்கான கட்டடங்கள், 4 மாவட்டங்களில் தொலைத் தொடர்பு வளாகங்கள் அமைத்தல். | 34.42 |
| 2. | **வீட்டு வசதி:** காவல் பணியாளர்களுக்கும் அதிகாரிகளுக்கும் 4251 குடியிருப்பு வசதிகள் | 119.52 |
| 3. | **வாகனங்கள்:** லாரிகள், ஈப்புகள், இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட 1434 வாகனங்கள் வாங்குதல் | 44.99 |



2003 ஏப்ரல் 8]

| வ. எண் | திட்டங்கள் | தொகை (ரூபாய் கோடிகளில்) |
|---|---|---|
| 4. | **ஆயுதங்கள்:** தண்ணீர் பீரங்கி வாகனங்கள்-11, ரசாயன வாயுவை கக்கும் துப்பாக்கிகள்-400 | 3.75 |
| 5. | **தொலைத் தொடர்பு:** நுண்ணலை தொலைத் தொடர்பை விரிவுபடுத்தி டிஜிட்டல் முறையை அமல்படுத்துதல், உயர்வேக வான்மொழி தொலைத் தொடர்புக் கருவிகள், வாக்கி டாக்கி கருவிகள் வாங்குதல். | 15.49 |
| 6. | **பயிற்சி:** மாநில காவலர் பயிற்சிக் கழக வளாகம் பகுதி ஒன்று கட்டுமானம் மற்றும் சென்னையில் உள்ள காவலர் பயிற்சிக் கல்லூரிக்குத் தேவையான உபகரணங்களை வாங்குதல். | 19.32 |
| 7. | **உபகரணங்கள்:** ஐ.நா. மேம்பாட்டு திட்டத்தின்கீழ 43 காவல் நிலையங்களை மேம்படுத்துவதற்கான உபகரணங்கள், 17 நடமாடும் ஆலோசனை மையங்கள், 184 நிழற்படிவப் பெருக்கி இயந்திரங்களை காவல்நிலையங்களுக்காக வாங்குதல், கலவரத்தின்போது தேவைப்படும் கவசங்கள், அனைத்து மகளிர் காவல்நிலையங்கள் உட்பட அனைத்து காவல் நிலையங்களுக்கும் வீடியோ கேமிராக்கள் வழங்குதல், போக்குவரத்து சிக்னல் சாதனங்கள் வாங்குதல், துணிக் கூடாரங்கள், காவல் பணியில் வீடியோ மூலம் கலந்துரையாடல் வசதிகளை ஏற்படுத்துதல். | 20.40 |
| 8. | **கணினிமயமாக்கல்:** மாவட்டங்கள், உட்கோட்டங்கள், தனிப்பிரிவுகள், மாவட்டங்களில் 1000 காவல் நிலையங்களுக்கும், சென்னையில் அனைத்து காவல்நிலையங்களுக்கும் கணினி மற்றும் உபகரணங்களை வழங்குதல். | 10.55 |
| 9. | **தடய அறிவியல் ஆய்வகம்/விரல் ரேகைப் பதிவுக்கூடம்:** தடய அறிவியல் ஆய்வக மண்டலப் பிரிவுகள் மற்றும் தலைமை இடத்திற்கும், விரல்ரேகைப் பதிவு கூடத்திற்கும் தேவையான உபகரணங்கள், வாகனங்கள் வாங்குதல். | 3.96 |
| | மொத்தம் | 272.40 |

மொத்த நிதி ஒதுக்கீடான 272.40 கோடியை பல்வேறு இனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விவரங்கள்.

6 – காவல்துறையை நவீனமயமாக்குதல்

நிதி ஒதுக்கீடு, ரூபாய்
கோடிகளில்
மேம்பாட்டு முனைப்பம்சங்களின் சதவீதங்கள்






## அத்தியாயம்–7

## வாகனப் போக்குவரத்து

(அ) காவல்துறைப் பணிக்கு வாகனங்கள் மிகவும் இன்றியமையாததாகும்
2002–2003 ஆம் ஆண்டில் 1,244 புதிய வாகனங்கள் (பழைய வாகனங்களுக்கு பதிலாக வழங்கப்படும் புதிய வாகனங்கள் உள்பட) வாங்கப்பட்டன. மேலும், 136 வாகனங்கள் கூடுதலாக வாங்குவதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. இந்த கூடுதல் வாகனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு விரைவில் வழங்கப்படும்.

(ஆ) 1.1.2002 அன்று காவல்துறையில் 7,433 ஆக இருந்த வாகனங்களின் எண்ணிக்கை 28.2.2003 அன்றைய நிலவரப்படி 8,677 ஆக உயர்ந்துள்ளது.

(இ) வாகனங்கள் கீழ்க்கண்டவாறு இனவாரியாக பிரித்துக் காட்டப்பட்டுள்ளது.



[2003 ஏப்ரல் 8

**தமிழ்நாடு காவல் போக்குவரத்துப் பணிமனை**

3-7-1973 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை (நிலை) எண் 1794-ன்படி சென்னை மாநகர காவல் துறை, சிறப்புக் காவல் படைப் பிரிவு ஆகியவற்றின் நலனுக்காக, போக்குவரத்துப் பணிமனையுடன் கூடிய பயிற்சிப் பள்ளி ஒன்று ஆவடியில் 7-1-1976 முதல் இயங்கி வருகிறது. 23-1-1998 ஆம் நாளிட்ட உள் (காவல்-13) துறையின் அரசாணை (நிலை) எண் 141-ன்படி திருச்சிராப்பள்ளியில் காவல் துறை வட்டார போக்குவரத்துப் பணிமனை ஒன்று 10-3-1988 முதல் செயல்பட்டு வருகிறது. காவல் துறை அனைத்து ரக வாகனங்களில் ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கத் தேவையான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இப்பணிமனைகளில் வைக்கப்பட்டுள்ளன. இவ்விரு பணிமனைகளிலும் காவல் துறை வாகனங்களை பழுதுபார்ப்பதற்கு பராமரிப்பு நிலையங்களும் உள்ளன.

இப்பணிமனைகளில் ஒப்பளிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:-

ஆவடி—107 (ஒரு பணி மேலாளர் மற்றும் ஒரு தானியங்கி வாகன பொறியாளர் உட்பட)

திருச்சி-31

2002ஆம் ஆண்டில் இரண்டு பணிமனைகளிலும் 2025 பழுது நீக்கும் வேலைகளும், 935 பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-8

### நலத் திட்டங்கள்

**1. உணவுப்பொருட்கள் மானிய விலையில் வழங்கும் திட்டம்**

இத்திட்டம் 1-10-1980 முதல் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கென காவல் துறையில் ஒரு நலத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. மண்ணெண்ணெய் உட்பட 9 அத்தியாவசியப் பொருட்கள், சந்தை விலையைவிடக் குறைவாக, அதாவது 72 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.2.27 கோடி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.



2003 ஏப்ரல் 8]

**2. தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம்.—**

அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்களுக்கு பண உதவியும், இதர உதவிகளும் செய்யும் நோக்கத்தோடு, 1957ஆம் ஆண்டில் தமிழ்நாடு காவல் துறை கருணைக் கொடைத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் அரசிதழ் பதிவு பெறாத காவல் பணியாளர்கள் தாங்களாகவே முன் வந்து ஓராண்டுக்கு ரூ.60-லிருந்து ரூ.300 வரை ஆண்டு சந்தாவாக பணம் செலுத்துகின்றனர். இதுதவிர, A மற்றும் B பிரிவு அதிகாரிகள் கொடுக்கும் நன்கொடையும் இதில் அடங்கும். 2002-2003 ஆம் ஆண்டில் அரசு ரூ.50 இலட்சம் வழங்கி உள்ளது. கீழ்க்கண்டவற்றிற்காக, இத்திட்டத்திலிருந்து பண உதவி அளிக்கப்படுகிறது.—

(அ) இறந்து போன காவல் பணியாளர்களின் பதவி நிலை கருதாது அவர்களது வாரிசுகளுக்கு ரூ.10,000/- பண உதவி செய்யப்படுகிறது.

(ஆ) குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரைச் சார்ந்துள்ளவர்கள் இறந்து போனால், ரூ.5000/- வழங்கப்படுகிறது.

(இ) தமிழ்நாடு காவலர் நலநிதி மற்றும் மருத்துவச் செலவை திரும்பப் பெறும் திட்டத்திற்குள் வராத நோய்களை குணப்படுத்துவதற்குண்டான அசாதாரணமான சூழ்நிலையில், சந்தாதாரரின் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.5000/- வழங்கப்படுகிறது.

(ஈ) உயர் கல்விக்காக C மற்றும் D பிரிவைச் சார்ந்த சந்தாதாரரின் வாரிசுகளுக்கு ரூ.2000/-லிருந்து ரூ.7500/- வரை அளிக்கப்படுகிறது.

2001-2002 ஆம் ஆண்டில் 3,865 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1.37 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் மேற்கண்ட காரணங்களுக்காக 4,110 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.1.56 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு காவலர் நல வாழ்வுத் திட்டம்**

இத்திட்டம் காவல் ஆய்வாளர்கள் வரையிலான அனைத்துப் பணியாளர்களுக்கும், அவரைச் சார்ந்திருப்போருக்கும் நிதி உதவி அளிப்பதற்கென 1995-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் உறுப்பினர்களாக

[2003 ஏப்ரல் 8

உள்ளவர்கள் மாதச் சந்தாவாக ரூ.15/- செலுத்தி வருகின்றனர். இதுவரையில், 13 வகையான அறுவைச் சிகிச்சை/இதர சிகிச்சைக்கு என சந்தாதாரர்களுக்கு ரூ.1.5 இலட்சம் வரை நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. தனது பங்காக, ஓராண்டிற்கு ஒரு கோடி என அரசும் நன்கொடை அளித்து வருகிறது. இத்திட்டத்தில் பயன் பெற தகுதியுடையவர்களின் மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கென 75 விழுக்காட்டுத் தொகை முன்பணமாக அளிக்கப்படுகிறது.

### 4. காவல் பணியாளர்களுக்குக் குழு காப்பீட்டுத் திட்டம்

காவலர் முதல் காவல் துறை தலைமை இயக்குநர் வரையிலான அனைத்துப் பணியாளர்களும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். பணியாளர்கள் இறந்து போனால் (தற்கொலை, இயற்கை மரணம் தவிர) ரூ.1 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரையில் அவர்களது வாரிசுதாரர்களுக்கு அளிக்கப்படுகிறது. 27-12-1993ஆம் நாளிட்ட உள் (காவல்-12) துறையின் அரசாணை (நிலை) எண்.1833-ன்படி 1993 ஆம் ஆண்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2002-2003ஆம் ஆண்டில் காவல் பணியாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### 5. தமிழ்நாடு அதிரடிப்படைப் பிரிவு/இதர தனிப்பிரிவு காவல் பணியாளர்களுக்குக் குழு காப்பீட்டுத் திட்டம்

தமிழ்நாடு அதிரடிபபடைப் பள்ளி, அதிரடிப்படைப் பிரிவு, அதிவிரைவுப்படை, சிறப்பு அதிரடிப்படை, ஒற்றாய்வுத் துறை, பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றில் உள்ள பணியாளர்கள், பணியிலிருக்கும்போது விபத்தில் உயிர் துறக்க நேரிட்டால், இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக ரூ.10 இலட்சம் வழங்கப்படுகிறது.

### 6. கருணைத் தொகை வழங்குதல்

காவல் துறையினருக்கு உத்வேகம் அளித்து, அவர்கள் தைரியமாகவும், ஈடுபாட்டுடனும் பணியாற்ற வேண்டுமென்ற குறிக்கோளோடு, 23-4-1979 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை (நிலை) எண். 1057-ன் படி கருணைத் தொகை வழங்கும் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்தியது. மரணம் ஏற்பட்டால் ரூ.10 ஆயிரமும், நிரந்தரமாக ஊனம் ஏற்பட்டால் ரூ.5 ஆயிரமும், காயம் ஏற்படுவோருக்கு அதன்



2003 ஏப்ரல் 8]

தன்மைக்கு ஏற்ப ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் மூவாயிரம் வரையிலும் இத்திட்டத்தின்கீழ் கருணைத் தொகை காவல் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. 13-8-2001 ஆம் நாளிட்ட உள் துறையின் அரசாணை (நிலை) எண். 762-ன்படி கருணைத் தொகையின் அளவு கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (அ) இறப்பு | — | 5 இலட்சம் |
| (ஆ) கை கால் இழப்பு, கண்பார்வை இழப்பு போன்ற நிரந்தர ஊனம் ஏற்பட்டால் | — | 1 இலட்சம் |
| (இ) கொடுங்காயம் | — | 20 ஆயிரம் |
| (ஈ) சிறுகாயம் | — | 10 ஆயிரம். |

பணியில் வீர தீரச் செயல் புரிந்து உயிர் துறக்கும் காவல் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இறந்தவர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தை, பணிக்காலம் முடியும் வரையில், குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும்.

### 7. தொழிற்சார்ந்த கல்வியில் இட ஒதுக்கீடு

வீரதீரச் செயல்புரிந்து உயிரிழக்கும் காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கென, மருத்துவக் கல்வியில் 3 இடங்களும், பொறியியல் கல்வியில் 3 இடங்களும், விவசாயத் தொழில்சார் கல்வியில் 3 இடங்களும், சட்டக் கல்வியில் 2 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

### 8. பரிசுத் திட்டம்

ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும், மாநகரத்திலும் பணிபுரியும் ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களின் குழந்தைகளில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்புகளின் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களில் வரும் சிறந்த குழந்தைகளுக்கு பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படுகின்றன:—

[2003 ஏப்ரல் 8

| நிலை (ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் மாநகரிலும்) | பத்தாம் வகுப்பு | பன்னிரெண்டாம் வகுப்பு |
|---|---|---|
| முதல் இடம் | ரூ. 6,000/- | ரூ. 7,000/- |
| இரண்டாம் இடம் | ரூ. 4,000/- | ரூ. 5,000/- |
| மூன்றாம் இடம் | ரூ. 2,000/- | ரூ. 3,000/- |

2002-2003ஆம் ஆண்டில் 215 காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு ரூ.9.70 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 5-9-2002 அன்று சென்னையில் நடைபெற்ற விழா ஒன்றில், மரபையும் மீறி காவல் பணியாளர்களின் குழந்தைகளுக்கு எனது கரங்களாலேயே பரிசுகளை வழங்கி சிறப்பித்தேன்.

**9. தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு கல்வி உதவித் தொகை திட்டம்**

1962ஆம் ஆண்டில் இத்திட்டம் துவக்கப்பட்டு அரசிதழ் பெறாத அமைச்சுப் பணியாளர்கள் மற்றும் காவல் பணியாளர்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் அல்லது பணியில் மரணம் அடைந்தவர்களது குழந்தைகளுக்கும் ஓய்வு பெற்ற நாளிலிருந்து அல்லது மரணம் அடைந்த நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 4,140 மாணவர்களுக்கு ரூ.1,56,60,500/- வழங்கப்பட்டுள்ளது.

**10. கல்விக்கான உதவித் தொகை சிறப்பு நிதி**

காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள காவல் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வி உதவிக்காக சிறப்பு நிதி வழங்கப்படுகிறது. சிறப்புப் பாதுகாப்புக் குழு பணியாளர்கள் அளித்த ரூபாய் 4 இலட்சம் மற்றும் அரசு அளித்த ரூபாய் 6 இலட்சம் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதிக் கழகத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளது 22-7-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-9) துறையின் அரசாணை (நிலை) எண் 633-ன்படி இந்த முதலீட்டுத் தொகையானது ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாகவும், கல்விக்கான உதவித் தொகை பெறுவோரின் எண்ணிக்கை 6-லிருந்து 9-ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. காவல்



2003 ஏப்ரல் 8]

பணியாளர்களின் பிள்ளைகளுடைய தொழிற்கல்வி படிப்புகளுக்கான நிதியுதவி இந்த முதலீட்டின் மூலம் கிடைக்கும் வட்டியிலிருந்து வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு கல்வி உதவித் தொகைத் திட்டத்தின்படி முதலிடம் பெற்ற சிறந்த மாணவனுக்கு ரூ.40,000/- வீதமும் அதற்கடுத்த 5 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு, ஒரு மாணவனுக்கு ரூ.20,000/ வீதமும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 2002-2003ஆம் ஆண்டில் ஒன்பது மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்றனர்.

**11. இறந்தவர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம்**

அரசுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறந்து போனால் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கு பணி நியமனங்கள் வழங்கப்படுகின்றன. 2002-2003ஆம் ஆண்டில் இறந்தவர்களின் வாரிசுகளுக்காக அமைச்சுப் பணியில் 44 பணி நியமனங்களும் (இளநிலை உதவியாளரும் தட்டச்சரும்-30 மற்றும் 14 ஆயாக்கள்) பெண் காவலர்கள் மற்றும் காவலர்களாக 216 பணியிடங்களும் (பெண் காவலர்-24 முதல்நிலைக் காவலர்-192) நிரப்பப்பட்டன. இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள் காத்திருப்போரின் பட்டியலிலிருந்து 805 பேர் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர்களாகவும், அலுவலக உதவியாளர் காத்திருப்போர் பட்டியலிலிருந்து 225 பேர் வீட்டு உதவியாளர்களாகவும் மற்றும் சமைப்போர் மற்றும் சலவைக்காரர் காத்திருப்போர் பட்டியலிலிருந்து 63 பேர் துப்புரவுப் பணியாளர்களாகவும் 21-2-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-15) துறையின் அரசாணை (நிலை) எண்.989-ன்படி பணி நியமனம் செய்யப்பட்டனர். 7-7-2002ஆம் நாளிட்ட உள் (காவல்-15) துறையின் அரசாணை (நிலை) எண் 617-ன்படி இளநிலை உதவியாளர்கள்/அலுவலக உதவியாளர்கள்/ இரண்டாம் நிலைக் காவலர்கள் காத்திருப்போர் பட்டியலிலிருந்தும் இந்த 249 நபர்களை நியமனம் செய்ய ஆணையிடப்பட்டிருக்கிறது.

**12. காவலர் மருத்துவமனைகள்**

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி, சேலம், பரங்கிமலை, கடலூர், வேலூர், விருதுநகர், ஆவடி மற்றும் மணிமுத்தாறு ஆகிய இடங்களில் காவல் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களின் மருத்துவ வசதிக்காக 11 காவலர் மருத்துவமனைகள் உள்ளன.

[2003 ஏப்ரல் 8

## அத்தியாயம்-9

### காவலர் வீட்டு வசதி மற்றும் கட்டடங்கள்

காவல் துறையின் அனைத்து கட்டுமானப் பணிகளும் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை பொதுப் பணித் துறையால் கவனிக்கப்பட்டு வந்த காவல் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் சிறப்பு பராமரிப்பு போன்றவையும் 1998 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டன. காவல் பணியாளர்களுக்கென "சொந்த வீடு பெறுவீர்" திட்டத்தின் கீழ் வாங்க, தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், பல்வேறு இடங்களில் குடியிருப்புகளைக் கட்டும் பணியில் ஈடுபட்டுள்ளது.

காவலர் குடியிருப்புகளைத் தவிர, மாவட்ட காவல் அலுவலகம், சரக அலுவலகம், ஓய்வு இல்லங்கள், காவல் நிலையங்கள் போன்ற குடியிருப்பு அல்லாத கட்டடங்களைக் கட்டும் பணியையும் காவலர் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டுள்ளது.

தற்போது கட்டுமானப் பணியில் உள்ள காவல் நிலையங்கள் மற்றும் காவல் குடியிருப்புகள் பற்றிய விவரத்தை கீழ்க்கண்ட வரைபடத்தின் மூலம் காணலாம்:—



2003 ஏப்ரல் 8]

**(அ) காவல் நிலையங்கள்**

**148 மகளிர் காவல் நிலையங்கள் உள்பட மொத்தக் காவல் நிலையங்கள் 1365**




*100 காவல் நிலையங்களுக்கான கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. 100 காவல் நிலையங்களுக்கு கட்டடம் கட்டுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் துவங்கப்பட்டுள்ளன.*

**(ஆ) காவல் குடியிருப்புகள்**

| | |
|---|---|
| *மொத்தமுள்ள காவல் பணியாளர்கள்* | *95,007* |
| *குடியிருப்புகள் வழங்கப்பட்டவை* | *37,434* |
| *குடியிருப்புகள் வழங்கப்பட வேண்டியவை* | *57,573* |




*1992-ஆம் ஆண்டு துவங்கி இதுவரை தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் 15,603 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதுவரையில் காவலர்களுக்கென தேவைப்படும் குடியிருப்பு வசதியில் சற்றேறக்குறைய 43 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. இது அகில இந்திய அளவில் 33 சதவீதம் மட்டுமே ஆகும். தற்போது வருடந்தோறும் 3000 குடியிருப்பு வீதம் கட்டப்பட்டு வருகின்றது.*

**(இ) கட்டுமானப் பணியில் உள்ள ஏனைய கட்டடங்கள்**

*காவலர் ஓய்வு இல்லம்/தங்கும் அறை, மோப்பநாய்கள் வளர்ப்பிடம், தமிழ்நாடு சிறப்புக் காவல் படைக்கான பாதுகாப்பு அமைப்புகள், இடம், மாவட்ட காவல் அலுவலகங்கள், ஆயுதப் படை வளாகம், மகளிர் காவலர்களுக்கான அடிப்படை வசதிகள், விரல் ரேகை பதிவுக்கூட அலுவலகம், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட வடிவமைப்பின் படியான 74 காவல் நிலையங்களுக்கான இருப்பிட வசதிகள், காவல் தகவல் மைய வளாகம் போன்ற கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.*



# அத்தியாயம்-10

## புதிய தொடக்கங்கள்

**1. பணி நியமனம்**

*மொத்தமுள்ள 16,387 காவலர் பதவிக்கான காலி பணியிடங்களில், ஏற்கெனவே 3,872 இரண்டாம் நிலைக் காவலர்கள் முறையாக தேர்வு செய்யப்பட்டு அணிகளுக்கு 2002-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளனர். மேலும் 8,431 இரண்டாம் நிலை ஆண் காவலர்களை பணிக்கு நியமனம் செய்யுமாறு அரசு உத்தாவிட்டதன்பேரில், நியமனப் பணி நடைபெற்று வருகின்றது.*

*மொத்தம் 1,572 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் பயிற்சியில் உள்ளனர். மேலும் 2,306 இரண்டாம் நிலை பெண் காவலர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். மேலும் இது குறித்து, தற்போது அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.*

*961 பெண் காவல் உதவி ஆய்வாளர்களை தெரிவு செய்ய ஏற்கெனவே அரசு உத்தரவிட்டுள்ளது. விரைவிலேயே நியமனப் பணி தொடங்க உள்ளது.*

*641 ஆண் காவல் உதவி ஆய்வாளர்களை தெரிவு செய்வது குறித்த கருத்துரு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.*

**2. பெண் காவலர்களின் நன்மைக்காக குழந்தைக் காப்பகம் அமைத்தல்**

*தங்களது பணிகளை கவனிப்பதோடு குழந்தைகளையும் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள பெண் காவலர்களுக்கு 3-12-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-9) துறையின் அரசாணை (நிலை) எண் 1166-ன்படி முதற்கட்டமாக ஆறு குழந்தை காப்பகங்கள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 27-1-2003 அன்று சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆணையரகங்களுக்கான இந்த குழந்தை காப்பகங்களை நான் திறந்து வைத்தேன். சென்னை நகருக்கு நான்கு ஆயாக்களும், பிற ஐந்து நகரங்களுக்கு, ஒரு நகரத்திற்கு இரண்டு ஆயாக்கள் வீதமும், மாதம் ஒன்றுக்கு ரூ.1500/- தொகுப்பூதியத்தில் பெண் காவலர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஆயாக்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.*

[2003 ஏப்ரல் 8

ஒவ்வொரு காப்பகத்திற்கும் தொட்டில், கேஸ் அடுப்பு, பாத்திரங்கள், பொம்மைகள் ஆகியவற்றை வாங்குவதற்கு தொடரா செலவின வகையில் ரூ.5,000/- ஆண்டொன்றிற்கு வழங்கப்படுகிறது. தொடரும் செலவின வகையில் ஆண்டொன்றுக்கு ரூ.1,08,333/- செலவிடப்படுகிறது.

**3. புலன் விசாரணை திறமைக்கான பதக்கம்**

13-8-2002 ஆம் நாளிட்ட உள்துறையின் அரசாணை (நிலை) எண் 714-ன்படி புலனாய்வில் திறமையாக பணிபுரிபவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இப்பதக்கத்தைப் பெறுவோர், ரொக்க வெகுமதியாக ரூ.5,000/- பெற தகுதியுடையவராகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர், மூன்று துணைக் காவல் கண்காணிப்பாளர்கள், ஐந்து ஆய்வாளர்கள் மற்றும் ஒரு உதவி ஆய்வாளர் ஆகிய 10 காவல் பணியாளர்கள் மேற்கண்ட பதக்கம் பெற தேர்ந்தெடுக்கப்படுவர். புலன் விசாரணையில் ஆர்வம், பணித்திறமை, கடின உழைப்பு ஆகியவற்றில் மிகச்சிறந்து விளங்குபவர்களுக்கு இப்பதக்கம் வழங்கப்படுகிறது. 2003ஆம் ஆண்டில், 10 காவல் பணியாளர்களுக்கு ஒரு சவரன் தங்கத்தினாலான பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

**4. காவல் மண்டலங்களை உருவாக்குதல்**

தற்போதுள்ள 2 காவல் மண்டலங்களை 2002 முதல் நான்கு மண்டலங்களாக, அதாவது சென்னையை தலைமையிடமாகக் கொண்டு வடக்கு மண்டலம், திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு மத்திய மண்டலம், கோவையை தலைமையிடமாகக் கொண்டு மேற்கு மண்டலம், மதுரையை தலைமையிடமாகக் கொண்டு தெற்கு மண்டலம் என்று உருவாக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள இரண்டு காவல் துறைத் தலைவர் பதவிகளைத் தவிர, மேலும் இரண்டு காவல் துறைத் தலைவர் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**5. கூடுதல் விபச்சாரத் தடுப்புப் பிரிவு**

கூடுதல் விபச்சாரத் தடுப்புப் பிரிவு என்ற ஒரு தனிப் பிரிவு, குற்றப் பிரிவு குற்றப் புலானாய்வுத் துறை தலைமையகத்தில் அமைக்கப்பட்டு 13-5-2002 முதல் ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் 14 காவல் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது.



2003 ஏப்ரல் 8]

**6. மின்னணு சுற்றுக்காவல் முறை**

பட்டா/பாயிண்ட் சுற்றுக்காவல் புத்தகங்களுக்கு பதிலாக, மின்னணு சுற்றுக்காவல் முறை என்ற முன்னோடித் திட்டம் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு கட்டடங்களின் சுற்றுச் சுவர்களில், ஒரு சுற்றுக்காவலுக்கு ஐந்து மின்னணு இணைப்புகள் வீதம் பொருத்தப்படுகின்றன. சுற்றுக்காவல் பணியாளர்கள் மற்றும் சோதனை செய்யும் அதிகாரிகள் மின்னணு ரீடர்களை எடுத்துச் செல்கின்றனர். அவை சுற்றுக்காவல் பணியாளர்களின் வருகையைப் பதிவு செய்து கணினி மூலம் தகவல் பெற உதவியாக உள்ளது. இம்மின்னணு சுற்றுக்காவல் முறை, ஒரு மண்டலத்தில் முதற்கட்டமாக அறிமுகப்படுத்தப்படும்.

**7. சென்னை மாநகரில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகள்**

சென்னை மாநகரில் குற்றங்களைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1. குற்றங்களைத் தடுக்கும் பொருட்டு, குற்ற நிகழ்வுகள் குறித்த செயல்வகைகளை அறிதல், பகுப்பாய்வு செய்வது, வட்டார வாகனப் போக்குவரத்து குறித்த விவரங்கள், களவாடப்பட்ட வாகனங்களின் விவரங்கள் அடங்கிய மென்பொருள் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

2. சிறப்பு சுற்றுக்காவல் குழுக்கள், வடக்கு மண்டலம் மற்றும் தி.நகர் பகுதிகள் ஆகியவற்றில், பொதுமக்கள், வியாபாரிகள் துணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தி.நகர் ரங்கநாதன் தெரு முழுவதும் சிசிடிவி மூலம் கண்காணிக்கப்படுகிறது.

3. சுற்றுக்காவல் வாகனங்கள் இப்பணிக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. சென்னை நகரில் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளின் ஊடுருவல்களை தடுத்து நிறுத்தவும் 81 மஞ்சள் படைகள் மற்றும் 81 நீலப் படைகள் முறையே பகல் மற்றும் இரவு நேரங்களில் செப்டம்பர், 2002 முதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

4. சென்னை நகரில் ஒப்பளிக்கப்பட்ட 2,117 ஊர்க்காவல் படையினரில், நாளொன்றுக்கு 250 ஊர்க்காவல் படையினர் வீதம் 500 ஊர்க்காவல் படையினர் சுழற்சி முறையில் இரவு சுற்றுக் காவல் பணியில் அமர்த்தப்பட்டு வருகின்றனர். 6-11-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-14) துறையின்

[2003 ஏப்ரல் 8

அரசாணை எண் 1044-ன்படி அவர்களுக்கு ஒரு தினத்திற்கு ரூ75/-வீதம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமன்றி சென்னை நகரில் இதுவரையில், 814 காவல் நண்பர்கள் குழுவைச் சேர்ந்தவர்களும் இரவு சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

5. வங்கிகள் மற்றும் நகைக்கடைகள் ஆகியவற்றில் குற்றங்களைத் தடுப்பதற்கு அவற்றின் உரிமையாளர்களுக்கு பாதுகாப்பு குறித்து தக்க அறிவுரை வழங்கப்படுகிறது.

## 8. சமுதாயக் காவல்

சமுதாயக் காவல் அமைப்பு என்பது காவல் துறையினருக்கும், பொது மக்களுக்குமிடையே உறவுபாலம் ஏற்படுத்தி, அதன்மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அமைப்பாகும். காவல் பணித் திறன் மேம்பட வேண்டுமென்ற அரசின் குறிக்கோளுக்கிணங்க 1994 ஆம் ஆண்டு காவல் நண்பர்கள் என்ற அமைப்பை நான் தொடங்கி வைத்தேன். பின்னர் இந்த அமைப்பு மாநிலம் முழுவதும் விரிவு படுத்தப்பட்டு, மக்களிடத்தில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதன்மூலம், சர்வதேச அளவில் இந்த அமைப்பு தனித்தன்மை வாய்ந்ததாக அனைவராலும் பாராட்டப்படுகிறது. இந்த அமைப்பு அனைவரின் நம்பிக்கையினையும் ஈட்டி சமுதாயக் காவல் அமைப்பு முறையில் புதிய முயற்சிகள் உருவாகும் வகையில், மாநிலமெங்கும் நிலைபெற்றுள்ளது.

சென்னை மாநகரம், வேலூர், ஈரோடு, விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் இதர மாவட்டங்களில் 'காவல் நண்பர்கள்' Friends of Police-குழுக்கள் சுறுசுறுப்பாக செயல்பட்டு, குற்றத் தடுப்புப் பணியில் உதவியாக இருந்து வருகின்றன. சிறப்புக் காவல் படையினர், சென்னை நகர இரவு நேர ரோந்து ஊர்க்காவல் படையினர், சாலைப் பாதுகாப்பு சுற்றுக்காவல் மற்றும் சென்னை, திருச்சி ஆகிய இடங்களில் சுற்றுக் காவல் பணி அதிகாரிகள் நியமனம், பகுதி குழுக்கள், நகர விழிப்புணர்வு குழுக்கள், கோவையில் குடிசைப் பகுதிகளை தத்தெடுக்கும் திட்டம் ஆகியன சமுதாயக்காவல் அமைப்பின் முக்கிய முயற்சிகளாகும். காவல் துறையினரின் பல்வேறு பணிகளில் உதவுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே சமுதாயக் காவல் அமைப்பாகும். இப்புதிய அணுகுமுறை, தமிழ்நாடு காவல் துறைக்கு சர்வதேச அளவில் பல விருதுகளைப் பெற்றுத் தந்துள்ளது.



2003 ஏப்ரல் 8]

2002 ஆம் ஆண்டுக்கான, காவல் பயிற்சி மற்றும் மேம்பாட்டில் புதிய முயற்சிகளுக்கான இங்கிலாந்து ராணியின் புகழ்மிக்க விருது, இங்கிலாந்தைச் சாராத இரு காவல் துறை அதிகாரிகளுக்கு இம்முறை வழங்கப்பட்டுள்ளது. அந்த இரு அதிகாரிகளும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த £15,000 மதிப்புள்ள விருதானது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை காவல் துறையினருக்கு காமன்வெல்த் அளவிலான போட்டியின் முடிவில் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மகளிர் காவல் நிலையப் பணியாளர்களுக்கு, குடும்ப சச்சரவுகளைத் தீர்ப்பதிலும், பிரச்சினைகளை கலந்துரையாடி, ஆலோசனை நல்குவதிலும், பதிவேடுகளைப் பராமரிப்பதிலும் பயிற்சி அளிக்க இணைய தளத்தை அடிப்படையாகக் கொண்ட மின்னணு பயிற்சி முன்மாதிரி திட்டத்தை அறிமுகப்படுத்தி, லஞ்ச ஒழிப்புப் பிரிவு, காவல் துறைத் தலைவர், திரு. கே. இராதாகிருஷ்ணன் இகாப. அவர்கள் விருது பெற்றார். காவல் நண்பர்கள் குழுவுக்கென பன்முக ஆவணத் தயாரிப்பு மற்றும் பயிற்சி மையம் ஏற்படுத்துதல் என்ற புதிய திட்டத்திற்காக காவல் துணைத் தலைவர் (நுண்ணறிவுப் பிரிவு), திரு. பிரதீப் வி. பிலிப் இ.கா.ப. அவர்களுக்கு இங்கிலாந்து ராணி விருது வழங்கப்பட்டது. திருச்சியில் சமுதாயக் காவல் என்ற மற்றொரு சிறந்த திட்டத்திற்காக சென்னை நகர இணை ஆணையர் திரு. ஜேகே. திரிபாதி, இ.கா.ப., அவர்கள் 2002 ஆம் ஆண்டுக்கான காமன் வெல்த் விருது பெற்றார். சமுதாயக் காவல் அமைப்பை உருவாக்கியதற்காக, திரு.கே. இராதாகிருஷ்ணன் மற்றும் திரு. ஜே.கே. திரிபாதி ஆகியோர் சர்வதேச காவல் துறை சங்கத்தின் 2001-2002 ஆம் ஆண்டுக்கான விருதினை பெற்றனர். இத்தகைய புதிய அணுகுமுறைகளும் அதற்காக பெறப்பட்ட விருதுகளும் இந்திய காவல் துறையினரின் பணித்திறமை மட்டுமின்றி உலக அளவிலான காவல் துறையின் செயல்பாடுகளையும் பறைசாற்றுவதாக உள்ளது.

## 9. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற (திருத்தச்) சட்டம்

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்கின்ற சட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவுகளை ஆய்வு செய்து, நீதியரசர் திரு. எம்.எம். இஸ்மாயில் தலைமையிலான மாநில சட்டக் குழு அளித்த பரிந்துரைகளுக்கு வடிவம் கொடுக்கும் முயற்சிக்கு, இவ்வரசு முன்னுரிமை கொடுத்தது. "பெண்ணிடம் குறும்பு செய்தல்"

என்ற சொற்றொடர் தொடர வேண்டுமென்று பரிந்துரைக்கப் பட்டிருந்தபோதும், பெண்களுக்கு இழைக்கப்படும் தீமைகளை கருத்தில்கொண்டு தக்க சொற்றொடர் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று இந்த அரசு முனைப்பு காட்டியது.

2. கீழ்க்கண்ட சட்டத் திருத்தங்களின் மூலம், பெண்ணிடம் குறும்பு செய்வதைத் தடை செய்கின்ற சட்டத்தில் இருந்த குறைபாடுகள் களையப்பட்டுள்ளன:—

(1) பெண்ணிடம் குறும்பு செய்வது என்ற சொற்றொருடக்கு பதிலாக, "பெண்ணிற்கு துன்பம் விளைவித்தல்" என்ற சொற்றொடர் சேர்க்கப்படுகிறது. இக்குறிப்பிட்ட சொற்றொடர் மாற்றமானது குற்றத்தின் கடுமையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

(2) பெண்ணிற்கு துன்பம் விளைவிக்கும் குற்றங்களுக்கு, ஒரு வருட சிறைத் தண்டனை அல்லது அபராதம் ரூ.10 ஆயிரம் அல்லது இரண்டும் என்று முன்பிருந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது, சிறைத்தண்டனை 3 ஆண்டுகளாகவும், அபராதத் தொகை ரூ.10 ஆயிரத்திற்கு குறையாமலும் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

(3) மரணம் மற்றும் தற்கொலை சம்பவங்களில் துன்புறுத்தலால் நிகழ்ந்த மரணம் மற்றும் தற்கொலை நிகழ்ந்ததற்கான சாத்தியக் கூறுகளை எல்லா நிகழ்வுகளிலும் ஆய்வு செய்யும் வகையில் 4(ஏ), 4(பி) மற்றும் 4(சி) என்ற புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

3. தெரிந்தோ தெரியாமலோ, கொடுமைப்படுத்தி மரணம் ஏற்படுத்தும் குற்றத்தில் கீழ்க்கண்டவாறு தண்டனைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன:—



| | | |
|---|---|---|
| 4(ஏ) | கொடுமைப்படுத்தி மரணம் அ) (உள்நோக்கத்தோடு செய்தல்) | ஆயுள் தண்டனை மற்றும் ஐம்பது ஆயிரத்திற்கு குறையாமல் அபராதம் |
| | ஆ) தெரிந்தே செய்தல் | 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் 50 ஆயிரத்திற்கு குறையாமல் அபராதம் |
| | இ) கண்மூடித்தனமான செயல்களுக்கு | 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் 25 ஆயிரத்திற்கு குறையாமல் அபராதம் |
| 4(பி) | கொடுமை காரணமாக தற்கொலை/குற்றத்தில் சம்பந்தப்பட்டிருந்தால் | 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் 50 ஆயிரத்திற்கு குறையாமல் அபராதம் |

4. புதிய பிரிவான 4சி-ன்படி கொடுமைப்படுத்தி மரணம் விளைவித்தல் மற்றும் தற்கொலை செய்ய தூண்டுதல் ஆகிய நிகழ்வுகளில் தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு குற்றஞ்சாட்டப்பட்டவரைச் சார்ந்ததாகும்.

5. தண்டனைப் பிரிவு 5 மற்றும் 6 நீடிக்கிறது. ஆனால் பிரிவு 6-ன்கீழ், பொதுப் பணி ஊர்தியொன்றில் அல்லது கலமொன்றில் பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலை தடுக்கும் பொருட்டு, அந்த ஊர்தியின் அல்லது கலத்தின் பணியாளர்கள் தாங்கள் பொருத்தமென நினைக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். ஆனால் சட்டத் திருத்தத்திற்கு முன்னர் இது கட்டாயமானதாக இல்லை.

6. சட்டத் திருத்தப் பிரிவு 7(ஏ)-ன் கீழ், பாதிக்கப்பட்டவருக்கோ அல்லது அவரது வாரிசுதாரருக்கோ இழப்பீட்டுத் தொகை குற்றவாளிகளிடமிருந்து கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், நீதிமன்றமே இதில் இறுதி முடிவெடுக்க முடியும்.

7. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நீதி வழங்கும் வகையில் பயனுள்ளதாகவும் மற்றும் இக்குற்றங்கள் நேராவண்ணம் தடுக்கும் வகையில் கடுமையானதாகவும், இச்சட்டத் திருத்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

8. திருத்தப்பட்ட இந்த "2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்ணிற்கு துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற (திருத்தச்) சட்டம்" என்ற சட்டம் 16-12-2002 முதல் மேற்படி சட்டத் திருத்தங்களுடன் செயல்பாட்டுக்கு வந்தன.

## 10. உணவுப்படி உயர்த்துதல்

சென்னை மாநகர காவல் துறையில் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி முறையே ரூ.55/-, 50/- மற்றும் 45/-லிருந்து ரூ.80/-ஆக உயர்த்தப்படுகிறது என 2002-2003 ஆம் ஆண்டு காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான எனது பதிலுரையின் போது அறிவித்திருந்தேன். இந்த அறிவிப்பு 5-8-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-13) துறையின் அரசாணை (நிலை) எண் 679-ன்படி ரூ.9.68 கோடி செலவில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

## 11. தலைமைக் காவலர்/காவலர் குடியிருப்பின் விஸ்தீரணத்தை 450 சதுர அடியில் இருந்து 550 சதுர அடியாக உயர்த்துதல்

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்கு 450 சதுர அடி அளவிலான குடியிருப்பைக் கட்டியது. இது அவர்களது குடும்பத்திற்கு போதுமானதாகவும், வசதியாகவும் இல்லை. காவலர்களுக்கு குடியிருப்பை வசதியுள்ளதாக மாற்றித் தரவேண்டுமென்ற அடிப்படையில் 2002-2003 ஆம் ஆண்டுக்கான காவல் துறை மானியக் கோரிக்கையின் போது, காவலர் குடியிருப்பின் விஸ்தீரணம் 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக அதிகரித்து கட்டித் தரப்படுமென்று நான் அறிவித்திருந்தேன். அதன்படி அரசாணை எண் 606 உள் (காவல்-10) துறை நாள் 12-7-2002இன்படி காவலர் குடியிருப்பின் விஸ்தீரணத்தை 450 சதுர அடியிலிருந்து 550 சதுர அடியாக உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## 12. போக்குவரத்துக் காவலர்களுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக மூன்று டெரிக்காட்டன் சட்டைகள் வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து போக்குவரத்துக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் கூடுதலாக மூன்று டெரிகாட்டன் சட்டைகள் வழங்கப்படுமென்று நான் அறிவித்ததையொட்டி, 25-6-2002 ஆம் நாளிட்ட உள் (காவல்-13) துறையின் அரசாணை (நிலை) எண் 541-இன்படி ரூ.13.37 லட்சம் செலவில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது.



## 13. வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தல் மற்றும் அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பிரிவு

எனது அறிவிப்பின்படி, 9-9-2002-ஆம் நாளிட்ட உள்துறையின் அரசாணை எண் 826-ல் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு தலைமைச் செயலக பாதுகாப்புப் பிரிவிலும், ஆறு ஆணையரகங்களிலும் வெடிகுண்டு கண்டுபிடித்தல் மற்றும் அதனைச் செயலிழக்கச் செய்தல் பிரிவுகளை ரூ.3,71,750/- செலவில் அமைத்திட ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 14. 10 காவல் நிலையங்களில் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

எனது அறிவிப்பின்படி, மக்கள் தொகை உயர்வு குற்ற நிகழ்வுகள், சாதி மோதல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பின்வரும் ஐந்து காவல் நிலையங்களுக்கு பணியாளர்களை அதிகரித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது:-

| வ. எண். | நகரம் மாவட்டம் | காவல் நிலையம் பெயர் | உதவி ஆய்வாளர் | த.கா. | மு.நி. கா. | இ.நி. கா. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மதுரை நகர் | அண்ணா நகர் | 1 | 2 | 3 | 6 | 12 |
| 2 | விழுப்புரம் | வானூர் | 1 | 2 | 3 | 6 | 12 |
| 3 | காஞ்சிபுரம் | திருப்பெரும்புதூர் | 1 | 2 | 3. | 6 | 12 |
| 4 | தூத்துக்குடி | தட்டப்பாறை | 1 | 2 | 3 | 6 | 12 |
| 5 | தூத்துக்குடி | தூத்துக்குடி மேற்கு | 1 | 2 | 3 | 6 | 12 |

போக்குவரத்துக் கட்டுப்பாட்டை திறமையாகக் கையாள கீழ்க்காணும் ஐந்து காவல் நிலையங்களுக்கு பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அரசாணை பிறப்பித்துள்ளது.

| வ. எண். | நகரம் மாவட்டம் | காவல் நிலையம் பெயர் | உதவி ஆய்வாளர் | த.கா. | மு.நி. கா. | இ.நி. கா. | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | திண்டுக்கல் | ஒட்டன்சத்திரம் | 1 | 2 | 2 | 4 | 9 |
| 2 | விழுப்புரம் | விழுப்புரம் நகர் | 1 | 2 | 2 | 4 | 9 |
| 3 | திருநெல்வேலி | குற்றாலம் | 1 | 2 | 2 | 4 | 9 |
| 4 | மதுரை | திருப்பரங்குன்றம் | 1 | 2 | 2 | 4 | 9 |
| 5 | நாகப்பட்டினம் | வேளாங்கண்ணி | 1 | 2 | 2 | 4 | 9 |

[2003 ஏப்ரல் 8

**15. ஆண்டுதோறும் 20 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறுபட்ட பயிற்சித் திட்டங்கள்**

25-4-2002 அன்று, நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரின்போது, காவலர் பொதுமக்கள் உறவை மேம்படுத்தவும், குறுகிய காலப் பயிற்சிகள், தேசிய சர்வதேச கருத்தரங்குகள்.

பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளுக்கென ரூ.20 லட்சம் ஒதுக்கப்படும் என்றும், காவல் துறை இயக்குநருக்கு ரூ.5000/- வரை பணக்கொடை வழங்கிட அதிகாரம் வழங்கப்படுமென்றும் நான் அறிவித்திருந்தேன். 2002-2003 ஆம் ஆண்டுக்கு ரூ.20 லட்சம் ஒதுக்கப்பட்டு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. காவல் துறை இயக்குநர் (பயிற்சி) அவர்கள் மேற்படி பயிற்சிகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டதோடு, கௌரவ பேச்சாளர்களுக்கு அவர்களது தகுதி மற்றும் உரையின் பொருளின் அடிப்படையில் பணக்கொடையாக ரூ.5,000/-வரை வழங்குவதற்கான அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

**16. பகுதி-2 திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டுக்காக கீழ்க்கண்ட திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.**

(1) திருநெல்வேலி நகரத்தில் 50 படுக்கை வசதிகள் கொண்ட காவல் மருத்துவமனையில் ரூ.50 லட்சம் செலவில் புறநோயாளிகள் பிரிவு ஒன்றை அமைத்தல்

(2) காவல் துறைக்கு சொந்தமான 3,457 ஒரு அடுக்கு மாடிக் கட்டடங்கள் மற்றும் 384 பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் ஆகியவற்றில் ரூ.271.25 லட்சம் செலவில் மழை நீர் சேகரிப்பு மையங்கள் அமைத்தல்.

(3) திருச்சிராப்பள்ளி மற்றும் தேனி மாவட்ட காவல் அலுவலகங்களை ரூ.600 லட்சம் மதிப்பீட்டில் கட்டுதல்

(4) அலுவலகப் பணி நிமித்தம் சென்னைக்கு வரும் மூத்த காவல் துறை அதிகாரிகளுக்கு வசதியாக, 8 அறைகள் கூடுதலாக ரூ.24 லட்சம் செலவில் காவல் துறை அதிகாரிகள் கட்டடத்தில் அமைத்தல்



2003 ஏப்ரல் 8]

(5) சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் உள்ள அதிகாரிகள் உணவகத்தில் ரூ.25 லட்சம் செலவில், பழுது பார்ப்புப் பணியை மேற்கொள்ளுதல் மற்றும் ஆண்டுதோறும் ரூ.5 லட்சம் செலவில் பராமரிப்புப் பணியை செய்தல்

(6) சமுதாயக் காவல் அமைப்பை ஏற்படுத்த ஆண்டொன்றிற்கு 29 காவல் மாவட்டங்களுக்கும் மற்றும் 6 ஆணையரகங்களுக்கும் ரூ.17.50 லட்சம் தொடரும் செலவினமாக ஒதுக்கீடு செய்தல் (தலா ரூ.50,000/-வீதம்)

(7) 29 காவல் மாவட்டங்களுக்கும், 6 ஆணையரகங்களுக்கும் ரூ.280 லட்சம் செலவில் மீட்பு வாகனங்கள் வாங்குதல் (வாகனம் ஒன்றுக்கு ரூ.8 லட்சம் வீதம்)

## அத்தியாயம்-11

**மாண்புமிகு முதலமைச்சர் ஏற்பாடு செய்த "குறைகள் தீர்க்கும் நாள்" நிகழ்ச்சி**

மேற்கூறிய நலப்பணிகள் மட்டுமின்றி, அனைத்துப் பதவிகளிலும் உள்ள காவல் துறை பணியாளர்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக 2002 ஆம் ஆண்டு ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நான் நேரடியாக காவல் துறையினரின் குறைகளைக் கேட்டேன். அவற்றை உடனடியாகக் களைய நடவடிக்கைகள் மேற்கொண்டேன். ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் காவல் துறையினரின் குறைகளை நேரடியாகக் கேட்டு, அதனைக் களைய சீரிய நடவடிக்கைகளை எடுப்பது இதுவே முதல் முறையாகும். 8395 காவல் துறைப் பணியாளர்கள் என்னிடம் மனுக்களை அளித்தனர். ஏறத்தாழ அந்த மனுக்கள் அனைத்தின் மீதும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனைத் தொடர்ந்து, குறைகளை கேட்டறிந்து தீர்வு செய்யும் முறைகள், துறை சார்பான நடவடிக்கைகளோடு ஒன்றிணைக்கப்பட்டு, குறைகளைக் களையும் பணியானது, காவல் துறை தலைமை இயக்குநரிலிருந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் தளவாய் ஆகிய உயர் அதிகாரிகள் வரை இதுபோன்ற குறை தீர்க்கும் நாட்கள் நடத்தப்பட்டு, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மனு குறித்த புள்ளி விவரங்கள்**

| வ.எண் | மண்டலம் | பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தெற்கு மண்டலம் | 1918 |
| 2 | மேற்கு மண்டலம் | 1712 |
| 3 | மத்திய மண்டலம் | 1079 |
| 4 | வடக்கு மண்டலம் | 1771 |
| 5 | சென்னை மாநகர் | 1915 |
| | மொத்தம் | 8395 |

## அத்தியாயம் - 12

**தடய அறிவியல் துறை**

தமிழகத்தில் இயங்கி வரும் தடய அறிவியல் துறையானது ஆசியாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு அமைப்பாகும். நீதி நடைமுறை நிர்வாகத்தின் அனைத்துத் தரப்பிலும் இத்துறையின் பணி பயனுள்ளதாக அமைந்துள்ளது.

இத்துறையின் பிரதான ஆய்வகம் சென்னையில் 15 உட்பிரிவுகளுடன் இயங்கி வருகிறது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவில் மரபணு பரிசோதனையும் நடத்தப்பட்டு வருகிறது. மதுரை, கோவை, தஞ்சை, திருநெல்வேலி, சேலம், வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள ஒன்பது மண்டல ஆய்வகங்கள் உயிரியல், நச்சியல், மதுவிலக்கு, போதை மருந்து, கலால் துறை சம்பந்தப்பட்ட வழக்குகளில் பொருட்களை பகுப்பாய்வு செய்து வருகின்றன. குற்றச் சம்பவ இடத்தில் துரிதமாக விசாரணை மேற்கொள்ளும் வகையில் ஒவ்வொரு மாவட்ட, நகர ஆணையர் அலுவலகங்களில் 32 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் இயங்கி வருகின்றன.

2002-ஆம் ஆண்டில் 69,041 வழக்குகளில் சம்பந்தப்பட்ட 2,20,501 பொருட்கள் இத்துறையால் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. முதுகலை



அறிவியல் பட்டம் (தடய அறிவியல், சுற்றுச்சூழல், நச்சியல்) முதுகலைப் பட்டம் (குற்றவியல்) குற்றவியல் மற்றும் தடய அறிவியலில் முதுகலைப் பட்டயம், முதுகலை மருத்துவப் பட்டம் (தடய அறிவியல் மருத்துவம்) போன்ற வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. நீதித் துறை, காவல் துறை மற்றும் வருவாய்த் துறை பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளும் நடத்தபடுகின்றன.

காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 2001-2002 மற்றும் 2002-2003-ஆம் ஆண்டுகளில் கட்டடங்கள் கட்டுவதற்கும், வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கும் ரூ.11.74 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**நிறைவு**

இந்திய நாட்டின் தலைசிறந்த காவல் படைகளில் ஒன்று என்ற நன் மதிப்பை தமிழ் நாடு காவல் துறை பெற்றுள்ளது. இதனை இந்நிலையில் இருந்து மேலும் மேம்பாடு அடையச் செய்து நம்பகத்தன்மை, செயல்திறன், சீரிய பணியாற்றுதல், கருத்துச் செறிவு இவை அனைத்திற்கும் மேலாக காவல் துறையினர் - பொதுமக்களிடையே நல்லிணக்கம் ஆகிய அம்சங்களில் இந்திய திருநாட்டின் முதன்மையான காவல் படையாக தமிழ் நாடு காவல் துறை விளங்கிட, பன்முனை முயற்சிகளை எனது தலைமையிலான அரசு பதவி ஏற்றது முதல் மேற்கொண்டு வருகிறது. எனது அரசு முன்னிலைப்படுத்தியுள்ள காவல் துறை மேம்பாட்டுப்பணி அனைத்து அம்சங்களிலும், முன்னேற்றம் அடைந்திட ஏதுவான முறையில் திட்டமிட்ட அணுகுமுறையுடன் செயல்படுத்தப்பட்டதால், மிகச்சிறந்த முறையில் அனைவராலும் போற்றத்தக்க வெற்றிகளை ஈட்டியுள்ளதோடு, ஆண்டுதோறும் எடுக்கப்பட்டு வருகின்ற புதிய முயற்சிகள் இத்தகைய தகை சால் செயலாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவிடும் என்பது உறுதி. காவல் பணியில் ஏட்டளவில் மட்டுமின்றி செயல் அளவிலும், செம்மாந்து நிலைத்திட வேண்டும் என்பது தமிழ்நாடு காவல் துறையின் குறிக்கோளாகும்.

## இணைப்பு - 1

### 2002-ஆம் ஆண்டு மற்றும் 2003-ஆம் ஆண்டில் 28.2.2003 வரை காவல்துறையினருக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள்

| பதவி | முதலமைச்சரின் காவலர் பதக்கம் - 2002 | குடியரசுத் தலைவரின் குடியரசு தின பதக்கம்-2002 | | குடியரசுத் தலைவரின் சுதந்திர தின பதக்கம்-2002 | | முதலமைச்சரின் காவல் பதக்கம் 2002 (அண்ணா பதக்கம்) | | மதுவிலக்கு குற்றத்தைக் கட்டுப்படுத்தியதற்காக முதலமைச்சரின் மகாத்மா காந்தி பதக்கம் 2002 | முதலமைச்சரின் வீரதீர செயலுக்கான பதக்கம் | சிறந்த புலனாய்வுக்கான முதலமைச்சரின் பதக்கம் - | முதலமைச்சரின் காவலர் பதக்கம் 2003 | குடியரசுத் தலைவரின் குடியரசு தின விருது | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தகைசால் பணி | மெச்சத்தக்கப் பணி | தகைசால் பணி | மெச்சத்தக்கப் பணி | வீர செயலுக்கான பதக்கம் | சிறப்புப் பணிக்கான பதக்கம் | | | | | தகைசால் பணி | மெச்சத்தக்க பணி |
| | 1 | 2 | | 3 | | 4 | | 5 | 6 | 7 | 8 | 9 | |
| டிஜிபி | - | - | 1 | - | | - | | - | - | - | - | - | - |
| ஏடிஜிபி | - | - | - | - | 1 | - | | - | - | - | - | - | 1 |
| ஐஜிபி | - | - | 1 | - | | - | | - | - | - | - | 1 | - |
| டிஐஜி | - | - | 5 | - | | - | | - | - | - | - | - | 1 |
| எஸ்பி/டிசி | - | - | 2 | - | | - | 1 | - | - | - | -- | - | - |
| ஏடிஎஸ்பி | - | - | 2 | - | 4 | - | 1 | | - | | - | - | - |
| டிஎஸ்பி/ஏசி | - | - | 1 | - | 2 | 1 | 13 | 2 | | 1 | - | 1 | 1 |
| ஆய்வாளர் | - | - | - | - | 1 | 2 | 28 | 2 | 4 | 9 | - | - | 5 |
| உதவி ஆய்வாளர் | - | - | 1 | - | | 3 | 19 | 1 | 4 | - | - | - | - |
| தலைமை காவலர் | 742 (ஆ) 54(பெ) | - | 1 | - | | 4 | 23 | | 4 | - | 1164 (ஆ) 9(பெ) | - | - |
| முதல் நிலை காவலர். | 664 | - | - | - | | 2 | 15 | | 4 | - | 150 | - | - |
| இரண்டாம் நிலை காவலர். | | - | - | - | | 1 | - | - | 1/ | - | | | - |
| மொத்தம் | 1460 | - | 14 | - | 8 | 13 | 100 | 5 | 33 | 10 | 1323 | 2 | 8 |



### இணைப்பு - 1 தொடர்ச்சி

| | 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரசாணை கடித எண் | அரசாணை பல்வகை எண்.29 உள்துறை நாள் 10.1.02 | அரசு கடித எண் எஸ்சி-486-1/02. உள்துறை நாள் 30.1.02 | அரசு கடித எண் எஸ்சி-4551-1/02. உள்துறை நாள் 20.8.02 | அரசாணை எண் 850/ உள்துறை (எஸ்சி). நாள் 13.9.02 | | அரசாணை எண்.200/ மது விலக்கு (7) துறை. நாள் 1.10.2002 | அரசாணை எண்.942/ உள்துறை (எஸ்சி). நாள் 3.10.02 | அரசாணை எண்.944/ உள்துறை (எஸ்சி). நாள் 4.10.02 | அரசாணை எண்.39 / உள்துறை (எஸ்சி) நாள் 13.1.2003 | அரசு கடித எண் எஸ்சி 492-1/03 நாள் 28.1.2003 |
| குறிப்பு | பதக்கம் மட்டுமே மாதந்தோறும் காவலருக்கு ரூ.40 த.கா.க்கு ரூ.5 பதக்கப்படி | பதக்கம் மட்டும் | பதக்கம் மட்டும் | பதக்கம் மற்றும் மாதந்தோறும் ரூ.100 பதக்கப்படி | பதக்கம் மற்றும் காவலர் முதல் த.கா வரை ரூ.2000. உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளருக்கு ரூ.3000. துணை கா.க.வுக்கு ரூ.5000 ரொக்கக் கொடை. துணை கா.க.வுக்கு மேற்பட்ட காவல் அதிகாரிகளுக்கு ரொக்கக் கொடை இல்லை. | பதக்கம் மற்றும் ரூ.10,000/- ரொக்கக் கொடை | பதக்கம் மற்றும் மாதம் ரூ.100/- பதக்கப்படி | தங்கப் பதக்கம் மற்றும் தலா ரூ.5000/- ரொக்கக் கொடை | பதக்கம் மற்றும் காவலருக்கு ரூ.40. த.கா வுக்கு ரூ.50/ விதம் பதக்கப்படி | பதக்கம் மட்டும் |

## இணைப்பு – 2

### 2002–ஆம் ஆண்டு மற்றும் 2003–ஆம் ஆண்டில் 28.2.2003 வரை ஊர்க்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள்

| வ. எண் | பதக்கம் | கோட்டத் தளபதி/பகுதித் தலைவர் | குழுமத் தலைவர் | வீரர் குழுத் தலைவர் | மகளிர் ஊர்க் காவல் படை | மொத்த பதக்கங்கள் | அரசாணைகள் / கடிதம் எண் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1. | குடியரசுத் தலைவரின் குடியரசு தினப் பதக்கம் – 2002 | | | | | | | |
| | அ) தகைசால் பணி | இல்லை | – | – | – | – | க.எண்.எஸ்சி 487–1/02 உள் துறை (எஸ்சி) நாள் 30.01.02 | பதக்கம் மட்டும் |
| | ஆ) மெச்சத்தக்க பணி | 1 | – | – | – | 1 | | |
| 2. | குடியரசுத் தலைவரின் சுதந்திர தினப் பதக்கம் – 2002 | | | | | | | |
| | அ) தகைசால் பணி | 1 | – | – | – | 1 | க.எண்.4555–1/உள் துறை நாள் 20.08.02 | பதக்கம் மட்டும் |
| | ஆ) மெச்சத்தக்கப் பணி | – | 3 | 1 | – | 4 | | |
| 3. | முதலமைச்சரின் ஊர்க்காவல் படை பதக்கம் – 2002 | | | | | | | |
| | அ) வீரதீர செயல் | – | – | – | – | – | அரசாணை எண் 849/உள் (எஸ்சி) துறை, நாள் 13.09.02 | பதக்கம் மற்றும் குழுமத் தலைவர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.3,000/– மகளிர் ஊர்க்காவல் படையினர் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.2.000/– கொடைத்தொகை |
| | ஆ) சிறப்புப் பணி | – | 4 | 2 | 1 | 7 | | |
| 4. | குடியரசுத் தலைவரின் குடியரசு தின பதக்கம்–2003 | | | | | | | |
| | அ) தகைசால் பணி | 1 | – | – | – | 1 | க.எண். எஸ்.சி 494–1 / 2003 நாள் 28.1.2003 | பதக்கம் மட்டும் |
| | ஆ) மெச்சத்தக்கப் பணி | 1 | – | 2 | – | 3 | | |

## TAMIL NADU POLICE - ORGANISATIONAL CHART - 2003

As on 22.03.2003




[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]
6. [illegible]
7. [illegible]
8. [illegible]
9. [illegible]
10. [illegible]
11. [illegible]
12. [illegible]
13. [illegible]
14. [illegible]
15. [illegible]

DGP – காவல்துறை இயக்குநர்
ADGP – கூடுதல் காவல்துறை இயக்குநர்
IGP – காவல்துறை தலைவர்
DIG – காவல்துறை துணை தலைவர்
AIG – காவல்துறை உதவி தலைவர்
SP – காவல் கண்காணிப்பாளர்
COP – காவல் ஆணையர்
JCP – காவல் இணை ஆணையர்
DCP – காவல் துணை ஆணையர்
CMD – தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்
JD – இணை இயக்குநர்
DD – துணை இயக்குநர்
CMT – தளவாய்
CVO – முதன்மை விழிப்பு அலுவலர்
V&AC – லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை

SIC – சிறப்பு புலனாய்வு பிரிவு
SIT – சிறப்பு புலனாய்வு குழு
STF – சிறப்பு அதிரடிப்படை
L&O – சட்டம் மற்றும் ஒழுங்கு
HQ – தலைமையிடம்
EOW – பொருளாதாரக் குற்றப்பிரிவு
ENF – அமலாக்கம்
CB CID – குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை
CSG – உட்கோட்ட பாதுகாப்பு பிரிவு
HG – ஊர் காவல்படை
TS – தொழில் நுட்ப பணிகள்
PTC – காவல் பயிற்சி கல்லூரி
TRNG – பயிற்சி
TNUSRB – தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம்

WP – மகளிர் காவல்
STC – மாநில போக்குவரத்து கழகம்
MTC – மாநகர போக்குவரத்து கழகம்
TNPPL – தமிழ் நாடு செய்தி அச்சு மற்றும் காகிதம் லிமிடெட் பகுதி

TWAD – தமிழ் நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்
TNEB – தமிழ் நாடு மின் வாரியம்
SHRC – மாநில மனித உரிமை ஆணையம்
ADC – ஆளுநரின் மெய்க்காப்பாளர்

2003 ஏப்ரல் 8]

# இணைப்பு - II

(67-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை என் - 22-உள்துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

*"தீயின் வளர்ச்சி தீ நாக்குகளில் மக்களின் வளர்ச்சி சவால்களில்"*

*-சீனப் பழமொழி*

### I. முகவுரை

மாநில மக்களுக்கு முழுப் பாதுகாப்பினை வழங்கும் வகையில் தீயணைக்கும் போது ஏற்படும் சவால்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்கள் நாள் முழுவதும் எதிர்கொண்டு வருகின்றனர்.

பாதுகாப்பும், சேமமும் தனிப்பட்ட மனிதனின் அடிப்படைத் தேவைகள் என்ற உண்மையை முழுமையாக அறிந்துள்ள தமிழக அரசு, தீயணைப்புத் துறை என்றிருந்த இத்துறையின் முந்தைய பெயரை, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை என ஜூலை மாதம், 2001 முதல் மாற்றியமைத்தது. அதன் பின்னர், அசம்பாவிதங்கள், தீ விபத்துக்கள், அழிவுகள், வெள்ளம் மற்றும் இதர ஆபத்துகள் ஆகியவற்றைக் கையாளுவதில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் திறனை வலுப்படுத்தும் வகையில் இத்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மீட்புப் பணிகளில் இத்துறையின் முக்கியப் பங்கினைத் தீவிரப்படுத்தும் வகையில் ஒகேனக்கல்லில், சுற்றுலா வரும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு, அங்கு மீட்புப் பணி நிலையம் ஒன்று நவம்பர் மாதம், 2002-ல் அமைக்கப்பட்டுள்ளது.

### II. குறிக்கோள்

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் குறிக்கோள்களை விளக்க வேண்டிய அவசியம் இல்லை. உயிர் வாழ வேண்டும் என்ற மனிதனின் அடிப்படை உணர்வோடு இத்துறை தொடர்புடையது. உயிர்களுக்கோ அல்லது உடைமைகளுக்கோ தீ, வெள்ளம், கட்டட இடிபாடுகள் அல்லது இதர அசம்பாவிதங்களால் அபாயம் ஏற்படும் தருணங்களில் உடனடியாக இத்துறை நடவடிக்கைகளில் இறங்குகிறது. "காக்கும் பணி எங்கள் பணி" என்பதே இத்துறையின் குறிக்கோளாகும்.

தீ விபத்துகள் மற்றும் இதர அசம்பாவிதங்கள் வாயிலாக உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படக்கூடிய நிகழ்வுகளான, கோவில் திருவிழாக்கள், பெரிய அளவிலான பொதுக் கூட்டங்கள், சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகள் ஆகியவற்றின்போதும் இத்துறையின் சேவை உயர்ந்து விளங்குகிறது. மீட்புப் பணிகளில் இத்துறையின் சுய தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதுமான எண்ணிக்கையில் அவசர ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

தீ விபத்து, வெள்ளம் மற்றும் இதர விபத்துக்கள் குறித்த அனைத்து புள்ளிவிவரங்கள், பகுப்பாய்வு மற்றும் கருத்துக்கள் ஆகியவற்றை அளிக்கும் முதன்மைத் துறையாகவும், தீப் பாதுகாப்பு குறித்தான சட்டம் மற்றும் விதிகளைச் செயல்படுத்தும் பிரதான நிறுவனமாகவும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது.

**III. புதிய சவால்களை எதிர்கொள்ளும் பொறுப்பு மிக்க பாதையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை**

தொன்று தொட்டு வருகின்ற இடர்பாடுகளான தீ விபத்துக்கள், வெள்ளம், நில நடுக்கம் மற்றும் இதர இயற்கைச் சீற்றங்கள் போன்றவற்றைக் கையாள்வதற்கு தொன்றுதொட்டு இருந்து வரும் முறைகளோடு, இன்றைய தேதியில் புதிய சவால்களையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தீவிரவாதிகளின் தாக்குதல், சாதி மற்றும் இன மோதல்கள், உயிரியல் -போர்கள், போன்ற வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களின்போது, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையானது பிற துறைகளான காவல் துறை, வருவாய்த் துறை மற்றும் மருத்துவத் துறை ஆகியவற்றுடன் இணைந்து செயலாற்ற வேண்டியுள்ளது. மேலும், பெருகிவரும் நகரமயமாகுதலும், வளர்ந்து வரும் தொழில்மயமாகுதலும் நமது சமுதாய வாழ்வில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இரசாயனக் கசிவுகள், பல மாடிக் கட்டடங்களில் ஏற்படும் தீ விபத்துக்கள், சரியான அணுகுபாதையின்றி நெருக்கமாகவும் அதிக மக்கள்தொகை கொண்டதாகவும் உள்ள நகரப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்கள், குடிநீர் தட்டுப்பாடு நிலவும் காலங்களில்கூட தீயணைப்பதற்குத் தண்ணீரையே முதன்மையாகப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலையில் ஏற்படும் இடர்பாடுகள் - போன்ற சவால்களை எதிர்கொள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய அனைத்து பிரச்சினைகளுக்கும், தனி ஒரு மனித அறிவின்



மூலம் தீர்வு காண்பதைவிட, சமுதாய அக்கறை கொண்ட குடிமக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து தீர்வுகாண வேண்டிய நிலை உள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் எதிர் கொள்ளப்படும் இத்தகைய இடர்பாடுகளை சமாளிப்பதற்கு ஏதுவாக, மேதகு நீதியரசர் திரு. கே.எஸ். பக்தவத்சலம் (ஓய்வு) அவர்களை தலைவராகவும், திரு. சீ. ரமணி, இ.கா.ப., காவல் துறை கூடுதல் இயக்குநர், குற்றப் புலனாய்வு பிரிவு, அவர்களை உறுப்பினராகவும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரை அமைப்பாளராகவும் கொண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையத்தினை அரசு அமைத்துள்ளது. இவ்வாணையம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலை, அதன் பணிகள், கடமைகள், பொறுப்புகள் மற்றும் நவீனப்படுத்துதல் ஆகியவற்றை ஆராயும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையமானது "கிருஷ்ண விலாஸ், 36/90, டாக்டர் அழகப்பா ரோடு, சென்னை-84" என்ற முகவரியில் இயங்கி வருகிறது. ஆரம்ப கட்டமாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளின் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகள் மற்றும் முறையீடுகளை பொதுமக்கள் அளிக்குமாறு பொது அறிவிப்பு ஒன்றினை இவ்வாணையம் வெளியிட்டுள்ளது.

**IV. நிறுவனம் மற்றும் நிருவாகம் அமைப்பு**

தமிழ்நாடு அரசின், உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையை இயக்குநர் தலைமையேற்று வழி நடத்திச் செல்கிறார். ஒவ்வொரு மண்டலத் தலைமைப் பொறுப்பினை தனித்தனியே வகிக்கும் நான்கு துணை இயக்குநர்கள் இவருக்கு உதவியாக உள்ளனர். ஒவ்வொரு மண்டலத்திலும் 4 முதல் 9 கோட்டங்கள் வரை உள்ளன. மாநிலத்தில் மொத்தம் 28 கோட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு கோட்டமும் ஒரு கோட்ட அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுகின்றது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையமும் ஒரு நிலைய அலுவலரின் பொறுப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது. 12 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்கள் உள்ளன. இது தவிர, தாம்பரத்தில் ஒரு மாநில பயிற்சி மையம், துணை இயக்குநர் பதவி தரத்தில் உள்ள இயக்குநர் (பயிற்சி) அவர்களது கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. சென்னையில் உள்ள மாநிலப் பட்டறையும் இவருடைய கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

[2003 ஏப்ரல் 8

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிறுவன அமைப்பு குறித்த விவரங்கள் பின் இணைப்பு I-ல் இடம் பெற்றுள்ளன.

**V. செயல்பாட்டுத் தொழில் திறன்கள்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம், இத்துறையின் அடிப்படை அமைப்பாகும். தமிழகத்தில் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் உள்ளன. இவை தவிர, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒகேனக்கல்லில் ஒரு மீட்புப் பணி நிலையம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ, அங்கு அமைப்பதற்கு சில அளவுகோல்கள் பின்பற்றப்படுகின்றன. அதன்படி, 25 கி.மீ. சுற்றளவுள்ள பகுதிக்குள் ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருக்க வேண்டும். மக்கள் தொகை 50,000 மற்றும் ரூ.50,000/- மதிப்பிற்கு குறைவில்லாத சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள தீ விபத்து அபாயங்கள் ஆகியவைகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் தீயணைப்புப் படைகளும் அவசர காலங்களில் ஒருவருக்கொருவர் இணைந்து ஒன்று சேர்ந்து பணிபுரிந்து இன்னலில் அவதியுறும் பொதுமக்களுக்கு உயர்ந்த சேவை அளிக்க வேண்டுமென அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

**VI. துறையில் உள்ள அடிப்படை வசதிகள்**

**(அ) மனித ஆற்றல்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் மற்றும் நிருவாகப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 6606 ஆகும். பதவி வாரியான எண்ணிக்கையின் விவரங்கள் இணைப்பு-II மற்றும் III-ல் இடம் பெற்றுள்ளன. கோட்ட அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலைய அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான பணியாளர்கள் நேரடியாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தீயணைப்போர் பதவிக்கான பணியாளர்கள் நேரடியாகத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் மூலம்



2003 ஏப்ரல் 8]

தேர்ந்தெடுக்கப்பட்ட 1,027 பேரை தீயணைப்போர்களாக ஏற்கெனவே காலியாகவுள்ள இடங்களில் நியமனம் வழங்கி 2002-ல் அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் செயல் பணியாளர்கள் பிரிவில் இதுவரை பெண்கள் நியமனம் செய்யப்படவில்லை. பெண்களுக்கு சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென்பதற்காகவும், மற்றும் பாலின வேறுபாடுகளை களைவதற்காகவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அனைத்து நிலைகளிலும் உள்ள பதவிகளுக்கு, அதாவது கோட்ட அலுவலர், நிலைய அலுவலர் மற்றும் தீயணைப்போர் போன்றவற்றில் பெண்களை நேரடியாக நியமனம் செய்யும் வகையில் சம்பந்தப்பட்ட விதிகளுக்கு திருத்தம் வெளியிட, 12-10-2001 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டன. கோட்ட அலுவலர் பதவிக்கு பெண்களை நியமனம் செய்வதற்கு ஏதுவாக, தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை விதிகளை திருத்தி ஜனவரி மாதம் 2003-ல் அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தீயணைப்போர், சிறைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் பதவிகளுக்கு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் தேர்வு நடத்தப்படும்போது, பொதுவான தேர்வு முறை மேற்கொள்ள வேண்டும் என 3-10-2001-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**(ஆ) ஊர்திகள் மற்றும் சாதனங்கள்**

பேரழிவுகளை சமாளிப்பது, இழப்பைக் குறைப்பது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் முக்கிய பங்கு ஆகும். இத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு ஏதுவாக இத்துறையில் 326 நீர்தாங்கி ஊர்திகளும், 79 நோயாளிகள் அவசர ஊர்திகளும், 13 சிறு நுரை தகர்வு ஊர்திகளும், 5 அவசரகால மீட்பு ஊர்திகளும், 1 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் (இங்கிலாந்து-சைமன் ஸ்நார்கல்) ஊர்தி, 1 சுழல் மேஜை ஏணி ஊர்தி (இசுசூ மோரிடா ஜப்பான் தயாரிப்பு), 37 மீட்டர் மற்றும் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய 2 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி ஊர்திகள் (பிராண்டோ ஸ்கைலிப்ட்-பின்லாந்து தயாரிப்பு), 1 நீர்விடுகுழாய் ஊர்தி, 36 தண்ணீர் லாரிகள், 1 ரெக்கர் மற்றும் 2 நடமாடும் பழுது பார்க்கும் ஊர்திகள், 228 அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ள எளிதில் தூக்கிச்செல்லக்கூடிய

[2003 ஏப்ரல் 8

பம்புகள், 93 மிதவைப் பம்புகள் ஆகியவைகளும் தகுந்த தொழில்நுட்பப் பணியாளர்களுடன் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர, கம்பியில்லாத் தந்திக் கருவியுடன்கூடிய சீருந்துகள், ஈப்புகள், பேருந்து, மோட்டார் சைக்கிள்கள் போன்ற 61 துணை ஊர்திகளும் இயங்கி வருகின்றன. இத்துறையை அனைத்து வகைகளிலும் நவீனப்படுத்த அரசு ஆர்வம் கொண்டுள்ளது. பழைய மற்றும் பழுதடைந்த ஊர்திகள் படிப்படியாக மாற்றப்பட்டு வருகின்றன. அவைகளுக்குப் பதிலாக 3 தண்ணீர் லாரிகள், 12 நோயாளிகள் அவசர ஊர்திகள், 1 வான்தந்தி சீருந்து மற்றும் 2 விசை மிதிவண்டிகள் கழிவு செய்யப்பட்ட ஊர்திகளுக்கு பதிலாக, ரூ.1.12 கோடி செலவில் வாங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.16.69 லட்சம் செலவில் ஒரு சிறிய நுரைதகர்வு ஊர்தியினை எழும்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு வாங்கவும் ஜூலை மாதம் 2002-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரசு கொல்லிமலை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.5.27 லட்சத்தில் ஒரு நோயாளர் ஊர்தி வாங்குவதற்கு நவம்பர் மாதம் 2002-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

தீயணைப்பு மற்றும் மீட்பு பணியினை திறனுள்ள முறையில் ஆற்றுவதற்காக சில முக்கியமான தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையங்களுக்கு நவீன உபகரணங்களான, உயர்த்தும் பைகள், புகை வெளியேற்றும் கருவிகள், நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், ஜெனரேட்டர்கள் மற்றும் கோம்பி-டூல்ஸ் ஆகிய மீட்பு உபகரணக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இத்துறையில் 3 பைபர் படகுகள் மற்றும் 8 மிதவைப் படகுகளும் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, காவல்துறையினர் வசம் உள்ள படகுகளையும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு ஒப்புவிக்க கடந்த அக்டோபர் மாதம், 2002-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இத்துறையில், தலைக்கவசமாக அணிந்து பயன்படக்கூடிய வெப்பதத்துவ நிழற்படக் கருவி-1, கையில் எடுத்து பயன்படுத்தக்கூடிய வெப்பதத்துவ நிழற்படக்கருவிகள்-2, உயிர் கண்டுபிடிப்புக் கருவிகள்-2 மற்றும் பல்வகை வாயுக் கண்டுபிடிப்பான்கள்-2 போன்ற உபகரணங்களும் உள்ளன.

பதினோராவது நிதிக்குழு உதவியினைப் பயன்படுத்தி, 2002-2003 மற்றும் 2003-2004 நிதியாண்டுகளில், ரூ.2.00 கோடி மதிப்பீடு செலவில் அத்தியாவிசயமான உபகாணங்களை வாங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டு உள்ளது.



2003 ஏப்ரல் 8]

சென்னை மாநகர உபயோகத்திற்காக ரூ.1.50 கோடி செலவில் 15 தண்ணீர் லாரிகள் வாங்குவதற்கு ஜனவரி 2003-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த தண்ணீர் லாரிகள் தீ விபத்து காலங்களில் தீயணைப்புப் பணிகளிலும் மற்றும் வெள்ளம் தொடர்புடைய மீட்புப் பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டு, இத்துறையின் செயல்பாட்டினை மேம்படுத்த உதவும்.

### VII. தகவல் தொடர்பு

#### (அ) தொலைபேசி மற்றும் கம்பியில்லாத் தந்திக் கருவி வசதிகள்

தீயினால் ஏற்படும் இழப்புகளை குறைப்பதற்கு ஏதுவாக உரிய நேரத்தில் உடனடியாக நடவடிக்கையில் ஈடுபட வேண்டியது இன்றியமையாததாகும். இதற்காக குறைந்த கால இடைவெளியில் மனித மற்றும் இயந்திர சக்தியினை ஒன்று சேர்ப்பது அவசியமாகும். இதற்கு உதவும் வகையில் ஒவ்வொரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கும் தொலைபேசி வசதி வழங்கப்பட்டுள்ளதால் அதன் மூலம் உடனடியாக தீயழைப்புகள் மற்றும் மீட்பு அழைப்புகள் பெறப்பட்டு, துரிதமாக சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், சில மாவட்ட தலைநகரங்களில் '101' என்ற எண் கொண்ட இலவச தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. சென்னை நகருக்கு, வாக்கிடாக்கிகள், ரிபீட்டர் செட்டுகள் உள்பட 122 குறைந்த நுண் அலைவரிசை கம்பியில்லாத் தந்திக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமீபத்தில், மாநில தலைமையகம், அனைத்து மாவட்டத் தலைமையகங்களுடனும் மற்றும் சில முக்கியத்துவம் வாய்ந்த இடங்களோடும் அதி நுண் அலைவரிசை கருவிகள் மூலம் தகவல் பரிமாற்றத் தொடர்பு கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மொத்தத்தில் 32 அதி நுண் அலைவரிசைக் கருவிகள் பொருத்தப்பட்டு அவை செயல்பாட்டில் உள்ளன. மேலும், ரூ.16.06 லட்சம் செலவில் 9 அதி நுண் அலைவரிசைக் கருவிகள் வாங்க அரசு ஜூலை மாதம் 2002-ல் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

சென்னை மாநகரம், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள் மற்றும் கோயம்புத்தூர் மாநகரம் ஆகிய இடங்களில் உள்ள அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களிலும் வான்தந்திக் கருவிகள் உள்ளன.

[2003 ஏப்ரல் 8

### (ஆ) விபத்து அழைப்பு-பதில்செயல்பாடு நேரம் (Response Time)

விபத்து அழைப்பு பெறப்பெற்ற இடத்திலிருந்து தீயணைப்பு ஊர்தி விபத்து நடந்த இடத்தை அடைய எடுத்துக் கொள்ளும் நேரமே பதில் செயல்பாடு நேரமாகும். பதில் செயல்பாடு நேரத்தினை, கூடிய மட்டும் குறைக்க துறையினரால் தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதில் செயல்பாடு நேரம் சென்னை மாநகரில் 10 நிமிடங்களுக்கும் குறைவாகவே இருக்கிறது. செய்திப் பரிமாற்றத்தை விரைந்து பெற்றிடவும் இந்நேரத்தைக் குறைக்கும் வகையிலும் தனியே ஒரு தகவல் தொடர்பு மையமும், `101' மற்றும் '102' எண்கள் கொண்ட தொலைபேசி இணைப்புகள் மற்றும் வான்தந்தி கருவி இணைப்புகளுடன் கூடிய ஒரு கட்டுப்பாட்டு அறையும் சென்னையில் உள்ளன. பதில் செயல்பாடு நேரத்தை மேலும் குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### (இ) வலை தளம் Web-site

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கென வலை தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அது தேசிய தகவல் தொடர்பு மையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த வலை தளத்தின் முகவரி? http:.//www.tn.nic.in/fire service (or) http://www.tn.gov.in/fire service என்பதாகும். இந்த வலை தளமானது இந்தத் துறையின் செயல் திறனை வெளிப்படுத்தும் விதமாக மட்டுமல்லாமல், பொது மக்களுக்கு தீப் பாதுகாப்பு குறித்து அறிவு புகட்டும் ஒரு மிகப் பெரும் கருவியாகவும் செயல்பட்டு வருகிறது.

## VIII. பயிற்சி வசதிகள்

தீயணைப்பு மற்றும் மீட்டுப் பணிகள் துறையில், பயிற்சி என்பது படையினரை மிடுக்காகவும், போராடத் தகுதியுடையவர்களாகவும் வைத்திருக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்துறையில் புதிதாக சேருபவர்களுக்கு உயர்தரப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்துறையில், எல்லா நிலைகளிலும் உள்ள பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்டுவரும் பயிற்சியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஏதுவாக, மாநிலத்தின் கலைக் களஞ்சியமாக அமைந்துள்ள நவீன பயிற்சி மையம் தற்போதைய தொழில் நுட்பம் மற்றும் நுணுக்கங்களை கொண்ட நவீன வளர்ச்சியுடன் கூடிய தீத்தடுப்புப் பயிறசிகளை அளிக்கக்கூடிய வகையில்



2003 ஏப்ரல் 8]

ரூ.4.50 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ளது. தற்போது, இப்பயிற்சி மையம் தாம்பரத்தில் நவீன பயிற்றுவிப்பு உபகரணங்கள், அவசரகால மீட்பு ஊர்தி, இழுத்துச் செல்லக்கூடிய கம்பத்தில் அமைக்கப்படும் விளக்கு (டிராலி டைப் லைட் டவர் மாஸ்ட்), கணினிகள், ரசாயன அங்கிகள், நீர்முழ்கி கவச உடைகள், மல்டி மீடியா புரஜெக்டர், நடமாடும் பழுது பார்க்கும் ஊர்தி மற்றும் உடற்பயிற்சிக் கருவிகள் போன்றவைகளைக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இங்கு எல்லாப் பருவ காலங்களிலும் பயன்படுத்தத் தக்க பயிற்சி மைதானம், புகை அறை, வி-நாட்ச் டேங்க் ஆகியவைகள் பயிற்சியாளர்களுக்கு நல்ல வெளிப்பயிற்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நல்ல வகுப்பறைகள், சிறப்பான நூலகம், மாதிரி வடிவமைப்புகள், நல்ல உணவகம் மற்றும் தங்குவதற்கான வசதி ஆகியவை பயிற்சியின் தரத்தை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளன. இந்த பயிற்சி மையம் நாக்பூர் தேசிய தீயணைப்புப் பணிக் கல்லூரிக்கு இணையாகச் செயல்பட்டு வருகிறது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் தீயணைப்பு வீரர்களுக்கு மட்டுமல்லாமல், பிற மாநிலங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் ஆகியவற்றைச் சார்ந்த தீயணைப்பு வீரர்களுக்கும், மற்றும் பெருமளவில் பொது மக்களுக்கும் குறைந்த கட்டணத்தில் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

பயிற்சி மையத்தில், பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்பவர்களுக்கு, அவர்களது அடிப்படை ஊதியத்தில் 10 சதவீதத் தொகையினை பயிற்சிப் படியாக பெற்று வழங்க அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 2002-ஆம் ஆண்டில் நேரிடை நியமன நிலைய அலுவலர்களுக்கும் மற்றும் தீயணைப்போருக்கும் அடிப்படைப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சாராத நபர்களுக்கும் தீயணைப்போருக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்போர் பதவியிலிருந்து தீயணைப்போர் ஓட்டுநர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர், மற்றும் தீயணைப்போர் ஓட்டுநர் பதவியிலிருந்து இயந்திர கம்மியர் ஓட்டுநர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டோர் ஆகியோருக்கு மாநில பயிற்சி மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதம் 2002-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற Medical Emergency in Mass Casualities என்கிற பயிற்சியில் கலந்து கொள்ள திரு. வீ. மதுரபாண்டியன், துணை இயக்குநர் அரசால் அனுப்பப்பட்டுள்ளார்.

**IX. பணிமனை**

துறை ஊர்திகள் மற்றும் சாதனங்களில் ஏற்படும் பழுதுகளைச் செப்பனிடுவதற்காக சென்னையில் மாநிலப் பட்டறை ஒன்று இயங்கி வருகிறது. இப்பட்டறையின் தானியங்கிப் பொறியாளருக்கு, ஊர்திகளின் பழுது செப்பனிடும் தொகை ரூ.2,500/-க்கு மிகைப்படும் இனங்களில் மதிப்பீடுகளை பரிசீலித்து தொழில்நுட்பச் சான்று வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தீயணைப்பு ஊர்திகளுக்கு பழுது நீக்கம் செய்வதில் தொழில்நுட்பச் சான்றுகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் பெருமளவில் குறைப்பதற்கு உதவிகரமாக உள்ளது.

**X. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் கட்டுதல்**

மாநிலத்தில் தற்பொழுது செயல்பட்டு வரும் 280 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில், 111 நிலையங்கள் அரசுக் கட்டடங்களிலும் 42 நிலையங்கள் பகுதி-நிரந்தரக் கட்டடங்களிலும், 127 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. இவைகள் தவிர மீட்பு பணி நிலையம் ஒன்று ஒகேனக்கல்லில் ஆரம்பிக்கப்பட்டு, அரசுக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

பதினொன்றாவது நிதிக் குழு உதவித் தொகையிலிருந்து ரூ.6.00 கோடி செலவில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆண்டுகளில் 34 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு பொதுப் பணித் துறை மூலம் கட்டடம் கட்டித் தர அரசு ஆகஸ்ட் மாதம் 2001ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆற்காடு மற்றும் இராசிபுரம் ஆகிய இடங்களில் உள்ள நிலையங்களுக்கான கட்டடம் கட்டும் பணி முடிக்கப்பட்டு அங்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தாம்பரம், நிலக்கோட்டை, வேப்பூர் திருமுட்டம், திருச்செங்கோடு, ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், செஞ்சி, பொன்னமராவதி, கமுதி, பொன்னேரி, ஜெகதாப்பட்டினம், நாங்குனேரி, சேரன்மாதேவி, செங்கோட்டை, வேட்டவலம், வத்திராயிருப்பு, கன்னியாகுமரி, திட்டக்குடி, பரங்கிப்பேட்டை, தேவக்கோட்டை, இராயபுரம், வியாசர்பாடி, பேட்டை, வால்பாறை, ஜவ்வாதுமலை, குடியாத்தம், பழனி, திருப்பத்தூர் (வேலூர் மாவட்டம்), கோயம்புத்தூர் (வடக்கு), நாகர்கோவில் மற்றும் மன்னார்குடி ஆகிய இடங்களில் கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



**XI. ஆற்றிய பணிகள்**

**(அ) தீத் தடுப்பு**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அடிப்படைப் பணி தீத் தடுப்புப் பணி ஆகும். தீத் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்துவதற்கென 12 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் தீத் தடுப்பு முறைகளை ஊரக மற்றும் நகரப் பகுதி மக்களிடம் பரப்புவதால், தீயினால் ஏற்படும் ஆபத்துக்கள் பெருமளவு குறைக்கப்படுகின்றன. மேலும், தீப் பாதுகாப்பு மற்றும் தீத் தடுப்பு முறைகளைப் பயிற்றுவிக்கவும், பிரச்சாரம் செய்யவும், செயல்முறை விளக்கங்களை செய்து காண்பிக்கவும், ஒரு திட்ட இலக்குடன் பள்ளிகள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள், கிராமங்கள் மற்றும் குடிசைப் பகுதிகள் ஆகியவற்றை தேர்ந்தெடுத்து இக்குழுக்கள் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, விபத்தின் இடர்பாடுகளைக் குறைப்பதற்கும், தீத் தடுப்பு முறைகளை ஊரக மக்களுக்கு பரப்பவும், குறிப்பாக ஊரகப் பெண்களுக்கு ஆரம்ப தீத் தடுப்பு பயிற்சிகளை அளிக்கும் வகையில் மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் சுய சேவைக் குழுக் கூட்டங்களில் பங்கேற்று வருகிறது. அத்தகைய கூட்டங்களில் பணியின் அனுபவத்தினை வெளிப்படுத்தும் வகையில், செயல்முறை விளக்கப் பயிற்சி மற்றும் விரிவுரைகள் வழங்கப்படுகின்றன. இத்துறையினால், மேற்கொள்ளப்பட்ட சீரிய விழிப்புணர்வுப் பிரச்சாரத்தின் காரணமாக, தீபாவளி நேரத்தில் மாநிலம் முழுவதும் சராசரியாக, 600 தீ விபத்துக்கள் ஏற்படும் என்பது வழக்கமாக இருந்துள்ள நிலையில், 2002 ஆம் ஆண்டில் 163 தீ விபத்துக்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. மேலும், கடந்த பல ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது, முதல் முறையாக இந்த ஆண்டு தீபாவளிதான் எந்தவொரு நடுத்தர அல்லது பெருந் தீவிபத்து எதுவும் ஏற்படாமல் கொண்டாடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**(ஆ) புற நிலையங்கள்**

கோடைக் காலத்தில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துக்களை விரைவாக சமாளிக்க புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன. அதேபோன்று, உயர் கொள்ளளவு கொண்ட

[2003 ஏப்ரல் 8

நீர்த்தொட்டிகள், அல்லது சுருங்கும் நீர்த்தொட்டிகள், எளிதில் தூக்கில் செல்லத்தக்க நீர்விடு குழாய்களுடன் கூடிய பம்புகள், வான்தந்திக் கருவிகள் ஆகியவைகளுடன் சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் 16 இடங்களில் புறத் தீயணைப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. பதற்றமான பகுதிகளைக் கண்காணிக்கும் பொருட்டு, இப்புறத் தீயணைப்பு-மீட்புப் பணி நிலையங்கள் இரவு பகலாக எந்நேரமும் தொடர்ந்து செயல்படும்.

**(இ) திரையரங்குகள் தீத் தடுப்பு**

திரையரங்குகள் பெரும்பாலும் அபாயகரமான தீ விபத்துகள் நிகழக்கூடிய இடங்களாக உள்ளன. எனவே, திரையரங்குகளில் தீப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு தீவிரம் காட்டுகிறது. திரை அரங்குகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழ்நாடு முழுவதும் உள்ள திரையரங்குகளை ஆண்டுதோறும் ஆய்வு செய்ய, பல் துறைக் குழு ஒன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரது தலைமையின்கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது திரையரங்குகளை ஆய்வு செய்து, உரிய நிபந்தனை மீறல்களை அவற்றின் உரிமம் வழங்கும் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லும். 2002 ஆம் ஆண்டில் 1283 திரையரங்குகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

**(ஈ) தீ விபத்து குறித்த அழைப்புகள்**

2002 ஆம் ஆண்டில் 18,264 தீ விபத்து அழைப்புகள் வரப்பெற்றன. அவற்றில் 79 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. 179 பேர் காப்பாற்றப்பட்டுள்ளனர். உடைமைகளின் இழப்பு மதிப்பு ரூ.14.11 கோடியும், மீட்கப்பெற்ற உடைமைகளின் மதிப்பு ரூ.114.41 கோடியும் ஆகும். சென்னை மாநகரில் தீயணைப்புப் பணிகளை செயலாற்றிட ஏதுவாக, தீயணைப்பு ஊர்திகளுக்கு தண்ணீர் வழங்கும் பொருட்டு, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்தினரால் தீ விபத்து இடங்களுக்கு தண்ணீர் லாரிகள் வழங்கப்படுவதால் திறமையாகவும், தொடர்ச்சியாகவும் தீயணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயல் மிகப் பெரிய அளவில் உயிர்களையும் மற்றும் பொதுமக்களின் உடைமைகளையும் தீயின் அழிவிலிருந்து காப்பாற்ற உதவிகரமாக உள்ளது.



2003 ஏப்ரல் 8]

**(உ) மீட்பு அழைப்புகள்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையால் பெறப்படும் மீட்பு அழைப்புகள் பெரும்பாலும், சாலை விபத்து மற்றும் இரயில் விபத்துகளில் சிக்குண்டவர்கள், கிணறுகளில் தவறி விழுந்தவர்கள், நச்சுப்பூச்சிகளின் தாக்குதலுக்கு உள்ளானவர்கள், நச்சு வாயுக்களை சுவாசித்தவர்கள், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்கள் மற்றும் இயற்கையான மற்றும் மனிதர்களால் ஏற்படுத்தப்படும் அழிவுகள் போன்றவற்றில் சிக்குண்டவர்களைக் காப்பாற்றக் கோரும் அவசர அழைப்புகளாக உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில், அதாவது 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில், முறையே 4,457 மற்றும் 4881 மீட்பு அழைப்புகள் பெறப்பட்டுள்ளன. நவம்பர் மாதம் 2002-ல், தீபாவளி பண்டிகையையொட்டி இரண்டு தருணங்களில், இடைவிடாத மழையினை இத்துறை எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த இரண்டு தருணங்களில் ஏற்பட்ட இடைவிடாத மழையாலும் மற்றும் தீபாவளி பண்டிகையினாலும் வெவ்வேறு விதமான சவால்களை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்கள் சந்திக்க வேண்டியிருந்தது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறை பணியாளர்கள், சென்னை நகரிலும் மற்றும் அதனைச் சுற்றிலும் உள்ள வெள்ளம் சூழ்ந்த பகுதிகளிலும் தேங்கியிருந்த நீரினை, போர்க்கால அடிப்படையில், சீரிய முறையில் அகற்றிட அல்லும் பகலும் அயராது பாடுபட்டு பொது மக்களுக்கு அப்பழுக்கற்ற வகையில் சேவை புரிந்தனர்.

**(ஊ) கட்டன அழைப்புகளும் நோயாளிகள் ஊர்தி அழைப்புகளும்**

79 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் அவசர ஊர்திகள் உள்ளன. தீ விபத்து மற்றும் இதர விபத்துகளின் போது காயமடைந்த நபர்கள் உடனடி மருத்துவ வசதிக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படுகிறார்கள். மேலும், அழைக்கப்படும் தருணங்களில் குறைந்த கட்டணத்தினை வாடகையாகப் பெற்றுக்கொண்டு, நோயுற்றவர்களுக்கும், காயமுற்றவர்களும் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். 2002 ஆம் ஆண்டில் 1352 அழைப்புகளை ஏற்று, நோயாளிகள் அவசர ஊர்திகள் செயல்பட்டுள்ளன. இவற்றுள் 1037 வாடகைக் கட்டண அழைப்புகளாகும். வாடகைக் கட்டண அழைப்புகளை மேற்கொண்ட வகையில் ரூ.2.36 லட்சம் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

[2003 ஏப்ரல் 8

**(எ) பொது நலன் கருதி ஆயத்த நிலைய நிறுத்தப் பணி**

முக்கிய பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் பொதுக் கூட்டங்களின்போதும் பெரிய பந்தல்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய தருணங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு ஆயத்த நிலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர தனியார்களின் விழாக்களுக்கென ஆயத்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகள் கட்டணத்தின் பேரில் மேற்கொள்ளப்படுகின்றன. 2002ஆம் ஆண்டில் ரூ.23.86 லட்சம் ஆயத்த நிலை நிறுத்தப் பணிக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**XII. ஊக்குவித்தலும் ஊக்கத் தொகைகளும்**

இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்பட பணிபுரிய ஊக்குவிக்கும் வகையிலும், இத்துறையின் நோக்கங்களை அடைவதற்கு ஏதுவாகவும், பின்வரும் விருதுகள் அளிக்கப்பட்டு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**(அ) விருதுகளும், வெகுமதிகளும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினை அங்கீகரிக்கும் வகையில், மாநில அரசால் பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**(1) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (அண்ணா பதக்கம்)**

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ.2,000-முதல் ரூ.5,000-வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள். பதக்கம் பெறுவோரின் பதவிக்கேற்ப மானியத் தொகை வேறுபடுகிறது. 2002 ஆம் ஆண்டில் 9 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு பாராட்டத்தக்க பணிகளுக்கான பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.



2003 ஏப்ரல் 8]

**(2) தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பணி பதக்கம் (பொங்கல் தினத்தன்று வழங்கப்படுவது)**

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கப்படியாக ரூ.40/-ம், முன்னணித் தீயணைப்போர்/இயந்திரக் கம்மியர் - ஓட்டுநர்/ தீயணைப்போர் ஓட்டுநர் தீயணைப்போர் - இயந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் மாதந்தோறும் ரூ.50 வழங்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்பு பணி பதக்கம் 80 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**(3) மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட விருதுகளும் வழங்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:—**

(அ) சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணி பதக்கம்.

(ஆ) குடியரசு தினத்தன்று வழங்கப்படும் பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பணி பதக்கம்.

(இ) வீர தீரச் செயல்களுக்கான தீயணைப்புப் பணி பதக்கம்.

(ஈ) சிறந்த பணிக்கான தமிழ்நாடு முதலமைச்சர் தீயணைப்புப் பணி பதக்கம்.

இந்த பதக்கமானது தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் திறனறிந்து, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், அவர்களுக்கு உற்சாகமளித்து உயர்நோக்கினை அடையும் வகையில் உத்வேகம் அளிக்கவும் ஜூலை மாதம் 2001-ல் தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் 3 பதக்கங்கள், நிலைய அலுவலர், முன்னணித் தீயணைப்போர், தீயணைப்போர் மற்றும் அப்பதவிகளுக்கு இணையான பதவித் தரத்தில் உள்ளவர், ஆகியோருக்கு "தீத் தொண்டு நாள்" (ஏப்ரல், 14) அன்று வழங்கப்படுகிறது. ஒவ்வோர் பதக்கமும் 22 கேரட் தங்கத்தால் செய்யப்பட்ட 8 கிராம் எடையுள்ளதாகும். மேலும், நிலைய அலுவலர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில் உள்ளவர்களுக்கு ரூ3000/-ம், முன்னணி தீயணைப்போர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில்

[2003 ஏப்ரல் 8

உள்ளவர்களுக்கு ரூ.2,500/-ம், மற்றும் தீயணைப்போர் மற்றும் அப்பதவிக்கு இணையான தரத்தில் உள்ளவர்களுக்கு ரூ.2,000/-ம் வழங்கப்படுகிறது. இப்பதக்கம் முதுநிலை அடிப்படையில் வழங்கப்படுவதில்லை. மாறாக தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்தும் பணியை மேற்கொள்ளுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

**(ஆ) நலத் திட்டங்கள்**

**(1). குறைகள் தீர்க்கும் நாள்**

இந்த அரசின் உன்னதமான சாதனைகளுள் ஒன்று 'குறைகள் தீர்க்கும் நாள்' நிகழ்ச்சி ஆகும். இந்தக் 'குறைகள் தீர்க்கும் நாள்' நிகழ்ச்சியின்போது இத்துறையிலிருந்து வந்திருந்த நூற்றுக்கணக்கான பணியாளர்களிடம் நானே நேரிடையாக அளவளாவி, அவர்களது குறைகளைப் பொறுமையாகக் கேட்டறிந்தேன். தங்களுடைய முதலமைச்சரை பணியாளர்கள் நேரிடையாக சந்தித்து, மனந்திறந்து தங்களது குறைகளைத் தெரிவிக்க நல்லதொரு வாய்ப்பாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களால் தெரிவிக்கப்பட்ட குறைகளைக் களைய துறையினால் துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த "குறைகள் தீர்க்கும் நாள்" நிகழ்ச்சி இத்துறைப் பணியாளர்கள் தங்களுக்கு ஒரு பாதுகாப்பு உள்ளது என்பதை உணரும் வகையிலும், இத்துறையின் செயல்பாடுகளில் ஒரு சாதகமான விளைவை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருந்தது.

**(2) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை நல நிதி**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில், துயருக்கு ஆளான பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு தீயணைப்புத் துறை நல நிதி" ஏற்படுத்தப்பட்டது. உறுப்பினர்களின் நலனுக்காக கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது:-

(1) காசநோய், தொழுநோய், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும், மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வழங்குவதற்கு;



2003 ஏப்ரல் 8]

(2) அவர்களுடைய குழந்தைகளின் உயர் கல்விச் செலவிற்கு;

(3) உயிரிழந்த உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு;

(4) உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்கு செலவிற்கு.

இத்திட்டத்தில் 5,536 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.5,40,229/- வசூலிக்கப்பட்டுள்ளது. 2002 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ.4,35,813/-ஆகும். அரசு இதற்கு மானியமாக வழங்கிவந்த 3,00,000/- ரூபாயை 4,00,000/- ரூபாயாக உயர்த்தி, 13-12-2001 அன்று ஆணை வழங்கியுள்ளது.

**(3) குடும்ப நல நிதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நல நிதியிலிருந்து நிவாரணத் தொகையாக ரூ.1,00,000/- வீதம் அரசால் அளிக்கப்படுகிறது.

**(4) கருணைத் தொகை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கருணைத் தொகையினை கடந்த நவம்பர், 2001 ஆம் ஆண்டிலிருந்து பின்வருமாறு அரசு உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது:-

| | | |
|---|---|---|
| அ | பணியிலிருக்கும்போது மரணமடையும் பணியாளர்களின் குடும்பத்திற்கு | ரூ.2,00,000/- லிருந்து ரூ.5,00,000/- |
| ஆ | பணியிலிருக்கும்போது நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளவர்களுக்கு | ரூ.50,000/- லிருந்து ரூ.1,00,000/- |
| இ | பணியிலிருக்கும்போது கடுமையாகக் காயமடைந்தவர்களுக்கு | ரூ.10,000/- லிருந்து ரூ.20,000/- |
| ஈ | பணியிலிருக்கும்போது சிறு காயம் அடைந்தவர்களுக்கு | ரூ.5,000/- லிருந்து ரூ.10,000/- |

[2003 ஏப்ரல் 8

செப்டம்பர் மாதம், 2002-ல் ஏற்பட்ட ஒரு தீ விபத்தில், தீயணைக்கும் பணியில் ஈடுபட்டு, தனது இன்னுயிரை தியாகம் செய்த தீயணைப்போர் திரு. கே. ஆறுமுகம் என்பவரது நெருங்கிய உறவினருக்கு அரசின் கருணைத் தொகையாக ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது. திரு. ஆறுமுகத்துக்கு வீரதீரச் செயலுக்கான விருது அவரின் மறைவுக்குப் பின்பு வழங்கப்பட்டுள்ளது.

**(5) தொகுதிக் காப்புறுதித் திட்டம்**

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலுள்ள அனைத்து பணியாளர்களின் குடும்பத்திற்கும் நிவாரணம் அளிப்பதற்காக, இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலானவர்கள் (அமைச்சுப் பணியாளர்கள் நீங்கலாக) அனைவரும் பயனடையும் வகையில் "தொகுதிக் காப்புறுதித் திட்டம்" ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உயிர் துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.1,00,000/- அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

**(6) உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் திட்டம்**

உதவிக் கோட்ட அலுவலர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கு அரிசி, கோதுமை, ரவை/மைதா, பாமாயில், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு போன்ற உணவுப் பொருட்கள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்குச் சராசரியாக ரூ.50.89 லட்சம் அரசு செலவிடுகிறது.

**(7) குடியிருப்புகள் கட்டுதல்**

தீயணைப்பு மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களின் செயல் திறன் குறையாமல் இருக்கவும், அவசரக் காலங்களில் அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் அருகிலேயே அவர்களுக்கு குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்காக ஆண்டொன்றுக்கு 100 குடியிருப்புகள் வீதம் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டித்தருவதென அரசு ஏற்கெனவே முடிவெடுத்திருந்தது. அரசு 2001-2002 ஆம் ஆண்டிலிருந்து 100 குடியிருப்புகளிலிருந்து உயர்த்தி, ஆண்டு ஒன்றுக்கு 200 குடியிருப்புகள் வீதம் கட்டித்தர முடிவெடுத்தது. இது அனைத்து தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கும்



2003 ஏப்ரல் 8]

குடியிருப்புகள் வழங்க வேண்டுமென்ற அரசின் இலக்கை துரிதமாக அடைய வழி வகுக்கும்.

**XIII. புதிய முயற்சிகள்**

**(அ) நலன்கள்**

பொதுமக்களின் நலன் கருதி பணியின் தரத்தையும் மற்றும் பணியாளர்களின் நலத்தினையும் மேம்படுத்துவதற்காகக் கருத்திற்கொண்டு அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—

(1) 2002 ஆம் ஆண்டில் சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமத்தினரால் தேர்வு செய்யப்பட்ட 1,027 பேருக்கு 'தீயணைப்பாளர்' பணி நியமனங்கள் வழங்கப்பட்டன.

(2) அரசாணை (நிலை) எண் 727, உள் (காவல் 17) துறை, நாள் 16-8-2002-ல் சென்னையில் பணிபுரியும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு வழங்கப்படும் உணவுக் கட்டணத் தொகையினை ரூ.50/-லிருந்து ரூ.80/-ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கியுள்ளது.

(3) ஆகஸ்ட் மாதம், 2002 ஆம் ஆண்டில், வாராந்திர உபரிப் பணிப் படியினை ரூ.50/-லிருந்து ரூ.100/-ஆக உயர்த்தி அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(4) ரூ.16.06 லட்சம் செலவில் 9 அதி நுண் அலைவரிசைக் கருவிகளும், மற்றும் ரூ.1.12 கோடி செலவில் 3 தண்ணீர் லாரிகள், 12 நோயாளிகள் அவசர ஊர்திகள், கம்பியில்லாத் தந்திக் கருவிகள் பொருத்தப்பட்ட 1 சீருந்து மற்றும் 2 விசை மிதி வண்டிகள் ஆகியவைகள் கழிவு செய்யப்பட்டவைகளுக்கு பதிலாக வாங்குவதற்கும், எழும்பூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நுரை தகர்வு வண்டி அதன் உபகரணங்களுடன் ரூ.16.69 லட்சம் செலவில் வாங்குவதற்கும் ஜூலை மாதம், 2002-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(5) பணியாளர்களுக்கு தைக்கப்பட்ட சீருடைகள் வழங்க இயலாத போது, அவர்கள் இரண்டு எண்ணிக்கைகள் சீருடை தைத்துக் கொள்ள தையற் கூலியாக தலா ரூ.200/- வீதம்

[2003 ஏப்ரல் 8

வழங்க அரசு ஆணை (நிலை) எண்716, உள் (காவல் 17) துறை, நாள் 14-8-2002-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(6) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையைச் சார்ந்த 29 பணியாளர்களுக்கு தலா ரூ.1 லட்சத்திற்கு மிகாமல், தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மருத்துவ நல நிதி விதிகளைத் தளர்த்தி, ஒரு சிறப்பு நேர்வாக, உதவித் தொகை அளித்து அரசாணை (நிலை) எண் 955, உள் (காவல்-17) துறை, நாள் 7-10-2002-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(7) கொல்லிமலை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ரூ.5.27 லட்சம் செலவில் ஒரு நோயாளிகள் அவசர ஊர்தி வழங்க அரசாணை (நிலை) எண்1109 உள்(காவல் 17) துறை, நாள் 20-11-2002-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(8) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிலை, பணி மற்றும் பொறுப்புகள், நவீனப்படுத்துதல், போன்றவைகளை பரிசீலிப்பதற்காக ஒரு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியை தலைவராகக் கொண்ட "தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் ஆணையம்" ஒன்றினை அரசு ஆணை (நிலை) எண் 1102, உள் (காவல் 17) துறை, நாள் 19-11-2002-ல் அமைத்துள்ளது.

(9) சென்னை மாநகரில் வெள்ளப் பெருக்கின்போது சூழ்ந்த நீரினை வெளியேற்றவும் மற்றும் தீயணைப்பு பணிகளுக்கு உதவிடவும் ரூ.1.50 கோடி செலவில் 15 தண்ணீர் லாரிகள் வாங்க அரசு ஆணை (நிலை) எண் 81, உள் (காவல் 17) துறை, நாள் 22-1-2003-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(10) நவம்பர் மாதம் 2002 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயனாளிகளின் பாதுகாப்பிற்காக ஒகேனக்கல்லில் மீட்புப் பணிக்காகவே ஒரு நிலையம் அமைக்கப்பட்டது.

**(ஆ) 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-II-செயல்படுத்தப் படவுள்ள திட்டங்கள்**

(1) கழிவு செய்யப்பட்ட பழைய வண்டிகளுக்குப் பதிலாக ரூ.2.60 கோடி செலவில் 20 புதிய நீர்தாங்கி வண்டிகளை 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.



2003 ஏப்ரல் 8]

(2) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்கு சொந்தமான 142 கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு வசதியினை ரூ.30.00 லட்சம் செலவில் அமைப்பதற்கு, 2003-2004 ஆம் ஆண்டிற்கான பகுதி-II திட்டத்தின் கீழ் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**(இ) பொது காப்பீட்டுக் கழகக் கடன் தொகை மூலம் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்**

(1) ரூ.3.56 கோடி செலவில், பெண்ணாகரம், ஆத்தூர், முசிறி, உத்தமபாளையம், போச்சம்பள்ளி, திருச்சுழி, கொல்லங்கோடு, வள்ளியூர், சாயல்குடி, உசிலம்பட்டி, பெரணமல்லூர், கொடுமுடி, பவானி, மானாமதுரை மற்றும் திருவண்ணாமலை ஆகிய நிலையங்களுக்கு பொது காப்பீட்டுக் கழக கடன் தொகை மூலம் கட்டடங்கள் கட்டப்படவுள்ளன.

(2) பொது காப்பீட்டுக் கழக கடன்தொகை மூலம் ரூ.5.98 கோடி செலவில் 46 நீர்தாங்கி வண்டிகள் கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு பதிலீடாக வாங்கப்படவுள்ளது.

**XIV. முடிவுரை**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையானது அனைத்து சவால்களையும் திறம்பட மேற்கொள்ளும் வகையில் தன்னை சிறந்த ஓர் அமைப்பாக தயார்படுத்திக் கொண்டு வருகிறது. மேலும், இத்துறையானது பயிற்சி, விபத்துக்களை தவிர்க்க பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தும் கல்வியறிவினைப் புகட்டுதல், பணியாளர்களின் நலன்களை பேணிப் பாதுகாத்து அவர்களது மனவுறுதியை வலுப்படுத்துதல் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சமுதாயத்தில் பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்துதல் போன்ற வழிகளில் தனது பணியின் செயல்திறனை மேம்படுத்த முக்கியத்துவத்தை அளித்து வருகிறது.

# இணைப்பு–1
## நிருவாக அமைப்பு

### இயக்குநர்,தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

#### துணை இயக்குநர், வடமண்டலம், சென்னை

கோட்ட அலுவலர்

உதவி கோட்ட அலுவலர்

நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு | பிற |
|---|---|---|---|
| 1. வடசென்னை | 14 | 1 | 1• |
| 2. தென்சென்னை | 11 | 1 | 1• |
| 3. காஞ்சிபுரம் | 9 | 1 | – |
| 4. திருவள்ளூர் | 13 | – | – |
| 5. மா.ப.ப. | – | – | – |
| 6. வடமண்டலம் | – | – | 2•• |
| மொத்தம் | 47 | 3 | 4 |

#### துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி

கோட்ட அலுவலர்

உதவி கோட்ட அலுவலர்

நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. திருச்சிராப்பள்ளி | 8 | 1 |
| 2. புதுக்கோட்டை | 11 | 1 |
| 3. தஞ்சாவூர் | 9 | – |
| 4. நாகப்பட்டினம் | 9 | – |
| 5. கடலூர் | 14 | – |
| 6. விழுப்புரம் | 11 | – |
| 7. கரூர் | 4 | – |
| 8 பெரம்பலூர் | 6 | – |
| 9 திருவாரூர் | 10 | – |
| மொத்தம் | 82 | 2 |

#### துணை இயக்குநர், தென்மண்டலம், மதுரை

கோட்ட அலுவலர்

உதவி கோட்ட அலுவலர்

நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. மதுரை | 9 | – |
| 2. திருநெல்வேலி | 13 | 1 |
| 3. கன்னியாகுமரி | 7 | – |
| 4. தூத்துக்குடி | 9 | – |
| 5. விருதுநகர் | 8 | 1 |
| 6. இராமநாதபுரம் | 16 | – |
| 7. தேனி | 8 | – |
| மொத்தம் | 70 | 1 |

#### துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்

கோட்ட அலுவலர்

உதவி கோட்ட அலுவலர்

நிலைய அலுவலர்

| | தீமீநி | தீதகு |
|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 14 | 1 |
| 2. ஈரோடு | 10 | 1 |
| 3. சேலம் | 8 | 1 |
| 4. தர்மபுரி | 11+1@ | 1 |
| 5. திண்டுக்கல் | 8 | 1 |
| 6. வேலூர் | 15 | 1 |
| 7. திருவண்ணாமலை | 12 | – |
| 8. நாமக்கல் | 4 | – |
| மொத்தம் | 83 | 6 |

#### இயக்குநர் அலுவலகம்

1. துணை இயக்குநர் (நிருவாகம்)
2. நேர்முக உதவியாளர் (நிருவாகம்)
3. நேர்முக உதவியாளர் (பண்டகசாலை)
4. பணியாளர் அமைச்சுப் பிரிவு
5. கணக்குப் பிரிவு
6. பொதுப் பிரிவு
7. தணிக்கைப் பிரிவு
8. பண்டகசாலைப் பிரிவு

மொத்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் – 280+1@

மற்ற அலுவலகம்

| | |
|---|---|
| மாநிலப் பயிற்சி மையம் | 1 |
| மாநிலப் பணிமனை | 1 |
| இசைக் கருவிக் குழு | 1 |

குறிப்பு:

தீமீநி – தீயணைப்பு (ம) மீட்புப் பணிகள் நிலையம்

தீதகு– தீத்தடுப்புக் குழு

பிற– • –புகைப்படக்குழு

••–தீக்கட்டுப்பாடு அறை மற்றும் கம்பியில்லாத் தந்தி பிரிவு

@–மீட்புப் பணி நிலையம்

53-40—19a

2003 ஏப்ரல் 8]

# இணைப்பு-II

## நிருவாகப் பதவிகளின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இயக்குநர், தீயணைபபு மற்றும் மீட்புப பணிகள் | 1 |
| 2. | துணை இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 4 |
| 3. | இயக்குநர் (பயிற்சி)-துணை இயக்குர் தரம் | 1 |
| 4. | துணை இயக்குநர் (பயிற்சி)-கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 5. | டெல்லர் இன்ஜினியர்-கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 6. | கோட்ட அலுவலர் | 29 |
| 7. | உதவிப் பொறியாளர் (உந்தூர்தி) | 1 |
| 8. | உதவி கோட்ட அலுவலர் | 43 |
| 9. | விரிவுரையாளர்-உதவி கோட்ட அலுவலர் தரம் | 1 |
| 10. | நிலைய அலுவலர் | 308 |
| 11. | நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 13 |
| 12. | உதவி நிலைய அலுவலர் | 16 |
| 13. | முன்னணி தீயணைப்போர் | 719 |
| 14. | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 249 |
| 15. | தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் எந்திரக் கம்மியர் | 1032 |
| 16. | தீயணைப்போர் மற்றும் அதற்கு சமமான பதவிகள் | 3869 |
| | மொத்தம் | 6288 |

[2003 ஏப்ரல் 8

## இணைப்பு-III

**அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்**

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3. | நிருவாக அலுவலர் | 1 |
| 4. | கண்காணிப்பாளர் | 33 |
| 5. | உதவியாளர் | 92 |
| 6. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் தட்டச்சர் | 6 |
| 7. | சுருக்கெழுத்து தட்டச்சர் | 62 |
| 8. | தட்டச்சர் | 33 |
| 9. | பதிவுரு உதவியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர் | 31 |
| 10. | அலுவலக உதவியாளர் மற்றும் இதர கடைநிலை ஊழியர்கள் | 57 |
| | மொத்தம் | 318 |

கன்னிமாரா பொது நூலகம் காப்பகம்
184532
சென்னை-600 008
நூலகம்